# போரின் படிப்பினைகள் 2

## நெருக்கடியின் பாதை

ஜோன் றிச்சார்ட்சன்

# போரின் படிப்பினைகள் – 2

## நெருக்கடியின் பாதை

ஜோன் றிச்சார்ட்சன்

சமூக விஞ்ஞானிகள் சங்கம் (SSA)
2011

போரின் படிப்பினைகள் - 2: நெருக்கடியின் பாதை
ஜோன் றிச்சார்ட்சன் எழுதியது

தமிழில்: க. சண்முகலிங்கம்

அட்டை வடிவமைப்பு: நலிந்த செனிவிரத்தின

© சமூக விஞ்ஞானிகள் சங்கம் 2011

வெளியீடு: சமூக விஞ்ஞானிகள் சங்கம் (SSA),
12, சுலைமான் டெரஸ், கொழும்பு - 05
தொலைபேசி: 2501339, 2504623
மின்னஞ்சல்: ssa@eureka.lk
வெப்தளம்: www.ssalanka.org

அச்சு : குமரன் அச்சகம், B 3-G 3, ரம்யா பிளேஸ், கொழும்பு-10.
தொலைபேசி: 011 242 1388 மின்னஞ்சல்: kumbhlk@gmail.com

Lessons from the War - 2: Path of the Crisis
by John Richardson

Translated by K. Shanmugalingam

Cover: Nalinda Senevirathne

© Social Scientist's Association 2011

Published by : Social Scientist's Association,
12, Sulaiman Terrace, Colombo - 05.
Tel: 011 250 1339, 011 250 4623
E.mail: ssa@eureka.lk
Web: www.ssalanka.org

Printed by: Kumaran Press (Pvt) Ltd, B 3 - G 3, Ramya Place, Colombo - 10.
Tel: 011 242 1388 E.mail: kumbhlk@gmail.com

ISBN 978-955-1772-83-3

# முன்னுரை

'நெருக்கடியின் பாதை' என்னும் உபதலைப்பில் எனது 'போரின் படிப்பினைகள் - 2' பிரசுரத்தை வழங்குவதில் நான் பெருமகிழ்ச்சி யடைகிறேன். எனது பெருநூலினை இவ்வாறான சிறு பிரசுரங்களாக மலிவுப் பதிப்பில் வெளியிடும் திட்டத்தினை இலங்கைச் சமூக விஞ்ஞானிகள் சங்கம் செயற்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் திட்டமுகாமையாளரும், இணைப்பாளருமான ரஞ்சித் பெரரா அவர்களுக்கும் மேற்படி சங்கத்திற்கும் எனது நன்றியினை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன். 2015ம் ஆண்டில் இந்நூல் தொடரின் இறுதிப் பிரசுரம் வெளிவரும். 'Paradise Poisoned: Learning About Conflict Terrorism and Developement from SriLanka's Civil Wars' (நஞ்சூட்டப்பட்ட சுவர்க்கம்: இலங்கையின் உள்நாட்டுப் போரில் இருந்து மோதல், பயங்கரவாதம், அபிவிருத்தி ஆகியன பற்றிய படிப்பினைகளைக் கற்றுக்கொள்ளல்) என்னும் எனது ஆங்கில நூல் சென்றடைந்ததை விடப் பரந்ததான வாசகர்களை இதன் தமிழ், சிங்கள மொழி பெயர்ப்புக்கள் சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்துடன் இத்திட்டம் செயற்படுத்தப்படுகிறது.

'நஞ்சூட்டப்பட்ட சுவர்க்கம்' நூல் பதினெட்டு வருடங்களாக நான் மேற்கொண்ட உழைப்பின் அறுவடை. இந்நூலில் வன்முறை மோதல், பயங்கரவாதம், அபிவிருத்தி என்பவற்றிற்கிடையிலான தொடர்புகளை ஆராய்ந்துள்ளேன். 1948-1988 என்ற எல்லைக்கு உட்பட்டதும், சுதந்திரத்தின் பின்னருமான இலங்கையின் வரலாறு என்ற கண்ணாடி ஊடாக இத்தொடர்புகளை நான் ஆராய்ந்துள்ளேன். முதியவர்களாக உள்ள இலங்கையர்கள் இந்த வரலாற்றை புதிய தலைமுறையினரை விட நன்கு தெரிந்து வைத்துள்ளனர். சுதந்திரத்தின் பின்னர் இலங்கையில் ஒப்பீட்டளவில் அமைதிநிலை நிலவியது.

பின்னர் நாடு பயங்கரவாதம், வன்முறை மோதல் என்பவற்றால் சீரழிந்தது. 1987இல் நான் இலங்கையில் இருந்தேன். இரண்டு சிவில் யுத்தங்களின் தாக்கங்களிற்கு ஈடுகொடுக்கும் பெரும்பாட்டை இலங்கையும் அந்நாட்டு மக்களும் அன்று எதிர்கொண்டிருந்தனர். அமைதியான சூழ்நிலை எப்படி மறைந்தது? பயங்கரவாதமும், வன்முறை மோதல்களும் எவ்வாறு நாட்டைச் சீர்குலைத்தது என்பன வற்றை ஆராய்வதே எனது நோக்கமாகும்.

இலங்கை மக்கள் குழப்பம் மிகுந்த நீண்ட காலத்தைக் கடந்து வந்துள்ளார்கள்; இன்று நம்பிக்கையுடனும் எதிர்பார்ப்புக்களுடனும் எதிர்காலத்தை அவர்கள் பார்க்கும் நிலையில் உள்ளனர். இவ்வாறான ஒரு காலகட்டத்தில் கடந்து வந்த இந்த வரலாற்றை சிங்கள, தமிழ் வாசகர்கள் மீளாய்வு செய்வது நல்லதென்று நான் கருதுகிறேன். இதற்கான காரணம் யாது? வரலாற்றில் இருந்து பாடங்களை கற்றுக் கொள்ளமுடியும்; அந்தப் பாடங்களினைக் கொண்டு ஆக்கவழியில் செயற்படலாம். 'விடுதலைப்புலிகளைத் தோற்கடிப்பதற்கு இலங் கைக்கு உதவிய ஒன்பது தீர்மானங்கள்' என்னும் தலைப்பில் 'இந்தியன் டிபென்ஸ் ரிவியு' என்னும் சஞ்சிகையில் பாதுகாப்புச் செயலாளர் கோதபாய ராஜபக்ச அவர்களின் நேர்காணல் ஒன்று வெளியாயிற்று. இது ஒரு முக்கியமான நேர்காணல். "2005 ஆம் ஆண்டு ஜனாதிபதி ராஜபக்ச பதவி ஏற்ற பொழுது நாம் இதற்கு முந்திய யுத்த நடவடிக் கைகள் முழுவதையும் ஆராய்ந்து பார்த்தோம்." றொவான் கலிக் என்னும் பத்திரிகையாளர் தொடுத்த கேள்விக்கு பாதுகாப்புச் செயலாளர் இப்படிப் பதிலளித்தார். அவர் தொடந்து கூறியவை. "எமது ஆய்வின் நோக்கம் முன்னைய தோல்விகள் யாவற்றுக்குமான தெளிவான காரணங்களைக் கண்டறிவது ஆகும். அதன் மூலம் விடுதலைப் புலிகளுடனான 30 வருட யுத்தத்தை முழுமையாக முடிவுக்கு கொண்டு வருதல் எமது இலக்காக இருந்தது. முன்னைய யுத்தங்கள் ஒவ்வொன்றையும் முழுமையாக பரிசீலித்தல், ஒவ்வொரு தடவையின் தோல்விக்கு காரணமாக அமைந்த காரணிகளையும் யுத்தத்தை வெற்றிகரமாக முடிவுக்கு ஏன் எடுத்து செல்ல முடியவில்லை என்பதற்கான காரணிகளையும் கண்டறிதல், அவ்வாறான ஒவ்வொரு காரணிக்குமான தீர்வு என்ன என்பதைக் கண்டு கொள்ளுதல், என்பன இந்த ஆய்வின் நோக்கமாக இருந்தது."

இன்றைய கட்டத்தின் சூழ்நிலைக்கும், நிகழ்வுகளுக்கும் பின்னோக்கிய வரலாற்றுக்கும் ஏதாவது சம்பந்தம் உள்ளதா? சுதந் திரத்திற்குப் பின்னரான வரலாற்றில் இருந்து நாம் கற்றுக்கொள்ளக் கூடியவை யாவை? சில வழிகளில் இன்றைய சூழல் தனித்துவமானது. இது ஒரு வரலாற்றுச் சந்தர்ப்பம். இலங்கையின் ஆயுதப் படைகள் விடுதலைப் புலிகளைத் தோற்கடித்ததன் மூலம் உருவாகியிருக்கும் தனித்துவம் மிக்க வரலாற்றுச் சந்தர்ப்பம் இது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல் என்ற இரண்டிலும் பெற்றுக் கொண்ட மக்களின் ஆணையை இராணுவ வெற்றி என்பதாக மட்டும் பொருள் கொண்டு விளக்கமுடியாது. ஜனாதிபதிக்கும் அவரது மக்கள் சுதந்திர முன்னணிக்கும் வழங்கிய இந்த அரசியல் ஆணையில் இன்னும் சில அம்சங்களும் உள்ளன. தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஜனாதிபதி வெளியிட்டிருந்த அபிவிருத்தி இலக்குகள் என்ற இலட்சியத்தையும் இலங்கை மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள் என்றே நான் கருதுகின்றேன். தேர்தல் விஞ்ஞாபனத்தில் 'குறைவிலாச் செல்வம் மிக்க நாடு', 'ஒழுக்கமும் சட்டத்திற்குப் பணிந்து நடக்கும் இயல்புமுடைய சமூகம்', 'சுத்தமான நீர் - இந்நாட்டின் பாரம்பரியச் சொத்து', 'சுத்தமான பசுமைமிகு இயற்கைச் சூழல்' என இவ்வாறெல்லாம் அந்த விஞ்ஞாபனத்தில் கூறப்பட்டுள்ளன. மக்களின் ஆணையில் இவையும் சேர்ந் துள்ளன.

இராணுவ வெற்றி யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்த போதும் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையிலான பேதங்கள் மறையவில்லை; நாட்டுக்கு உள்ளேயும், வெளியே புலம்பெயர் சமூகங்கள் மத்தியிலும் பேதங்கள் உள்ளன என்பதை ஜனாதிபதி ராஜபக்ச ஏற்றுள்ளார். 'ஐக்கியப்பட்ட தாய்நாடு- ஒருமித்த தொலை நோக்கைக் கொண்ட தேசம்' என்பது அபிவிருத்தி இலக்குகளின் இலட்சியமாக உள்ளதாயும் ஜனாதிபதி ஏற்றுக் கொண்டுள்ளார். 'மகிந்த சிந்தனை' இவ்வாறு கூறுகின்றது: "பாரம்பரியத் தாயகம் என்னும் அடிப்படைவாதக் கருத்தையும் தனிநாடு என்பதையும் கைவிட்டு இந்நாட்டுப் பிரஜைகள் அமைதியான அரசியல் தீர்வை அடைவதும், அதன் வழி எல்லாப் பிரஜைகளுக்கும் அதிகாரத்தைப்

பகிர்ந்தளிப்பதும், பிரஜைகளை அதிகாரமுடையவர்களாக்குவதும் எனது எதிர்பார்ப்பு ஆகும்." (பக்.52)

மேற்குறித்தவற்றின் பின்னணியில் நோக்கும் பொழுது எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க, சிறிமாவோ பண்டாரநாயக்க, யே.ஆர். ஜயவர்த்தன ஆகியோர் எதிர்நோக்கிய சவால்களினை ஒத்தனவாகவே இன்றைய ஜனாதிபதி எதிர்நோக்கும் சவால்களும் உள்ளன. மேலே குறிப்பிட்ட மூன்று தலைவர்களும் தேர்தலில் அமோக வெற்றிகளை ஈட்டினர். அந்த வெற்றிகள் பெரும்தொகையான மக்களிற்கு நம்பிக்கையையும், எதிர்பார்ப்புகளையும் வழங்கின. அந்த வரலாற்றுக்கட்டங்கள் வழங்கிய வாய்ப்புக்கள் வெறும் கானல் நீரின் தன்மையினவாய் அமைந்தன. நம்பிக்கையும், எதிர்பார்ப்புக்களும் வீண்போயின. இந்த வரலாற்றை அறிந்தோர் யாவரும் ஒப்பமுடிந்த உண்மை இது. அமோகமான ஆதரவுடன் கூடிய மக்கள் ஆணையைப் பெற்ற இந்தத் தலைவர்கள் பன்மைச் சமூகம் ஒன்றை அணிதிரட்டி அபிவிருத்தி இலக்குகளை நோக்கிப் பயணிக்க முடியவில்லை. இலங்கையின் சிங்கள பௌத்த முடியாட்சி என்ற அடையாள வாதம் ஆழ ஊறிப்போயிருந்த ஐக்கிய இலங்கை அரசு (ஒற்றை ஆட்சி) என்ற பின்னணியில் பன்மைச் சமூகத்தை ஒன்றிணைத்து இப் பாதையில் வழிநடத்த அவர்களால் இயலவில்லை.

இன்று வரை இலங்கையின் அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலைக் குழப்பிவந்த சமூகப் பிளவுகளைத் தாண்டி வெற்றிப் பாதையில் செல்வது எப்படி? எஸ்.டபிள்யு. ஆர். டி பண்டாரநாயக்க, சிறிமாவோ பண்டாரநாயக்க, யே. ஆர் ஜயவர்த்தன ஆகியோரின் அனுபவங்கள் நிரூபிப்பது யாதெனில் இலங்கையின் பிரிவினைகளையும், பிளவு களையும் தாண்டிச் செல்லுதல் கடினம் என்பதே. இக்கருத்துடன் எனக்கு உடன்பாடு கிடையாது. ஜனாதிபதி ராஜபக்ச போன்ற பலம் வாய்ந்த திறமை மிக்க தலைவரால் இத்தடைகளைத் தாண்டுதல் முடியும் என நான் கருதுகிறேன். இலங்கையில் முன்னர் பிளவுகளுக்கு காரணமாக இருந்த பௌத்தமதத்தை முரண்பாடுகளைக் களைந்து ஐக்கியத்தை ஏற்படுத்தக் கூடிய சொல்லாடலாகவும், சக்திவாய்ந்த கருவியாகவும் உபயோகப்படுத்த முடியும். யுத்தத்தின் பின்னணியில் உயர்ச்சி பெற்ற இன்னொரு தலைவர் தர்மஅசோகர். இலங்கை

மக்களால் போற்றப்படும் இந்தியப் பேரரசர் அசோகர் ஆவர். அவரின் உதாரணத்தில் இருந்து பல பாடங்களை கற்றுக் கொள்ளல் முடியும். சில நூல்களினதும் சான்றாதாரங்களின் படியும் பௌத்த தர்மத்தைப் பரப்புவதில் புத்தபகவானுக்கு அடுத்த நிலையில் முக்கியம் பெற்ற ஒருவராக அசோக மன்னர் விளங்கினார்.

நான் இளம் ஆய்வாளனாக இருந்த காலத்தில் மொரிஸ் டபிள்யு. மொறிஸ் எழுதிய 'உலகின் வறியோர்களின் வாழ்க்கை நிலைபற்றிய அளவீடு' (Measuring the Condition of the World's Poor, 1979) என்ற புகழ் பெற்ற நூல் மூலம் இலங்கையைப் பற்றி அறிந்து கொண்டேன். இது ஒரு திருப்புமுனையாக அமைந்த பொருளியல் ஆய்வு நூல். இலங்கையின் அபிவிருத்தி ஒரு வெற்றிக்கதை; அதன் அபிவிருத்திப் போக்கு தனித்துமிக்கது. மிதமான அளவிலான பொருளாதார வளர்ச்சியை உடைய இலங்கை மக்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்யக் கூடியதாயும் பௌதீக வாழ்க்கைத் தரத்தில் (Physical Quality of Life) உயர்மட்டத்தில் உள்ளதாயும் இருப்பதை மொரிஸ் எடுத்துக் காட்டினார். இதன் பின்னர் 'Ending Hunger : An Idea Whose Time has Come' *(பட்டினி ஒழிப்பு: அவசியமான ஒரு பணி)* என்ற நூலை நான் இன்னொரு ஆய்வாளரோடு சேர்ந்து எழுதினேன். அந் நூலில் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்ட பங்கீட்டு அரிசித் திட்டம் பற்றி எழுதினேன். உணவுத் தேவையைப் பூர்த்திசெய்வதை அடிப்படை மனித உரிமையாகவும் பொதுக் கொள்கை சார்ந்த விடய மாகவும் அமைந்ததைக் குறிப்பிட்டிருந்தேன். என்னைப் போன்ற இலட்சியவாதிகளான இளம் ஆய்வாளர்களுக்கு இலங்கை ஒரு முன்மாதிரியாக விளங்கியது. நாம் இலங்கை பற்றி அப்போது நிறைய அறிந்திருக்கவில்லை. ஆயினும் எமது அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு உதாரணமாக இந்நாடு இருந்தது. இன்று இலங்கையில் மனிதவளம் உள்ளது, இயற்கை வளங்களும் உள்ளன, ஆன்மீக வளமும் உள்ளது. மீண்டும் இலங்கை முன்னுதாரணமாக விளங்க முடியும். வெற்றிக் கதையை உருவாக்கும் பின்னணி இலங்கைக்கே உரிய தனித்துவத்தைக் கொண்டதாகவும் இருக்கும். அது பௌத்தத்தின் தனித்துவமாகவும் இருக்கும். மனிதாயம், எல்லோரையும் உள்ளீர்க்கும் ஒற்றுமை, மன்னித்தல், பொறை, கோபத்தை அடக்குதல், ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டுதலைத் தவிர்த்தல் போன்ற நற்குண நற்செய்கைகளின்

சேர்க்கையான ஒரு சூழல் இங்கு உருவாக முடியும். புத்தபிரானின் போதனைகளில் மீண்டும் மீண்டும் எடுத்துச் சொல்லப்பட்ட விடயங்கள் இவை. இந்த சூழல் எப்படி வடிவம் பெறும் என்று எடுத்துரைக்கும் வல்லமை என்னிடம் இல்லை. ஏனெனில் நான் ஓர் அந்நியன். இலங்கையர்களே இதைப் பற்றிச் சொல்லக் கூடிய வல்லமை உடையவர்கள்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாயராஜபக்ஷவும் வரலாற்றின் பாடங்களில் இருந்து படிப்பினைகளை பெறலாம் என்று கூறுகின்றனர். நானும் அந்த விடயத்தில் நம்பிக்கை உடையவன். இராணுவ தந்திரோபாயத்தை வகுத்தது போல் அபிவிருத்தித் தந்திரோபாயத்திலும் 'தோல்வியின் ஒவ்வொரு வகைக் காரணிக்கும் ஒவ்வொருவகைத் தீர்வை' தேடிக் கொள்ள முடியும் என்று நான் கருதுகின்றேன். 'நஞ்சூட்டப்பட்ட சுவர்க்கம்' நூலின் பகுதியாக அமையும் 'நெருக்கடியின் பாதை' ஒரு அந்நிய நாட்டவரின் பார்வையில் இங்கு நிகழ்ந்தவற்றின் படிப் பினைகளைக் கூறுகிறது.

இலங்கை முன்னேற்றப் பாதையில் மேற்கொள்ளும் முயற்சி களுக்கு இந்நூல் சிறு அளவிலேனும் ஒரு பங்களிப்பாக அமையும் என்று நம்புகிறேன். இது என்னால் முடிந்த பங்களிப்பு, இலங்கை நாட்டிலிருந்தும், இலங்கை மக்களிடம் இருந்தும் கடந்த 20ஆண்டு களாக நான் பெற்றுக் கொண்ட நன்மைகள் பல. இந்நூல் அவற்றுக்கு ஓர் கைம்மாறாகக் கருதப்படவேண்டியது.

*ஜோன் ரிச்சார்ட்சன்*

ஹியும், வெர்ஜீனியா, ஐக்கியஅமெரிக்கா.

டிசெம்பர் 31, 2010.

# பொருளடக்கம்

முன்னுரை v

1. எமக்கு ஏன் இந்த நிலை? *1*

2. இலங்கையில் அரசியல் வேறுபாடுகள் தொடர்ச்சியான பயங்கர மோதல்களாக மாறியது ஏன்? *54*

3. 'ஆக்கமிகு அபிவிருத்தி' என்றால் என்ன? அது ஏன் முக்கியமானது? *88*

குறிப்புக்கள் *124*

# 1

# எமக்கு ஏன் இந்த நிலை?

*லங்கா கார்டியன் பத்திரிகையின் ஆசிரியர் மெர்வின் டி சில்வா 'பயம் - ஆட்டிப் படைக்கிறது' என்று எழுதினார். 'துப்பாக்கியில் இருந்து சன்னம் ஒன்று கூடப் பாயவில்லை. ஆனால் கிளர்ச்சியின் பிடியில் கொழும்பு நகரம் சிக்கிவிட்டது; நிர்வாகம் செயலற்று போய் முடங்கி விட்டது. இது வெட்ட வெளிச்சமாகத் தெரியும் யதார்த்தம்.' என்றும் எழுதினார்.*

---

**'எமக்கு ஏன் இந்த நிலை?'**

1987 ஆம் ஆண்டு யூன் மாதம் 'இலங்கையின் இனக்குழுமமோதல்' என்ற விடயம் குறித்த கருத்தரங்கு ஒன்று கொழும்பு நகரில் நடைபெற்றது. அக் கருத்தரங்கில், ஒரு மாலை நேரம், "எமக்கு ஏன் இந்த நிலை? ஏன் இப்படி ஆயிற்று?" என்ற கேள்வியை சிலர் எழுப்பியதை என் காதால் முதன் முதலாக நான் கேட்டேன். இந்தக் கேள்வியை எழுப்பிய இலங்கையர்களிடமிருந்து இப்படியானதொரு கேள்வி ஏன் எழுதல் வேண்டும் என்பது குறித்து நான் சிந்தித்தேன். இலங்கை அபிவிருத்திப் பாதையில் வெற்றியுடன் முன்னேறும் நாடு என்று புகழ்ந்துரைக்கப்பட்டது. அது ஏன் இடையறாததும், கொடியதுமான சிவில் யுத்தத்திற்கும்[1] அழிவுக்கும் உரிய களமாக மாறிற்று என்ற ஆதங்கம் தான் அவர்களை இப்படியொரு கேள்வியை கேட்க வைத்தது. 1988 ஆம் ஆண்டு நானும் எனது மனைவியும் இலங்கையில் நீண்ட நாட்கள் தங்கியிருந்தோம். அக்காலத்தில் இலங்கை கொலைகள் விழும் பூமியாக இருந்தது. உலகில் அதிக கொலைகள் விழும் நாடுகளில் அதுவும் ஒன்று. வடக்கே கிளர்ச்சி யாளர்களுக்கு எதிரான போர் ஒன்று 50,000 இந்தியப் படைவீரர்களால்

நடத்தப்பட்டது. அதே வேளையில் தீவிரவாத சிங்கள இளைஞர்களின் கரந்துறை படைகளின் இயக்கம் கொழும்பு நகரின் மீது அச்சுறுத்தலை ஏற்படுத்தியபடி இருந்தது. இலங்கையின் பாதுகாப்பு அமைச்சரும், இலங்கையின் ஜனாதிபதியும், எதிர்க்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரும், அடுத்தடுத்து நிகழ்ந்த குண்டு வெடிப்புகளில் பலியாகினர். சில ஆண்டுகள் கழிந்ததும் கொழும்பு நகரின் வர்த்தக மையமாயும், உல்லாசப் பயணிகள் வந்துபோகும் பகுதியுமாகிய இடத்தில் குண்டுகளைக் கொண்ட வாகனத்தை வெடிக்க வைத்தனால் 89 பேர் பலியாகினர். 1338 பேர் வரை படுகாயம் அடைந்தனர். இந்தக் குண்டு வெடிப்பை தமிழர்களான தற்கொலைக் குண்டுதாரிகள் நிகழ்த்தினர். இதன் பின்னர் ஒரு தடவை சர்வதேச விமான நிலையத்திற்குள் இவர்கள் புகுந்து அங்கிருந்த ஜெட்ரக விமானங்கள் மூன்றையும் வேறு மூன்று விமானங்களையும் குண்டு வைத்துத் தகர்த்தனர்.[2] விமானநிலையத்தில் காத்திருந்த நூற்றுக்கணக்கான பயணிகளிற்கு ஒரு பயங்கர அனுபவமாக இந்நிகழ்வு அமைந்தது.

2001 செப்டம்பர் - ஒக்டோபர் மாதங்களில் மீண்டும் நான் இலங்கை வந்திருந்த போது, இந்நாடு கொரில்லா யுத்தம், நகரத்தின் மீதான பயங்கரவாத தாக்குதல்கள் என்பவற்றை எதிர்கொண்ட வண்ணம் இருந்தது. தடுப்பரண்களும், இராணுவப் பரிசோதனைச் சாவடிகளும் கொழும்பு நகரின் மையப்பகுதியின் வீதிகளைத் தடை செய்தன. உல்லாசப் பயணிகளிற்கு சேவைகளை வழங்கிய பல வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்ததைக் கண்டேன். 'அலரி மாளிகை' என்று அழைக்கப்படும் பிரதமரின் வாசஸ்தலத்தின் முன்னால் பலவண்ண அலங்கார உடையணிந்த காவலர்கள் முன்பு காவல் பணியில் நிற்பார்கள். அந்த எடுப்பான தோற்றமுடைய மாளிகையின் முன்னால் இப்போது களத்தில் இறங்கிப் போரிடும் போது அணியும் உடையுடன், காவலர்கள் மணல் மூட்டைகளின் பின்னால் நிற்பதையும், அவர்கள் கைகளில் யந்திரத் துப்பாக்கிகள் தயார் நிலையில் இருப்பதையும் பார்த்தேன். இந்தப் பயங்கர மோதல் நிலை காரணமாக உல்லாசப் பயணிகள் இந்நாட்டிற்கு வரப் பயந்தனர். விலைவாசிகள் உயர்ந்தன; பணவீக்கம் ஏற்பட்டு முதலீட்டுக்கான ஊக்கம் குறைந்தது, மூலதன வெளிப்பாய்ச்சல் நிகழ்ந்தது (மனித

மூலதனம், நிதிமூலதனம் ஆகிய இரண்டும் வெளியேறின. வன்முறைக் கலாசாரம் தலை விரித்தாடியது.

2001 ஆம் ஆண்டு தொடக்கத்தில் வாஷிங்டன் நகரில் நடந்த கருத்தரங்கு ஒன்றிற்குச் சென்றிருந்தேன். அக் கருத்தரங்கிற்கு வந்திருந் தவரான உத்தியோகத்தர் ஒருவர் (யு.என்.எச்.சி. ஆர் என்னும் அகதிகள் புனர்வாழ்வுக்கான ஐ.நா. நிறுவனத்தில் பணிபுரிபவர்) என்னிடம் இப்படி ஒரு கேள்வியைத் தொடுத்தார்.[3]

"பொருளியலாளர்கள் எதிர்வு கூறிய முறையில் இலங்கை ஏன் செல்லவில்லை? அங்கே என்ன நடந்தது? இது பற்றி இங்கே உள்ள வர்கள் யாராவது விளக்கம் கூறமுடியுமா?"

அவரது கேள்வியில் அர்த்தம் இருக்கிறது. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கு எல்லாம் ஒரு முன்மாதிரியாக இலங்கை ஒரு காலத்தில் கருதப்பட்டது. 1977 ஆம் ஆண்டு மொரிஸ் டபிள்யு. மொரிஸ் (Morris W. Morris) என்னும் பொருளியல் வரலாற்றாசிரியர் 'PQLI' என்று சொல்லப்படும் பௌதீக வாழ்க்கைத்தரச் சுட்டெண் என்னும் அளவுகோலை வெளியிட்டார். பொருளாதார அபிவிருத்தி கொண்டுவரக் கூடிய வேறு சமூக நன்மைகள் பற்றிய சாதனைகளை அளவிடக்கூடியதே இந்த அளவுகோல். அப்போது ஐரோப்பிய தேசங்களான போத்துக்கல், யுகோசிலாவியா என்பனவற்றுடன் இலங்கையின் 'வாழ்க்கைத்தரம்' ஒத்த நிலையில் இருந்ததையும், ஆனால் இலங்கை ஆளுக்கான மொத்த தேசிய உற்பத்தி (Per Capita GNP) என்ற அளவுகோலின்படி உலகின் மிக வறிய நாடுகளின் அட்டவணையில் இருப்பதையும், மொரிஸ் டபிள்யு. மொரிஸ் கண்டார்.[4] ஆம்! அவர் இலங்கையைப் பற்றிய கண்டுபிடிப்பு ஒன்றை அறிவித்தார். 1977 ஆம் ஆண்டில் பொதுத்தேர்தலின் மூலம் இலங்கை யில் ஒருமாற்றம் நிகழ்ந்தது. மார்க்சிய பொருளாதாரத் திட்டமிடல் முறையைக் கைவிட்டு சுதந்திரமான வர்த்தகம், கட்டுப்பாடுகளைத் தளர்த்தல், தனியார் மயமாக்கல் என்பவற்றை உள்ளடக்கிய பொருளா தாரக் கொள்கை பின்பற்றப்பட்டது. பொருளாதார வளர்ச்சியும், செழிப்பும் ஏற்பட்டன. இரண்டு கிளர்ச்சிகள் அடுத்தடுத்து ஏற்பட்டன. தமிழ்த் தீவிரவாதிகளுடனான போர் தீர்வின்றித் தொடர்ந்தது. இந்த நிகழ்வுகள் அரசியல்வாதிகளையும், குடிமக்களையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கின. இலங்கையை அரசியல், பொருளாதார அபிவிருத்திற்குச்

சிறந்த முன்னுதாரணம் என்று கூறிய ஆய்வாளர்களும் கொள்கை வகுப்பாளர்களும் ஆச்சரியத்திற்கு உள்ளாகினர்.

1988 ஆம் ஆண்டளவில் அபிவிருத்திப் பொருளியலாளர்களும் பிறரும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் ஆயுதக் கிளர்ச்சிகள் யுத்தங்கள் பற்றி அதிகம் கவனம் செலுத்தவில்லை. இருந்த போதும் டொனால்ட் ஹொறோவிட்ஸ் (Donald Horowitz), சிந்தியா எனொல் (Cynthia Enole) , மைறொன் வீனர் (Myron weiner) ஆகியோர் இனக்குழும முரண்பாடுகள் (Ethnic Conflicts) ஆய்வுக்குரிய விடயம் என்று கூறினர்.[5] பிரித்தானிய இந்தியாவின் பிரிவினையுடன் கூடிய இனவாதப் படுகொலைகள் 'பண்டைய வரலாறு' என்றே கருதப்பட்டன. இதே போன்று பல உள்நாட்டு யுத்தங்களும் (இனக்குழுமப் பிரச்சினை களின் கலப்பு இருந்த போதும்) கெடுபிடி யுத்த அரசியலின் பின்னணி யிலேயே விளக்கப்பட்டன. எதிர் எதிராகப் போட்டியிட்ட வல்லரசு கள் இந்த உள்நாட்டு யுத்தங்களுக்கு துணை புரிந்தன. ஒரு தரப்புக்கு ஒரு வல்லரசு உதவி புரிந்தால் மறுதரப்புக்கு இன்னொரு வல்லரசு உதவிபுரிந்தது.

அபிவிருத்திக் கொள்கைகளுக்கும் வன்முறை முரண்பாடுகள், கலகங்கள் என்பன தோன்றுவதற்கும் இடையிலான தொடர்பு என்ன என்பதை ஆராய்வதில் நாட்டம் காட்டப்படவில்லை. ஈரானில் இஸ்லாமியப் புரட்சி நடைபெறுவதற்கு முந்திய காலத்தில் அங்கு நான் திட்டமிடல், வரவு செலவுத் திட்டப் பிரிவில் பொறியியல் ஆலோசகராகப் பணியாற்றினேன். அபிவிருத்திக் கொள்கைகளிற்கும், வன்முறைக் கலகங்களிற்கும் உள்ள தொடர்பு பற்றிய கேள்விகள் அப்போது என் மனத்தில் தோன்றின. ஈரான் நாட்டில் 1970 க்களில் ஏற்பட்ட நிகழ்வுகளிற்கும், அதன்பின்னர் அந்நாட்டின் இஸ்லாமிய குடியரசு சென்ற பாதைக்கும் என்னைப் போன்ற 'நிபுணர்கள்' எவ்வித பங்களிப்பை வழங்கியிருக்கக் கூடும் என்று நான் சிந்தித்தேன். ஈரானிய குடியரசின் தோற்றத்திற்கு பிந்திய காலத்தில் உலகவங்கி, சர்வதேச அவிபிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவர் நிலையம், வேறு சில அபிவிருத்தி முகவர் நிலையங்கள் ஆகியவற்றின் உத்தியோகத்தர்களுடன் நான் தொடர்பு கொண்டு அபிவிருத்திக் கொள்கைகளுக்கும், வன்முறை முரண்பாடுகளுக்கும் இடையில்

உள்ள தொடர்புகள் பற்றி விசாரித்தேன். எனது விசாரணை குறித்து யாரும் அதிக அக்கறை காட்டவில்லை.[6]

கெடுபிடி யுத்தத்தின் முடிவு இந்த எண்ணப் போக்கை மாற்றியது. சோவியத் யூனியன் வீழ்ச்சியுடன் உலகு தழுவிய முறையில் நம்பிக்கையும், எதிர்பார்ப்பும் எழுந்தது. ஆனால் அவை நீண்ட நாள் நிலைத்து நிற்கவில்லை. 1990 க்களில் கார்ணீ ஆணைக்குழு (Carnegie commission) தீவிர முரண்பாடுகளைத் தவிர்ப்பது பற்றி ஆராய்ந்த போது உலகில் வெடித்த வன்முறைக் கொந்தளிப்புக்களை 'கெடுபிடி யுத்தத்தில் இருந்து மரண அமைதிக்கு' (From coldwar to deadly peace) என்று வருணித்தது.[7] ஆணைக்குழுவின் அறிக்கை வரலாற்று முக்கியத்துவம் உடையது. அந்த அறிக்கையில் ஒரு உலகப் படத்தைத் தந்து அப்படத்தில் 37 இடங்களை இரத்தச் சிவப்பில் அடையாளப்படுத்தி '1990 க்களின் பிரதான போர்க்களங்கள்' என்று குறிப்பிட்டுக் காட்டப்பட்டது. இவற்றுள் ஆபிரிக்கா - 15 இடங்கள், லத்தின் அமெரிக்கா - 5, ஆசியா - 6 மத்திய கிழக்கு - 4 முன்னைய கம்யூனிஸ்ட் நாடுகள் - 7 என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இவற்றுள் இரண்டு இடங்கள் தவிர மீதி 35 இடங்களிலும் தீவிர உள்நாட்டு யுத்தங்கள் நடைபெற்றன. இந்த யுத்தங்களில் சம்மந்தப்பட்ட தரப்பினர்களுக்கு வெளிநாட்டு ஆதரவும் இருந்தது.[8]

கார்ணீ ஆணைக்குழுவின் அறிக்கையும் வேறு பல ஆய்வுகளும் சிவில் யுத்தங்களின் பல்வேறு அம்சங்களை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்தன.[9] இந்த யுத்தங்கள் ஈவிரக்கமற்ற தன்மையுடையவை, மிகுந்த செலவில் நடத்தப்படுபவை, பரவலாக எங்கும் காணப்படுகின்றன என்ற தகவல்கள் வெளிப்பட்டன. சில யுத்தங்களில் கொல்லப்பட்டவர்களில் 90% அப்பாவிப் பொதுமக்களாவர். ரூவாண்டாவின் 40% மக்களில் ஒரு பகுதி, இனப்படுகொலைத் தாக்குதல்களுக்கும் சிவில் யுத்தத்திற்கும் பலியாகி மடிந்தனர். எஞ்சியோர் இடம்பெயர்ந்து நிர்க்கதிக்குள்ளாயினர். சிவில் யுத்தம் காரணமாக அங்கோலாவின் 80% பயிர்ச்செய்கை நிலம் கைவிடப்பட்டு பாழடைந்தது. மொசாம்பிக் நாட்டில் 480,000 சிறுவர்கள் யுத்தம காரணமாக இறந்தனர். 200,000 சிறுவர்கள் அநாதைகளாகி வளர்ந்தோரின் துணையை இழந்தனர். பெரும்பாலான யுத்தங்களில் பிடிவாதத்துடன் இருந்த போராளிகள் சிறுவயதினராவர். அவர்களுக்கு யுத்தத்தை தவிர வேறு ஒரு வாழ்க்கை

இருப்பது தெரியாது. சியராலியோனின் புரட்சிகர ஐக்கிய முன்னணி ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என்று எவ்வித பேதமும் இன்றி ஆட்களின் கால் கைகளை அறுத்துத் துண்டித்து விடும் கொடூரமான தண்டனையை எழுந்தமானப்படி வழங்கியது. எதிரிகளுக்கு விடுக்கும் அச்சுறுத்தலாகவும் இத்தண்டனை அமைந்தது. அந்நாட்டில் சனத் தொகையின் அரைப்பங்கினர் இடம் பெயர்ந் தோராகினர். வேறு பல நாடுகளில் நிலக் கண்ணிவெடிகளுக்கு இலக்காகி ஆயிரக்கணக் கானோர் தம் அவயவங்களை இழந்தனர். இடம்பெயர்ந்து அகதி களாவோர் எண்ணிக்கை பல மடங்கு உயர்ந்து சென்றது. இதனால் அயல்நாடுகளும், சர்வதேச சமூகமும் பெரும்சுமையை ஏற்றுக்கொள்ள வேண்டி ஏற்பட்டது. யு.என்.எச்.சி.ஆர் என்னும் ஐ.நா அகதிகள் புனர்வாழ்வு அமைப்பு செய்த மதிப்பீட்டின்படி 1998 ஆம் ஆண்டில் உலகில் 16.5 மில்லியன் மக்கள் உள்நாட்டில் இடம் பெயர்ந்தோராக இருந்தனர். இக் கணக்குப்படி ஆபிரிக்கா - 4.8 மில், ஆசியா 6.7 மில், ஐரோப்பியா 3.9 மில் என்றவாறு உள்நாட்டில் இடம் பெயர்ந்தோர் எண்ணிக்கை இருந்தது.[10]

சிவில் யுத்தங்களைத் தொடக்கி விடுவது எளிது, அவற்றைத் தீர்த்து முடிவுக்கு கொண்டுவருவது கடினமானது. யுத்தத்தில் ஈடுபடும் தரப்பினர் அதனைத் தொடக்கும் போது சிந்தித்துப் பார்க்க வேண்டிய விடயம் இது. 'சிவில் யுத்தங்களின் தீவிர எழுச்சி நிலையும், ஓய்வும் மாறி மாறி வரும், பேச்சு வார்த்தைகள் தொடங்கி இழுபறியாகப் போகும், சிலவேளைகளில் தற்காலிகமானதும், செயற்கையானது மான தீர்வு உடன்படிக்கை ஏற்படும். பின்னர் திடீரென யுத்தம் மீண்டும் வெடிக்கும்' என்று வில்லியம் ஸாட்மன் (I.William Zartman) கூறியிருப்பது மிகப் பொருத்தமானது. தீர்க்கப்படாதனவும் தொடர்ச்சி யானவையுமான யுத்தங்களிற்கு உதாரணங்களை அவர் தந்துள்ளார். எரிற்றியா - எத்தியோப்பியா (1952) சுடான் (1955) சைபிரஸ் (1964) அங்கோலா (1975) ஆப்கானிஸ்தான் (1979) என்பன அவர் தரும் உதாரணங்கள். (யுத்தங்கள் தொடங்கிய ஆண்டுகள் அடைப்புக் குறிக்குள் தரப்பட்டன). ஸார்ட்மன் பட்டியலுடன் இஸ்ரேல் - பலஸ்தீன் (1947) இந்தியா - பாகிஸ்தான் (1947) என்பனவற்றையும் சேர்த்துக் கொள்ளலாம்.[12] மேற்குறித்தவற்றோடு ஒப்பிடும் பொழுது தமிழ் தீவிரவாதிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையிலான 26

வருட யுத்தம் உலக அரங்கில் இடையில் புகுந்த புதிய யுத்தம் என்றே கருதலாம்.[13] உள்நாட்டு யுத்தங்கள் நீண்ட காலம் தொடர்கின்றன. ஏனெனில் யுத்தத்தில் வெற்றியை அடைவது கடினம். அதேபோல் சமாதானப் பேச்சு வார்த்தைகளும் தீர்வைத் தருவதில் வெற்றி காண்பதில்லை. இரு தரப்பையும் திருப்திப்படுத்தக்கூடிய இடை நடுவான சமாதானத் தீர்வை தரப்பினர் விரும்புவதில்லை. ஏனெனில் அவர்கள் தமது இறுதி இலக்குகள் பற்றியே அக்கறை கொள்வர் என்று ஸாட்மன் கூறுகிறார்.[14]

சிவில் யுத்தங்களினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது கடினம். இதனோடு இணைந்த பிரச்சினைதான் சிவில் யுத்தங்களின் முடிவின் பின்னரான புனரமைப்பு. இதுவும் கடினமான பணியாகும். பௌதிக உட்கட்டமைப்புக்களையும், பொருளாதார உட்கட்டமைப் புக்களையும் புனரமைத்தல் வேண்டும். சமூக உட்கட்டமைப்புக் களும் புனரமைக்கப்பட வேண்டும். சமூக உட்கட்டமைப்புக்களின் புனரமைப்பு அதிக கவனிப்பை பெறுவதில்லை. திறமை மிக்க வர்களான தனிநபர்கள் ஒன்றில் கொல்லப்பட்டிருப்பர், அல்லது அவர்கள் நாட்டை விட்டு ஓடியிருப்பர். எஞ்சியிருக்கும் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் எதிர்கால நம்பிக்கையை இழந்தவர்களாக இருப்பர். உடல் ஊனம், காயம் போன்றவற்றிற்கு ஆளாகாதவர்களும் உளப்பாதிப்பு உடையவர்களாயும், மனச்சோர்வு, நம்பிக்கையீனம், அச்சம் ஆகிய உணர்வுகளால் பீடிக்கப்பட்டவர்களாயும் இருப்பர். அபிவிருத்தியுறும் சமூகம் ஒன்றின் உயிர்ப்புக்குத் தேவையான இனங்களுக்கிடையிலான நல்லுறவு சிதைந்து விட்டது. அடிப்படைச் சேவைகளைத் தொடக்குவதும் அவற்றை இயங்க வைத்துப் பொருளாதார உற்பத்தியை ஆரம்பிப்பதும் மிகுந்த செலவை உண் டாக்கும் பணிகளாகும். அத்தோடு இதற்கு நீண்ட காலம் தேவைப் படும். பெரும்பாலான மக்கள், யுத்தம் ஆரம்பித்த போது இருந்ததை விட மோசமான வாழ்க்கை நிலையிலேயே உள்ளனர். உறுதியற்ற இந்த சூழ்நிலையில் வளங்களைப் பெறுவதிலான முரண்பாடும், போட்டியும் தீவிரமடைதல் தவிர்க்க முடியாதது. ஆதலால் வன்முறையை திரும்பவும் நாடுவதும், பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அதுவே வழி என்று எண்ணுவதுமான ஆபத்தும் உள்ளது. தெடா ஸ்கொபொல் (Theda Skocpol) மற்றும் அவரது மாணவர்களின்

ஆய்வுகளின்படி வன்முறை புரட்சிகளிற்குப் பின்னர் பதவிக்கு வரும் அரசுகள், அப்புரட்சிகளுக்கு முந்திய அரசுகளை விட கூடிய ஒடுக்கு முறைத் தன்மை உடையவை என்ற உண்மையை வெளிப் படுத்தின.[15]

கெடுபிடி யுத்தத்தின் பின்னரான உலகின் சமூக நோயியலின் மிகு அவலம் உடைய அம்சமாக வன்முறை முரண்பாடுகள் அமைந்து விட்டன. இதனை மிகு அவலம் என்று நான் குறிப்பிடுவதற்கு ஒரு முக்கியமான காரணம் உள்ளது. வறுமை, பசி பட்டினி, எழுத்தறிவு இன்மை, சூழல் அழிவு, எயிட்ஸ் ஏனைய தொற்று நோய்கள் என்பன சமூகநோயியலின் பிற அம்சங்கள் அல்லவா? இவற்றிற்கான தீர்வினை தடுக்கும் வல்லமை வன்முறை முரண்பாடுகளுக்கு உள்ளன. இதனால் தான் இந்த அம்சத்தை மிகு அவலம் என்று கூறுகிறேன். வன்முறை முரண்பாடுகள் சமூகம் முழுமையும் வியாபித்து பரவும் தன்மை உடையன. அவை ஈவிரக்கமற்றனவும், கட்டுப்பாட்டுக்குள் அடங் காதனவும் ஆகும். இவற்றுக்காகக் கொடுத்த விலை அல்லது செலவு கணக்கில்லாதது. சிவில் யுத்தத்தின் பின்னரான புனரமைப்பும் கூட நிர்வகிக்க முடியாதளவு சிக்கலானதாக உள்ளது. இவற்றை ஒன்றிணை த்து நோக்கும்போது இந்த அத்தியாயத்தின் தொடக்கத்தில் நான் எழுப்பிய கேள்வியை முன்வைத்து மேலும் மேலும் பல விடய ஆய்வுகளை நாம் செய்ய வேண்டியது அவசியம் என்பது தெளிவா கிறது. எங்கள் குடும்ப உறவுகளையும் நண்பர்களையும் பலி கொடுத்தோமே! எங்கள் வாழ்க்கை சின்னாபின்னமாகியுள்ளது, எவ்வளவு கஷ்டப்பட்டுத் தேடியவை யாவற்றையும் இந்த யுத்தம் அழித்தது? இதைத் தடுப்பதற்கு நாம் என்ன செய்திருக்கலாம்? இந்த அனுபவத்தில் இருந்து கற்றுக்கொள்ளக்கூடிய பாடங்கள் என்ன? பிறர் இந்த வழியில் செல்லாமல் இருப்பதற்கு எமது அனுபவப் பகிர்வு உதவ முடியுமா? நாம் நன்றாகப் படித்திருக்கிறோம். நாம் பட்டபாடு பெரிது. இதனை மற்றவர்களுக்கும் உணர்த்துவது எப்படி?

இந்தக் கேள்விகளில் வரும் 'நாம்' யார்? அங்கோலா முதல் சயர் வரையான அனைத்து யுத்தக்களங்களினதும் தேசங்களின் அரசியல் தலைவர்களும், பிரஜைகளும் தாம் 'நாம்' என்ற சொல்லால் குறிப் பிடப்படுவோர். இவர்களை விட இன்னொரு வகையான நபர்களும்

இந்தக் கேள்விகளைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். அயல்நாட்டு அரசியல் தலைவர்கள், பல்தரப்பு சர்வதேச நிறுவனங்களினதும் அரசு சார்பற்ற நிறுவனங்களினதும் தலைவர்கள், தனியார் துறை நிறுவனங்களின் தலைவர்கள், அபிவிருத்தி செயற்பாட்டாளர்கள் என்ற வகையினரையே நான் குறிப்பிடுகிறேன். சிவில் யுத்தங்களைத் தொடக்கியதில் இவர்களுக்கும் பங்கும், பொறுப்பும் உள்ளது. ஆனால் செலவுச் சுமையின் சிறிய பங்கைத் தான் இவர்கள் ஏற்றுக் கொண்டார்கள்.

இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் ஏற்பட்ட சிவில் யுத்தங் களில் பல விடுவிக்க முடியாத புதிர்கள். இவை ஏன் நிகழ்ந்தன என்பதைப் பற்றிய விரிவான ஆராய்வை முரண்பாடுகளைத் தடுத்தல் என்ற நோக்கத்தை முன்வைத்துச் செய்தல் அவசியமானதொரு பணியாகும். இருந்தபோதும் 'முரண்பாடுகளைத் தடுத்தல்' என்ற வகையில் எமது ஆய்வை வகுத்துக்கொள்ளும் போது எமது விசார ணையின் எல்லையை குறுக்கிக் கொள்கிறோம் என்பதையும் கவனித் தல் வேண்டும்.

### முன் எச்சரிக்கை முறைமைகளும் முரண்பாடுகளைத் தவிர்க்கும் தந்திரோபாயங்களும்

அமைப்பியல் தடுப்பு (structural prevention) அல்லது 'சமாதானத் தைக் கட்டியெழுப்புதல்' வன்முறை மோதல்களைத் தவிர்ப்பதற்கான சிறந்த வழிமுறையாகும். கார்ணி ஆணைக்குழு தெரிவித்த 'அமைப் பியல் தடுப்பு' என்னும் முறை குறைந்த செலவில் நடைமுறைப் படுத்தக் கூடியதும் ஆகும்.[16] தீவிர முரண்பாடுகளின் மூலகாரணங் களை அறிந்து அவற்றைத் தீர்த்தல், அதன் மூலம் தீவிர முரண் பாடுகள் எழாமல் அவற்றை முளையிலேயே கிள்ளிவிடுதல், அவை தோன்றினாலும், மீண்டும் தோன்றாதபடி நடவடிக்கை எடுத்தல் என்று அமைப்பியல் தடுப்பு முறையை விளக்கலாம்.[17] இம்முறையினை இரண்டு வகைகளாகப் பிரித்து நோக்கலாம்.

1. அடிப்படைப் பாதுகாப்பு, மக்களின் வாழ்க்கை நலன் உயர்வு, பிரஜைகளிற்கு நீதியை வழங்கல் ஆகியவற்றிற்கான செயல் முறை அமைப்பைச் சர்வதேச அமைப்புக்களுடாகவும்,

தனிப்பட்ட நாடுகளுடன் உள்ள இடையூடாட்டம் ஊடாகவும், உருவாக்கி நிர்வகித்தல் (தேவைப்படும் இடத்து, இதற்கு வெளியாரின் உதவியைப் பெற்றுக் கொள்ளுதல்).[18]

2. 'மக்களின் அடிப்படைத் பிரச்சினைகளான பொருளாதார, சமூக, பண்பாட்டு, மனிதாயத தேவைகளைப் பூர்த்தி செய்தல். இவ்வாறான தடுப்புமுறையை பயன்தரு பேண்தகு அபிவிருத்தி (Sustainable Development) என்றும் கூறலாம்.[19] இந்நூல் இந்த இரண்டாம் வகை தடுப்பு முறையிலேயே பிரதான கவனம் செலுத்தவுள்ளது.

கார்ணி ஆணைக்குழு இவ்வாறு கூறியுள்ளது. 'அபிவிருத்தி நடவடிக்கைகளில் கடந்த காலத்தில் போதிய கவனம் செலுத்தப்படவில்லை. இதற்கான காரணங்களில் ஒன்று முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு அபிவிருத்தி உதவும் என்ற உண்மை உணரப்படாதது எனலாம்'.

மக்களின் பொருளாதார, சமூக, பண்பாட்டு, மனிதாயத தேவைகள் பூர்த்தி செய்யப்படாமல் புறக்கணிக்கப்படும் போது, அம்மக்கள் தாம் அநீதிக்கு உள்ளான மக்கள் குழு என்று கருதுவர். அத்தகையோரே ஒழுங்கமைக்கப்பட்ட முறையிலோ அல்லது ஒழுங்கமைக்கப்படாத முறையிலோ வன்முறை நடத்தையில் ஈடுபடுகின்றனர்.[20]

'முரண்பாட்டுக் கோட்பாடு' தொடர்பான ஏராளம் நூல்கள் உள்ளன. விடயங்களை எளிமைப்படுத்திக் கூறுவது இயலாத காரியம் என்பதையே இந்த ஆய்வுகள் எடுத்துக் கூறுகின்றன. மனிதர் துன்பத்தை அனுபவிக்கும்போது வன்முறை நடத்தைக்குத் தூண்டப்படுகின்றனர். இருந்தாலும் யார் வன்முறையில் ஈடுபடப்போகிறார்கள், எப்போது கிளர்ச்சிகள் வெடிக்கும், பல்வித நிகழ்வுகள் ஒன்று சேர்ந்து நீண்டகால சிவில் யுத்தமாக எப்போது மாறும் என்பவற்றை முன்கூட்டியே திட்டவட்டமாக எதிர்வு கூறுதல் முடியாது. ஆனால் சமூக நோயியலுக்கும், தீவிர முரண்பாடுகளுக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது என்பதை எம்மால் உறுதியாகக் கூறமுடியும். உதாரணமாக அளவுக்கு அதிகமாகப் புகைப்பிடிக்கும் பழக்கம் உடையவர்களுக்கு ஈரல் புற்றுநோய் வரக்கூடும் என்று எம்மால் உறுதியுடன் எதிர்வு கூறமுடிகிறதல்லவா? இருந்தபோதும் அவர்களில் யாருக்கு புற்று

நோய் வரும், எப்போது வரும் என்றோ எத்தனை சிகரற்றுகளை உபயோகித்தால் புற்றுநோய் வரும் என்றோ கூறமுடிவதில்லை. இருந்தபோதும் நுரையீரல் புற்றுநோய் ஆபத்துப் பற்றிக் கவலைப் படுவோருக்கு புகைப் பிடிப்பதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள் என்று எம்மால் உறுதியுடன் அறிவுரை கூற முடியும். இதே போன்றுதான் சிவில் யுத்தங்களைத் தவிர்க்க விரும்பும் அரசியல் தலைவர்களைப் பார்த்து 'மக்களின் பொருண்மிய தேவைகளையும், உளவியல் தேவை களையும் நிறைவு செய்யுங்கள். அவர்களை ஒடுக்குமுறைக்கு உள்ளாக்க வேண்டாம்' என்று அறிவுரை கூறமுடியும்.

அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுக்கும் உலகின் அக்கறை, இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் மேற்கிளம்பிய ஒரு விடயம். எனினும் உலகத்தின் கவனத்தில் முதன்மை இடத்தைப் பெறும் விடயமாக அபிவிருத்தி ஒருபோதும் இருந்ததில்லை. ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்டம் (யு.என்.டி.பி) தனது மனிதவள அபிவிருத்தி அறிக்கைகள் (Human Development Reports) மூலம் மனிதவள அபிவிருத்தியின் நிலைபற்றியும் அதன் அளவீடு பற்றியும் கடந்த பத்து ஆண்டுகளின் விபரங்களை பதிவு செய்துள்ளது. 'யு. என்.டி.பி' யின் 2001 அறிக்கையில் 1990 க்களில் 'தீவிர பின்னடைவு களும், எதிர்மறைப் போக்குகளும்' ஏற்பட்டன என்ற எச்சரிக்கை விடுக்கப்பட்டது. 1990 க்களில் உலகின் செல்வந்த நாடுகளில் பொருளாதார வளர்ச்சியின் உச்சமான நிலைகள் எய்தப்பெற்றன. இக்காலத்தில் 'யு.என்.டி.பி' யின் மனிதவள அபிவிருத்திச் சுட்டி (HDI) அளவீட்டில் உலகின் 20 நாடுகள் பெரும் பின்னடைவைக் காட்டின.[21] மனிதவள அபிவிருத்திச் சுட்டி என்பது ஆயுட்காலம், கல்வி அடைவு, நபருக்கான வருமானம் என்ற மூன்று அளவுகோல் களின் சேர்க்கையாக அமையும் குறிகாட்டி ஆகும். எச்.ஐ.வி / எயிட்ஸ் நோய் காரணமாக சகாராப் பிராந்தியத்தின் 20க்கு மேற்பட்ட நாடுகளில் மனித ஆயுட்காலம் வீழ்ச்சியுற்றது. உலகின் மொத்த சனத்தொகை யின் 82% த்தினைக் கொண்டிருந்த 77 நாடுகள் பற்றிய ஆய்வொன்றின் படி 45 நாடுகளில் பொருளாதாரச் சமத்துவமின்மை அதிகரித்துச் சென்றது. 16 நாடுகளில் மட்டும் சமத்துவமின்மையில் குறைவு ஏற்பட்டது.[22] பொதுநிறுவனங்கள் உறுதியான அடிப்படையில் செயற் படுதல், பிரஜைகளின் பொறுப்புணர்ச்சி, பரஸ்பர நம்பிக்கை என்பன

வற்றை உள்ளடக்கியது சமூக மூலதனம் (Social Capital). இச் சமூக மூலதனத்தை சமத்துவமின்மை சிதைக்கிறது என்றும் யு.என்.டி.பி அறிக்கை குறிப்பிட்டது.[23]

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் பின்னடைவுகளையும், எதிர் மறை விளைவுகளையும் சந்தித்த வேளையில் அபிவிருத்தி உதவிகளை வழங்கும் முன்னேறிய 'ஓஇசிடி' (OECD) நாடுகளில் முன்னர் எப்போதும் கண்டிராத அளவில் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டது. அந்நாடுகள் கெடுபிடியுத்த காலத்தின் இராணுவ அழுத்தங்களில் இருந்து தம்மை மீட்டுக் கொண்டதுடன் வளர்ச்சியின் நன்மைகளைத் துய்த்தனர். இவ்வாறு முன்னேற்றம் ஏற்பட்டதன் விளைவாக மனிதவள அபிவிருத்தியின் பால் கூடிய அக்கறையும் அர்ப்பணிப்பும் அந்த நாடுகளில் ஏற்பட்டதென்று கூறமுடியாது. உதவி வழங்கும் நாடுகள் சமூகத்தின் 12 நாடுகள் தமது அபிவிருத்தி உதவித்தொகையில் 30% வீழ்ச்சியைக் காட்டின (உதவித்தொகை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் -GNP- சதவீதமாக) ஐக்கிய அமெரிக்கா உதவி வழங்குவோரில் உலகின் இரண்டாவது இடத்தை பெறும்நாடு (லக்ஸம்போர்ற்கு அடுத்ததாக). அந்நாடு தனது உள்நாட்டு மொத்த உற்பத்தியின் 0.21% த் தொகையைத் தான் உதவியாக வழங்கியது. இத்தொகையையும் கூட அது 50 வீதத்தால் குறைத்தது. உதவி வழங்கும் நாடுகளில் ஒரு நாட்டை தவிர ஏனைய யாவும் தமது உதவித் தொகையினை இக்காலத்தில் குறைத்தன.[24] ஒரு தேசம் தனது மக்களின் அடிப்படை தேவைகளான பொருளாதார, சமூக, பண்பாட்டு, மனிதாய பிரச்சினைகளைத் தீர்க்க முடியாத நிலை அபிவிருத்தியின் தோல்வியாகும். தீவிர வன்முறை முரண்பாடுகளுக்கும் அபிவிருத்தித் தோல்விகளுக்கும் இடையில் தொடர்பு உள்ளது என்ற கருத்து வலுவடையும் போது உதவி வழங்கும் நாடுகளிடை மனமாற்றம் ஏற்படலாம். ஆகவே 'முன்கூட்டியே எச்சரிக்கை செய்யும் முறைமை' ஒன்று உருவாக்கப்பட வேண்டும். அது என்ன தேவைகள் உள்ளன, எந்தளவு குறை உள்ளது என்பதனை முன்கூட்டியே எடுத்துக் காட்டும். ரூவாண்டாவில் நிகழ்ந்த இனப்படு கொலையில் 800,000 மக்கள் மடிந்தனர். கணக்கில் அடங்காதோர் அகதிகளாயினர். மத்திய ஆபிரிக்காவில் சமநிலை இதனால் குலைவுற்றது. இந்தப் படுகொலை

முன்கூட்டியே அறிவிக்கும் முறைமை ஒன்றன் தேவையை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

கார்ணி ஆணைக் குழுவின் அறிக்கை பின்வருமாறு கூறுகிறது:

'ரூவாண்டாவில் நிகழ்ந்த இனப் படுகொலையை ஆரம்ப நடவடிக்கை மூலம் தடுத்திருக்கலாம் என்பதை நிலைமையை நன்கு அறிந்து வைத்திருந்தவர்கள் பலர் 1994 ம் ஆண்டு முதலாக கூறி வந்துள்ளனர். ரூவாண்டாவிற்கான ஐக்கிய நாடுகள் உதவிப் பணிக் குழுவின் (UNAMIR என்னும் அமைப்பு) இராணுவத் தளபதியும் இதுபற்றி எடுத்துச் சொன்னார். ஒரு சிறிய படைப் பிரிவையாவது அங்கு வைத்திருக்க வேண்டும். விரைந்து களமிறங்கக்கூடிய அப் படைப்பிரிவு ஆரம்பத்திலேயே இனப்படுகொலையைத் தடுத்திருக்கும். ஆனால் அக்காலத்தில் அப்படி ஒரு படைப்பிரிவு ரூவான்டாவில் இருக்கவில்லை; அதனை வைத்திருக்க வேண்டும் என்ற எண்ணத் துணிவும் அப்போது இருக்கவில்லை. நிலைமை மோசமாகியதும் கவலையடைந்த நாடுகள் ஐக்கிய நாடுகள் தபானத்தையும், பாதுகாப்புச் சபையையும் அணுகின. இறுதியில் ஒன்றும் நடக்கவில்லை. நம்பிக்கையுடன் களமிறக்கக்கூடிய படைப்பிரிவு அங்கு இருக்கவில்லை. ஒரு படைப் பிரிவை உடனடியாகத் திரட்டுகின்ற எண்ணத் துணிவும் இருக்கவில்லை.'[25]

சில மாதங்கள் கழிந்ததும் அங்கு நிலைமை பயங்கரப் பேரழிவாக மாறியது. அதனைக் கவனத்தில் கொள்ளாமல் புறக்கணிக்க முடியவில்லை. மனித உயிர்கள் என்ற வகையில் கொடுத்த விலை ஒருபுறமிருக்க, நிவாரணப் பணிகளுக்காகவும், புனரமைப்புக்காகவும் அடுத்த மூன்று வருட காலத்தில் இரண்டு மில்லியன் டொலர்கள் செலவிடப்பட்டன. இனப்படுகொலையத் தடுப்பதற்கான தலையீட்டு நடவடிக்கைக்கு இந்தத் தொகையின் மூன்றில் ஒரு பங்கு மட்டுமே செலவாகியிருக்கும்.[26] ஆணைக்குழுவின் அறிக்கையில் தொடர்ந்து கூறியிருப்பவை வருமாறு: 'தடுப்பதற்கான தேவை எழும்போது செயல் வடிவம் பெறும், செயல் நிகழ்வதானால் செலவுகள் ஏற்படும். செலவுக்கு ஏற்ற பயன் உண்டு. ஏனெனில் தடுப்பதற்கான செலவு தீவிர முரண்பாட்டினால் எழும் அழிவுகளின் மதிப்பை விட ஒப்பீட்டளவில் மிகக் குறைந்தது. மீள்கட்டமைப்பு, மக்களை

உளப்பாதிப்புக்களில் இருந்து விடுவித்தல், ஆகிய பணிகள் பெருந் தொகைச் செலவை ஏற்படுத்துவன'. [27] ஆணைக்குழு தெரிவிக்கும் இக்கருத்து உலகின் பிற மோதல் பகுதிகளுக்கும் பொருத்தமானதே. இஸ்ரேல் - பலஸ்தீனம், பொஸ்னியா, சுடான், லைபீரியா, எத்தியோப்பியா, எரிற்றியா, சயர், சியராலியோன், நிகராகுவா, கொலம்பியா ஆகியவற்றிற்கும், இந்த நூலின் விடயப் பொருளாக இருக்கும் இலங்கைக்கும், ஏனைய பிற நாடுகளுக்கும் ஆணைக்குழு தெரிவித்த கருத்து பொருத்தமுடையதே. முன்கூட்டிய எச்சரிக்கை முறை நடைமுறைச் சாத்தியமானதாகும். ஏனெனில் தீவிர மோதல் எழக் கூடிய சூழ்நிலைகளைக் கொண்டு அவைபற்றி முன்கூட்டியே அறிந்து கொள்ள முடியும்.[25] வன்முறைக் கலகம் வெடிப்பதற்கு எந்தச் சம்பவம் தூண்டுதலாக இருக்கும் என்பதை குறிப்பிட்டுச் சொல்ல முடியாமல் இருக்கலாம். ஆனால் கலவரம் வெடிக்கும் என்பதைச் சொல்ல முடியும்.

வன்முறை நிகழ்வுகள் அடுத்தடுத்து நிகழும்; இறுதியில் அது பேரழிவைத் தரும் மோதலாக வெடிக்கும். இத்தொடர் நிகழ்வுகளின் எந்தக் கட்டத்தில் தலையீடு இடம்பெற வேண்டும்? அத்தகைய ஆரம்பத் தலையீட்டை தொடக்குவதற்கான சமிக்கைகள் யாவை? உள்ளூர் தலைவர்களும், குறித்த விடயத்தில் சம்மந்தப்பட்ட வெளிநாட்டுச் செயலிகளும் (External players) தலையிடுவதற்குரிய சரியான தருணம் எது என்பதைக் கண்டறிவது எப்படி? தலையிடுவதற்கான வழிமுறைகள் எவை என்று தெரிந்து கொள்வது எப்படி? அவ்வாறான தலையீட்டைச் செய்யும்படி அவர்களுக்கு ஊக்கம் கொடுப்பது எப்படி? இலங்கையின் மோதல்நிகழ்வுகளின் போக்கை உதாரணமாகக் கொண்டு மேற்குறித்த வினாக்களுக்கு விடை காண்பது இந்த நூலின் நோக்கங்களில் ஒன்றாகும்.

கார்ணி ஆணைக்குழுவின் அறிக்கையின் தீவிர முரண்பாடுகளைத் தடுத்தல் பற்றிய பகுதி எமது கேள்விகளுக்கான பதில்களை வழங்குவதாக உள்ளது. அரசின் வினைத்திறனை எப்படி அளவிடுவது? பலவீனமான அரசுகளின் இயல்புகள் என்ன? என்ற இரு விடயங்களைப் பற்றிய ஆய்வுகள் பல வெளியிடப்பட்டுள்ளன. இவற்றில் உள்ள தரவுகளைக் கொண்டு ஆபத்தை எதிர்நோக்கும் அரசுகள் (States at risk) எத்தகைய குறிகாட்டிகள் அல்லது அடை

யாளங்கள் கொண்டு இனம் காணப்படலாம் என்பதை ஆணைக்குழு பட்டியலிட்டுள்ளது.[29]

- ★ சனத்தொகை அழுத்தம், சிசுமரணவீதம் உயர்வாக இருத்தல், சனத்தொகையில் துரிதமாற்றம், அகதிகள் வெளியேற்றமும் இட மாற்றமும், சனத்தொகை அடர்த்தி அதிகரித்தல், சனத் தொகையில் இளைஞர் வீதாரசாரம் அதிகரித்தல், உணவுப் பற்றாக்குறை, சுத்தமான குடிநீர் பெறமுடியாதிருத்தல், ஒரு நிலப்பிராந்தியத்தினை இரண்டு அல்லது பல இனக்குழுமங் கள் தமது வாழ்விடமாக கொண்டிருத்தலும் தமது வாழ்விடம் என்ற உணர்வுடையவர்களாய் இருத்தலும், ஒரே உயிர்ச் சூழலியல் முறைமையில் இருந்து தம் வாழ்வாதாரத்தை அமைத்துக் கொள்ளுதலும்.
- ★ ஜனநாயக நடைமுறைகள் இன்மை, அரசு தன் சட்ட வழி நியாயத்துவத்தையும் அதன் இருப்புக்கான நியாயத்தையும் இழத்தல், அரசின் மனித உரிமை மீறல்கள் அதனை குற்ற மிழைக்கும் அரசு ஆக்குதல் (Criminalisation of state).
- ★ அரசாங்கங்கள் அடிக்கடி மாறுதலும், குறுகிய காலம் பதவி வகித்தலும்.
- ★ ஆளும் குழுக்களின் உறுப்பினர்களின் இனவிகிதாசாரம் சனத் தொகையின் இனவிகிதாசாரத்தில் இருந்து வேறுபடுதல்.
- ★ பொதுச் சேவைகளின் சிதைவு, சில சேவைகள் நிறுத்தப் படுதல்.
- ★ பொருளாதாரக் கஷ்டங்கள் கூர்மையடைதல், பொருளாதார வளர்ச்சியில் இனங்களிற்கு இடையில் சமனற்ற தன்மை, வர்த்தகத்தில் திறந்த போட்டி இன்மை.
- ★ குழுசார் மனக் குறைகளிற்காக பழிவாங்க வேண்டும் என்ற எண்ணம் - அதன் தொடர்ச்சி.
- ★ சனத்தொகை வெளியேற்றம் - பேரளவிலும், தொடர்ச்சி யாகவும் வெளியேறிக் கொண்டிருத்தல்.

மேற்குறித்த குறிகாட்டிகள் ஒரு நாட்டில் தோன்றும் போது தீவிர மோதல்நிலை அல்லது யுத்தம் ஆரம்பிக்கும் சாத்தியம் இருப்பதை சர்வதேச அபிவிருத்தித் துறை அறிஞர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். இவை அபிவிருத்தித்தியின் தோல்வியின் சமிக்ஞைகள் என்றும் அவர்கள் கூறுவர்.


சிவில் யுத்தம் தோன்றுவதற்கான சூழ்நிலை உருவாகி விட்டதை இனம் காண்பதற்கு மேற்குறித்த குறிகாட்டிகள் ஒரு குறிப்பிட்டளவு உயர்மட்டத்தையும், திரள்நிலையையும் பெறுதல் வேண்டும். இவ்வாறான உயர்நிலையை குறிகாட்டிகள் காண்பிப்பதற்கு நீண்ட காலத்திற்கு முன்னரே தடுப்பு நடவடிக்கைக்கான தலையீடு தொடங்கப்படவேண்டும். ஆனால், அவ்விதமான தடுப்பு நடவடிக்கையை தொடங்குவதை நியாயப்படுத்தும் 'முன்கூட்டிய அறிவித்தல் முறையை' நிறுவுதல் சிக்கலானது. அபிவிருத்தியின் தோல்வி நிகழப் போகிறது என்பதை முன்கூட்டியே அறிவதும், தலையீட்டிற்கான நிதி உதவி வழங்குதலை நியாயப்படுத்துதலும் இலகுவான விடயங்களல்ல. காலம் கடப்பதற்கு முன் சமிக்ஞைகளைத் தெரிந்து கொள்வது எப்படி என்பது சிக்கலான பிரச்சினையே.

கோடை காலத்து மாலை நேரத்தின் அமைதியைச் சிதறடித்துக் கொண்டு, இடிமுழக்கத்துடன் திடிரெனப் பொழியும் மழைபோன்று சிவில் யுத்தங்கள் சடுதியாக வெடிப்பனவல்ல. வன்முறையுடன் கூடிய அரசியல் மோதல்கள் தொடர்ந்து நிகழும்; அவற்றினை கட்டுப்படுத்தவும் அடக்கவும் அரச பாதுகாப்புப் படைகள் வன்முறையான பதில் நடவடிக்கைகளை மேற்கொண்டு சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்க முயற்சி செய்யும்; இந்நிகழ்வுப் போக்கின் உச்சமாக அமைவதே சிவில் யுத்தம். இந்த நிகழ்வுப் போக்குகள் ஒருவகையில் அபாய எச்சரிக்கைகளே. கார்ணி ஆணைக்குழு அறிக்கையில் வெளிப்படுத்தியிருப்பது என்னவெனில் சமூக நோயியல் குணம் குறிகள் அதிகரிக்கும் போது தொடர்ந்த ஒரு சிவில் யுத்தத்திற்கான சாத்தியப்பாடு தோன்றுகிறது என்பதாகும். ஆகவே சமூகநோயியல் அபிவிருத்திக் திட்டங்களின் பிரதான இலக்குகளாக இருத்தல் வேண்டும். பொதுச்சுகாதாரத் திட்டங்களின் பிரதான இலக்கு தொற்று நோய்களின் பரவலைக் கட்டுப்படுத்தலாகும். இதே போன்று தான் அபிவிருத்தித் திட்டங்கள் சமூக நோய்களைக் குறி வைக்கவேண்டும்.

அபிவிருத்தி திட்டங்கள் வெற்றிபெறும் போது சமூக நோய்கள் தணிக்கப்படும் அல்லது ஒழிக்கப்படும். அபிவிருத்தியின் தோல்வி சமூகநோய்களை அதிகரிக்கச் செய்யும், அதன் விளைவாக மனித சமூகத்தில் நோய்க்கான குணங்குறிகள் வெளிப்பட்டுத் தெரியும். ஆகவே வன்முறை நிகழ்வுகளின் தொடர்ச்சி அபிவிருத்தியின் தோல்வியின் அறிகுறியாகும். அபிவிருத்தித் தோல்வி சிவில் யுத்தத் திற்கான சமிக்ஜையும் ஆகும். இந்தத் தொடர்பை நாம் விளங்கிக் கொண்டால் சமூக நோய்களின் பரவல் தாக்கம் பற்றிய ஒரு நிலவரைப் படத்தை தயாரித்துக் கொள்ள முடியும். ஒரு நோயியல் நிபுணர் இவ்வாறுதான் நாட்டில் நோய்களின் பரவல் பற்றிய வரைபடம் ஒன்றை தயாரித்துக் கொள்வார். பொதுச்சுகாதார மருத்துவரும் இவ்வாறே தொற்று நோய்களின் பரவல் பற்றிய வரைபடத்தை தயாரித்துக் கொள்கிறார். அபிவிருத்திக் கொள்கையில் என்ன திருத் தங்கள் தேவை என்பதை அறிந்து கொள்வதற்கான முன் அறிவித் தலை இத்தகைய வரைபடம் வழங்கும்.

நான் இங்கே கூறிய நோயியல் உருவகம் எனது கருத்து அன்று. 'புரட்சி ஒன்றின் கட்டமைப்பு' (The anatomy of a Revolution) என்ற நூலில் வரலாற்று அறிஞர் கிறேன் பிறின்டன் (Grane Brinton) இதனைக் கூறுகிறார். 'புரட்சிகள் ஒருவகைக் காய்ச்சல் போன்றவை' என்று கூறும் பிறின்டன் இவற்றை கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கு 'காய்ச்சல் வரைபடம்' ஒன்று தேவை. மருத்துவத் தாதி ஒருவர் வெப்பமானியின் மூலம் வெப்பநிலையை அளந்து, கோட்டு வரை படம் ஒன்றை வரைந்து நோயாளியின் படுக்கையில் மாட்டி விடுவது போல், புரட்சிக் கொந்தளிப்புகள் பற்றிய வரைபடம் ஒன்றை தயாரித்துக் கொள்ளலாம்.[30] பிறின்டன் கூறும் புரட்சிகள், நமது கவனிப்புக்குரிய தீவிர மோதல்களில் இருந்து வேறுபட்டவை யாயினும் அவர் கூறும் வரைபடம் என்ற கருத்து உபயோகமானது. அதிகரித்துச் செல்லும் வன்முறை நிகழ்வுகள், அபிவிருத்தியின் தோல்வி, சமூக நோயியல் என்பனவற்றுக்குள்ள நெருங்கிய தொடர்பை 'காய்ச்சல் வரைபடம்' எமக்கு தெளிவாக எடுத்துக் காட்டமுடியும். சுதந்திரத்திற்குப் பின்னரான இலங்கையின் வரலாற்றில் 1948 முதல் 1988 வரையான காலப்பகுதியின் நோயியலை பிரிங்கடன் உருவகத்தை

பின்பற்றி நாம் அளவிடல் முடியும். இத்தகைய வரைபடம் ஒன்று (உரு. 1.1) இங்கே தரப்பட்டுள்ளது.




ஐக்கிய தேசியக்கட்சி (UNP), சிறிலங்கா சுதந்திரக்கட்சி (SLFP) என்பன இலங்கையின் முக்கிய அரசியல் கட்சிகளாகும். இவையிரண்டும் மாறி மாறி பதவிக்கு வந்தன. கூட்டாட்சி பங்காளிகளிடை மேலாதிக்கமுடைய கட்சிகளாக இவை விளங்கின.

**உரு. *1.1* இலங்கையின் அரசியல் மோதல் பற்றிய காய்ச்சல் வரைபடம் *1948- 1988***

அரசியல் மோதல்கள் பற்றிய காய்ச்சல் வரைபடத்தில் கிடை அச்சில் ஆண்டுகளும், குத்து அச்சில் வன்முறை மோதல் சம்பவங் களின் எண்ணிக்கையும் தரப்பட்டுள்ளன. UNP (ஐக்கிய தேசியக்கட்சி) SLFP (சிறீலங்கா சுதந்திரக்கட்சி) ஆகிய கட்சிகளின் ஆட்சிக்காலப் பகுதிகளும் அடையாளமிட்டுக் காட்டப்பட்டுள்ளன.[31]

அரசியல் மோதல் நிகழ்வு (Political confict incident) என்ற கருத் தைப் புரிந்து கொண்டு இந்த வரைபடத்தை நோக்குதல் வேண்டும். அரசியல் மோதல் நிகழ்வு என்பது அதிகாரத்தில் உள்ள அரசாங்கத் திற்கு எதிரான எதிர்ப்பு அல்லது அந்த அரசாங்கத்துடனான மோதல் என்பதனைக் குறிக்கும். மோதல் பொதுவாக வன்முறை கலந்த தாகவே இருக்கும். (ஆனால், எல்லா மோதல்களும் வன்முறை யானதாய் இருப்பதில்லை). ஒரு நிகழ்வின் செறிவு அல்லது தீவிரம்

அந்நிகழ்வுடன் ஏற்படும் வன்முறையின் அளவைப் பொறுத்து இருக்கும்.[32] சிலவேளை வன்முறையே இல்லாத நிகழ்வாகவும் இருக்கலாம். வன்முறை கலவாத நிகழ்வுகள் சிலவற்றையும் நாம் கவனத்தில் எடுத்துக் கொள்வது அவசியம். ஏனெனில் சமாதான முறையிலான எதிர்ப்பு ஊர்வலம், ஆர்ப்பாட்டம், பொதுவேலை நிறுத்தம் (ஹர்த்தால்) என்பன இலங்கையிலும் பிற தென் ஆசிய நாடுகளிலும் கையாளப்படும் வன்முறை கலவாத அரசியல் தந்திர நடவடிக்கைகளாகும்.[33] அரசியல் மோதல் நிகழ்வுகளின் உதாரணங்கள் பின்வருவன:

- ★ அரசியல் நோக்கத்துடன் நடத்தப்படும் ஆர்ப்பாட்டங்களும், கலவரங்களும் (இனங்களுக்கு எதிரான கலகங்கள் உட்பட).
- ★ அரசியல் நோக்கத்துடன் நடத்தப்படும் வேலை நிறுத்தங்கள்.
- ★ அரசாங்கக் கட்சித் தலைவர்களின் படுகொலைகள், இராணுவக் குழு ஒன்றினால் துரோகிகள் என்று அடையாளம் காணப்பட்ட தனிநபர்கள் படுகொலை செய்யப்படுதல்.
- ★ அரசாங்கச் சொத்துக்கள், கட்டிடங்கள் மீது வன்முறைத் தாக்குதலும் அவற்றை அழித்தலும் (இராணுவ முகாம்கள், கட்டமைப்புக்கள், பொலிஸ் நிலையங்கள் நிர்வாக அலுவலகங்கள், ரயில்கள், பஸ்கள் என்பனவற்றைக் தாக்குதலும் அழித்தலும்)

என்னுடைய ஆய்வுக்குழுவில் பல் இனத்தைச் சேர்ந்தவர்களான இலங்கையர்கள் இருந்தனர்.[34] இந்த ஆய்வுக்குழு 6500 நிகழ்வுகள் பற்றிய எழுத்து மூலமான வருணிப்புகளைத் தொகுத்தது. இந்த நிகழ்வுகள் 40 வருட எல்லையில் நிகழ்ந்தவை. இவ்வருணிப்புக்களில் பல ஒரு பந்தியில் அமைந்தன. சில வருணிப்புக்கள் ஒரு பக்கம் அல்லது அதற்கும் கூடிய அளவிலும் அமைந்தன. இந்த நிகழ்வுகள் பற்றிய தீவிரத்தைக் கணிப்பதற்கு ரஷ்ய நாட்டுச் சமூகவியலாளரான பிற்றிம் சொறோக்கின் (Pitrim Sorokin) அவர்கள் பயன்படுத்திய சுட்டி ஒன்றை அவரது நூலில் இருந்து தழுவிப் பயன்படுத்தினோம்.

சொறோக்கின் பயன்படுத்திய சுட்டியின் சாராம்சமான அம்சம் 'ஒரு நாட்டின் உள்நாட்டுக் கலவரங்களின் ஏற்றமும் இறக்கமும்' என் பதுவே.[35] இந்த ஏற்ற இறக்கத்தை அவர் ஓர் நீண்டகால எல்லைக்குள் அமைத்துக் காட்டினார். ஒவ்வொரு மாதத்தின் நிகழ்வுகளின் தீவிரத்தை இலக்கங்களில் சுட்டியாக குறித்துக் கொண்டு 'காய்ச்சல் வரைபடத்தை' வரைந்தோம். அந்த வரை படங்கள் எடுத்துக் கூறியவை பிரின்டன் கூறிய உருவத்தை ஒத்தனவாய் இருந்தன. நீண்ட கால எல்லையில் நிகழ்ந்த கலவரச் சம்பவங்கள் கொந்தளிப்புகளின் தீவிரத்தை பண்பு ரீதியில் சுட்டும் வரை படமாக இவை அமைந்தன.

இலங்கை பற்றிய 'காய்ச்சல் வரை படத்தை' நாம் மேற்குறித்த நோக்கில் உற்று நோக்கும் போது தெரிவது என்ன? 1984 இன் பின்னர் மோதல்களின் தீவிரம் அதிகரிப்பதைக் காண்கிறோம். ஓர் உயிருள்ள மனிதரின் மீது நோய்க்கிருமிகளின் தாக்கம் பற்றிய வரைபடம் என்று இதனை எடுத்துக் கொண்டால் 1984 ஆம் ஆண்டிற்கு முன்னர் இந்த மனிதர் ஒப்பீட்டளவில் 'நல்ல சுகதேகியாகவே' இருந்துள்ளார். இடைக்கிடை தொற்றுக்கள் (தும்பல், இருமல், சளி) ஏற்பட்ட போதும் அவை மிக விரைவில் நீங்குவதும் அவர் குணமடைவதுமாகக் காலம் ஓடிக்கொண்டிருந்தது. நோய்க் கிருமிகளின் தாக்கம் தீவிரமாக இருக்கவில்லை. அல்லது அந்த மனிதரின் உடலின் நோய் எதிர்ப்புச் சக்தி வலுமிக்கதாக இருந்தது. அத்தோடு நோய்ச் சிகிச்சைகளையும் உடனுக்குடன் அவர் பெற்று வந்தார். 1983 இன் பின்னர் நிலைமை யில் ஒரு பண்பு ரீதியான மாற்றம் ஏற்பட்டது. இந்தக் காலத்தை 'மனிதர் படுத்த படுக்கையாகக் கிடந்த காலம்' என்று கூறலாம். அவர் நோயாளியானார். 'நாட்பட்ட நோய்' என்று கூறுவார்களே, அந்த நிலை. தொற்று மிகத் தீவிரமாயிருந்தது. இடைக்கிடை அதன் தீவிரம் குறைக்கப்பட்ட போதும் நோயாளி குணமாக்கப்பட்டார் என்பது தற்காலிக விடயமாக இருந்து வந்தது. 1988 இன் பின்னர் மிகத் தீவிரமான நோய்க்குறிகள் வெளிப்பட்டன. புற்று நோயாளி ஒருவர் போன்ற நிலை. 1983 இன் பின்னர் இந்த மனிதருக்கு ஏற்பட்ட நிலை பற்றிய கேள்விகள் நோயியல் நிபுணரிடம் தீர்மானத்திற்கு விடப்பட வேண்டியவை. முந்திய நிலைக்கும் 1983 க்கு பிந்திய நிலைக்கும் என்ன வித்தியாசம். ஏன் நோயாளியாக அவர் படுத்த படுக்கையானார்? அவரின் உடலில் அடிப்படையான மாற்றங்கள் ஏதேனும் நிகழ்ந்

தனவா? குறிப்பாக 1982 - 84 ஒரு இடை மாற்ற காலம், இக்காலத்தில் என்ன நடந்தது? இக்காலத்தில் தான்' சுகதேகியாக இருந்த மனிதன்' 'படுத்த படுக்கையாக' ஆன காலம்.

'சுகதேகியாக' இருந்த காலம் பற்றி நுணுக்கமாக நாம் பரிசீலனை செய்து பார்த்தால் இக்காலத்தில் இலங்கையில் அரசியல் மோதல் முற்றாக இல்லாமல் போய்விடவில்லை. பல மோதல்கள் இடம் பெற்றன என்பது தெரியவரும். இக்காலத்தில் இங்கு இடைக்கிடை வந்து போனவர்கள் இலங்கையை ஒரு சுவர்க்க பூமி என்று கூறி விட்டுப் போயினர் என்பது உண்மையே. இருப்பினும் 1956 - 1965 காலத்தில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய அளவுக்கு அரசியல் மோதல்கள் நிகழ்ந்தன. இந்தப் பத்தாண்டு காலம் அதற்கு முந்திய பத்தாண்டுடனும், அதற்குப் பிந்திய பத்து ஆண்டுடனும் ஒப்பிடும் போது மோசமானதாக இருந்தது. 1971 இல் மிக மோசமான கலகம் வெடித்தது. ஆனால், அது மிக விரைவாகவே அடக்கப்பட்டது. இந்தக் கலவரம் ஏன் ஏற்பட்டது? இது ஏன் ஒரு சிவில் யுத்தமாக வளர்ச்சி பெற்றுத் தொடரவில்லை? வரைபடத்தைப் பார்க்கும் போது இது போன்ற கேள்விகள் பல எழுகின்றன. ஆனால் கேள்விகளுக் கான விடைகளை வரைபடத்தில் காண்பது முடியாது.


மேற்குறித்த கேள்விகளுக்கான விடைகளைத் தெரிந்து கொள்ளும் எமது வேலையை நாம் தற்காலிகமாகத் தள்ளிப் போடுவோம். ஏனெனில் இந்த நூல் இலங்கையினைப் பற்றி ஆராயும் அறிஞர் களையும் புலமையாளர்களையும் கருத்தில் கொண்டு எழுதப்பட்ட நூல் அன்று. இலங்கையின் புவியியல் அடிப்படைகள் (அதன் அமை விடம் உட்பட) வளம்மிக்க பண்பாட்டுப் பாரம்பரியம், இங்குள்ள பல்லின சமூகக் கட்டமைப்பு, இலங்கையின் கொதிநிலை மிக்க அரசியல் வரலாறு ஆகிய விடயங்கள் பொதுவான வாசகர்களுக்குத் தெரியாதவை. சுதந்திரம் பெற்ற பின்னர் இலங்கையின் அரசியல் பொருளாதாரம் வளர்ச்சி பெற்ற வரலாறு, அதன் வர்க்க முரண்பாடுகள், இனக்குழும முரண்பாடும் யுத்தமும், என்பன இலங்கைக்கே உரிய தனித்துவமான அம்சங்கள். இவற்றை அபிவிருத்தி - முரண்பாடு என்ற தொடர்பில் நோக்குபவர்களுக்கு இவை பிரயோசமான விடயங் களாகும். ஆகவே இவை பற்றிய சில அடிப்படைத் தகவல்களை முதலில் தருதல் அவசியமாகும்.

## இலங்கையும் அதன் மக்களும்

முற்காலத்தில் இலங்கைக்கு வந்து சென்ற பயணிகள் அதனைச் 'சுவர்க்கபூமி' எனக் குறிப்பிட்டுள்ளார்கள். இலங்கை அதனையொத்த விஸ்தீரணமுடைய வேறு தீவுகளுடன் ஒப்பிடுமிடத்து உலகின் மிகச் சிறந்த தீவுகளில் ஒன்று என்பதில் ஐயமில்லை' என்ற கருத்துப்பட மார்க்கோபோலோ கூறினார். அராபியக் கடலோடிகள் இலங்கையைச் 'செறன்டிப்' (Serendib) என அழைத்தனர். ஆங்கிலேய எழுத்தாளர் ஒருவர் பதினெட்டாம் நூற்றாண்டில் இச் சொல்லை வைத்து செறன்டிப்பிற்றி (Serendipity) என்றொரு பண்புப் பெயரை உருவாக்கினார். இச்சொல் 'எதிர்பாராததும், மகிழ்ச்சி தருவதுமான கண்டுபிடிப்பு' என்னும் பொருள் உடையது. இலங்கையின் கரையில் தற்செயலாக வந்திறங்கும் கடற்பயணிகளிற்கு மகிழ்ச்சி தரும் ஆச்சரி யமான கண்டு பிடிப்பாக அது அமைந்திருக்க வேண்டும். சிங்கள மொழியில் 'லங்கா' என்றால் 'ஒளிர்மிகு' என்று பொருள் தரும் அடைமொழியாகும்.

இலங்கை சிறிய இடப் பரப்பை உடையது. இச்சிறிய இடத் திற்குள் காணும் புவியியல் வேறுபாடுகளும் பன்மைத் தன்மையும் ஆச்சரியம் தருவன, உலகில் வேறு எங்கும் காண முடியாத அம்சம் இது. இத்தீவு 270 மைல் நீளமும் 140 மைல் அகலமும் உடையது. (பார்க்க உரு வரைப்படம் 1:2 இலங்கையின் புறவரைத் தோற்றம்.)

இது அயர்லாந்தை விடச் சிறியது. ஐக்கிய அமெரிக்காவின் மேற்கு வெர்ஜீனியா மாநிலத்தை விட ஓரளவு பெரியது. தீவின் வடக்கு அரைப் பகுதி தட்டையான சமவெளிப் பிரதேசமாகும். தீவின் தெற்கு, மேற்கு, கிழக்குப் பகுதிகளின் கடற்கரையோரத்தை அண்டிய நிலமும் சமதரைப் பிரதேசமாகும். அனுராதபுரத்திற்கு வடக்கே உள்ள பகுதி 1930 க்கள் காலம் வரை அடர்ந்த காடாக இருந்தது. இதனால் வடக்கின் தமிழர்களையும் தெற்கின் சிங்களவர்களையும் பிரிக்கும் இயற்கையான தடைச் சுவர் போல் இந்த அடர்ந்த காடு விளங்கியது. 1930 க்களின் பின் சிங்களவர் குடியேற்றம் காரணமாக இக்காடு அழிக்கப்பட்டு குடியிருப்புக்கள் தோன்றின. எனினும் வவுனியா நகரைச் சூழ்ந்த பகுதி அடர் காடாகவே இருந்தது. இக்காடுகள், விடுதலைப் புலிக் கொரில்லாப் போராளிகள் மறைந்திருக்கும்




**உரு 1.2 இலங்கையின் புறவரைத்தோற்றம்**
ஆதாரம்: டெக்சாஸ் பல்கலைக்கழகம் (அஸ்டின் நூலகம்)

இடமாகவும், பயிற்சிக் களமாகவும் இருந்தது. தீவின் தென்மத்திய பகுதி கடல் மட்டத்தில் இருந்து 3000 முதல் 7000 அடிவரை உயர்ந்த மலைப்பகுதியாகும். மேற்கு, தெற்கு கடற்கரையோரங்கள் உல்லாசப் பயணிகளைக் கவரும் அழகிய இடங்களாகும். சராசரி வெப்பநிலை 270 செண்டிகிரேட் ஆகும். இது 380 செண்டிகிரேட் வரை உயர்வடையும். வெப்ப மண்டலக் காலநிலையுடைய இத்தீவில் பருவப் பெயர்ச்சிக் காற்றுமூலம் மழை கிடைக்கிறது. ஏப்பிரல் முதல் யூன் வரை தென்மேற்கு பருவப் பெயர்ச்சியால் நல்ல மழைவீழ்ச்சி கிடைக்கிறது. ஒப்டோபர் நடுப் பகுதி முதல் பெப்பிரவரி வரை வடகீழ் பருவப் பெயர்ச்சி மழை கிடைக்கிறது. ஒப்பீட்டளவில் வடகீழ் பருவப் பெயர்ச்சி மழை குறைவானது.

இலங்கை, கிராமம் சார்ந்த விவசாயப் பொருளாதாரத்தைக் கொண்ட நாடு. 1987 இல் மொத்த தேசிய உற்பத்தியின் 25% விவசாய உற்பத்தி மூலம் கிடைத்தது. உழைப்பாளர் தொகையின் 50% விவசாயத்துறையினராயும் இருந்தனர். சிற்றுடமை விவசாயம் இலங்கையில் முதன்மை பெற்றுள்ளது. சாதாரணமாகக் கிராமங்களில் ஒரு சிறிய வளவுள் ஒரு வீடும், சில தென்னை மரங்களும் கொண்ட தோட்டமும் உள்ள குடியிருப்புக்கள் காணப்படும். ஆசியா, ஆபிரிக்கா, தென் அமெரிக்கா ஆகிய தென் கண்டங்களில் கிராமத்தில் இருந்து மக்கள் நகரம் நோக்கிப் பெயரும் இயல்பு பொதுவான ஒரு விடயம். இந்நிலைமை இலங்கையில் இல்லை. நில உடைமையில் சிற்றுடமையாளர் தொகை அதிகமாக இருப்பதும், சமத்துவமாக நிலப்பங்கீடு இருப்பதும், இதற்கு ஒரு காரணமாகும்.

இலங்கை ஈரவலயம், இடைவலயம், வரண்ட வலயம் என்ற மூன்று புவியியல் பிரிவுகளைக் கொண்டது. வடக்குக் கிழக்கின் பெரும்பகுதி வரண்ட வலயத்திலும், சிறு பகுதி இடை வலயத்திலும் அமைந்துள்ளது. இங்கு வடகீழ் பருவப் பெயர்ச்சி மழை ஒரு பருவ காலத்தில் மட்டும் கிடைக்கிறது. மழையை நம்பிப் பயிர்ச் செய்ய முடியாத இப்பகுதியில் நீரைத் தேக்கி வைக்கும் பெரிய குளங்களும், நீர்ப்பாசனக் கட்டமைப்புக்களும் பரவலாக உள்ளன. 14 ம் நூற்றாண்டு வரை சிங்கள மன்னர்களின் ஆட்சியின் போது இந்த நீர்ப்பாசன அமைப்புக்கள் கட்டப்பட்டன. பின்னர் இவை பயன்பாடு இல்லாமல் பாழடைந்து போயின. மகாவலி அபிவிருத்தித் திட்டம் போன்ற


பெரிய புனர்நிர்மாணத் திட்டங்கள் நிறை வேற்றப்பட்டன. நீர்ப் பாசனம், மின்சாரம் என்பன விருத்தி செய்யப்பட்டன. இலங்கை உலகின் நீரியல் நாகரிகங்களில் ஒன்று என்ற பெருமையை இப்புனர்நிர்மாண வேலைகள் ஞாபகப்படுத்துகின்றன. முன்னர் பயிரிடப் படாதிருந்த ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தில் நெல்லும் உபஉணவுப் பயிர்களும் இப்போது பயிரிடப்படுகின்றன.

ஈரவலயத்தில் நீர்வளம் குறைவின்றி உள்ளது. உயர்நிலங்களும், பயிர்ச்செய்கைக்கு உட்படுத்த முடியாத பகுதிகளும் இங்கு உள்ளன. ஈரவலயத்தில் தான் இலங்கையின் காசுப்பயிர்கள் பலவும் பயிரிடப் படுகின்றன. தென்னை, ஏனைய தோட்டப்பயிர்கள், ரப்பர் என்பன தாழ் நிலத்தில் பயிரிடப்படுகின்றன. தாழ்நிலத்தில் நெற்செய்கையும் நடைபெறுகிறது. ஈரவலயத்தின் உயர் நிலங்களில் உலகின் மிகத்தரம் வாய்ந்த தேயிலை உற்பத்தி செய்யப்படுகிறது.[36] அடுத்து இலங்கையில் வாழும் பல்வேறு இனமக்கள் குழுமங்களைப் பற்றிய அடிப்படைத் தகவல்களை நோக்குவோம்

**சிங்களவர்**

1981 ஆம் ஆண்டுச் சனத்தொகைக் கணக்கெடுப்பின்படி இலங்கை யின் மொத்தச் சனத்தொகை அன்று 16 மில்லியன்களாக இருந்தது. இத்தொகையில் சிங்களவர் 74%, இலங்கைத்தமிழர் 12.6% இந்தியத் தமிழர் 5.6%, முஸ்லிம்கள் 7.1% என்று புள்ளிவிபரக் கணக்குத் தெரிவிக்கிறது. மேற்குறித்த இனப்பிரிவினர் தனித்துவமான அடை யாளங்களை உடையவர்கள். வரலாறு, மொழி, பண்பாடு, சமயம் என்பனவற்றின் கலவையாக இந்த அடையாளங்கள் உருவாக்கம் பெற்றன. இனத்துவ அடையாளம் இலங்கையின் அரசியலில் முக்கியமான வகிபாகத்தை பெற்றுள்ளது. உரு 1.3 இனங்களில் புவியியல் பரம்பலைக் காட்டுகிறது. புவியியல் பரம்பலின் இயல்பு கள் இலங்கையின் அரசியலை தீர்மானிக்கும் முக்கிய காரணியாக விளங்கியது.

சிங்களவர்களில் பெரும்பான்மையினர் வடஇந்தியாவில் இருந்து கி.மு 500 காலத்தில் இலங்கைக்கு வந்து வடக்கு கிழக்குப் பகுதியின் வரண்ட நிலங்களில் குடியேறினர். பௌத்த மதம் கி.மு 3 ஆம்




**உரு 1.3 இலங்கையின் பிரதான இனக்குழுமங்களின் புவியியல் பரம்பல்**

நூற்றாண்டில் இலங்கைக்கு வந்தது. இம்மதம் சிங்களவர்களின் பண்பாட்டில் பிரிக்கமுடியாத அம்சமாகியது. இலங்கை 'தம்மதீப' எனப்பட்டது. பௌத்தமதத்தின் விசேடமான புனிதபூமி என்ற கருத்தும் உருவானது. புத்தர் 2500 வருடங்களிற்கு முன்னர் ஞானம் பெற்ற போது, அவர் எந்த அரச மரத்தின் கீழ் இருந்து ஞானம் பெற்றாரோ, அந்த மரத்தின் கிளையொன்று பண்டைய நகரமான அனுராதபுரத்தில் நாட்டப்பெற்று புனித வெள்ளரசாகப் போற்றப் படுகிறது. சிங்கள இனத்துவ அடையாளம், பௌத்தம், சிங்கள மக்களின் தீவு (சிங்கதீப) ஆகிய கருத்துக்கள் சிங்கள மரபின் பாகமாக ஆகின. இவை ஒன்றோடொன்று பிரிக்க முடியாத உறவுடைய அம்சங்களாகவும் விளங்குகின்றன. இருந்தபோதும் சிங்களவரில் ஒரு பகுதியினர் கிறிஸ்தவர்களாகவும் உள்ளனர். பெரும்பாலான சிங்களவர்களுக்கு 'தேசிய அடையாளம்' என்பது மேற்குறித்த மூன்று அம்சங்களின் கலவையாகவே உள்ளது. இதனால் சிங்களவர் அல்லாத இலங்கைப் பிரஜைகளையும் உள்ளடக்கும் தேசிய அடையாளம் ஒன்றை வரையறுத்துக் கொள்வது சிக்கலாக உள்ளது.

தமிழ் நாட்டில் இருந்து வந்த படையெடுப்புக்கள் நாட்டை அரசியல் அடிப்படையில் பிரித்துக் கூறுபோட காரணமாக இருந்த போதிலும், முழுத் தீவுடனும் சிங்கள அடையாளத்தை இணைக்கும் எண்ணப்பாங்கு ஆழ வேரூன்றியிருந்தது. வரலாற்றின் போக்கில் இறுதியில் மத்திய மலைப்பகுதியில் உள்ள கண்டியில் சிங்கள அரசாங்கம் நிறுவப்பட்டது. வடக்குக் கிழக்கைத் தமிழர்கள் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். போர்த்துக்கேயரும், டச்சுக்காரரும் நாட்டின் கரையோரப்பகுதிகளைக் கைப்பற்றி ஆட்சி செய்த காலத்தில் கண்டி தன் சுதந்திரத்தை இழக்காமல் நிலைத்திருந்தது இதற்கு மத்திய பகுதியின் மலை அரண் பாதுகாப்பாக இருந்தது ஒரு காரணம். கண்டி 1815 இல் பிரித்தானியரின் தாக்குதலால் வீழ்ச்சியுற்றது. கரையோரச் சிங்களவர், போத்துக்கீசர், டச்சுக்காரர், பிரித்தானியர் ஆகிய குடியேற்ற வாதிகளின் ஆட்சியில் இருந்த சுமார் 200 ஆண்டுக்காலம் கண்டி ராச்சியம் சுதந்திரமாக இருந்ததென்பது குறிப்பிடத்தக்கது. இலங்கை அரசியலில் கண்டியர் இன்றும் பழமைவாதப் போக்குடையவர்களாய் உள்ளனர். அவர்கள் நவீனத்துவத்தின் பாதகமான ஊடுருவல்களில்

இருந்து சிங்கள - பௌத்தத்தை பாதுகாப்பவர்கள் தாமே என்று கருதுகின்றனர். அந்நியர்களிடம் இருந்தும் தமிழர்களிடம் இருந்தும் மட்டுமல்ல கரைநாட்டுச் சிங்களவர்களிடமிருந்தும் சிங்கள - பௌத்தத்தை பாதுகாப்பவர்கள் தாமே என்றும் இவர்கள் கருது கின்றனர்.

சிங்களவர்களின் சாதிமுறை, இந்தியாவுடனான இடைத் தொடர்புகளால் உருவானது. இன்று முக்கியத்துவத்தில் குறைந்து விட்டபோதும் மேல்நோக்கிய சமூக அசைவியக்கத்தையும், அரசிய லையும் நிர்ணயிப்பதாக சாதி அமைந்துள்ளது. [37] சாதிக்கட்டமைப்பின் உயர்நிலையில் கொய்கம சாதி உள்ளது. இச்சாதியினர் சிங்களவரில் அரைப்பங்கினராவர். கராவ (மீன்பிடிப்போர்) துராவ (கள் இறக்கும் தொழிசெய்வோர்) சலாகம (கறுவாப்பட்டை உரிப்போர்) ஆகிய மூன்று சாதிகளும் வியாபாரம், அரசியல், அரசாங்க சேவை என்பன வற்றில் உயர்ந்து செல்வாக்கு உள்ளோராய் உள்ளனர். [38] இலங்கையின் பத்திரிகைகளில் மணமகன் / மணமகள் தேவைப் பகுதியில் விளம் பரங்கள் வெளியிடப்படும். அவ்விளம்பரங்களில் சாதி, சமயம், வழங்கப்படக்கூடிய சீதனம் (மணமகளிற்கு) என்பன பற்றிய விபரங்கள் வெளிவரும். இலங்கையின் பிரதம நிர்வாகிகளான பிரதமர்களும், 1978 க்குப் பின்னர் ஜனாதிபதிகளும் சிங்களவர்களாகவே இருந் துள்ளனர். இதே போன்று தான் மந்திரிசபை உறுப்பினர்களும் பெரும் பான்மையினர் சிங்களவரே.[39] நாட்டின் உயர் அரசியல் தலைமைத் துவத்தை (பிரதமர், ஜனாதிபதி) வகித்தோர்களில் பிரேமதாசாவைத் தவிர பிறர் யாவரும் கொய்கம சாதியினரே.

1956 ஆம் ஆண்டிற்கு முன்னர் சிங்களவர் சார்பை முதன்மைப் படுத்தும் அரசியலை சிங்களவரையே பெரும்பான்மையினராகக் கொண்டிருந்த அரசாங்கங்கள் முன்னெடுக்கவில்லை. 1950 க்களின் முற்பகுதியில் எஸ். டபிள்யு. ஆர்.டி. பண்டாரநாயக்க இலங்கையின் அரசியலை முற்றாக மாற்றியமைத்தார். கவர்ச்சிமிக்க தலைவரான அவர் வெளிப்படையாகவே சிங்களசார்பு, பௌத்தச்சார்பு அரசியலை முன்வைத்தார். இவரது அரசியல் ஒருவகை 'பொப்பியுலிசம்' (populism) -மக்கள் வாதம்- என்னும் உள்ளடக்கத்தை உடையது. பிரதமராக தெரிவு செய்யப்பட்ட '24 மணித்தியாலங்களுக்குள்' சிங்களத்தை

அரச கரும மொழியாக்குவேன் என்று அரசியல் மேடைகளில் இவர் முழங்கினார். சிங்களவர்களுக்கு கல்வி, தொழில் வாய்ப்பு என்பன வற்றில் சலுகைகளைக் கொடுப்பேன் என்றும் இவர் பிரசாரம் செய்தார். 1956 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் தேர்தலில் அமோக வெற்றி பெற்று இவர் பிரதமரானார். 1959 ஆம் ஆண்டு பண்டாரநாயக்க சுட்டுக் கொல்லப்பட்டார். இருந்தபோதும் அவரது கொள்கைகளை அவரது விதவை மனைவி சிறிமாவோ பண்டாரநாயக்க தொடர்ந்தார். 1960 முதல் 1965 வரையிலும், பின்னர் 1970 முதல் 1977 வரையிலும் சிறிமாவோ பிரதமராக பதவி வகித்தார். கொந்தளிப்பு மிக்க புதிய அரசியல் இவர் காலத்தில் இலங்கையில் தொடங்கியது. இனவாத அரசியல் என்னும் குளவிக் கூட்டைக் கலைக்கும் வேலையைச் சிங்கள அரசியல்வாதிகள் செய்தனர். இதன் பின் விளைவுகளை தடுக்கும் ஆற்றல் அவர்களுக்கு இருக்கவில்லை. தலைவர்களுக்கு தீர்வுக்கான சந்தர்ப்பங்கள் கிடைத்தபோதும் அரசியல் லாபம் கருதிய இவர்கள் சிங்கள - பௌத்த தேசியவாத உணர்வுகளைத் தூண்டி 'பொப்பியுலிசம்' என்னும் மக்கள்வாத அரசியலில் ஈடுபட்டனர். இன்றும் அதையே செய்கின்றனர்.

இனக்குழும கருத்தியல் (Ethnic ideology) சிங்களவர்களின் ஆழ் மனதில் உறையும் இன அடையாள உணர்வுகளையும், பயங்களையும் கிளர்ந்தெழச் செய்வதால் அரசியல் அரங்கில் மிகவும் வலுமிக்க ஆயுதமாக விளங்கியது. தேரவாத பௌத்தத்தின் புனிதம், அம்மதத்தின் உயர் அந்தஸ்து பற்றிய நினைவுகள் சிங்கள மக்களிடம் இருந்தன. இருந்த போதும் இலங்கை மட்டும் தான் அவர்களின் தாயகம். இதனால் இலங்கையில் பெரும்பான்மையினராக உள்ள போதும் சிங்களமக்கள் சிறுபான்மையினர் என்ற தாழ்வுச் சிக்கலை உடைய பெரும்பான்மையினராக உள்ளனர் என்று கே.எம்.டி சில்வா என்ற வரலாற்றாசிரியர் கூறுகின்றார். தமிழ்படையெடுப்பாளர்களுக்கு எதிராகப் போராடிய சிங்கள வீர புருஷர்களின் கதைகள் சிங்கள மக்களைப் பொறுத்தவரை பண்டைய வரலாறு மட்டுமல்ல; நிகழ்கால வாழ்வின் யதார்த்தமும் ஆகும்.

## இலங்கைத் தமிழர்கள்

இலங்கைத் தமிழர்கள் இலங்கையின் சிறுபான்மையிராக இருந்த போதும் பெரும்பான்மை என்ற உயர்வுச் சிக்கலை உடையவர்கள் என்று கே.எம்.டி சில்வா கூறுகிறார். இவ்விதம் கூறுவதன் மூலம் தமிழர்களின் இயல்பை அவர் வேறுபடுத்தி காட்டுகிறார். இலங்கைத் தமிழர்களின் கோரிக்கைகள் சமஅந்தஸ்து என்பதாகவும் அண்மைக் காலத்தில் இலங்கையின் நிலப்பரப்பில் நாலில் ஒருபங்கிலும், இலங்கையின் கடற்கரை ஓரத்தில் ஏறக்குறைய அரைப்பங்கிலும் மேலாதிக்கம் கோருவதாகவும் அமைந்தன எனச் சில்வா கூறுகிறார்.

கி.மு. மூன்றாம் நூற்றாண்டு முதலே இலங்கையில் தமிழர்கள் (குடியேறிகளாக) இருந்துள்ளார்கள். துட்டகைமுனு என்னும் சிங்கள இளவரசன், தமிழ் மன்னன் எல்லாளனை போரில் வென்ற வீர வரலாறு, சிங்கள மாணவர்களுக்கு பாடநூல்கள் மூலம் சொல்லித் தரப்படுகிறது. இந்நிகழ்வு கி.மு. 137 இல் நிகழ்ந்ததாகக் கருதப்படுகிறது. இந்த வெற்றிக்குப் பிறகும் தமிழர் குடியிருப்புக்கள் இலங்கையில் தொடர்ந்து இருந்தன. கி.பி. 5 ஆம் 6 ஆம் நூற்றாண்டுகளில் தென் இந்தியாவில் இந்துமதம் மேல்நிலை பெற்றது. பௌத்தம் அங்கு நலிந்தது. இந்தியாவின் பலம்மிக்க அரசுகள் இலங்கையின் செழிப்பு மிக்க பூமியிலும் நீர்ப்பாசன நாகரிகமுடைய அனுராதபுர அரசிலும் கண்வைத்தன. ஆக்கிரமிப்பு எண்ணங்கொண்ட அரசர்கள் இலங்கை மீது படையெடுத்து வந்து காலத்திற்குக் காலம் தாக்கினார்கள். இலங்கையின் வடக்கே கி.பி 13 ஆம் நூற்றாண்டளவில் நிலையான தமிழ் அரசு ஒன்று தோன்றியது.

சுதந்திரமான தமிழ் அரசு வடக்கே நீண்ட காலம் நிலைக்க வில்லை. 16 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இலங்கையின் தென்மேற்குக் கரையோரப் பகுதியில் தமது ஆதிக்கத்தை விஸ்தரிக்கத் தொடங்கிய போத்துக்கீசர், 1600 அளவில் இலங்கையின் வடக்கையும், தென்மேற்கையும் தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தனர். போத்துக்கேயர் காலத்தில் இலங்கையில் கால் பதித்த கத்தோலிக்க மதம் வேகமாகப் பரவியது. கத்தோலிக்கர்கள் மக்களை மதம் மாற்றினர். போத்துக்கீசருக்கு அடுத்து ஒல்லாந்தரும், பிரித்தானியரும்

இலங்கையை தமது ஆளுகைக்குள் கொண்டு வந்தனர். 1796 இல் இலங்கை பிரித்தானியாவின் ஆதிக்கத்தின் கீழ் வந்தது. ஒல்லாந்தரும், பிரித்தானியரும் ஏற்படுத்திய நிர்வாக முறை தமிழர்களை சிங்கள வர்களில் இருந்து வேறான சமூகமாக அடையாளப்படுத்துவதற்கு உதவுவதாக அமைந்தது.

காலனித்துவ ஆட்சி காலத்தில் இலங்கையில் தமிழர்களின் நிலையின் விசேட அம்சங்கள் இரண்டு கவனிப்புக்குரியவை. தமிழர்கள் அரசாங்க நிர்வாகத்துறைப் பதவிகளிலும் உயர்தொழில் துறைகளிலும் (Professions) நாட்டம் கொண்டு அத்துறைகளில் உயர்வதற்கு இவ்விரு அம்சங்களும் காரணமாயின. கிறிஸ்தவ மிச னரிகள் ஆரம்பித்து நடத்திய முதல்நிலை, இரண்டாம் நிலைக்கல்வி முறையினால் தமிழர்கள் பெரு நன்மை பெற்றனர். இக்கல்வி முறை உயர்தரமான ஆங்கிலக் கல்வியை பெறுவதற்கு அவர்களுக்கு உதவியது. கல்வி வளர்ச்சி முதலாவது அம்சம். வடபகுதியின் சனத் தொகை அதிகரித்துச் சென்றது. மரபு வழி விவசாயத்தின் மூலம் பொருளாதார நிலையை உயர்த்திக் கொள்ள முடியவில்லை. வர்த்தக விருத்திக்கான வாய்ப்புக்களும் வடபகுதியில் இருக்கவில்லை. தமிழர்கள் உயர்தொழில்களை நாடியதன் பின்னணியில் உள்ள இரண்டாவது அம்சம் இதுவாகும். வாழ்க்கையில் உயரும் ஆவலால் உந்தப்பட்ட இளைஞர்களுக்கு பல்கலைக்கழகக் கல்வி ஒரு வழியாக அமைந்தது. சட்டம், விஞ்ஞானம், பொறியியல் ஆகிய கல்வித் துறைகளின் மட்டுப்படுத்தப்பட்ட இடங்களுக்கான போட்டியில் தமிழ் இளைஞர்கள் வெற்றிபெற்றனர். சிவில்சேவை பரீட்சை களிலும் தமிழர்கள் உயர்புள்ளிகளைப் பெற்று உயர்ச்சி பெற்றனர். இலங்கையில் காலனித்துவ ஆட்சிமுடிவுக்கு வந்து இலங்கை சுதந்திரம் பெற்ற வேளையில் உயர்தொழில்களிலும் அரசாங்க சேவை யிலும் தமிழர்கள் தமது சனத்தொகை விகிதாசாரத்தோடு ஒப்பிடும் போது மிகையான அளவில் காணப்பட்டனர். (சிங்களவர் மனதில் இது பற்றி உள்ள மிகைப்பட்ட கருத்து உண்மைக்கு மாறுபட்டது). தலைநகர் கொழும்பில் திறமை மிக்கவர்களான கொழும்புத் தமிழர் குடியேற்றம் இடம்பெற்றது. இக்கொழும்புத் தமிழர் யாழ்ப் பாணத்தவர்களைவிட கலாசாரப் பண்புகளில் உயர்வுடையராயும்,

ஆங்கிலத்தில் சரளமாக உரையாடக்கூடியவர்களாயும், தலைநகரின் அலுவல்களில் முக்கிய இடம் வகிப்பவர்களாயும் விளங்கினர்.[40]

தமிழர் மத்தியில் சாதிப்பிரிவினைகள் இறுக்கம் பெற்றனவாக இருந்தன. குறிப்பாக யாழ்ப்பாணத்தில் சாதியின் இறுக்கம் வலுவாக இருந்தது. எனினும் அரசியல் மோதல்கள் சாதியினைத் தளர்வடையச் செய்து விட்டன. பிராமணர்கள் சாதியில் உயர்ந்தவர்களாகக் கருதப் படுகிறார்கள். இந்தியாவை ஒத்த நிலை இங்கும் உள்ளது. அடுத்த படியில் விவசாயத் தொழில் செய்யும் வேளாளர் சாதி உள்ளது. (கொய்கம சாதிக்கு ஒப்பானது வேளாளர்சாதி.) பொற்கொல்லர், தச்சர், இரும்புவேலை செய்வோர் (கொல்லர்) ஆகிய கைவினைத் தொழிலாளர்கள் அடுத்தபடியில் உள்ளனர். மரபுச் சமூகத்தில் தொழில் அடிப்படையிலான தூய சாதிகள், தூய்மையற்ற சாதிகள் என்ற பிரிவினை கூர்மையானதாக இருந்தது. மீன்பிடித்தல், கள் இறக்குதல், முடிதிருத்துதல், மேளம் அடித்தல் முதலியன தூய்மையற்ற தொழில் களாக கருதப்பட்டன. காலனித்துவ ஆட்சிக் காலத்திலும் வேளாளர் தமது மேலாதிக்கத்தை நிலைநிறுத்தினர். அவர்களது உயர்நிலையும், சாதிகளிடையே திருமண உறவுகளை விலக்கும் விதிகளும் சாதி நிலையில் கீழ்ப்பட்டவர்களை விலக்கி வைப்பதற்கும், நவீன மயமாதலின் நன்மைகள் சாதியில் கீழ்நிலையில் உள்ளோரைச் சென்றடைவதைத் தடுக்கவும் உதவின. தீவிரவாத இளைஞர்களில் பெரும்பங்கினர் தாழ்நிலைச் சாதியினராய் இருந்தனர். இதற்கு மாறாக பழைய தமிழ்த் தலைவர்களில் பெரும்பான்மையினர் வேளாளர் சாதியினராக இருந்தனர். இவற்றைக் கொண்டு சிலர் தீவிரவாத இளைஞர்களின் எழுச்சி சிங்களவர் ஆதிக்கம் பெற்ற அரசாங்கங்களின் பாரபட்சமான நடவடிக்கைகளின் எதிர்ப்பு மட்டுமன்றி, நெகிழ்ச்சி யற்றதான யாழ்ப்பாணச் சாதிமுறைக்கு எதிரானதாகவும் இருந்தது எனக் குறிப்பிடுவர்.[41]

எஸ்.டபிள்யு.ஆர்.டி பண்டாரநாயக்க சிங்கள தேசியவாத அரசியலை முன்னெடுப்பதற்கு முன்னரே தமிழ்த்தலைவர்கள் தமிழர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதில் அக்கறை காட்டினர். தமிழ்த் தலைவர்கள் தான் முதன்முதலாக இனவாத அடிப்படை யிலான அரசியல் கட்சியையும் தொடக்கினர். அவர்கள் இனவாத அடிப்படையிலான பிரதிநிதித்துவ முறை தொடர்வதையும், அதன்

வழி தமது அரசியல் பலத்தை பெருக்கி முக்கியமான அரசியல் யாப்புத் திருத்தங்கள் இடம் பெறுவதைத் தடுப்பதற்கும் முயற்சித் தனர். இந்த உபாயங்கள் பயனளிக்காமல் போன விடத்து தமிழ்த் தலைவர்கள் அரசியல் கூட்டுகளில் இணைவதை ஒரு உபாய மாகக் கையாண்டனர். அவ்விதமான அரசியல் கூட்டு மொழி, மதம், அரசாங்கத்துறை வேலைவாய்ப்பு, பல்கலைக்கழக அனுமதி ஆகிய வற்றில் இடம் பெறும் பாரபட்சத்தை தடுப்பதற்கு உதவும் எனவும் நம்பினர். மேலும் தேசிய சின்னங்களிலும் அடையாளப்படுத்தல் களிலும் தமிழர் தரப்புக்கு பாதகமான விடயங்கள் இடம்பெறாமல் தடுக்கவும் அரசியல் கூட்டுக்கள் உதவும் என நம்பினர். அரசியல் கூட்டுக்கள் என்ற உபாயம் சிங்களப் பெரும்பான்மை வாக்குப்பலம் மூலமும், தேர்தல் வெற்றிகள் மூலமும் பயனற்றதாக ஆக்கப்பட்டது. இதனால் சத்தியாக்கிரகம் (அமைதி வழி ஒத்துழையாமை) என்பதில் ஆரம்பித்து, எதிர்ப்பு ஆர்ப்பாட்டம், கடையடைப்பு ஆகிய முறை களிலான எதிர்ப்பு நடவடிக்கைகளையும் தொடர்ந்தனர். இவையும் தோல்வியிலே முடிந்தன.

இலங்கைத் தமிழர்களின் பார்வையில் சுதந்திரத்திற்குப் பின்னரான வரலாற்றை விளங்கிக் கொள்வதானால், அது அவர்களின் உரிமைகள் ஒவ்வொன்றாகப் பறிபோன வரலாறாகவே இருக்கும். சலுகைகளின் இழப்பும், இனரீதியான ஒதுக்கலும், பாரபட்சமும் தீவிரப்படுத்தப் படுதல், ஜனநாயக நிறுவனங்கள் தமிழர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் திறன் அற்றனவாகியமை, சிங்களவர்களைப் பெரும் பான்மையினராகக் கொண்ட இராணுவம் பொலிஸ் என்பனவற்றைக் கொண்டு வன்முறை வழியில் தமிழர்களை ஒடுக்குதல் என இந்த வரலாற்றை விரித்துக் கூறலாம். அரசியல் பிரசாரம், பாராளுமன்ற பிரதிநிதித்துவம் மூலம் அழுத்தம் கொடுத்தல், பேச்சுவார்த்தை, இணங்கிப் போதல் ஆகிய அரசியல் உபாயங்களையே தமிழ்த் தலைவர்கள் தொடர்ந்து கடைப்பிடித்தனர். இவை அடுத்தடுத்து தோல்விகளைத் தழுவியபோது அந்த உபாயங்கள் மதிப்பிழந்து போனது மட்டுமன்றித் தலைவர்களிற்கு இருந்த மதிப்பும் இறங்கு முகமாகியது. சிங்கள இனம், பௌத்தம் என்ற அடையாளங்களுக்கு முதன்மையளிக்கும் ஒரு நாட்டில், தமிழ்த்தலைவர்களின் அமைதி வழி உபாயங்கள் பயனற்றவை ஆன போது தீவிரவாத இளைஞர்

குழுக்கள் அரசியல் தலைமையைக் கையகப்படுத்தினர். மார்க்சீயப் புரட்சிக் கருத்துக்களால் கவரப்பட்ட இளைஞர்கள் பல புரட்சிகர அமைப்புக்களை உருவாக்கினர். ஈரோஸ் (EROS), புளொட் (PLOTE), ரெலோ (TELO), ஈ.பி.ஆர்.எல்.எவ் (EPRLF) என்பனவும் விடுதலைப் புலிகள் அமைப்பான எல்.டி.டி.ஈ (LTTE) யும் தோற்றம் பெற்றன. இறுதியாகக் குறிப்பிட்ட எல்.டி.டி.ஈ மற்றவற்றை விடக் கட்டுப்பாடு மிக்க அமைப்பாகவும், தீவிரம் மிக்கதாகவும் விளங்கியது. இந்த இயக்கங்களின் இலக்கு தனித்தமிழ் ஈழம் ஒன்றை அமைப்பதுதான். இதனை சிங்களவர் ஒருபோதும் ஏற்றுக் கொள்வதற்கு முன்வர மாட்டார்கள் என்பது உறுதி. தீவிரவாதிகளின் பிரதான உபாயம் பயங்கரவாதமாகவும், கொரில்லா யுத்த முறைகளை தீவிரப்படுத்து வதாயும் இருந்தது. அவர்கள் தம்மை எதிர்த்த மிதவாதத் தமிழர் மீதும், சிங்களவர் மீதும் குறிவைத்தனர்.

### இந்தியத் தமிழர்கள்

'இந்தியத் தமிழர்கள்' தேயிலைத் தோட்டங்கள் உள்ள மத்திய மாகாணத்தில் செறிந்து வாழ்கிறார்கள். வடபகுதியில் இவர்கள் சிறு தொகையினராகவே உள்ளனர். மொழியாலும், மதத்தாலும் ஒன்று பட்டவர்களேனினும் இலங்கைத் தமிழர்களிற்கும் இந்தியத் தமிழர்களிற்கும் பல வேறுபாடுகள் உள்ளன.

19ம் நூற்றாண்டின் நடுப்பகுதி தொடக்கம் தென் இந்தியாவில் இருந்து வந்து குடியேறியவர்களே இந்தியத் தமிழர். இக்காலத்தில் கோப்பித் தோட்டங்கள் 'பங்கஸ்' நோயால் அழிந்து கொண்டிருந்தன. அழிந்த தோட்டங்களிற்குப் பதிலாகத் தேயிலைத் தோட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. ரப்பர் தோட்டங்களும் பின்னர் தொடங்கப் பட்டன. தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்வதற்கு கட்டுப் பட்டு ஒழுகக்கூடிய தொழிலாளர்கள் தேவைப்பட்டது. தோட்டங் களிலேயே வசிப்பதற்கும், குறைந்த கூலிக்கு உழைப்பதற்கும் ஏற்ற தொழிலாளர் தேவைப்பட்டனர். தோட்டத்து வேலை கடினமானதாக இருந்தபோதும் இந்தியாவில் இருந்த நிலையை விட மேலாக இருந்தது. ஏனெனில் இந்தியாவில் வேலையின்றிப் பட்டினி கிடக்கும் நிலைதான். இதனால் பெருமளவில் தமிழ்த் தொழிலாளர்கள்

வேலைதேடி குடிபெயர்ந்து வந்து 'லைன்கள்' எனப்படும் கொட்டகைத் தொடர் குடியிருப்புகளில் நிரந்தரமாகக் குடியிருத்தப்பட்டனர். இந்த 'லைன்கள்' தோட்ட நிலங்களிலும் அருகே உள்ள கிராம நிலங்களிலும் அமைக்கப்பட்டன. இலங்கை சுதந்திரம் பெற்றபோது இந்தியத் தோட்டத் தொழிலாளர் தொகை 800,000 ஆக இருந்தது.

பெருந்தொகையான தோட்டத் தொழிலாளர்கள் இங்கு குடியமர்த்தப்பட்டதும், தோட்டங்களுக்கான நிலத்தின் அளவு விஸ்தரிக்கப்பட்டதும் கண்டியின் சிங்களவர் மத்தியில் வெறுப்புணர்வைத் தோற்றுவித்தது. இந்தியத் தமிழர்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது. அரசியல் பிரநிதித்துவ முறையில் கொண்டு வரவேண்டிய மாற்றங்கள் பற்றி விவாதிக்கப்பட்டது. இலங்கை வாழ் இந்தியத் தோட்டத் தொழிலாளர்கள் (பலர் ஒரு தலைமுறைக்கும் மேலாக இலங்கையிலேயே வாழ்ந்தவர்கள்.) அரசியலில் முக்கிய பாகத்தை ஏற்றுக் கொள்ளப்போகும் சாத்தியங்கள் தென்பட்டன. சுதந்திரத்திற்காக உழைத்த சிங்கள அரசியல் தலைவர்களுக்கு இவை கவலையையும், அச்சத்தையும் தருவனவாய் இருந்தன. இந்தியத் தமிழர்களுக்கு வாக்குரிமை அளித்தால் சில முக்கியமான மாவட்டங்களில் அவர்களின் வாக்குப்பலம் சிங்களவரை விட கூடியதாக இருக்கும். இந்தியத் தமிழர்கள் இடதுசாரி அரசியல் தலைவர்களின் பிடியில் வீழக்கூடும் அல்லது தோட்ட முதலாளிகளின் வலையிலும் சிக்கக்கூடும் என்றும் சிங்களத் தலைவர்கள் அச்சம் கொண்டனர்.

இலங்கையின் முதலாவது பிரதமரான டி.எஸ்.சேனநாயக்க பெரும் பாலான இந்தியத் தமிழர்களின் வாக்குரிமையைப் பறிக்கும் வகையில் சட்டங்களைக் கொண்டு வந்து பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதன் மூலம் இதற்குத் தீர்வு கண்டார். இந்தியத் தோட்டத் தொழிலாளர்களின் வாக்குரிமையை டி.எஸ்.சேனநாயக்க இவ்விதம் பறித்த போது தமிழ்த் தலைவர்கள் இதனை எதிர்க்கவில்லை. சேனநாயக்க இந்தியர்களை இந்தியாவிற்குத் திருப்பியனுப்ப விரும்பினார். பல்லாண்டுகளாக இலங்கையிலேயே வாழ்ந்து உழைத்து வந்த இம்மக்களை திருப்பி அழைப்பதை நேரு விரும்பவில்லை. சேனநாயக்க கொண்டுவந்த சட்டங்களின் பயனால் நாடற்றவர்கள் என்றொரு பிரிவினர் இலங்கையில் உருவாகினர். இந்தியத் தமிழர்களின் நிலை பற்றிய விடயம் இந்திய இலங்கை அரசுகளிடையே பேரம்

பேசலுக்கான ஒன்றாக ஏறக்குறைய 15 வருடங்கள் நீடித்தது. இறுதியாக 1964 ஆம் ஆண்டில் இலங்கைப் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா அவர்களுக்கும் இந்தியப் பிரதமர் லால் பகதூர் சாஸ்திரிக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தம் மூலம் தீர்வு செய்யப்பட்டது. இந்த ஒப்பந்தப்படி 525,000 பேர் இந்தியாவிற்கு அனுப்பப்படுவதற்கும் 300,000 பேருக்கு இலங்கைக் குடியுரிமை வழங்குவதற்கும் இணங்கப்பட்டது. மீதமுள்ள 150,000 பேர் குறித்து எதிர்காலத்தில் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தை களின் படி தீர்வு காண்பது என்றும் முடிவு செய்யப்பட்டது. இந்தப் பேரம் பேசல் 1980 க்கள் வரை நீடித்தது. இக்காலத்தில் இந்தியத் தமிழர்களின் அரசியல் பலம் அதிகரித்தது.

மேலோட்டமாகப் பார்க்கும் போது கடந்த 50 வருட வரலாற்றில் தோட்டத் தொழிலாளர்களின் நிலையில் அதிகமாற்றம் ஏற்பட வில்லை என்றே தோன்றும். ஆனால் உண்மை அதுவல்ல. அவர் களின் நிலை மாற்றம் பெற்றது. இந்தியத் தோட்டத் தொழிலாளர் களின் தலைவரான தொண்டமான் 1965 - 70 காலத்தில் சிங்களத் தலைவர்களுடன் தனது உறவைப் பலப்படுத்திக் கொண்டார். பின்னர் 1977 முதல் 1994 வரையான காலத்திலும் ஐக்கிய தேசியக் கட்சியுடனான அவரது உறவு பலம் பெற்றது. தொண்டமானுடனான இந்தக் கூட்டு இரு தரப்பினருக்கும் நன்மை பயப்பதாய் இருந்தது. ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமற்றத்தில் தனது பலத்தை பெருக்கிக் கொள்ள இது உதவியது. இந்தியத் தமிழர்களும் கூலியின் அளவு, கல்வி வாய்ப் புக்கள், சுகாதார வசதிகள் ஆகியவற்றில் சலுகைகள் பெற்றனர். தோட்டத் தொழிலாளர்களின் நிலையில் முன்னேற்றம் காணப்பட்டது. தொழிலாளர்களின் குடும்ப வருமானம் சிங்களவர், இலங்கைத் தமிழர், முஸ்லிம்கள் ஆகிய பிற சமூகங்களுடன் ஒப்பிடுமிடத்து சாதகமான உயர்ச்சியை காட்டியது. இருந்தபோதும் கல்வியிலும், சுகாதார நிலையிலும் தோட்டத் தொழிலாளர்கள் இன்றும் பின்னடைந்த நிலையிலேயே உள்ளனர். இலங்கைத் தமிழர்கள் இந்த நாட்டில் நீண்ட காலமாக வாழ்ந்தவர்கள். மாறாக அண்மைக் காலத்தில் இலங் கைக்கு வந்து சேர்ந்தவர்களான இந்தியத் தமிழர்கள் ஒதுக்கப்பட்ட நிலையில் இருந்து இன்று இலங்கையின் சமூக அரசியல் வாழ்க் கையில் முன்னரை விட ஒப்பீட்டளவில் கூடிய பாதுகாப்பைப் பெற்ற வர்களாக மாறிவிட்டனர்.[42]

**முஸ்லிம்கள்**

இந்தியத் தமிழர்களைப் போன்றே முஸ்லிம்களும் சிங்களச்சார்பு அரசியல் போக்குடன் நேரடியான மோதலைத் தவிர்த்துக் கொண்டனர். இலங்கை முஸ்லிம்களில் பெரும்பான்மையினர் சோனகர்கள் (Moors) என்று அழைக்கப்படுவர். இவர்கள் எட்டாம் நூற்றாண்டளவில் இலங்கையின் கரையோரப் பகுதிகளில் குடியேறியவர்களான அராபிய வர்த்தகர்களின் சந்ததியினர் ஆவர். பிரித்தானியர் ஆட்சித் காலத்தில் கரையோரச் சோனகர்கள் என்று அழைக்கப்படுவோர் தென் இந்தியாவில் இருந்து வந்து இலங்கையில் குடியேறினர். முஸ்லிம்கள் தமிழைப் பேசுவோராக உள்ளனர். இவர்களில் சிலர் சிங்களத்தை பேசுவோராகவும், அதனைப் பிரதான மொழியாகக் கொண்டவர்களாயும் உள்ளனர். தென்பசுபிக்கில் இருந்து வந்து குடியேறிய மலேயர் என்ற சிறுகுழுவினர் பெரும்பாலும் இலங்கை யில் தென்பகுதியிலேயே வாழ்கின்றனர். இவர்கள் தமது மொழி யாகிய மலே மொழியைப் பேசுகின்றனர். இலங்கை முஸ்லிம்களை அவர்கள் சமயம் தான் ஒன்றாக இணைக்கிறது. முஸ்லிம்கள் மொழி யால் இணைந்தவர்கள் அல்லர். ஒரே தோற்ற மூலத்தை உடையவர் கள் என்ற முறையிலும் இவர்களை அடையாளம் காணமுடியாது.

முஸ்லிம் அரசியல் தலைவர்களின் அரசியல் தந்திரோபாயத்தை பயன்நாட்டமுடைய தகவமைத்துக் கொள்ளல் (Pragmatic Adaptation) என்று கூறலாம். முஸ்லிம்களின் இந்த இயல்பு அவர்களை இலங்கைத் தமிழர்களில் இருந்து வேறுபடுத்தி அடையாளம் காட்ட உதவியது. அது திறன்மிக்க தந்திரோபாயமாகவும் அமைந்துவிட்டது. தமிழர் களைப் போன்று இல்லாமல் முஸ்லிம்கள் நாடு முழுமையிலும் புவியியல் அடிப்படையில் பரவி வாழ்கின்றனர். திருகோணமலை, அம்பாறை என்னும் இரு கிழக்கு மாகாண மாவட்டங்களைத் தவிர்ந்த பிற எல்லா மாவட்டங்களிலும் முஸ்லிம்கள் சனத்தொகையின் 10% க்குக் குறைந்தவர்களாக உள்ளனர். அம்பாறையில் மட்டும் முஸ்லிம்கள் பெரும்பான்மை இனமாக உள்ளனர். அங்கு முஸ்லிம் களின் சனத்தொகை வீதாசாரம் 42% ஆகும்.

1935 ஆம் ஆண்டின் பின்னர் தேர்தல் முறை புகுத்தப்பட்டது. அப்போது தனி அங்கத்தவர் தொகுதி முறை இருந்தது. முஸ்லிம்கள்

என்ற முறையில் தனித்து நின்று போட்டியிடும் முஸ்லிம் ஒருவர் தேர்தலில் வெற்றி பெறும் வாய்ப்பு மிகக்குறைவு என்பது தெளிவு. இதனால் இன அடிப்படையிலான அரசியலிற்குப் பதிலீடான மாற்று வழிகளைக் தேட வேண்டியிருந்தது. முஸ்லிம்கள் தொழில்முறை அடிப்படையிலும் தம்முள் வேறுபட்டவர்களாய் இருந்தனர். கிழக்கு மாகாண முஸ்லிம்கள் விவசாயத்தைப் பிரதான தொழிலாகக் கொண்ட வர்கள். வியாபாரத்திலும், வர்த்தகத்திலும் முஸ்லிம்கள் ஈடுபட்டுள் ளனர். இவ்வீதாசாரம் இடத்துக்கிடம் வேறுபடும். வாழ்க்கையில் உயர்ச்சியடையும் ஆர்வம் உடைய முஸ்லிம் இளைஞர்கள் வியாபார வர்த்தக முயற்சிகளையே வாழ்க்கைத் தொழிலாக தேர்ந்து கொள்வர். ஒப்பீட்டளவில் குறைந்த எண்ணிக்கையினரான முஸ்லிம்களே பல்கலைக்கழகக் கல்வியை நாடிச் சென்றனர். இதேபோன்று அர சாங்க சேவையை நாடியவர்களும் ஒப்பீட்டளவில் குறைவு. சிங்கள வர்களுக்கு சலுகை காட்டும் கொள்கையினால் தமிழ் இளைஞர்கள் கோபம் கொண்டு கிளர்ந்த அளவிற்கு இக்கொள்கையின் தாக்கம் முஸ்லிம்களில் வெளிப்படவில்லை.

சுதந்திரத்திற்குப் பிந்திய காலப்பகுதியில் முஸ்லிம்களும் இன வாத நிகழ்ச்சி நிரல் ஒன்றை கொண்டிருந்தனர். இருந்தபோதும் சிங்களவருக்கு அச்சம் தருவதாக இந்நிகழ்ச்சி நிரல் இருக்கவில்லை. காலனித்துவ காலகட்டத்தில் முஸ்லிம்கள் சட்டங்கள் தொடர்பாக தமக்கே உரிய நடைமுறைகளை வகுத்துக் கொள்வதற்கு அரசின் ஆதரவைப் பெற்றனர். விவாகம், விவாகரத்து, சொத்துக்களை வாரி சுரிமையாக பெறுதல் ஆகிய விடயங்களில் முஸ்லிம்களிற்கு பிரத்தி யேகமான சட்டங்கள் உள்ளன. தமது தனித்துவமான பண்பாட்டு அடையாளத்தைப் பேணுவதற்காக இச்சட்டமுறைகளை பலப் படுத்தவும், பாதுகாக்கவும் முஸ்லிம்கள் விரும்பினர். கல்வியிலும் முஸ்லிம்கள் விசேட பாதுகாப்புக்களை வேண்டினர். அராபி மொழிப் பயிற்சி, முஸ்லிம் பஞ்சாங்க முறைக்கு அங்கீகாரம், போதானா மொழியைத் தேர்ந்து கொள்வதில் முஸ்லிம் மாணவர்களிற்கு நெகிழ்ச்சியான விதிமுறை[43] ஆகியன இவ்வாறான பாதுகாப்புகளிற்கு உதாரணங்களாகும். இவற்றுள் எதுவும் சிங்களவர்களின் அரசியல் நிகழ்ச்சி நிரலுக்குச் சவாலாக அமையவில்லை.

பிரித்தானிய ஆட்சி முடிவுக்கு வந்த கட்டத்தில் முஸ்லிம்கள் எத்தகைய அரசியலைத் தேர்ந்துகொள்ளப் போகிறார்கள்? அவர்கள் இனவாத அரசியலைக் கைவிட்டு விடுவார்களா? என்ற விடயம் தெளிவற்றதாகவே இருந்தது. 1915 ஆண்டில் நிகழ்ந்த முஸ்லிம் களுக்கு எதிரான கலவரம் முஸ்லிம்கள் மனதில் அச்ச உணர்வை ஏற்படுத்தியிருந்தது. அவர்கள் அரசியல் விழிப்புணர்வைப் பெற்றார் கள். முஸ்லிம்களும் தமிழர்களும் பொதுமொழியை அடிப்படை யாகக் கொண்டு அரசியல் கூட்டணியை அமைத்தனர். தேர்தல் தொகுதி முறையை சிறுபான்மை இனங்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்கு ஏற்றதாகமாற்றுதல், சிறுபான்மையினரின் உரிமை களுக்கு அரசியல் யாப்பின் மூலம் உத்திரவாதம் அளித்தல் போன்ற வற்றிற்கான பிரசாரம், ஆதரவு திரட்டல் நடவடிக்கைகளில் இக் கூட்டணி செயற்பட்டது. இக்கூட்டணி தோல்வியிலேயே முடிந்தது. 1946 ஆம் ஆண்டு முஸ்லிம் அரசியலில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது. மிக முக்கியமானவர்களான முஸ்லிம் அரசியல் தலை வர்கள் அந்த ஆண்டில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கொண்டார்கள். முஸ்லிம் தலைவர்கள் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் போட்டிக் கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலும் இணைந்து முனைப்போடு செயற்பட்டனர். இப்போது முஸ்லிம்கள் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்ற கட்சியை இன அடிப்படையில் உருவாக்கியிருக்கிறார்கள். முஸ்லிம்கள் இவ்விதம் தனிக்கட்சியை அமைத்த போதும், ஏனைய கட்சிகளிலும் அவர்கள் சேர்ந்திருக்கிறார் கள். மோதல் தவிர்ப்பு முறையிலான இனவாத இலக்குகளை வைத்துக் கொண்டு செயற்படுகின்றார்கள். தங்கள் இலக்குகளை அடைவதில் குறிப்பிடத்தக்க வெற்றியையும் அவர்கள் பெற்றுள்ளார்கள்.

**ஆங்கிலம் பேசுபவர்களான உயர்குழாம்**

சுதந்திரத்திற்கு முற்பட்ட காலத்திலும், அதற்குப் பின்னர் பல ஆண்டு களாகவும் ஆங்கிலம் பேசும் உயர்குழாம் ஒன்று இலங்கையில் செல்வாக்குடையதாய் இருந்து வந்தது. இக்குழுவை இனத்துவ, மத அடையாளம் சாராத குழுவாக (Non - Ethno Religious Group) கருத வேண்டும். இந்த ஆங்கிலம் பேசுவோர் குழு பொருளாதாரத்தின்

எல்லாத் துறைகளிலும் சொத்துக்களையும் முதலீடுகளையும் கொண்டிருந்தது. பல்கலைக்கழகங்களிலும், சிவில் சேவையிலும், ஒன்றோடொன்று போட்டியிடும் இலங்கையின் அரசியல் கட்சிகளிலும் இக்குழுவின் பிரதிநிதிகள் உயர்நிலைகளில் இருந்தார்கள். ஆங்கிலம் பேசும் உயர்குழாம் குடும்ப உறவு வலைப்பின்னலால் பிணைக்கப்பட்டிருந்தது. இந்த வலைப்பின்னல் கட்சிப் பிரிவினைகளை மேவிச் செல்வதாகவும் இருந்தது. இந்த ஐக்கியமுடைய குழுவின் உறுப்பினர்களாக இருந்தோர் இன்று 60 வயதைக் தாண்டிய முதியவர்களாகவே உள்ளனர். இந்த உயர் குழாத்தின் பிள்ளைகளில் பலர் இலங்கையில் தங்கியிருப்பதோடு தமது பெற்றோரின் வழியில் செல்வதற்கே முயன்று வருகின்றனர். இருந்தபோதும் இப்பிரிவினரின் இளம் சந்ததியின் கல்வியும், அவர்களின் வளர்ப்பும் முன்னைய சந்ததியோடு ஒப்பிடும் போது முற்றிலும் வேறுபட்டதாக உள்ளது. நவீனத்துவம், சமவாய்ப்பு சமூகம் என்ற விடயங்களோடு கொந்தளிப்பும் கலப்புற்ற இன்றைய இலங்கைச் சூழலில் இவர்களின் நிலை வித்தியாசமானதாகவே உள்ளது. உயர்குழாத்தில் இளம் சந்ததியினரில் பலர் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் படித்து அந்தப் பட்டங்களைக் கொண்டு முன்னேற முனைகின்றனர். குறிப்பாக உயர்குழாம் பிரிவினரான தமிழர்களிடம் இப்போக்கு உள்ளது. தங்கள் பெற்றோரின் செல்வம் கரைந்து கொண்டு போவதும், அன்றாட வாழ்க்கையின் நெருக்கடிகளும், இலங்கை வாழ்க்கையின் அவலமும் அவர்களை வெளிநாட்டுக்கல்வி மூலம் தப்பித்துக் கொள்ளத் தூண்டுகிறது. அவர்கள் பிரித்தானியா, கனடா, அவுஸ்திரேலியா, ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகளில் தமது வாழ்க்கையைப் புதிதாக ஆரம்பித்துள்ளார்கள். தங்கள் பிள்ளைகளையும் அந்நாடுகளில் படிப்பிக்கிறார்கள், அங்கே வாழ்க்கையை அமைத்துக் கொள்ளத் திட்டமிட்டுள்ளார்கள்.[44]

இலங்கையின் ஆங்கிலம் பேசும் உயர்குழாம் குழுவின் முதிய உறுப்பினர்களுடன் ஒரு மாலை நேரச் சந்திப்பு என்பது வித்தியாசமான ஒரு அனுபவம். விக்டோரியா காலத்து இங்கிலாந்தின் உயர் வகுப்பினரின் சம்பிரதாயமான நடத்தை முறைகள், நாகரிக நேர்த்தி, முரண்பாடுகள் யாவும் அத்தகைய சந்திப்பில் வெளிப்படும். உயர் குழாம் ஆண்கள் கிரிக்கட், றகர் ஆகிய விளையாட்டுக்களின் பிரியர்

கள். அவர்களின் பிணைப்பு இந்த விளையாட்டுக்கள் ஊடாக வளர்ந்தவை. அவர்கள் ஒன்றாகப் படித்து லண்டன் உயர்தர பரீட்சை க்கு தோற்றியவர்கள். றோயல், சென்ற்.தோமஸ், ரினிட்டி முதலிய கல்லூரிகளில் ஒன்றாகப் படித்தவர்கள். பின்னர் இவர்களில் சிலர் ஒக்ஸ்போர்ட்டில் அல்லது கேம்பிரிட்ஜ்ஜில் படித்தவர்கள், வேறு சிலர் அவற்றை யொத்த இலங்கைப் பேராதனை பல்கலைக் கழகத் தில் படித்தவர்கள். அவர்கள் அடிக்கடி கூடிக் கதைப்பார்கள். விஸ்கி குடிப்பார்கள். இந்தச் சந்திப்புக்கள் பிரித்தானிய மாதிரியான 'கிளப்பு' களில் இடம் பெற்றன. அங்கே இவர்களிடை , விவாதங்களும் முடிவுறாத அரசியல் கலந்துரையாடல்களும் இடம் பெறும். இந்த உயர்குழாம் இலங்கையைச் சுதந்திரம் நோக்கி அமைதிப் பாதையில் கொண்டு சென்றது. மதச்சார்பில்லாத அரசாகவும், பல்லினங்கள் வாழும், பல மதங்களைப் பின்பற்றுவோர் வாழும் சமூகமாகவும் இலங்கையை உருவாக்க இவர்கள் உழைத்தனர். உயர் அரசாங்க அதிகாரிகளாகவும், வியாபார தொழிற்துறை அதிபர்களாகவும், பல்கலைக்கழக ஆசிரியர்களாகவும் ஒன்று மாறி ஒன்றுடன் தொடர்பு பட்ட, பிணைப்புண்ட உயர்நிலைத் தகுதிகளை இவர்கள் வகித்தனர். உயர்குழாத்தின் உறுப்பினர்கள் பலரின் கருத்துப்படி சுதந்திரத்திற்குப் பிற்பட்ட காலம் சில ஆண்டுகள் இலங்கையில் வாழ்தல் என்பது சுவர்க்க புரியில் வாழும் அனுபவம் தான். இவர்களின் தலைவர்களாய் இருந்தோர் இலங்கை மக்களின் உணர்வுகளை அனுதாபத்தோடு புரிந்து கொள்ளக்கூடிய மனப்பக்குவம் உள்ளவர்களாக இருக்க வில்லை. விக்டோரியா காலத்துப் பிரித்தானியாவின் பண்பாட்டில் ஊறிய இவர்களால் அப்படியான புரிந்துணர்வை வளர்த்துக் கொள்ளும் சாத்தியம் இல்லாமல் போனதில் ஆச்சரியப்பட எதுவும் இல்லை. ஆளுவோருக்கு ஆளப்படுவோர் பற்றிய அனுதாபமோ, ஆளப்படு வோரின் வாழ்க்கையை இயக்கும் சக்திகள் பற்றிய புரிந்துணர்வோ இருக்கவில்லை.

1950 க்களில் சிங்களம் மட்டும் மொழிக் கொள்கை ஏற்படுத்திய கொந்தளிப்பின் மத்தியில் உயர்குழாம் தனது வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருந்தது. இவர்களின் நிலங்கள், சொத்துக்கள் 1970 க் களின் மார்க்சிச பரிசோதனைக் கட்டத்தில் பறிபோயின. சிலர் தம்மை தக வமைத்துக் கொண்டனர். சிலர் அடியோடு அழிந்தே போனார்கள்.

நிதி இழப்பு மட்டுமல்ல தனிப்பட்ட இழப்புக்களையும் சந்தித்தார்கள். 1970 க்களின் பிற்பகுதியில் ஐக்கிய தேசியக்கட்சி வெற்றி பெற்றது. அதன் பொருளாதாரத் தாராளவாதக் கொள்கை அரங்கேறியது. அப்போது இவர்களில் பலர் குதூகலித்தார்கள். இருந்தபோதும் உயர்குழாத்தின் சில பிரிவினர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் ஒட்டுறவாடத் தொடங் கினார். அதன் ‘பொப்பியுலிச’ (மக்கள் வாத) நடைமுறைகளுக்கு ஆதரவு கொடுத்தனர். விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனும், மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் றோகண விஜயவீரவும் என்ன சொல்கிறார்கள் என்பதை இவர்களால் புரியவே முடியவில்லை. குழம்பிய சிந்தையுடனும், அருவருப்புக் கலந்த வெறுப்புடனும் இத்தீவிரவாதிகளைப் பார்க்கவே இவர்களால் முடிந்தது. சூழலின் தாக்கத்திற்கு எதிர்கொள்ள முடியாமல் அழிவுறும் உயிரினங்கள் என்ற வகை பற்றி அறிவீர்கள். இலங்கையின் ஆங்கிலம் பேசும் உயர் குழாமும் அத்தகையதொரு வகை தான். சுவடே இல்லாமல் அழிந்து போகும் ஆபத்தில் உள்ள சமூகக் குழு இது. இலங்கையின் இன்றைய அரசியல் தலைவர்கள் அவர்களது முன்னைய வரலாறுப் பின்னணி எப்படிப்பட்டதாயினும், மிக மிக வித்தியாசமானவர்கள்.

## இலங்கையின் சிவில் யுத்தம் பற்றிய அனுபவம்

இந்த நூலை எழுதுவதில் நான் எனது தனிப்பட்ட அனுபவத்தைப் பயன்படுத்தினேன். அது பற்றிச் சொல்லுதல் அவசியம். 1987 ஆம் ஆண்டில் இலங்கையின் அபிவிருத்திக் கொள்கைகள் பற்றிச் சிறிய அறிக்கை ஒன்றை எழுதினேன். அந்த அறிக்கையில் இலங்கை பற்றிய பொதுப்பட்ட விபரணை ஒன்றை தந்தேன். இலங்கை பற்றிய எனது அறிவு அன்று குறைவு. இந்த நூலின் வாசகர்களுக்கு உள்ளதற்கு ஒப்பானதாகத்தான் அன்றைய எனது அறிவும் என்று சொல்லலாம். எனது அறிக்கையில் கணினி மூலம் வரைந்த சில மாதிரிகளை (Models) சேர்த்திருந்தேன். தவறான அபிவிருத்திக் கொள்கைகள் எவ்வாறு பயங்கரமான மோதல்களுக்கு வழிவகுக்கும் என்பதை இவற்றின் மூலம் எடுத்துக் காட்டினேன். ஐக்கிய அமெரிக்காவில் புலமைத்துறை ஆய்வு மரபு வித்தியாசமாக இருந்தது. நான் செய்தது

போல் ஒரு பண்பாட்டுடன் தொடர்பு கொண்டு நேரடி அனுபவத்தின் படி 'வன்முறை அரசியல் மோதல்களை' அறிதல் அல்லது அன்றாட வாழ்வு அனுபவத்துடன் அறிவைத் தொடர்புபடுத்தல் என்பது அங்கு இருக்கவில்லை. 1988 ஆம் ஆண்டில் கொழும்புப் பல்கலைக்கழகத் தின் நவீன வரலாறு அரசியல் விஞ்ஞானத் துறையில் (Department of Modern History and Political Science) எனக்கு வருகை தரு பேராசிரியர் பதவி கிடைத்தது. ஒரு வருடம் கொழும்பில் தங்கி கற்பித்தல், ஆராய்ச்சி இரண்டிலும் ஈடுபடுதல் என்பது எனது நியமனத்தின் நிபந்தனையாக இருந்தது. நானும் எனது மனைவி எமிலியும் கொழும்பு வாழ்க்கையை எப்படிக் கழித்தோம், இலங்கையின் பயங்கர மோதல் களின் மத்தியில் எமது அன்றாட வாழ்க்கை அனுபவம் எப்படி இருந்தது என்பது பற்றிய சில செய்திகளைச் சொல்ல விரும்பு கிறேன்.

நாங்கள் இருவரும் முதன்முதலாக 1987 ஆம் ஆண்டு இலங் கைக்கு வந்தோம். அப்போது இங்கு மூன்று வாரம் தங்கினோம். எமது வருகை இரண்டு நோக்கங்களைக் கொண்டது. ஒன்று தேன் நிலவை இலங்கையில் கழிப்பது. 1988 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் இங்கே நீண்ட காலம் தங்கப்போகிறோம், இந்த இடம் எப்படிப்பட்டது என்று நோட்டம் விடுவதும், தகவல் அறிவதும் இரண்டாவது நோக்கம். நாங்கள் புறப்படுவதற்கு சில வாரங்களுக்கு முன்னர் 'நியுயோர்க் டைம்ஸ்', வாஷிங்டன் போஸ்ட்' பத்திரிகைகள் கொழும்பின் பிரதான பஸ்தரிப்பு இடத்தில் நிகழ்ந்த குண்டுத் தூக் குதல் பற்றி செய்திகளை வெளியிட்டன. அதற்கு முன்னர் நடந்த அரசியல் படுகொலைகள் பற்றியும், தமிழ் கிளர்ச்சிப் போராளிகள் நாட்டின் மிகப் புனிதமான சமய வழிபாட்டு இடமொன்றில் நிகழ்த்திய படுகொலைகள் பற்றியும் இந்தச் செய்திகளில் குறிப்பிடப்பட் டிருந்தன. இலங்கை சின்னாபின்னமாகி அழிவதை பற்றி பத்திரிகைக் கட்டுரைகளும் பிரசுரமாகின. இருந்த போதும் எமது திட்டத்தை கைவிடுவதை நாம் விரும்பவில்லை. கொழும்புக்கு வந்து சேர்ந்தோம். பின்னர் அங்கு நடந்த சர்வதேச மாநாடு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றினேன். மாநாட்டுக்கு வருகையாளர் குறைவாக இருந்தது. பலர் தம் வருகையை ரத்து செய்துவிட்டனர். மாநாட்டுக்கு நாம் வந்திருந்தது, இலங்கையின் பங்குபற்றுநர்களுக்கு மகிழ்ச்சி தருவதாக

இருந்தது. நாம் தேன் நிலவுக்குமாக வந்தோம் என்று சொன்னது அவர்களுக்கு வேடிக்கையாகவும் இருந்தது. அப்போது கொழும்பு வீதிகளில் நடந்து திரிந்தோம். 'பாதுகாப்பான' பிற இடங்களுக்கு ரெயில் வண்டியில் போய் வந்தோம்.[45] எந்தவித ஆபத்துக்களையும் நாம் எதிர்கொள்ளவில்லை.

யூலைமாதம் ஐக்கிய அமெரிக்காவிற்கு திரும்பிய இருவாரங்களின் பின் இலங்கையின் நிலைமை மோசமடைந்தது. ஜே.ஆர் ஜெயவர்த்தன அழுத்தத்தின் மத்தியில் இந்தியப் படைகளை பெருந் தொகையில் இலங்கைக்குள் நுழைய அனுமதி கொடுத்தார். இந்திய அமைதி காக்கும் படை - IPKF என அழைக்கப்பட்ட இந்தப் படை - வடக்குத் கிழக்குப் பகுதிக்கு வந்திறங்கியது. தமிழ்ப் போராளிகளை அமைதி வழிக்குக் கொண்டு வருவதே இதன் நோக்கம். ஆனால் முடிவு வேறுவிதமாயிற்று. 50,000 பேர் கொண்ட IPKF, கொரில்லாப் போராளிகளுடனான மோதல் என்னும் புதைசேற்றில் மாட்டிக் கொண்டது.[46]

இந்தியப் படைகளின் வருகை ஜயவர்த்தனவிற்கு இன்னொரு தலையிடியையும் கொடுத்தது. இன்னொரு சிவில் யுத்தம் ஜே.வி.பி என்னும் சிங்கள இளைஞர் குழுவிற்கும் ஆளும் உயர்வகுப்புக்கும் இடையிலான வர்க்க முரண்பாட்டின் காரணமாக எழுந்தது. ஜே.வி.பி யின் கரந்துறை உறுப்பினர்கள், அரசியல்வாதிகளையும், நிர்வாகத் துறை அதிகாரிகளையும் படுகொலை செய்தனர். பொருளாதாரத்தைப் பலவீனம் அடையச் செய்தல், சமூகப் பிளவுகளை அதிகரிக்கச் செய்தல், அரசாங்கத்தை ஆட்சி செய்யக்கூடிய வலுவில்லாத பலவீன நிலைக்குக் கொண்டு வருதல் என்பனவே ஜே.வி.பியின் நோக்கங் களாகும். அரசாங்கப் படைகளின் பதிலடி நடவடிக்கைகள் ஈவிரக்க மற்ற கொடுமையாக அமைந்ததோடு கிளர்ச்சியைக் கட்டுப்படுத்தும் செயல்திறன் அற்றனவாகவும் இருந்தன. 1987 இன் பிற்பகுதியில் வடக்கிலும், தெற்கிலும் நாடு முழுவதுமாக வன்முறை மோதல்கள் வெடித்தன. இருந்தபோதும் எனது கற்பித்தல் வேலையைப் பொறுப்பேற்பதற்காகத் திரும்பி வருவது பற்றி நாம் உறுதியாக இருந்தோம். கொழும்பு நகரின் வியாபார மையப்பகுதியில் இருந்து தெற்கே சில மைல்கள் தள்ளி உள்ள ஒரு இடத்தில் ஒரு பங்களாவை நாம் தங்குவதற்கு எடுத்தோம். இந்தப் பங்களா காலனித்துவ காலத்துப்

பாணியிலான பெரிய விசாலமான வீடு. கொழும்பு பல்கலைக் கழகத்தில் இருந்து நடந்து செல்லக்கூடிய கிட்டிய இடத்தில் இது அமைந்திருந்தது. எனது மாணவர்களுக்கு நான் கற்பித்த சமூகவிஞ் ஞானம் புள்ளியல் சார்ந்த அளவை முறைச் சமூக விஞ்ஞானம் (Quantitative social science) என்று சொல்லலாம். மாணவர்களுக்கு அரசியல் மோதல்கள் தொடர்பான தரவுகளைத் திரட்டுவது பற்றிச் சொல்லிக் கொடுத்தேன். நானும் தரவுகளைத் திரட்டினேன். எனது மனைவி எமிலி சமுதாய சுகாதாரத் திட்டம் ஒன்றில் பயிற்றுவிப்பாளர் வேலையைப் பெற்றுக் கொண்டாள். அவள் தமிழ் இளைஞர் கிளர்ச்சி நடைபெற்ற வடக்கு மாகாணத்தின் கிராமங்களுக்குச் சென்று பணி புரிந்ததோடு, இந்தியத் தலையீடு பற்றிய நேரடி அனுபவத்தையும் பெற்றுக் கொண்டாள்.

**'சிறிய பிரச்சினைகள்...'**

இலங்கையில் ஆங்கிலம் பேசுவோர் அடிக்கடி உபயோகிக்கும் சொல் 'புரபிளம்' (Problem). சிலவேளைகளில் 'சிமோல் புரபிளம்' (small problem) என்றும் சொல்வார்கள். ஆர்ப்பாட்ட ஊர்வலம், வேலை நிறுத்தம், சதிவேலைகள், குண்டு வெடிப்பு, கொலைகள் என்பன சாதாரண அன்றாட வாழ்க்கையைக் குழப்பிக் கொண்டு இருந்தன. இவற்றையே 'புரபிளம்' என்றும் 'சிமோல் புரபிளம்' என்றும் கூறுவர். இத்தகைய பிரச்சினைகள் நாளாந்தம் நடைபெறத் தொடங்கின. 'ஐலன்ட்' 'டெய்லி நியுஸ்' ஆகிய பத்திரிகைகளில் இவை முதற் பக்கச் செய்திகளாக வரும். காலையில் இவற்றைத் தவறாமல் நான் படிப்பேன். எனது தகவல் தளத்தில் (Data Base) இந்நிகழ்வுகளை மோதல் நிகழ்வுகள் என்று பதிவு செய்து வந்தேன்.

நான் கொழும்பில் தங்கிருந்த போது ஆரம்பத்தில் பிரச்சினைகள் அடிக்கடி நிகழ்ந்தன. அடிக்கடி நிகழும் பிரச்சினைகள் அல்ல, அவற்றிற்கு தகவமைத்து மீண்டும் வாழ்க்கையைத் தொடங்கும் மக்களின் ஆற்றல்தான் எம்மை வியப்பில் ஆழ்த்தியது. பெய்ரூட் நகரத்தில் மிகவும் கஷ்டமான காலத்தில் தங்கியிருந்தவர்களும் கூட இப்படியான அனுபவத்தைப் பெற்றதாக எனக்குக் கூறியிருக்கிறார் கள். கொழும்பு நகரம் பிற இடங்களில் இருந்து தனிமைப்படுத்தப்

பட்டுள்ளது போன்ற ஒரு தோற்றத்தைத் தந்தது. எங்கு பார்த்தாலும் இயந்திரத் துப்பாக்கிகளை ஏந்திய இராணுவத்தினர் நின்றனர். வியாபார நிறுவனங்கள் அமைந்துள்ள கட்டிடங்களுக்குள் நுழைய முன்னர் ஆட்களை சோதனையிடுதல் ஒரு கட்டாய நடைமுறை. இருந்தாற் போல் மின்சாரம் தடைப்படும்; நீர் வழங்கல் இடைநிறுத்தப்படும்; இவை பழகிப் போன விடயங்களாகி விட்டன. இன்ன திகதியில் இன்ன இடத்திற்குப் போகவேண்டும். இன்னாரைச் சந்திக்க வேண்டும் என்பதைக் குறிப்பிடும் 'அப்பொயின்ட்மென்ட் டயரியை' தான் பென்சிலால்தான் எழுதிக் கொள்வதாக எமிலி குறிப்பிடுவாள். ஏனென்றால் எதுவும் நிச்சயமற்ற நிலை. ஐரோப்பிய நாடுகளில் இருந்து மத்தியதர வகுப்பினரான உல்லாசப் பயணிகளும், ஆசிய நாட்டவர்களான உல்லாசப் பயணிகளும் மலிவு விலையில் கிடைத்த ஹோட்டல் அறை வசதிகளை பெற்று தென்பகுதி கரையோர நகரங்களிற்கு வந்து குவிந்தார்கள். இலங்கையின் கடற்கரையோர மையங்களில் சூரியஒளியையும் அவற்றின் கவர்ச்சி அழகையும் அனுபவிப்பதற்கு இவர்கள் முந்திக் கொண்டனர். கண்டி, அனுராத புரம், பொலன்நறுவ ஆகிய 2000 ஆண்டுப் பழமையுடைய பண்டைய நகரங்களின் அழிபாடுகளைப் பார்ப்பதற்கு வந்த உல்லாசப் பயணி களின் எண்ணிக்கையிலும் குறைச்சல் இல்லை. அவர்கள் இந்த இடங்களில் நீண்ட 'கியு' வரிசையில் காத்து நின்றனர்.

தமிழர்களின் யாழ்ப்பாண நகரத்தில் எங்கு பார்த்தாலும் இயந் திரத் துப்பாக்கியை ஏந்திய இந்தியப்படை வீரர்கள் காணப்பட்டனர். அவர்கள் இரவெல்லாம் வெட்ட வெளியில் படுத்து காவல் காப்ப வர்கள். எல்லாச் சந்திகள், முடக்குகள் தோறும் அவர்களைக் காணலாம். இருந்தாலும் மக்கள் எந்த நேரமும் தத்தம் வேலைகளில் சுறுசுறுப்பாக ஈடுபட்டபடி திரிவார்கள். ஆனால் வாழ்க்கையின் நிலையாமையும், ஒருவித பதட்ட உணர்வும் இங்கே வெளிப்பட்டுத் தெரியும். இராணுவ வாகனங்கள் அங்கும் இங்கும் ஓடிக்கொண்டிருக் கும். அவற்றுக்கிடையே சைக்கிள்களில் பிரயாணிகள் போவார்கள். இடைக்கிடை 'ஒஸ்ரின் ஏ' கார்களிலும் பயணிகள் சென்று கொண் டிருப்பார்கள். யாழ்ப்பாணத்தின் போக்குவரத்து நிலை இப்படிப்பட்டது தான். வழிகளை மறித்து சல்லடை போட்டுத் தேடுதல், ஊரடங்கு உத்தரவு போடுதல், அடிப்படையான சேவைகளைத் திடீர் என

நிறுத்துதல் என்பன அடிக்கடி நிகழும். அன்றாட வாழ்க்கையை இவை சீர்குலைத்தபடி இருந்தன. சதிநாச வேலை, கொரில்லாத் தாக்குதல், பதிலடித்தாக்குதல் என்பன நிகழும். இதனால் யுத்தத்தில் சம்பந்தப்படாத அப்பாவிகளின் மரணம் எழுந்தமான நிகழ்வாக தொடர்ந்தது.

பாபரா டச்மன் (Babara Tuchman) என்னும் வரலாற்றாசிரியர் 14 ஆம் நூற்றாண்டு பிரான்சின் நிலைமையைப் பின்வருமாறு படம் பிடித்துக் காட்டுகிறார்.

'5 ஆம் சாள்ஸ் பேரழிவு மிகுந்த ஒரு காலத்தல் ஆட்சி செய்து கொண்டிருந்தான். அங்கு நடந்த பேரழிவுகளின் மத்தியில் கூட எந்தவித பாதிப்பையும் உணராத இடங்களும் இருந்தன. அந்த இடங்களில் அழகு கொழிக்கும் களியாட்டம், இசை, நடனம், காதல், உழைப்பு என்று எல்லாம் இருக்கும். பகல் நேரங்களில் தொலைவில் நெருப்புப் புகை, மேகக் கூட்டம் போல் மேலே எழும்பும். இரவு வேளைகளில் பற்றி எரியும் நகரங்களின் தீச்சுவாலைகள் வானத்தை ஒளிரச் செய்யும். இருந்தாலும் அந்த நகரங்களுக்கு அடுத்துள்ள இடங்களில் வானம் நிர்மலமாக இருக்கும். சிறைக் கைதிகளை அடித்து நொருக்கிச் சித்திரவதை செய்யும் போது எழும் அழுகை ஒலி ஒரு பக்கத்தில் கேட்டுக் கொண்டு இருக்கும். இன்னொரு பக்கத்தில் வங்கியாளர்கள் கட்டுக் கட்டாக பணநோட்டுகளை எண்ணிக் கொண்டு இருப்பர். வேறொரு பக்கத்தில் விவசாயக் குடியான்கள் வயல்களில் உழுது கொண்டிருப்பர். அவர்களின் ஏர்களை சாந்தம் மிக்க எருதுகள் இழுத்துக் கொண்டு ஊர்ந்து செல்லும். ஒருகாலத்தின் பேரழிவு எல்லா மக்களையும், ஒரு சேர எல்லா இடங்களிலும் பாதிப்பதில்லை. ஆனால் நாளாக, நாளாக அவற்றின் தாக்கம் முழு நாட்டையும் பின்னுக்குத் தள்ளிச் சீரழித்து விடும். இதனை கண்டு கொள்வதற்கு முன்பாகவே எல்லாம் முடிந்து விடும்'.

மேலே குறிப்பிட்டது போன்ற நிலைமையே அன்று கொழும்பில் இருந்தது. கொழும்புக்கு வெளியே பிற இடங்களில் மக்கள் அனுப வித்த வாழ்க்கை நிலைமைகளை, மாதக் கணக்கில் அல்ல வருடக் கணக்காக அனுபவித்த அவல வாழ்வை கொழும்பு வாழ் மக்கள்

1988 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் அனுபவிக்கத் தொடங்கினார்கள்.

**புதுமையான ஊரடங்கு அனுமதிப்பத்திரம்**

1988 நவம்பரில் எமிலியும் நானும் கொழும்புக்குத் திரும்பினோம். அதற்கு முன்னர் ஒருமாதம் நியூசிலாந்திலும், சிங்கப்பூரிலும் தங்கினோம். எமது அந்தப் பயணத்தின் போது இலங்கையின் நடப்புக்கள் பற்றி அதிகம் கேள்விப்படவில்லை. விமான நிலையத்தில் வந்து இறங்கியபோதும் அங்கிருந்த உத்தியோகத்தர்கள் பிரச்சினைகள் பற்றி எமக்கு எதுவும் கூறவில்லை. விமான நிலையத்தில் இருந்து கொழும்புக்குச் செல்வதற்கான டாக்சிக் கூலி 30% உயர்ந்திருப்பதைக் கண்டோம். அது நிலைமை மோசமடைந்திருப்பதன் அறிகுறியாகத் தெரிந்தது. எமது டாக்சி ஓட்டுநர் பெற்றோல் தட்டுப்பாடு இருப்பது பற்றியும், ஊரடங்கு அமுலில் இருப்பது பற்றியும் கூறி, டாக்சிக் கூலி உயர்வுக்கான நியாயத்தை எடுத்துச்சொன்னார். ஊரடங்குச்சட்ட வேளையில் வாகனங்களிற்கு அனுமதிப்பத்திரம் (pass) தேவை. இதேபோல் வீட்டை விட்டு வெளியே யாரும் போவதென்றாலும் அல்லது தமது வேலைத்தலத்திற்கு போவதென்றாலும் அனுமதிப் பத்திரம் தேவை. அனுமதியற்று வெளியே போகிறவர்களை தடுத்து வைக்கலாம், அல்லது கேட்டு கேள்வி இல்லாமல் சுட்டுத் தள்ளலாம். இவை பற்றி எனக்குத் தெரியும். கொழும்பு நோக்கி நாம் செல்வதற்கு விமானப் பயணச் சீட்டுக்களையே ஊரடங்கு அனுமதிப் பத்திரமாக உபயோகித்துக் கொள்ளலாம் என்று டாக்சி ஓட்டுநர் தெரிவித்தார். பழக்கமான வீதிகளில் காரில் செல்லும்போது அவை மனித நடமாட்டத்தினால் நிரம்பி களைகட்டி இருக்கும். இப்போது அவை அமைதியாகவும், வெறிச்சோடியும் கிடந்தன. இது எம்மை நடுக்குற வைத்தன. இடைக்கிடையே தெருவிளக்குகள் ஒளியை உமிழ்ந்தன. ஆனால் கடைகள் தடுப்பு அரண்களுக்கு பின்னால் இருளில் மூழ்கிக் கிடந்தன. ஆயுதம் தாங்கிய இராணுவக் காவல் படைவீரன், அரசாங்க வாகனம், தெருநாய், வீடற்றவன் இப்படியானவை கண்ணில் படும் போது தான் மனித வாழ்வின் அடையாளங்கள் தெருக்களில் வெளிப்படும். தெருவில் தூங்கும் வீடற்ற நபர்களிற்கு மட்டும் தான்

ஊரடங்கு அனுமதிப் பத்திர விதிவிலக்கு இருந்தது எனலாம். இதுவும் உத்தியோக முறையற்ற ஒரு விதிவிலக்குத்தான். கட்டடங்களின் முன் மாடத்தின் கீழ் பலர் போர்வைகளாலும், சாரிகளாலும் தம்மை இழுத்து மூடியபடி நிலத்தில் உறங்கிக் கொண்டிருப்பதைக் கண்டேன். அவ்வாறு நிலத்தில் கிடந்தவர்களில் சிலர் ஜே.வி.பி. கொரில்லாக் களாகக் கூட இருக்கலாமே என்றும் நான் யோசித்தேன். சாதாரணமாக வாகன நெரிசல் உள்ள வீதிகள் ஊடாக எமது டாக்சி வழமையை விட விரைந்து சென்றது. பயங்கரமான ஆயுதங்களை வைத்துக் கொண்டு நின்ற இராணுவ வீரர்கள் எமது விமானப் பயணச்சீட்டின் அடிக்கட்டையை 'பாஸ்' ஆக ஏற்று கேள்வி எதுவும் கேட்காமலே போக அனுமதித்தனர். இவ்வாறு நாலு பரிசோதனைக் கடவைகளில் எமது 'பாஸ்' பரிசோதிக்கப்பட்டது. இக் கடவைகளில் இரண்டு, நாம் தங்கியிருந்த கொள்ளுப்பிட்டிப் பகுதியின் கடற்கரை வீதியில் இருந்தன. எமது வீடு இருந்த இந்த வீதி வழமையாக கலகலப்பாக இருக்கும். அன்று அவ்வீதி அமைதியாக இருந்தது.

அடுத்த நாள் அலுவலக உத்தியோகத்தர்களும், நண்பர்களும் பல கதைகளைச் சொன்னார்கள். பத்திரிகைகளையும் படித்தோம். இலங்கையின் அண்மைக்கால நிகழ்வுகள் பற்றிய தெளிவான சித்திரம் எமக்குக் கிடைத்தது. கொழும்பு நகரில் அமுல்படுத்தப்பட்ட இரவு ஊரடங்கு, நிலைமை மோசமடைந்து சென்றதன் அடையாளம் ஆகும். நவம்பர் மாதத்தில் ஜே.வி.பி கொரில்லா நடவடிக்கைகள் அதிகரித்தன. ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்தனாவின் அரசாங்கத் தினுடைய அதிகாரம் படிப்படியாக குறைந்து கொண்டு சென்றது. நகரின் 10 மைல் எல்லைக்குள் பஸ்சேவைகள் ஒழுங்கற்று இடைக்கிடை இடம் பெற்றன. பஸ்களுக்கு இராணுவம் பாதுகாப்பு வழங்கவேண்டியிருந்தது.

ஜே.வி.பி யின் எச்சரிக்கையை மீறிச் செயற்பட்ட பஸ் ஓட்டு நர்களும் பயணிகளும் சுட்டுக் கொல்லப்பட்டனர். எந்த நேரமும் கலகலப்பாக இருக்கும் கொழும்பின் மத்திய ரெயில் நிலையம் மூடப்பட்டு வெறுமையாகிக் கிடந்தது. பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மட்டும் நிலையத்தைச் சூழ்ந்து நின்றனர். வடக்கிலும், கிழக்கிலும் வாழும் தமிழர்கள் அனுபவித்தது போன்ற நிலைமையை கொழும்பு வாழ் மக்கள் இப்போது அனுபவிப்பதாக எமிலி தெரிவித்தாள்.

இலங்கையின் ஆளும் உயர் குழாத்திற்கு எதிராக மக்கள் திரளைத் தாம் பிரதிநிதித்துவப்படுத்துவதாக ஜே.வி.பி கூறியது. ஆனால் கொலைகள், சதிவேலை, பொதுவேலை நிறுத்தம், ஊரடங்கு உத்தரவு என்பன சாதாரண ஏழைகளையே மிகவும் பாதித்தன. அன்றாடம் உழைத்துச் சீவிக்கும் தொழிலாளர்கள் தமது குடும்பங்களிற்கு நாள் முடிவில் உணவை வழங்குவதற்கு பணம் இல்லாத நிலையில் திண்டாடினர். அலுவலகங்களும், வங்கிகளும் பூட்டப்பட்டுக் கிடந்த தால் ஏனைய தொழிலாளர்களுடைய சம்பளக் கொடுப்பனவுகளும் தாமதிக்கப்பட்டன. கிராமப் பகுதிகளில் அரசாங்க வங்கியான மக்கள் வங்கியின் கிளைகள் எரியூட்டப்பட்டன. உணவுக்காகவும், தண்ணீருக் காகவும் மக்கள் நீண்ட கியூ வரிசையில் காத்துக் கிடந்தனர். ஒரு சில பஸ்களே ஓடின. அவற்றில் இடம்பிடிப்பதற்காக பயணிகள் காத்து நின்றனர். ஜே.வி.பி யின் தாக்குதல் அணிகள் வீடுகளுக்குள் புகுந்து ஆட்களை அச்சுறுத்தல், மிரட்டுதல், கொள்ளையடித்தல், கொலை செய்தல் போன்ற வன்செயல்களில் ஈடுபட்டன. அரசாங்க ஆதரவு தாக்குதல் அணிகளும் இதையே செய்தன. சில சந்தர்ப்பங்களில் பழைய குரோதத்திற்காக பழிவாங்கும் நோக்குடன் எதிரிகளால் அனுப்பப்பட்ட காடையர் கூட்டங்கள் இவ்வேலைகளைச் செய்தன. பொலிஸ், செயலற்றவர்கள் என்றும், ஊழல்காரரர்கள் என்றும் கருதப்பட்டனர். ஏழைகள் முடிந்தளவுக்கு பொலிசிடம் போவதைக் தவிர்த்தனர். பொலிஸ் படையின் கீழ்நிலைப் பதவிகளில் ஜே.வி.பி அனுதாபிகளான ஆட்கள் ஊடுருவி உள்ளதாகவும், அவர்கள் ஆட் களைப் பற்றித் தகவல் கொடுத்து கொலை செய்விக்கின்றார்கள் என்றும் வதந்திகள் பரவின.

அடுத்து வரும் நவம்பர் - ஏப்பிரல் பருவத்தில் ஹோட்டல் அறைகளை ஒதுக்குதல் 50 முதல் 80 வீதம் ஆக இருக்கும் என்று உல்லாசப் பயணத்துறைப் பிரதிநிதிகளை ஆதாரம் காட்டி இலங்கை யின் ‘டைம்ஸ்’ பத்திரிகை நவம்பர் 6 ஆம் திகதி செய்தி வெளியிட்டது. ஆனால் இரண்டு நாட்கள் கழிந்தபின்னர் உல்லாசப் பயணத்துறையை நிலை குலைய வைக்கும் தாக்குதல் நிகழ்ந்தது. கொழும்புக்குத் தெற்கே உள்ள முக்கியமான உல்லாசப் பயண மையங்களில் இருந்த ஹோட்டல்களின் ஊழியர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. ஜே.வி.பி. இந்த அச்சுறுத்தல்களை விடுத்ததாகக் கருதப்பட்டது.

பலர் வேலைக்குச் செல்லாமல் வீட்டில் தங்கிவிட்டனர். சில ஹோட்டல்களில், விருந்தினர்களுக்கு உணவு வழங்கப்படவில்லை. வேறு சிலவற்றில் இலங்கை உணவையும் கறிகளையும் மட்டும் வழங்கும்படி ஜே.வி.பி ஹோட்டலகளின் சமையல் அறைப் பணியாளர்களுக்குக் கட்டளையிட்டது. கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து தென்பகுதி நகரங்களிற்கு உல்லாசப் பயணிகளை ஏற்றிச் சென்ற உல்லாசப் பயண பஸ்கள் பெற்றோல் நிரப்பும் வசதி இல்லாததால் வீதிகளில் தரித்து நின்றன. நவம்பர் 9 ஆம் திகதி பயண முகவர்கள், உல்லாசப்பயணச் சபை உறுப்பினர்கள் கொண்ட கூட்டம் ஒன்று ஜனாதிபதி ஜயவர்த்தன தலைமையில் நடைபெற்றது. இந்த அவசர கூட்டத்தையடுத்துப் பதட்டமடைந்த அரசாங்கம், அந்நிய நாட்டு உல்லாசப் பயணிகள் யாவரையும் ஹோட்டல்களில் இருந்து வெளியேற்றி திருப்பி அனுப்புவதற்கு முடிவு செய்தது. ஓரிரு நாட்களிற்குள் ஏறக்குறைய எல்லாப் பயணிகளும் நாட்டை விட்டுச் சென்று விட்டனர். விமான நிலையத்தில் குழப்பமான நிலைமை எழுந்தது. ஐரோப்பாவில் இருந்து இலங்கைக்கு முன்கூட்டி ஒப்பந்த வாடகையாக பதிவு செய்த பயணங்கள் ரத்து செய்யப்பட்டன. கொழும்பு நகரின் மையப்பகுதியில் இருந்த ஆபரணக் கடைகள், நுண்கலைப்பொருட்கள், பழமையான நூதனப் பொருட்கள் ஆகியவற்றை விற்கும் கடைகளில் உல்லாசப் பயணிகளைக் காணமுடியாத நிலை ஏற்பட்டது. கொழும்பு நகரின் ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் வெளிநாட்டு வியாபார முக்கியஸ்தர்கள் சிலரும், அபிவிருத்தித் துறை ஆலோசகர்கள் சிலரும் மட்டும் தங்கியிருந்தனர். இவ் ஹோட்டல்கள் வெறிச்சோடிக் காணப்பட்டன. வியாபாரமும் அபிவிருத்தி வேலைகளும் முன்னேறும் என்ற அறிகுறி காணப்படவில்லை. லங்கா கார்டியன் பத்திரிகையின் ஆசிரியர் மெர்வின் டி சில்வா ‘பயம் - ஆட்டிப்படைக்கிறது’ என்று எழுதினார். ‘துப்பாக்கியில் இருந்து சன்னம் ஒன்று கூடப் பாயவில்லை. ஆனால் கிளர்ச்சியின் பிடியில் கொழும்பு நகரம் சிக்கிவிட்டது; நிர்வாகம் செயலற்று போய் முடங்கி விட்டது. இது வெட்ட வெளிச்சமாகத் தெரியும் யதார்த்தம்.’ என்றும் எழுதினார். [47]

**பிரியாவிடை**

டிசம்பர் மாதம் இலங்கையின் பதினாறாவது ஜனாதிபதித் தேர்தல் நடைபெற இருந்தது. அதற்கான தயாரிப்பு வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த போது நாம் எமது நண்பர்களுக்குப் பிரியாவிடை கொடுத்து ஐக்கிய அமெரிக்காவிற்குத் திரும்புவதற்குத் தயாரானோம். எமது வீட்டுப் பொருட்களை மூட்டை கட்டத் தொடங்கினோம். இலங்கையில் விருந்து வைபவங்களென்றால் விடியும் வரை நடைபெறும். ஆனால் எமது பிரியாவிடை வைபவம் இரவு 9 மணி ஊரடங்குக்கு முன்னராக முடிவுற்றது. எமது பயணத்திற்கு முதல் நாள் மாலையே விமானநிலையத்திற்கு அருகில் உள்ள ஹோட்டலுக்குப் போய் அறை எடுத்துத் தங்கினோம். இந்த முன் எச்சரிக்கை நடவடிக்கை வழமையாகி விட்டது. ஊரடங்கு, வீதித்தடை, பயங்கரவாதத் தாக்குதல் போன்ற ஏதேனும் தடை காரணமாக விமானப் பயணத்தை தவறவிடும் ஆபத்தில் இருந்து தப்பிக்கொள்ள இவ்வழி உதவியது. 'பிரவுண்ஸ் பீச் ரிசோர்ட்' ஹோட்டலில் பலநூறு அறைகள் உண்டு. அன்று எம்மோடு வேறு இரு விருந்தினர்களே தங்கியிருந்தனர். அறைகள் தாராளமாக இருந்தன. எமது வாடிக்கையாளரான 'விஜயா' என்னும் டாக்சி ஓட்டுநருக்கும் துக்கத்தோடு பிரியா விடை கொடுத்தோம். இனி எப்பொழுது அவரைச் சந்திப்போமோ என்ற எண்ணம் மனதில் எழுந்தது. சிலமாதங்கள் கழித்து பொலிஸ் அவரை அழைத்துச் சென்றார்களாம். அவரது மகன் ஜே.வி.பி.யுடன் தொடர்புடையவன் என்பதை விசாரிக்க அழைக்கப்பட்ட விஜயா பொலிசாரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கடைசியாக நாம் இரவு உணவை அருந்திய மண்டபம் கடற்கரையை எதிர்நோக்கிய விசாலமான இடம். மனோரதியமான அந்த மண்டபத்தில் வெண்ணிலவு ஒளி வீசிக் கொண்டிருந்தது. அங்கு தூண்களில் பொருத்தப்பட்டிருந்த மண்ணெய் விளக்குகளின் சுடரொளியும் மண்டபத்திற்கு ஒரு அழகைக் கொடுத்துக் கொண்டிருந்தது. ஏறக்குறைய 70 மேசைகள் இரவு உணவுக்காக தயார் நிலையில் அழகாக ஒழுங்கமைக்கப் பட்டிருந்தன. ஆனால் எம்மை விட இன்னும் ஒருவர் மட்டும் அங்கு உணவு அருந்திக் கொண்டிருந்தார். அன்றிரவு இடையிடை விழிப்பும் பின்னர் தூக்கமுமாகக்

கழிந்தது. குளிரூட்டிகள் துருப்பிடித்து இருந்தன. அவை சரியாக இயங்கவில்லை. எமது நுளம்பு வலைகளிலும் ஓட்டைகள் இருந்தன. அடுத்தநாள் அதிகாலை எமது காலை உணவின் மீதங்களை பசியுடன் இருந்த காகங்களிற்கு பிய்த்துப் போட்டோம். அவை பயம் இல்லாமல் எமது அறை பல்கனியின் சுவர் விளிம்பில் குந்திக் கொண்டு சாப் பிட்டன. வானம் முகில்கள் இல்லாது நிர்மலமாக இருந்தது. கடலோரத்தின் வெற்றுத்தரை மீது மெல்லிய கடல் அலைகள் மோதிக் கொண்டிருந்தன.

சில மணி நேரத்தில் சிங்கப்பூர் எயர்லைன்ஸ் விமானம் ஹொங்கொங் விமான நிலையத்தில் பத்திரமாகத் தரையிறங்கியது. அங்கே வந்திறங்கிய பின்னரே எமது கொழும்பு வாழ்க்கை கடந்த சில வாரங்களாக எவ்வளவு அழுத்தம் மிகுந்ததாய், எம் சக்தியை விரயமாக்கிக் கொண்டிருந்தது என்பதை உணர்ந்தோம். அத்தோடு எமது இலங்கை நண்பர்களை நிச்சியமற்ற வாழ்க்கையை எதிர் கொள்ளும்படி விட்டு விட்டு வந்து விட்டோமே என்ற குற்ற உணர்வும் எம்மை வருத்தியது.

ஹொங்கொங்கில் ஹோட்டல்களுக்குள்ளும், உணவகங்களுக் குள்ளும், கடைகளுக்குள்ளும் நுழையும் போது எம்மை அறியாமலே நாம் எமது பயணப் பொதிகளைத் தொட்டுப் பார்த்துக் கொள்வோம். அந்த பொதிகளுக்குள் மறைத்து வைத்திருக்கும் ஆயுதங்களும் குண்டுகளும் உள்ளனவா என்று பரிசோதிக்கப் போகிறார்களே என்று எமது உள்ளுணர்வு சொல்லும். இரண்டொரு நாட்கள் இப்படியொரு உணர்வு. பழக்கதோஷம். ஆனால் அங்கு பயணப் பைகளைப் பரிசோதிப்பதற்கு காவலர்கள் எவரும் இருக்கவில்லை.

2

# இலங்கையில் அரசியல் வேறுபாடுகள் தொடர்ச்சியான பயங்கர மோதல்களாக மாறியது ஏன்?

*இலங்கையில் பயங்கர மோதல்கள் ஏன் அதிகரித்துச் சென்றன? அதற்கான காரணங்கள் யாவை? என்பது பற்றிய விவாதம் உண்மையில் இலங்கையில் பதவிக்கு வந்த அரசுகள், குறிப்பாக 1980 க்கு முன்னர் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற அரசுகள் பயனுறுதிமிக்க, பேண்தகு அபிவிருத்தியை அடைவதில் ஏன் தவறின என்பது பற்றிய விவாதமாகும்.*

---

## தீவிரவாதம் தோன்றியது ஏன்?

சிலர் அச்சம் தெரிவித்தது போல 1988 இல் இலங்கை இன்னொரு கம்போடியாவாக மாறவில்லை. 1990 அளவில் ஜே.வி.பி ஒரு கொரில்லா அமைப்பாக இல்லாத வகையில் அழிக்கப்பட்டது. அதன் பின்னர் அது ஒரு சட்டபூர்வமான அமைப்பாக மீண்டு எழுந்தது. தமிழர்களுடனான சிவில் யுத்தம் ஏற்ற இறங்கங்களுடன் தொடர்ந்து செல்கிறது. இரு தரப்புக்களுக்கும் இடையிலான வேறுபாடுகள் தீர்க்கப்பட முடியாமல் உள்ளன. இருந்த போதும் உறுதியற்ற அமைதி ஒப்பந்தம் ஒன்று ஆட்கொலைகளைத் தற்காலிகமாக நிறுத்தியுள்ளது. பயங்கர மோதல் நடைபெற்று வந்த வேளையில் புலமையாளர்கள் இலங்கையின் அரசியல் வேறுபாடுகள் ஏன் தீர்க்கப்படவில்லை? ஏன் அவை பயங்கர மோதல்களாக தொடர்கின்றன? தீவிரமடைந்தன? என்ற கேள்விக்கு விடையளிப்பதற்கு முயன்றனர். பல காரணங்கள் தீவிரவாதத்தின் தோற்றத்திற்கான விளக்கங்களாக முன் வைக்கப்

பட்டன. இங்கே நான் சில காரணங்களைத் தருகின்றேன். அவை முரண்படு தன்மையின. இன்றைய அறிவின் நிலையை எடுத்துக் காட்டுவன. அவற்றின் பொருத்தப்பாடு இலங்கைக்கு அப்பாலும் அமைவன. மிக முக்கியமானவற்றைச் சுருக்கித் தருகின்றேன்.

### 1. இனத்துவம் (Ethnicity)

வெவ்வேறு பண்பாடுகளைக் கொண்ட சமூகங்கள் உள்ளன. அவற்றின் பண்பாட்டு வேறுபாடுகள் வரலாற்றில் ஆழ வேரூன்றி உள்ளன. இந்த வேறுபாடுகளை வைத்துக் கொண்டு அரசியல் ஆதரவு தேடுவதற்காக இன உணர்வைத் தூண்டும் கோரிக்கைகளை சில தலைவர்கள் முன் வைத்தார்கள். இதன் பயனாக அதிகாரத்தைக் கைப்பற்றிய எல்லா அரசியல் தலைவர்களும் இனங்களுக்கிடையில் பாரபட்சம் காட்டும் கொள்கைகளைப் பின்பற்றினார்கள். செயல்படுத் தினார்கள். இனத்துவ வேறுபாடுகளை இவ்விதம் உபயோகித்ததால் அரசியல் சொல்லாடலில் தீவிரவாதம் புகுந்தது. சிங்களவர், தமிழர் என்ற இரு பிரிவுகளிற்கிடையிலும் தீவிரவாத இயக்கங்கள் தோன்றின.[1]

### 2. காலனித்துவத்திற்கு பிந்திய பொருளாதாரத்தின் கட்டமைப்பு பலவீனங்கள் - அவை நீக்கப்படாமை

ஆரம்பத்தில் பொதுச் சுகாதாரம், கல்வி, அடிப்படை வாதிகளை மக்களுக்கு வழங்குதல் என்பனவற்றில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டது. இதனால் மக்கள் தொகைப் பெருக்கம் ஏற்பட்டது. இளைஞர் பிரிவின் சனத்தொகை வேகமாக அதிகரித்தது. இளைஞர் களின் எதிர்பார்ப்புகளும் அதிகரித்தன. காலனித்துவத்திற்குப் பிந்திய பொருளாதாரம் அடிப்படையான கட்டமைப்புப் பலவீனங்களை கொண்டிருந்தது. இளைஞர்களின் எதிர்ப்பார்ப்புக்களான வேலை வாய்ப்பு, நல்லவாழ்க்கை என்பனவற்றை வழங்கும் தகைமை நாட்டின் பொருளாதாரத்திற்கு இருக்கவில்லை. இதனால் விரக்தி நிலை தோன்றியது.[2]

அரசின் மீது வெறுப்பு ஏற்பட்டது. இளைஞர்கள் தமது செயலற்ற கையறுநிலையை உணர்ந்தனர். அவர்கள் தீவிரவாத இயக்கங்களால் கவரப்பட்டனர். அடிப்படையான மாற்றங்களைக் கொண்டு வர

வேண்டுமானால் வன்முறை வழிகளைத் தான் நாட வேண்டும் எனக் கருதினர்.[3]

### 3. ஆளும் வர்க்கச் சுரண்டல்

காலனித்துவத்திற்கு பிந்திய கட்டத்திலும், காலனித்திய காலத்துச் சுரண்டல் முறை தொடர்கிறது. ஒரு வித்தியாசம் மட்டும் இருந்தது. காலனித்துவ காலத்து ஆட்சியாளர்களின் இடத்தை சுதேசிய ஆட்சி யாளர்கள் பிடித்துக் கொண்டார்கள். புதிய ஆட்சியாளர்கள் காலனித்துவ வாதிகளுடன் உறவுகளை பேணியதோடு முன்பிருந்த அரசியல் பொருளாதார முறையினைத் தொடர்ந்து பேணினர். உழைக்கும் வர்க்கங்களின் உழைப்பின் பயன்கள் ஆளும் குழுக்களால் அபகரிக் கப்பட்டன. இந்த முறையின் தவிர்க்கமுடியாத விளைவாக மோதல் நிலை தீவிரம் பெற்றது.[4]

### 4. தனியார் மயப்படுத்தல், கட்டுப்பாடுகளைத் தளர்த்தல், அமைப்பியல் சீராக்கம் முதலியன

தாராள பொருளாதார கொள்கையின் அடிப்படையிலான சுதந்திர சந்தையை நோக்கிய சீர்திருத்தங்கள், அமைப்பியல் சீராக்கம் (Structural adjustment) என்பன 1977 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டன. இவை பின்காலனித்துவப் பொருளாதாரத்தின் அமைப்பியல் பலவீனங் களைச் சரிசெய்வதற்கு அவசியமானவையாக இருந்தன. அத்தோடு பல்லாண்டுகளாகப் பின்பற்றப்பட்டு வந்த சமூகக் கொள்கை (Social policy) பொருளாதாரத்தில் வினைத்திறன் குறைவையும், தூண்டுதல் இன்மையையும் ஏற்படுத்தின. இவற்றையும் சரி செய்தல் அவசிய மாயிற்று. இந்தச் சீர்திருத்தங்கள் சமூகக் கட்டமைப்பைச் சீர்குலைத்தது ஊழலையும், சமத்துவமின்மையையும் அதிகரித்தன. இதனால் இளைஞர்கள் விரக்தியுற்றனர். பெரும்பாலான இளைஞர்கள் வேலை யற்றவர்களாயும், குறைவேலையில் உள்ளோராயும் இருந்தனர். இந்நிலை ஆளும் தரப்பின் மீது அதிருப்தியை உருவாக்கியது. இளைஞர்கள் தமது செயலற்ற கையறுநிலையினை உணர்ந்தனர். தீவிர மாற்றங்களைக் கொண்டுவருவதாயின் வன்முறை வழிகளையே நாடவேண்டும் என்று கருதிய இளைஞர்களை் தீவிரவாத இயக்கங் களில் சேர்ந்தனர்.

## 5. அளவுக்கு அதிகமான ஜனநாயகம்

இலங்கையின் பிரச்சினைகள் அளவுக்கு அதிகமான ஜனநாயகத்தால் விளைந்தவை எனலாம். பொதுச் சுகாதாரம், பரவலான கல்வி முன்னேற்றம், அடிப்படைத் தேவைகளை வழங்கல் என்பனவற்றில் ஆரம்பத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடையப்பட்டது. இதனால் மக்கள் இவற்றைப் பெறுவதற்கான பிரதான வழி சந்தை என்று கருதாமல், அரசாங்கமே இவற்றைத் தருதல் வேண்டும் என எண்ணத் தொடங்கினர். வேலை வாய்ப்பையும் பொருளாதார நன்மை களையும் அரசின் மூலமே பெறவேண்டும் என்ற எண்ணம் வலுப் பெற்றது. இதன்விளைவாக பொருளியல் கொள்கையில் ஒன்றுக் கொன்று முரணான நடவடிக்கைகளும், பொருந்தாமையும் ஏற்பட்டன. இவை பொருளாதாரத் தேக்கநிலையை உருவாக்கியது. பொருளா தாரத்தில் அடிப்படையான கட்டமைப்பு மாற்றங்கள் ஏற்படவில்லை.[6] இளைஞர்களின் எதிர்பார்ப்புக்களான சிறந்த தொழில்வாய்ப்பு, சிறந்த வாழ்க்கைநிலைமை என்பன நிறைவேற்றப்படவில்லை. இதனால் அதிருப்தியும், விரக்தியும் தோன்றின. இளைஞர்கள் தீவிரவாத இயக்கங்களில் சேர்ந்து, வன்முறை வழியில் அடிப்படை மாற்றங் களைக் கொண்டு வரலாம் எனக் கருதலாயினர்.

### 6. ஜனநாயக நல்லாட்சியின் தோல்வி

ஜனநாயக செயல்முறை, பொதுநிறுவனங்களின் செயற்பாடுகள் என்பனவற்றில் பாரபட்சமின்மையும், நீதியும் இருக்கவேண்டும். வெளிப் படைத்தன்மை வேண்டும். இவை இல்லாமல் போனமை இலங்கையின் பிரச்சினைகளிற்கு மூலகாரணமாக அமைந்தது. 1970 ஆம் ஆண்டு முதல் இலங்கையின் பாதுகாப்புப் படைகள் அரசியல் மயப்படுத்தப்பட்டன. அரசாங்கங்கள் ஒடுக்கு முறையைக் கையாண்டன. இப்போக்குகள் வரவர அதிகரித்தன. சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி என்பன ஆட்சியில் இருந்த போது தம் ஆட்சிக் காலத்தை நீடிப்பதற்கு அதிகாரத்தை பயன் படுத்தின. இந்தக் குறுக்கு வழிகள் நீண்டகாலப் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உதவவில்லை. அரசாங்கங்கள் தேர்தல்களில் குழறுபடிகளைச் செய்வதும், ஒடுக்கு முறையைக்

கையாள்வதும் அதிருப்தியை உண்டாக்கியது. பெரும்பாலானோர் இந்த நிலைமையை வன்முறை வழிகளால் தான் மாற்ற முடியும் எனக் கருதலாயினர். வன்முறைதான் அரசியல் எதிர்ப்பை வெளிப் படுத்துவதற்கான ஒரே வழி என்றும் கருதினர்.[7] தேவைப்படும் சமூக மாற்றங்களை தீவிரவாத இயக்கங்கள் மூலம் வன்முறை வழியில் கொண்டு வரலாம் என்ற எண்ணம் இளைஞர் மத்தியில் வலுப் பட்டது.

**7. தலைமைத்துவத்தின் தோல்வி**

தலைமைத்துவத்தின் தோல்வி காரணமாக ஜனநாயக நடைமுறை களும் ஜனநாயக நிறுவனங்களும் பலமிழந்தன. தலைமைத்துவத்தின் தோல்வி என்னும் கருத்து நாட்டின் இரு முக்கிய தலைவர்களான சிறிமாவோ பண்டாரநாயக்க, ஜே.ஆர்.ஜயவர்த்தன ஆகிய இருவரின் குறைகள் மீது கவனம் செலுத்துகிறது. திருமதி பண்டாரநாயக்காவின் ஆட்சி அவரது கட்சியை பலமற்றதாக்கியது. அக்கட்சி ஐக்கிய தேசியக் கட்சியின் சர்வாதிகாரப் போக்கினை எதிர்க்கும் வலிமையற்றதாயிற்று. ஜே.ஆர்.ஜயவர்த்தன தான் பதவியில் தொடர்ந்து இருப்பதற்கும், தனது மிதவாத எதிரிகளை ஓரங்கட்டவும், தனது தந்திரோபாயங்களை திறமையுடன் கையாண்டார். இதன் விளைவாக இலங்கையில் முன்பு நிலவிய பன்மைத்துவ அரசியலின் (pluralist politics) தளம் - அதன் ஆத்மீக பலம் - தகர்க்கப்பட்டது.[8] இது இளைஞர்களிடையே ஆளும் அமைப்பைச் சார்ந்தோர் மீது அதிருப்தியை ஏற்படுத்தியது. அடிப்படை மாற்றங்கள் வன்முறை வழிகளால் தான் கொண்டுவர முடியும் எனக் கருதிய இளைஞர்கள் தீவிரவாத இயங்கங்களில் சேர்ந்தனர்.

மேலே குறிப்பிட்ட ஏழு வகை வாதங்களும் இலங்கையின் அரசியல் மோதல் தீவிரமாகியதற்கான காரணங்களை விளக்க முயல் கின்றன. இவற்றுள் மூன்றாவது வாதம் ஆளும் வர்க்கச் சுரண்டல் தான் தீவிரவாதத்தின் தோற்றத்திற்கு காரணம் என்று கூறுகிறது. இது நியதிவாதத் தன்மை (Determinist) உடையது. ஏனையவை யாவும் ஒரு முடிவுக்கே வருகின்றன. இலங்கையில் உருவான சூழ்நிலை பின்வரும் வழிகளில் விளக்கப்பட்டது:

1. வன்முறைசார் தீவிரவாத நடவடிக்கைகள்
2. அதற்குப் பதிலடியான அரசாங்கத்தின் வன்முறை
3. முழு அளவிலான சிவில் யுத்தமாக இது மாற்றமடைதல் - இவை தவிர்க்க முடியாதனவாயின என்ற முடிவு

இவற்றுள் எது 'மிகச்சிறந்த' விளக்கம் என்பது குறித்து சர்ச்சை உள்ளது. இந்தச் சர்ச்சையினை யானை பார்த்த குருடர் கதைக்கு ஒப்பிடலாம். ஆறு குருடர்கள் ஒவ்வொருவரும் யானையின் ஒரு உறுப்பைத் தொட்டுப் பார்த்தார்களாம். அதன் பின் அவர்கள் யானை எப்படிப் பட்டது என்பதையிட்டு தமக்குள் சர்ச்சையில் இறங்கினார்கள். ஒருவன் சொன்னான் 'யானை சுவர் போன்றது' என்று; மற்றவன் அது உலக்கை போன்றது என்றான்; மூன்றாமவன் அது பாம்பு மாதிரியானது என்றான். நாலாமவன் அது மரத்தை ஒத்தது என்றான். ஐந்தாமவன் அது காற்றாடி போன்றது என்றான். ஆறாவது ஆள் அது கயிறு போன்றது என்றான். ஒவ்வொருவரும் பகுதி பற்றிய தமது அறிவை முழுமை பற்றியதாக கற்பனை செய்தனர். தமது நண்பர்கள் தெரிவித்த கருத்துக்களுடன் இணைத்து யானை பற்றிய தமது அறிவை கட்டமைப்பதற்கு அவர்கள் தயாராக இல்லை. முழுமையை பற்றிய அறிவை அவர்களால் பெறமுடியவில்லை. யோன் கொட்பிறே சாக்ஸ் என்னும் பத்தொன்பதாம் நூற்றாண்டுக் கவிஞன் இந்தக் கதையின் கருத்தைக் கூறும் கவிதை ஒன்றை எழுதினான்.

'இந்துஸ்தானத்தின் மக்கள்
சத்தம் போட்டுச் சர்ச்சைப் பட்டனர்
நீண்டதொரு விவாதம்.
ஒவ்வொருவரும் ஒவ்வொரு கருதுகோள்.
கொண்டது விடாக் கொள்கையினர் அவர்
கண்டதில் உண்மையும் உண்டு என்றாலும்,
மண்டையில் எதுவும் இல்லாத மக்கன்கள்.

இந்த ஏழு வகையான விளக்கங்களின் படியும் 'யானை' எவ்வாறு தோற்றமளிக்கிறது? இவற்றை சிந்தனைப் பள்ளிகள் (Schools of Thought) என்று நான்காக வகைப்படுத்தலாம்.[9] இந்தக் காரணங்கள் யாவற்றையும் உள்ளடக்கி அபிவிருத்தி - பயங்கர மோதல் முறைமை

(The Development - Deadly Conflict System)என்றொரு கருத்தை நான் முன்வைத்திருக்கிறேன். இது பற்றி எனது நூல் தொடர் ஒன்றில் விரிவாக விளக்கியுள்ளேன். இது இலங்கையின் நிலைமை பற்றிய முழுமையான நோக்கு ஒன்றைத் தருவதாக உள்ளது. நான்கு சிந்தனைப் பள்ளிகள் பற்றிய விவரணையை அடுத்துத் தருகிறேன். அவற்றிற்குப் பின்வருமாறு தலைப்பிட்டுள்ளேன்:

1. இனத்துவம், அடையாளம், பண்பாடு
2. அரசியல் பொருளாதாரம்
3. திறன்மிகு, ஜனநாயக நல்லாட்சி
4. தலைமைத்துவம்

## இனத்துவம், அடையாளம், பண்பாடு

இந்தச் சிந்தனைப் பள்ளி பல நூற்றாண்டு காலமாக இருந்து வருகிறது. ஆயிரம் இரண்டாயிரம் ஆண்டுகள் பழமையுடைய சிந்தனை மரபு இது என்றும் கூறலாம். 19ம் நூற்றாண்டிலும் 20 நூற்றாண்டின் முற்பகுதியிலும் இந்தக் கோணத்தில் பார்ப்பவர்களின் கருத்துக்கள் மிகுந்த செல்வாக்கு உடையனவாய் இருந்தன. எனினும் இரண்டாம் உலக யுத்தத்திற்கும் பிற்பட்ட கால சர்வதேச அபிவிருத்தியும் நவீன மாதலும் இதன் செல்வாக்கைக் குறைத்து விட்டன. கெடுபிடியுத்தத்தின் (Cold war) பின்னர் இனத்தை அடிப்படையாகக் கொண்ட போராட்ட இயக்கங்கள் உலக அரங்கில் முன்னணிக்கு வந்தன. இனத்துவ உணர்வு வன்முறை மோதல்களுக்கு வழிவகுத்த போது, இனத்துவ அடையாளம் பற்றிய விவாதங்கள் எழுந்தன. புலமையாளர்களில் சிலர் இனத்துவ உணர்வு சமூகத்தால் கட்டமைக்கப்படுவது (Socially constructed) என்றனர். சமூகத்தால் கட்டமைக்கப்படும் இனத்துவ உணர்வு இலக்குகள் சிலவற்றை அடைவதற்கான கருவியாக உபயோ கிக்கப்படுகிறது என்றும் கூறினர். இதனை கருவிவாதம் (Instrumentalism) என்று குறிப்பிடலாம். இதற்கு மாறாக இனத்துவ உணர்வு இயல்பானது, மனிதனிடம் ஆதிமுதல் உள்ளார்ந்த இயல்பாக இருந்து வந்தது என்று வேறு சிலர் வாதிட்டனர். இதனைத் தோற்ற முதல்வாதம் (Primordialism) என்பர். இவ்வாறு வேறுபட்ட கருத்

துடையவர்களும் ஒரு விடயத்தில் உடன்பட்டனர். இக்காலத்தின் வன்முறை மோதல்களுக்கு இனத்துவ உணர்வு ஒரு காரணமாகக் கொள்ள வேண்டும் என்பதே இக் கருத்தொற்றுமையாகும்.[10] 'இனத்துவ மோதல்' (Ethnic Conflict) என்பது இலங்கையில் உள்ளது போன்ற மோதல் நிலையை விளக்குவதற்கும் பரவலாக உபயோகிக்கும் சுருக்கமான அடை யாளத் தலைப்பாக உள்ளது. ஆனால் இலங்கையின் பிரச்சினைகள் போன்றவை இனத்துவம் (Ethnicity)என்பதற்கும் மேலாக வேறு பல அம்சங்களையும் உள்ளடக்கியது என்பதே உண்மை யாகும்.

**அரசியல் பொருளாதாரம்**

இனக்குழும மோதல்களுக்கான காரணங்களாகக் குறிப்பிட்டவற்றுள் இரண்டாவது, மூன்றாவது, நான்காவது காரணங்கள் ஒன்றோடொன்று தொடர்புடையவை. அவை பொருளாதார, அரசியல், சமூக மாறிலி களுடன் சம்பந்தப்பட்டுள்ளதோடு குறுகிய கால எல்லையைக் கொண்டனவுமாகும். இத்தகைய விளக்கங்களுக்கு அரசியல் பொரு ளாதாரம்' என்ற பொதுத் தலைப்பு வழங்கப்படுவதுண்டு. சிலர் இந்தத் தலைப்பின் கீழ் அமையும் விளக்கங்கள் கார்ல் மார்க்ஸுடைய எழுத்துக்களுக்கு முக்கியத்துவம் அளிப்பன என்று கருதுவர். 'ஆளும் வர்க்கம்' என்ற தொடரால் குறிப்பிடப்படும் விளக்கம் (மூன்றாவது காரணம்) வர்க்கச் சுரண்டல் என்ற கருத்திற்கு அழுத்தம் கொடுப்பதாக உள்ளது. இந்த வரைவிலக்கணம் அரசியல் பொருளாதாரம் என்பதை விளக்குகிறது. இன்னொரு வகை விளக்கம் அரசியல் தலைமைத் துவத்தின் பங்கை வலியுறுத்தும். பேராசை மிக்கதும், சுரண்டலில் ஈடுபடுவதுமான அரசியல் தலைமை அதிகாரம் முழுவதையும் தன்வயப்படுத்தி சமத்துவமின்மையை அதிகரித்து பிரச்சினைகளை உருவாக்குதல் (நான்காவது காரணம்), அரசியல் பொருளாதாரம் பற்றிய இன்னோர் வரைவிலக்கணமாகும். சுரண்டும் வர்க்கம் உருவாக்கியுள்ள அதிகாரக் கட்டமைப்பை வன்முறைப் புரட்சி மூலம் சிதைப்பது தான் அர்த்தமுள்ள மாற்றம் ஒன்றைக் கொண்டு வரும் என்று இச் சிந்தனைப் பள்ளியின் தீவிரவாதிகள் கூறுவர். தோட்ட விவசாயத்தில் பெருமளவு தங்கியிருத்தல், அந்நியச் செலாவணி

உழைப்புக்கு தோட்ட விவசாயத்தையே பிரதான மூலமாகக் கொண்டிருத்தல் போன்ற பொருளாதாரம் தொடர்பான கட்டமைப்புப் பலவீனங்கள் (structural weaknesses) இரண்டாம் நிலைக் காரணம் என்ற கருத்தும் அரசியல் பொருளாதாரம் என்ற சிந்தனைப் பள்ளியைச் சேர்ந்ததாகும். இது தீவிர புரட்சிக் கருத்துக்கு மாறாக மிதவாதத் தன்மை கொண்டது. தமக்கிடையே வேறுபட்ட கருத்துக்களைக் கொண்டவர்களாயினும் இச் சிந்தனைப் பள்ளியைச் சேர்ந்தோர் யாவரும் அமைப்பியல் சீர்திருத்தங்கள் (structural reforms) என்பதில் நம்பிக்கையுடையவர்களாய் உள்ளனர். பொருளாதார கட்டமைப்பில் இருந்து வேறான அரசியல் - சமூகக் கட்டமைப்பு இந்த அமைப்பியல் சீர்திருத்தங்களுக்கு தடையாகிவிடும் என்ற கருத்திற்கு இவர்கள் முக்கியத்துவம் அளிப்பதில்லை. அமைப்புச் சீர்திருத்தங்கள் என்ற கருத்து, ஐக்கிய அமெரிக்கா, பெரிய பிரித்தானியா ஆகிய நாடுகளும், சர்வதேச நிதி வழங்கும் தபானங்களும், 1980 களிலும் 1990 களிலும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் பொருளாதார விருத்திக்கான தந்திரோபாயமாக முன்வைத்த அமைப்பியல் சீராக்கம் (Structural Adjustmennt) என்ற கருத்தினை நியாயப்படுத்துவதாக அமைவதைக் காணலாம். ஆனால் மார்க்சீய அரசியல் பொருளாதார வாதிகள் இதற்கு வேறுவகை விளக்கத்தைக் கூறுவர். அமைப்பியல் சீராக்கம் என்ற கருத்தை முன்வைப்போர் தற்போது இருந்துவரும் அதிகாரக் கட்டமைப்புக்கள் (Power Structures) விரும்பியோ, விரும்பாமலோ தொடர்ந்து இருப்பதற்கும், இந்நாடுகளில் பொருளாதாரத் தேக்க நிலையும், சமத்துவமின்மையும் நிலைப்பதற்கும் உதவுபவர்களாகவே உள்ளனர் என்று மார்க்சிய வாதிகள் கூறுவர்.

### திறன்மிகு, ஜனநாயக நல்லாட்சி

வன்முறை மோதல்களுக்கான காரணங்களாக நாம் குறிப்பிட்ட வற்றுள் ஐந்தாவது ஆறாவது காரணங்கள் அரசியல் நிறுவனங்களின் குறைபாடுகள் மீது கவனம் செலுத்துவனவாக உள்ளன. திறன்மிகு ஆட்சி இல்லை; ஜனநாயக நல்லாட்சி இல்லை; இவையே பிரதான குறைகள் என்பர். திறன் மிகு ஆட்சி என்பது அரசின் செயற்பாட்டுத் திறன் பற்றிய விடயம். கிறேன் பிரிங்டன் (Grane Brington) எழுதிய

'ஒரு புரட்சியின் கட்டமைப்பு' இது பற்றியே எடுத்துக் கூறுகிறது. இந்நூல் பற்றி முன்னர் குறிப்பிட்டோம். ஹார்வாட் பல்கலைக் கழகத்தின் சமூகவியலாளரான தெடா ஸ்கோபல் (Theda skocpol) என்பவரின் எழுத்துக்களிலும் அரசின் செயற்பாட்டுத் திறன் பற்றிக் கூறப்பட்டுள்ளது.[11] அண்மைக்காலத்தில் உலக வங்கியும் நல்லாட்சி என்ற விடயம் பற்றியும், ஊழல்கள் என்ற பிரச்சினை, வெளிப் படைத்தன்மை (Transparency) அரசின் தகைமை (competency) ஆகிய விடயங்கள் பற்றியும் அறிக்கைகளையும், ஆய்வுகளையும் வெளி யிட்டுள்ளது. (உலகவங்கியினை ஆரம்பித்தபோது அதன் பட்ட யத்தில் அது அரசியல் விடயங்களில் தலையிடக்கூடாது என்று கூறப்பட்டுள்ளது). உலக வங்கியின் 1997 ஆம் ஆண்டின் உலக அபிவிருத்தி அறிக்கையின் தலைப்பு 'மாற்றமடையும் உலகில் அரசு' (The state in a changing world) என்பதாகும். இது முக்கியமான திருப்பம் என்று கூறக்கூடிய அறிக்கை. இந்த அறிக்கையில் 'பொருளாதார விருத்திக்கு திறன் மிகு ஆட்சி முக்கிய பங்களிப்பாகும்' என்று கூறப்பட்டுள்ளது. பலமற்ற அரசுகளால் அமுல்படுத்தப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் தோல்வியிலேயே முடிகின்றன, இதற்குக் காரணம் அவற்றிடம் அத்திட்டங்களை வெற்றிகரமாகச் செயற்படுத்தும் தகைமைகள் (capabilities) இல்லாமையாகும் என்றும் இந்த அறிக் கையில் கூறப்பட்டுள்ளது.[12]

1950 க்களிலும் 1960 க்களிலும் அரசியல் அவிபிருத்தி (political development) என்ற விடயம் பற்றி நிறைய எழுதப்பட்டது.[13] அப்போது ஜனநாயக நல்லாட்சி என்ற விடயம் முக்கிய கருத்தாக முன்வைக்கப் பட்டது. இவ்விடயம் வியட்நாம் யுத்தத்திற்கு முற்பட்ட காலத்தில் யோன். எவ்.கென்னடியின் நிர்வாகத்திலும் முதன்மை பெற்ற கருத்தாக இருந்தது. நவீனமாதல் கோட்பாடுகளில் (modernisation theories) இருந்த நம்பிக்கை தகர்ந்தமை, கெடுபிடி யுத்தம் தீவிரம் பெற்றமை, வெளிநாட்டுக் கொள்கை யதார்த்த நிலைக்குப் பொருத்தமானதாக மாற்றம் அடைந்தமை ஆகியன ஜனநாயக நல்லாளுகை என்ற விடயத்தை அபிவிருத்தியின் ஒரு இலக்காகக் கொள்ளும் சிந்தனைப் போக்கை மாற்றியது.

ஜனாதிபதி றீகன் கெடுபிடி யுத்தத்தில் ஜனநாயகத்தை ஒரு தந்திரோபாயக் கருவியாக உபயோகித்தார். இருந்த போதும் ஜனநாயக

மயப்படுத்தல் என்ற விடயம் கெடுபிடியுத்தம் முடிவுக்கு வரும்வரை கவனிப்புக்குரிய விடயமாக பிரபலம் பெறவில்லை. 1990 களில் ஜனநாயகக் கோட்பாட்டாளர்கள் அவிபிருத்தி அடைந்து வரும் நாடுகளின் மீது அக்கறை காட்டினர்.[14] றீகன் பிரச்சினைக்குரியவராக இருந்தார். அவர் காலத்தில் ஜனநாயகச் சார்பு நிறுவனங்களிற்கு (pro - democracy institutions) புத்துயிர் கொடுக்கப்பட்டது. 'USAID' என்னும் தாபனம் (சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவர் நிறுவனம்) ஜனநாயகத்தை ஊக்கம் கொடுத்து வளர்த்தலை முக்கிய பணியாகக் கொண்டு செயற்பட்டது.[15] ஜனநாயகக் கோட்பாட்டாளர்களின் கருத்துக்களில் தெளிவின்மையும், முரண்பாடுகளும் உள்ளன. உதாரணமாக அளவுக்கு அதிகமான ஜனநாயகம் தான் இலங்கையின் வன்முறை மோதல்களின் காரணம் என்று கூறுவோர் (ஐந்தாவது காரணம்) ஒருபுறமும், ஜனநாயகம் அழிவுறுகிறது, இல்லாமல் போகிறது, அதனால் தான் வன்முறை மோதல்கள் எழுகின்றன என்று கூறுவோரும் (ஆறாவது காரணம்) இருந்தனர். ஜனநாயகமயமாதல், அவிபிருத்தி, மோதல்கள் என்பவற்றிற்கிடையே தெளிவின்மையும், முரண்பாடும் இருப்பதை இவை எடுத்துக் காட்டுகின்றன.

### தலைமைத்துவம்

தலைமைத்துவமும், தலைவர்களுக்கு உரியதான பிரத்தியேக சிறப் பியல்புகளும் வன்முறை மோதல்களைத் தீர்மானிக்கின்றன என்ற கோட்பாடு இன்னோர் சிந்தனைப் பள்ளியைச் சார்ந்தது (ஏழாவது காரணம்). 19 ஆம் நூற்றாண்டில் தோமஸ் கார்லைல் எழுதிய புகழ்மிக்க நூல் 'வீரநாயகர்கள், வீர வழிபாடு, வரலாற்றில் வீரம் என்பன பற்றி' (On Heroes, Hero Worship and the Heroic in History) என்ற தலைப்பில் அமைந்தது.

தலைமைத்துவம் என்ற சிந்தனைப் பள்ளியின் மூலத்தை தோமஸ் கார்லைல் கருத்துக்களில் காணலாம். ஆனால் இக்கருத்துக்கள் வரலாற்றாசிரியர்களாலும் சமூக விஞ்ஞானிகளாலும் சர்ச்சைக்குரியன வாகவே நோக்கப்பட்டன. காந்தி, நெல்சன் மன்டேலா முதலிய தலைவர்கள் வரலாற்றிற்கு நேர்முறையான பங்களிப்பை வழங் கினார்கள். ஈராக் நாட்டின் சதாம் ஹுசைன், சேர்பியாவின்

ஸ்லோபோடன் மிலோ சொவிக் ஆகிய தலைவர்கள் எதிர்மறையான பங்களிப்பை வழங்கினர். இவ்வுதாரணங்கள் தலைவர்களுக்கும் அவர்களது தலைமைத்துவத்திற்கும் வரலாற்றில் முக்கிய பங்கு உண்டு என்ற கருத்துக்கு ஆதாரங்களாகும். தலைவர்கள் ஆக்கலாம்; அழிக்கவும் அவர்களால் முடியும். முக்கிய வரலாற்றுக் கட்டங்களில் தலைவர்களின் செயல்கள் முக்கிய பங்கை வகிக்கின்றன என்று சிலர் கூறுவர். 'பயங்கர மோதல்களைத் தவிர்த்தல்' என்னும் விடயம் பற்றி பேசும்போது தலைவர்கள் நினைத்தால் இவற்றைத் தடுத்திருக்கலாம் என்றோ அல்லது தலைவர்கள்தான் இவற்றைத் தொடக்கினார்கள் என்றோ அர்த்தம் வெளிப்படுவதைக் காணலாம். வரலாற்றில் செயற்படும் பல சக்திகள் சமூகக் குழுக்களை மோதல்களை நோக்கித் தள்ளுகின்றன. இருந்த போதும் பலாத்காரமும் வன்முறையும் தவிர்க்க முடியாதனவல்ல.

1. பலாத்காரத்தை உபயோகிக்கும் முடிவைத் தலைவர்களே எடுக்கிறார்கள். பலாத்காரத்தை உபயோகிக்கும் இயல்புடைய குழுக்களைக் கிளரச் செய்யும் செயலைத் தலைவர்களே செய்கிறார்கள்.

2. மோதல்களைத் தீர்த்து வைப்பதற்கான சமாதான வழிமுறை களைக் கையாளுதல், அமைப்பியல் வழிமுறைகள் (Structural approaches) மூலம் வன்முறை நாட்டம் உள்ள குழுக் களை கட்டுப்படுத்தி மோதல் நிலையைத் தணித்தல் ஆகிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் தற்துணிபும் தலைவர் களுக்கே உள்ளது.[16]

### மோதல்கள் பற்றிய கோட்பாடுகளும் அவற்றிடையேயான ஒற்றுமையும்

இலங்கையில் வன்முறை மோதல்கள் அதிகரித்தற்கான அடிப்படைக் காரணங்கள் அல்லது மூலகாரணங்கள் யாவை என்பது பற்றி கருத்து வேறுபாடுகள் உள்ளபோதும், வன்முறை மோதல்கள் வெடித்தற்குரிய உடனடிக் காரணங்கள் பற்றி பொதுவாக ஒருமைப்பாடு உள்ளது. இந்த உடனடிக் காரணங்களில் முக்கியமானவை எனச் சிலவற்றைக் குறிப்பிடலாம்.[17] இளைஞர்களின் அபிலாசைகள் தீர்க்கப்படாமை

(குறிப்பாக வேலை வாய்ப்புப் பிரச்சினை) நிலைபெற்றுள்ள அரசியல் - பொருளாதார நிறுவன அமைப்புக்கள் மீது நம்பிக்கையின்மையும், விரக்தியும், வன்முறை வழிகளை நாடும் தீவிரவாத இயக்கங்கள் பலம் பெறுதல், அரச பாதுகாப்புப் படைகள் இந்த இயக்கங்களைக் கட்டுப்படுத்த முடியாதனவாய் இருத்தல் ஆகியன உடனடிக் காரணங் களில் முக்கிய மானவை. [18] உடனடிக் காரணங்களை விளக்கிக் கூறும் மூன்று கோட்பாடுகளை நாம் குறிப்பிடுதல் முடியும். இக் கோட்பாடு களாவன:

1. ஒப்பீட்டு முறையில் ஒறுப்புக்குள்ளாதல் (Relative Deprivation)
2. மக்களை அணிதிரட்டுதல் (Mobilisation)
3. ஒடுக்குமுறை (Repression)

### ஒப்பீட்டு முறையில் ஒறுப்புக்குள்ளாதல்

இக்கோட்பாட்டாளர்கள் மக்கள் திரளின் மனப்பாங்கு மாற்றம் வன்முறை மோதல்களின் வெடிப்புக்கு காரணமாகின்றது என்று கூறுவர். பல்லாண்டுகளாக மக்கள் மத்தியில் பொங்கிக் கொண்டிருந்த கோப உணர்வு, அரசியல் - சமூக நிலைமைகள் தளம்பல் நிலையை அடையும் தருணங்களில் எரிமலை போன்று வெடித்துக் கிளம்பும். வெறுப்புணர்வு, ஒடுக்கு முறை எதிர்பார்ப்புக்களை அரசு தொடர்ந்து நிறைவேற்றாமை ஆகிய காரணங்களால் மக்கள் மனதில் கோப உணர்வு கிளர்ந்து எழும். மக்களிற்கு கிடைக்கும் நன்மைகள் அற்ப மானவையாகவும், அவர்களின் எதிர்பார்ப்புகள் மலையளவாகவும் இருக்கும் போது இரண்டிற்கும் இடையிலான இடைவெளி பெருகும். எதிர்பார்ப்புக்கள் அதிகரித்தல் இந்த இடைவெளியைப் பெருக்கும். (அரசியல் பிரச்சாரம் மூலம் எதிர்பார்ப்புகள் அதிகரிக்கும்.) அதே போன்று கிடைக்கும் நன்மைகள் குறைந்து செல்வதாலும் இடை வெளி அதிகரிக்கும். பொருளியல் தேக்கநிலை காரணமாக மக்கள் மத்தியில் விரக்தி உணர்வு அதிகரித்தல், அரசாங்கத்தின் செயற் பாடுகள் பயன் விளையாதனவாய் தோல்வியடைதல் ஆகிய காரணங்

களை வற்புறுத்துவோர் மக்களின் ஒறுப்புநிலை (Deprivation) ஒப்பீட்டு ரீதியில் அதிகரிப்பதே மோதல்களுக்கான காரணம் என்பதைச் சுட்டிக் காட்டுவர்.[19]

**மக்களை அணிதிரட்டல்**

சில குழுக்கள் மக்களை ஒன்று சேர்த்தும், அணிதிரட்டியும் எதிர்ப்பு இயக்கங்களை வழிநடத்துவதால் மோதல்கள் வெடிக்கின்றன என்று இக்கோட்பாட்டாளர்கள் கூறுவர். சமூக இயக்கங்களின் தலைவர்கள் தமது ஆதரவாளர்களை ஓரணியில் திரட்டுகிறார்கள். அவர்களைக் கட்டுப்பாடுள்ள ஐக்கியப்பட்ட குழுவாக ஒன்றிணைக்கிறார்கள். தமது நிகழ்ச்சி நிரலை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவைப்படும் வளங்களைத் திரட்டுகிறார்கள். இவ்வாறு சமூக இயக்கங்கள் வளர்ச்சி பெறும்போது மோதல்கள் வெடிக்கின்றன என்று விளக்கம் தரப்படு கிறது. இனக்குழுமம் என்ற அடிப்படையிலான உறவுகள், ஒரு வர்க்கம் என்ற முறையிலான ஐக்கிய உணர்வு என்பன இயக்கங்கள் தோன்றுவதற்கு வாய்ப்பான தளத்தை அமைக்கின்றன. இருந்தாலும் போதிய வளங்கள் இல்லாமல் எதுவும் செய்யமுடியாது. இதேபோல் ஒழுங்கமைக்கும் திறமை, கட்டுப்பாடும் ஒழுக்கமும் என்பனவும் குழுக்களைக் கட்டமைப்பதற்கு அவசியமானவை. குழுக்களின் இயக்கமுறையினை (Group dynamics) புரிந்து கொள்வதன் மூலம் குறிப்பிட்டதொரு மோதல் எத்தகைய வடிவத்தை பெறுகின்றது என்பதைக் கண்டு கொள்ளலாம். தீவிரவாத இயக்கங்களின் செயற் பாடுகள், அவற்றின் தலைவர்களின் பாத்திரம் என்பவற்றை வலி யுறுத்தும் விளக்கங்கள் மக்களை அணிதிரட்டல் என்ற கோட் பாட்டினைப் பிரதிபலிப்பனவாக உள்ளன.

**ஒடுக்குமுறை**

வன்முறை மோதல்களைத் தூண்டுவதற்கும், அவற்றிற்கு எண்ணெய் ஊற்றிப் பற்றி எரியச் செய்வதற்கும், அரசின் அங்கீகாரத்துடனான வன்முறை நடவடிக்கைகளும், பாதுகாப்புப்படைகளினதும், துணைப் படைகளினதும் அத்துமீறிய வன்முறைகளும் காரணம் என்று ஒடுக்கு

முறை என்ற கருத்தை முன்வைப்போர் கூறுவர். மோதல்கள், வன்முறை வடிவில் வெடிப்பதற்கு இரண்டு முன் நிபந்தனைகள் உள்ளன.

1) மக்களின் எதிர்ப்புக்கு மத்தியில் ஒரு அரசியல் - பொருளாதார செயல்திட்டத்தை அரச பாதுகாப்புப் படைகளின் துணையுடன் அமுல்படுத்தல். இவ்வாறு அமுல்படுத்தும் போது துணைப் படைகளும், காடையர் கூட்டங்களும் அரசாங்க பாதுகாப்புப் படைகளிற்கு உதவும்.

2) மக்களின் எதிர்ப்பை பெற்ற இந்தச் செயல்திட்டத்தை கட்டுப்படுத்தக் கூடிய திறமையோ, அதற்கான வளங்களோ, செயல்திட்டத்தை செயற்படுத்தும் ஆர்வமோ, தூண்டுதலோ அற்றனவாக பாதுகாப்புப் படைகள் இருத்தல். இவ்விரு நிபந்தனைகளும் இருக்குமிடத்து வன்முறை மோதல்கள் தோன்றும். திறமையற்ற முறையில் பலாத்காரத்தையும் வன்முறையையும் உபயோகிக்கும் போது தீவிரவாத எதிர்ப்பு மேலும் பலம்பெறும். வெறுப்புற்ற நிலையில் இருந்த நடுநிலையாளர்களும், மிதவாதிகளும் தீவிரவாதிகளின் அணியில் சேர்ந்து கொள்வர். திறமையற்ற படை நடவடிக்கைகள் காரணமாக ஆயுதங்கள் களவு போதல், அவை தீவிரவாதிகளின் கையில் சேருதல், படை நடவடிக்கையில் ஆயுதங்களைப் பறிகொடுத்தல் அல்லது அவற்றைக் கைவிட்டு பின்வாங்குதல் ஆகியன தீவிரவாதிகளின் ஆயுதபலத்தை அதிகரிக்கச் செய்யும். பொலிஸ் சேவையும், இராணுவமும் அரசியல் மயப்படுபடுத்தப்படுதல், அவற்றுள் ஊழல் மலிதல், அரச ஆதரவு பெற்ற காடையர்களினதும் கொலைகாரர் கும்பல்களினதும் அட்டகாசம் என்பன அரசை நிலைபெயரச் செய்யும் முறையில் அமையும். இந்த அம்சத்தை வலியுறுத்தும் கோட்பாட்டாளர்கள் ஒடுக்கு முறை என்ற கருத்திற்கு அழுத்தம் கொடுப்பர்.[20]

மோதல்கள் வெடிப்பதற்கான உடனடிக் காரணங்களை மேலே காட்டியவாறு மூன்று கோட்பாடுகளாக நான் வகைப்படுத்திக் காட்டி

யுள்ளேன். இவை மூன்றையும் ஒன்றோடு ஒன்று முரண்படும் கோட்பாடுகளாக பொருள் கொள்ளுதல் தவறாகும். ஒவ்வொரு கோட்பாடும் மோதல் பற்றிய விளக்கத்தை தருகின்றது. அவை ஒவ்வோர் அம்சத்திற்கு அழுத்தம் கொடுப்பனவாய் உள்ளன. ஒப்பீட்டு முறையில் ஒரு மக்கள் கூட்டம் ஒறுப்புக்கும் கஷ்டங்களுக்கும் உள்ளாகும் போது, அவர்கள் மத்தியில் அணிதிரட்டல் சாத்தியமாகும். மோதல்கள் திடீரென வெடிக்கலாம். ஆனால் அவை தொடர்ச்சியான போராட்டமாக உருவம் பெறுவதற்கு சமூக இயக்கமாக அது அணி திரட்டப்படுதல் வேண்டும். அல்லது அப்போராட்டம் நிலைத்து நிற்க முடியாது. அத்தோடு பலமுள்ள இயக்கமாக வளராதவரை ஒடுக்குமுறை மட்டும் தீவிரவாதக் குழுக்களின் நடவடிக்கைகளுக்கு வேண்டிய ஆதாரத்தை வழங்க முடியாது. ஒடுக்குமுறையை எதிர்த்து நிற்கும் திறமையும், அதற்கான ஆட்பலமும் வளங்களும் இயக்கத்தின் மூலமே கிடைக்கும்.

நாம் குறிப்பிட்ட ஏழு சிந்தனைப் பள்ளிகளில் ஆறு சிந்தனைப் பள்ளிகளின் கருத்துக்களை ஒப்பிட்டும், தொகுத்தும் பார்க்கும்போது வன்முறை மோதல்கள் தொடர்பாக அவற்றிடையே ஒற்றுமை காணப் படுகிறது. இந்த ஒற்றுமை, மோதல்கள் தொடர்பான கோட்பாடு களிடையே காணப்படும் பொதுமையைச் சுட்டுகின்றது. அரசியல் பொருளாதாரம், நல்லாட்சி ஆகிய இரண்டும் மோதல்களின் வெடிப் புக்கும், அரசாங்கம் தேசிய மட்டத்தில் செயற்படுத்தும் அபிவிருத்தி நடவடிக்கைகளின் வெற்றி - தோல்விக்கும் இடையில் உள்ள தொடர்பை வற்புறுத்துவன. இவற்றையும்கூட ஆழமாக உற்று நோக்கும் போது அபிவிருத்தி இலக்குகளுடன் இனத்துவ அடையாளம் எப்படி தொடர்புபடுகின்றது என்பதைக் காணலாம். இனத்துவ அடையாளம் ஒரு கருவியாகப் பயன்படுகிறது என்று கூறும் கருவி வாதிகள் (Instrumentalists) இனத்துவம் நெகிழ்ந்து கொடுக்கக்கூடிய ஒரு கருத்துரு (construct) என்று கூறுவர். இதனை அரசியல் வாதிகளும் குழுக்களும் தமது நோக்கங்களிற்கு பயன்படுத்துவர். ஆகவே விவாதத் திற்குரிய விடயத்தைப் பின்வரும் இரு வாக்கியங்களில் சுருக்கிக் கூறலாம். 1980 க்கு முற்பட்ட கால அரசாங்கங்களும், அக்காலத்தின் தலைவர்களும், முக்கிய வகிபாகத்தை ஏற்றவர்களும் (Actors) அபிவிருத்தியை பயனுறுதியுள்ள முறையில் முன்னெடுக்கவில்லை.

இதுவே இலங்கையில் வன்முறை மோதல்கள் வெடிப்பதற்குக் காரணமாக அமைந்தது. அபிவிருத்தியின் தோல்வி எதனால் நிகழ்ந்தது?

- இனங்களுக்கிடையிலான பிரிவினைகளும், பகைமையும்.
- காலனித்துவத்தின் தொடர்ச்சி, அதன் பின்விளைவுகள்.
- ஆளும் குழுக்களின் சுரண்டல்.
- பொருளாதாரக் கட்டமைப்பின் பலவீனம்.
- கொண்டுவரப்பட்ட சீர்திருத்த நடவடிக்கைகள் எதிர்மறை விளைவுகளையே ஏற்படுத்தியமை.
- தவறான தலைமைத்துவம்

இவையெல்லாம் காரணங்களாகச் சொல்லப்படலாம். இவற்றுள் எது மோதல்களுக்கு வழிவகுத்தது? எல்லாக் காரணங்களும் மோதலை உருவாக்குவதற்கு உதவின. தனித்தனிக் காரணங்கள் அல்ல, அவை யாவும் ஒன்றோடொன்று எப்படித் தொடர்புபட்டன. ஒன்றிணைந்த ஒரு அமைப்பு முறை எப்படி மோதல் நிலையை உருவாக்கியது என்பதே முக்கியமாகக் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். எனது விளக்கம் இதுவே. இதனை நான் பிறிதோரிடத்தில் விரிவாக விளக்கியுள்ளேன்.

அபிவிருத்திக்கும், மோதல்களின் வெடிப்புக்கும் இடையில் உள்ள தொடர்புகளை ஆராய்வதற்கு முன்னர் நாம் இதுவரை கூறிய விடயங்களைத் தொகுத்து நோக்குதல் பயனுடையது.

### அபிவிருத்திக்கும் மோதல்களுக்கும் இடையிலான தொடர்பு

நமக்கு கிடைத்திருக்கும் அறிவுத்தொகுதி வழங்கும் தகவல்களைக் கொண்டு சில விடயங்கள் பற்றி உறுதியாகக் கூறுதல் முடியும். ஆனால் இந்த அறிவுத்தொகுதி முழுமையானது என்று கூறமுடியாது. நாம் உறுதியாகக் கூறக்கூடியவை பின்வருவன:

★ அபிவிருத்தியின் தோல்வி பரவலாக அமையும் போது பெரும் எண்ணிக்கையிலான தனிநபர்கள் தாம் வாழ்க்கையில் ஒறுப்புக்

களிற்கும் கஷ்டங்களிற்கும் உட்படுவதை உணருவர். தமக்கு அநீதி இழைக்கப்படுவதாக அவர்கள் கருதுவார்கள். இந்த நிலை வன்முறைகள் வெடிப்பதற்கு காரணமாகும். ஒழுங் கமைக்கப்பட்ட வன்முறை நடவடிக்கைகள் தொடர்ச்சியான சிவில் யுத்தமாக மாறும். இங்கே 'ஒழுங்கமைக்கப்பட்ட' என்ற சொல்லை உபயோகிக்கின்றோம். வன்முறைகள் வெடிப்பதும் அவை தொடர்ந்து நீடிப்பதும் திட்டமிட்ட ஒழுங்கமைப்பை உடையன என்பதை இது குறிக்கின்றது. இவ்வன்முறைகளில் திடீர் எனத் தோன்றும் உணர்வு வெளிப்பாடு என்னும் அம்சம் இருக்கலாம். ஆனால் அவை முதன்மையாக ஒழுங்கமைக்கப்பட்ட நடவடிக்கையே. அநீதி இழைக்கப்படுவதனால் எழும் உணர்வு இனத்துவ பிரிவினை களின் அடிப்படையில் அமையுமாயின் வன்முறைகள் அதிகரிப் பதற்கான சாத்தியம் அதிகம். பெரும்பாலான அபிவிருத்தி யடைந்து வரும் வறிய நாடுகளில் அநீதி பற்றிய குற்றச் சாட்டு களும், உணர்வும் இனப்பிரிவினைகளின் அடிப்படையில் அமைவதையும், மோதல்கள் தீவிரமடைவதையும் காணலாம்.

★ வன்முறைச் சம்பவங்கள் ஆரம்பத்தில் நிகழும்போது அவை தீவிரத்தன்மை அற்றனவாக இருக்கலாம். ஆனால் அவற்றை வரப்போகும் சிவில் யுத்தம் என்ற பேராபத்துப் பற்றிய சமிக் கையாகவே கொள்ளல் வேண்டும். அபிவிருத்தியின் தோல்வி யின் அறிகுறிகள், நாடு அழிவுப் பாதையில் செல்லப் போகிறது, இதனை தடுக்கும் வழிவகைகள் மேற்கொள்ளப் படாவிட்டால் வன்முறைப் போராட்டமாகவும், சிவில் யுத்த மாகவும் இது வளர்ச்சி பெறும் என்பதற்கான சமிக்கைகள் எனக் கொள்ளப்பட வேண்டும்.

★ அநீதி இழைக்கப்படுவதான எண்ணம் தோன்றும் போது அதற்கான பரிகாரம் வன்முறையும் சிவில்யுத்தமும் தான். அது தான் 'ஒரே ஒரு வழி' என்ற எண்ணமும் தோன்றும். அடிப்படையான சமூக மாற்றங்களை உண்டாக்குவதற்கு வன்முறை மோதல்கள் சிறந்த வழிமுறை அல்ல. அவற்றால்

ஏற்படும் நட்டம் பெரிது. சிவில்யுத்தம் பேரழிவுகளைக் கொண்டுவரும். அது மிருகத்தனமானது. எண்ணிறந்தோர் உயிர் இழக்கவும், அவயவங்களை இழந்தவர்களாவதற்கும் வழிவகுக்கும். யுத்தம் தொடங்குவதற்கு முன்னர் இருந்த நிலையிலும் மோசமான பாதிப்புக்கள் யுத்தத்தில் சம்பந்தப் பட்ட இரு தரப்பினருக்கும் ஏற்படும்.

★ அயல் நாடுகள் வன்முறை மோதல்களை ஆரம்பத்தில் கவனத் தில் கொள்ளாமல் விடலாம். சிவில் யுத்தமாக மாறும் இந்த வன்முறை மோதல்கள் அயல்நாடுகளுக்கும் ஆபத்தை விளைவிப்பன. அயல் நாடுகள் செல்வந்த நாடுகளாகவோ, வறிய நாடுகளாகவோ இருக்கலாம். ஆனால் சிவில் யுத்தத் தின் பாதிப்பில் இருந்து அவை தப்ப முடியாது. அரசியல் பொருளாதார ரீதியில் ஏற்படும் நட்டங்களை தவிர்ப்பதற்கு காலம் தாழ்த்தாமல் நடவடிக்கையில் இறங்குவதும் தலையீடு செய்வதும் அவசியமானது.

★ பேண்தகு அபிவிருத்திப் பாதையில் நாட்டை எடுத்துச் செல்வதற்கும், ஏற்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு மான நடவடிக்கைகளைக் காலம் தாழ்த்தாமல் செய்தல் வேண்டும். அதனால் விளையும் பயன்கள் அதிகம். நட்டங் களும் குறைக்கப்படலாம்.

பயங்கர மோதல்களைத் தவிர்ப்பது தொடர்பாக இன்று எமக்கு உள்ள அறிவுத் தொகுதியில் உள்ள இடை வெளியில் இரண்டு அம்சங்கள் குறித்து இந்த ஆய்வு கவனம் செலுத்துகிறது. முதலாவதாக அவிபிருத் தியின் தோல்வி தொடர்பான ஆரம்ப அபாய அறிவிப்புக்கள் எவை என அடையாளம் காணுதலும், நாட்டை மீண்டும் முன்னேற்றப் பாதையில் எடுத்துச் செல்வதற்குத் தேவையான நடைமுறைகள் எவை என்பது பற்றியும் தற்போது போதிய வழிகாட்டல்கள் இல்லை. குறிப்பாக பேண்தரு அபிவிருத்திப் பாதையில் செல்வதற்கான வழிகாட்டிகள் இல்லை. இரண்டாவதாக அபிவிருத்தியின் தோல்வி தான் பயங்கர மோதல்களுக்கு காரணம் என்பதைச் சான்றுகள் நிரூபித்துள்ளபோதும், யுத்தங்களை நோக்கி நாடுகள் செல்கின்றன. இது ஏன் என்பதை அறியவேண்டும்.

சிவில் யுத்தங்களால் பயனில்லை என்பதைச் சம்பந்தப்பட்டவர்களில் பெரும்பான்மையினர் அறிவர். இருந்தபோதும் கெடுபிடி யுத்தத்தின் பின்னர் பல நாடுகளில் சிவில் யுத்தம் என்னும் சமூக நோய் பரவுகிறது. பேண்தகு அபிவிருத்திக்கும் பயங்கர மோதல்களுக்கும் இடையிலான தொடர்புகளை அறிந்துள்ள போதிலும் தேசியமட்டத்திலும், சர்வதேச மட்டத்திலும் அபிவிருத்தித் திட்டங்களை அமுல் செய்வதில் வன்முறை மோதல்களைத் தவிர்க்கும் நோக்கம் வெளிப்படவில்லை. ஆகவே இந்த நூலில் பயங்கர மோதல்களைக் தவிர்ப்பதற்கு அபிவிருத்தித் திட்டங்களை எவ் வகையில் வடிவமைக்கலாம் என்பதைக் குறிப்பிடவுள்ளேன். இவ் விடயத்தில் அரசியல் வாதிகளுக்கும், அபிவிருத்தி செயற்பாட்டாளர்களுக்கும் சில வழிகாட்டிகளை தெரிவிக்க உள்ளேன். வன்முறை மோதல் தவிர்ப்பை விசேட இலக்காக இந்நூல் கொண்டுள்ளது. பின்வருவன முக்கியமான சில பிரச்சினைகளாகும்:

- ★ வரலாற்றைப் பின் நோக்கிப் பார்க்கும் போது அபிவிருத்தியின் தோல்வியின் குறிகாட்டிகள் எவ்விதம் வெளிப்பட்டன என்பதைத் தெரிந்துகொள்ள முடிகிறதா எனப் பார்க்க வேண்டும். காய்ச்சல் வரைபடத்தில் அரசியல் கொந்தளிப்பின் போக்குகள் எப்படி அமைந்தன என்பதைக் கவனிக்க வேண்டும். அந்தக் கொந்தளிப்புகளை தொடக்கி வைத்த சம்பவங்கள் எவை எனக் குறித்துக் கொள்ள வேண்டும். கொந்தளிப்புக்களை உருவாக்கும் சூழ்நிலைகளுக்கும் அபிவிருத்திப் போக்கிற்கும் இடையிலான உறவுகளை ஆராய்ந்து பார்க்க வேண்டும். அபிவிருத்தித் தோல்வியின் ஆரம்ப சமிக்ஞைகளை ஏன் கவனிக்கவில்லை? அல்லது அவை பற்றித் தெரிந்திருந்தும் உரிய அக்கறை செலுத்தப்படாத ஏன்? என்ற கேள்விகள் முக்கியமானவை.

- ★ இலங்கையின் அரசியல் தலைவர்கள் இக் கொந்தளிப்பை எவ்வாறு நோக்கினர்? அவர்களின் முன்னுரிமைப் பட்டியலில் இடம்பெற்ற விடயங்கள் எவை? பொருளாதார விடயங்கள் எவை? பொருளாதாரக் கொள்கை, நல்லாட்சி, ஜனநாயக நடைமுறைகள், பாதுகாப்புப் படைகளை உபயோகித்தல்

ஆகியவை பற்றிய முடிவுகளை எடுத்த போது அவர்களுக்கு முன்னுரிமையாகத் தோன்றிய விடயங்கள் எவை? குறிப்பாக பொருளாதாரக் கொள்கை தொடர்பாக அவர்களின் முன்னுரிமை எதுவாக இருந்தது? தங்கள் தெரிவுகளை மேற்கொண்ட போது வன்முறை மோதல், அபிவிருத்தி என்ற இரண்டுக்கும் இடையிலான உறவுகள் பற்றிக் கருத்தில் கொண்டார்களா? எந்தளவிற்குக் கருத்தில் கொண்டார்கள்? அவர்கள் எடுத்த முடிவுகள் எதிர்பாராத விளைவுகளைத் தந்தனவாயின் (குறிப்பாக வன்முறை மோதல் அதிகரித்தல்.) ஏன் அப்படி நிகழ்ந்தது?

★ எவ்வகையான நிவாரண நடவடிக்கைகளை எடுத்திருக்க வேண்டும்? குறிப்பாக பொருளாதாரக்கொள்கை, ஜனநாயக நடைமுறை, தலைமைத்துவம் என்பவற்றில் முன்னைய அரசியல் தலைவர்களும், அரசாங்கங்களும் எத்தகைய முடிவு களை எடுத்திருந்தால் நாட்டை பேண்தகு அபிவிருத்திப் பாதையில் திருப்பியிருக்கலாம்? ஆரம்பத்தில் நம்பிக்கை யுடன் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன அல்லவா? எவ்வாறன வழிகாட்டிக் குறிப்புக்கள் நிவாரண நடவடிக்கை களை மேற்கொள்வதற்கு உதவியிருக்கலாம்?

★ அபிவிருத்தி - வன்முறை மோதல்கள் தொடர்புகள் குறித்து இலங்கையின் அனுபவத்தைக் கொண்டு நாம் கற்றுக் கொள்ளக் கூடிய நடைமுறைச் சாத்தியமான பாடங்கள் எவை? இவற்றை ஏனைய நாடுகளின் பேண்தகு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு உபயோகிக்க முடியுமா? இந்தப் பாடங் களை இலங்கையிலேயே பிரயோகித்து நாட்டை மீண்டும் பேண்தகு அபிவிருத்திப் பாதையில் எடுத்துச் செல்ல முடியுமா?

## ஆய்வுக்காக இலங்கையைத் தெரிவு செய்ததன் காரணம்

மேலே இறுதியாகக் குறிப்பிட்ட பிரச்சினை எம்மை மீண்டும் இலங் கையை நோக்கிக் கவனம் செலுத்தத் தூண்டுகிறது. இலங்கைக்கு மட்டுமல்ல பொதுவாக எல்லா நாடுகளுக்கும் பொருந்தக்கூடிய

அபிவிருத்தி - வன்முறை மோதல் தொடர்புகளைப் பற்றிய எமது அறிவை மேம்படுத்துவதே எமது இலக்கு ஆகும். இருப்பினும் எமது நோக்கு எல்லையை இலங்கை பற்றியதாகக் குறுக்கிக் கொள்ளவும் வேண்டும். இலங்கையை விடய ஆய்வுக்குரியதாக எடுத்துக் கொண்டு எல்லா நாடுகளுக்கும் பொருந்தக்கூடிய அறிவைப் பெற்றுக் கொள்வது என்பதில் என்ன நியாயம் உள்ளது? இது பற்றி இரு விடயங்களைக் குறிப்பிட விரும்புகிறேன். ஏன் ஒரு விடய ஆய்வை மட்டும் தெரிவு செய்ய வேண்டும்? அ) அதுவும் மிகவும் ஆழமான செறிவான ஆய்வாக ஒன்றை மட்டும் வைத்துக் கொண்டது ஏன்? ஆ) ஒரே ஒரு விடய ஆய்வு என முடிவு செய்திருந்தால் ஏன் இலங்கையை அந்த விடய ஆய்வுக்கான தெரிவாக எடுத்துக் கொள்ள வேண்டும்? இலங்கையின் அபிவிருத்தியும் - சிவில் யுத்தமும் என்ற கண்ணாடி ஊடாக பார்ப்பதில் உள்ள நன்மைகள் யாவை?

**ஏன் இலங்கையைப் பற்றி மட்டும் ஆராய வேண்டும்?**

இலங்கை பற்றிய எனது ஆய்வை தொடர்ச்சியான பல விடய ஆய்வு களாக நான் ஆரம்பித்தேன். அபிவிருத்தி வன்முறை மோதல்கள் பற்றிய கணினி மாதிரி (Computer Simulation Models) ஒன்றை நான் முதலில் வடிவமைத்தேன். அடுத்து இதனை ஆர்ஜன்டீனா நாட்டின் நிலைமைகளுக்குப் பொருத்தி ஆய்வு செய்தேன். அப்போது கணினி மாதிரியில் சில திருத்தங்களை மேற்கொள்ளும் தேவை ஏற்பட்டது. இதற்கடுத்து மெக்சிக்கோ நாட்டின் நிலைமைகளுக்கு இதனைப் பொருத்தி ஆராய்ந்து பார்த்தேன். கணினி மாதிரியின் பொதுமைத் தன்மையை (Generality) பரிசோதிப்பது எனது நோக்கமாக இருந்தது. சர்வதேச அபிவிருத்திப் பிரச்சினைகளை இவ்வாறான மாதிரிகளைக் கொண்டு ஆராய்வதை பிரயோக முறைமைப் பகுப்பாய்வு (Applied Systems Analysis) என்று கூறுவர். இது ஒரு குறிப்பிட்ட வகை முறை யியல் (Methodology) ஆகும். இதனை Systems Dynamics' முறையியல் என்றும் கூறுவர். (தமிழில் முறைமை இயங்கியல் என்று மொழி பெயர்த்துக் கொள்ளலாம்.) பல ஆண்டுகளாக நான் எனது தொழில் சார் செயற்பாட்டில் 'முறைமை இயங்கியல்' என்னும் ஆய்வு முறையியலைப் பயன்படுத்தி வந்துள்ளேன். 'முறைமை இயங்கியல்'

ஆய்வு வர்த்தக முகாமைத்துவம், நகர அபிவிருத்தி, சூழலியல் கொள்கை என்பவற்றில் பரவலாக உபயோகிக்கப்படும் முறையியல் ஆகும். இதனை விட நீண்ட கால எல்லையில் உலகலாவிய ரீதியில் ஏற்படும் பிரச்சினைகள் (Long term Global Scale problems) பற்றி ஆராய்வதற்கும் இந்த ஆய்வு முறையியல் பயன்படுத்தப்பட்டுள்ளது. சனத்தொகை, அரசியல் பொருளாதாரம், வளங்கள், இயற்கைச் சூழல் ஆகியவற்றுக்கிடையிலான இடைத்தொடர்புகளை இத்தகைய ஆய்வு தெளிவுபடுத்த உதவும். அபிவிருத்தி வன்முறைமோதல் தொடர்பு களையும் மிகவும் சிக்கலான ஒரு முறைமையின் ( a complex system) பகுதியாக இந்த ஆய்வு முறையியலில் நோக்கப்படும். இது பற்றி பின்னர் விபரமாக எடுத்துக் கூறுவேன். இது ஏன் பயனுடைய முறை என்பதையும் அப்போது கூறுவேன். இப்போது 'முறைமை இயங் கியல்' ஆய்வின் மூன்று விதி முறைகள் குறித்தும், விடய ஆய்வை மேற்கொள்ளும் பொழுது அந்த விதிமுறைகளை உபயோகிப்பது பற்றியும் எடுத்துக் கூறவுள்ளேன். இந்த மூன்று விதி முறைகள் பின்வருமாறு:

1. அவதானிப்புக்குரிய நடத்தைக் கோலத்தை விபரித்தல்.
2. முறைமை இயங்கியலின் பாகமாக அமையும் மாறிலிகளின் பிணைப்பை அறிந்து கொள்ளல்.
3. நிகழ்வுகளின் பின்னணியையும் சூழமைவையும் பற்றி ஆழமாக அறிந்து கொள்ளல்.


**நடத்தைக் கோலத்தை விபரித்தல்**

நீண்ட கால எல்லையில் நிகழும் முக்கிய மாறிலிகளின் (Variables) போக்கினை எடுத்துக் கூறுவதே நடத்தைக் கோலத்தை விபரித்தல் ஆகும். இந்நூலின் முதல் அத்தியாயத்தில் குறிப்பிட்டுள்ள 'காய்ச்சல் வரைபடம்' நடத்தைக் கோல விபரிப்புக்கு சிறந்த உதாரண மாகும். வன்முறை மோதல் என்ற மாறிலியின் போக்கையும், அதன் தீவிரத்தையும், செறிவையும் காய்ச்சல் வரைபடம் எடுத்துக் கூறுகிறது. ஒரு குறிப்பிட்ட கால எல்லையில் வன்முறை மோதல்கள் அதிகரிப் பதையும், ஏறி இறங்குவதையும் இது எடுத்துக் காட்டுகிறது. இதே

போன்று மக்களின் ஒப்பீட்டு ஒறுப்புநிலை (Relative Deprivation) நாட்டின் பொருளாதாரத்தின் அடைவு (Economic performance) என்பன குறித்தும் வரைபடங்களை வரைந்து கொள்ள முடியும். இவ்வாறு முக்கியமான மாறிலிகள் தொடர்பான நடத்தைக் கோலத்தை விபரமாகப் பதிவு செய்தல் இந்த ஆய்வு முறையின் முதலாவது விதிமுறை.

### மாறிலிகளின் பிணைப்பு

மாறிலிகள் ஒன்றோடு ஒன்று பிணைப்புண்டதாக இருக்கும் சிக்கலான முறைமை ஒன்றையே 'முறைமை இயங்கியல்' குறிப்பிடுகிறது. மாறிலிகள் ஒன்றை ஒன்று பாதிப்பனவாய் இருக்கும். அவை பிறவற்றின் இயக்கத்தைத் தூண்டிவிடும். வன்முறை மோதல்களின் செறிவு என்னும் மாறிலியை எடுத்துக் கொள்வோம். இது ஒப்பீட்டு ஒறுப்புநிலையை அதிகரிக்கும். பொருளாதார அடைவும் இதனால் பாதிக்கப்படும். உரு 2.1 இல் இம் மூன்று மாறிலிகளின் பிணைப்பை சங்கிலிக் கொழுவி அமைப்பாகக் காட்டியுள்ளேன். இது ஒரு 'நச்சு வட்டமும்' ஆகும்.




உரு 2.1 சங்கிலிக் கொழுவி அமைப்பிலான 'நச்சுவட்டம்'

மக்கள் குழுமம் ஒப்பீட்டளவில் ஒறுப்பு நிலைக்கு உள்ளாகும் போது வன்முறை மோதல்களின் செறிவு அதிகரிக்கும். வன்முறை மோதல் களின் செறிவு அதிகரிக்க நாட்டின் பொருளாதாரத்தின் பெறுபேறுகள் குறைவடையும் பொருளாதாரத்தின் நலிவு ஒறுப்பு நிலையை அதி கரிக்கும். இவ்வாறு நச்சுவட்டம் இயங்கும்.

**நிகழ்வுகளின் பின்னணியையும் சூழமைவையும் ஆழமாக அறிந்து கொள்ளல்**

ஆய்வாளர் நிகழ்வுகள் நடைபெறும் இடத்தின் பின்னணியில் ஊறித் திளைத்தவராக தம்மை ஆக்கிக் கொள்ள வேண்டும். அரசியல் நடத்தை பற்றிய புள்ளிவிபரங்களை அவர் தொகுத்தல் வேண்டும்.

அத்தோடு மக்கள் பிரச்சினைகளை எப்படிப் பார்க்கிறார்கள். அவர்களின் மனத்தில் உள்ள சித்திரம் எத்தகையது என்பதைத் தெரிந்து கொள்ளுதல் வேண்டும். இதனை விட பத்திரிகையாளர், வரலாற்று ஆசிரியர்கள், மானிடவியலாளர்கள் என்போர் எழுதிய பயனுள்ள ஆக்கங்கள் யாவற்றையும் படித்தல் வேண்டும். இவ்வாறாக ஆய்வாளர் பின்னணி பற்றிய தரவுகளை தொகுத்துக் கொள்வார். தாம் எடுத்துக் கொண்ட பிரச்சினையின் ஆழத்தையும், அகலத்தையும் நன்கு தெரிந்தவராக தன்னை ஆக்கிக் கொள்வார்.

அரசியல் பொருளாதாரம் பற்றிய அக்கறையுடைய அபிவிருத்திச் செயற்பாட்டாளர்கள் மேற்குறிப்பிட்ட மூன்று விதிமுறைகளைப் பின்பற்றி தேசிய மட்டத்தில் நீண்டகால எல்லையில் நிகழும் அபிவிருத்தியின் போக்குப் பற்றிய விரிகாட்சிகளை (scenarios) வரைந்து கொள்வர்.[21] பல்வேறு நாடுகள் பற்றிய விரிகாட்சிப் படங்கள் ஒப்பீட்டு ஆய்வுக்கு மிகவும் உபயோகமானவை. மேலே குறிப்பிட்ட விதிமுறைகளைப் பின்பற்றி நான் முதலில் ஆர்ஜன்டினா குறித்து ஆராய்ந்தேன். பின்னர் இலங்கைக்கு வந்து ஒரு வருடம் ஆய்வு நிகழ்த்தினேன். இலங்கையில் இனக்குழும மோதல் - அபிவிருத்தி விடயங்களில் நான் மூழ்கித் திளைத்தேன் என்றே கூறவேண்டும். இதனால் கணினி மாதிரி (Computer Model) ஒன்றை இலங்கை தொடர்பாக வடிவமைக்கும் வேலையை நான் இன்னும் பூர்த்தி செய்வில்லை. இருந்தபோதும் இந்த மாதிரியின் அடிப்படையான கோட்பாட்டுத் தெளிவுடன் எனது ஆய்வுப் பணியைத் தொடர்ந்தேன். கணினி மாதிரியை வடிவமைப்பதற்கு முன்பாகவே இலங்கைபற்றி நான் கற்றுக் கொண்டவற்றை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்பினேன். அதன் பயனாகவே இந்நூலினை எழுதினேன்.

## இலங்கை அனுபவத்தின் முக்கியத்துவம்

நான் ஆய்வுக்காக இலங்கையை ஏன் தேர்ந்து கொண்டேன் என்பதை முன்னரே கூறியுள்ளேன். 'இனக்குழும மோதல்களிற்கு' ஓர் எடுத்துக் காட்டு என்ற தகுதியை இலங்கை பெறுவதற்கு முன்னரே 'அபிவிருத்தியின் வெற்றிக் கதை' (Development Success Story) என்ற புகழை பெற்றிருந்தது. இலங்கைக்கு என்ன நடந்தது? என்ற கேள்வி பலராலும் கேட்கப்பட்டது. இது தொடர்பான விவாதங்கள் நிகழ்ந்து வரும் பின்னணியில் அபிவிருத்தி - வன்முறை மோதல்கள் தொடர்பு களில் அக்கறையுடையோர்க்கு இலங்கை அக்கறைக்குரிய இடமாக விளங்கலாயிற்று. நான் இலங்கை பற்றிய ஆழமான அறிவைப் பெற்றுக் கொண்டேன். இலங்கையின் மக்கள் பற்றியும் நன்கு தெரிந்து கொண்டேன். இலங்கையின் பன்முக அபிவிருத்திப் போக்குகள், அபிவிருத்திக்கும் - வன்முறை மோதல்களுக்கும் உள்ள தொடர்பு கள் என்பவற்றை ஆராய்வதற்கு இலங்கை வாய்ப்பான இடமாக அமைந்தது. வன்முறை மோதல்களின் போக்கையும் இலங்கையின் அபிவிருத்திக் கொள்கைகள், அனுபவங்கள் என்பனவற்றுக்கு இடையிலான தொடர்புகளையும் நான் ஆராய முற்பட்டேன்.

இலங்கை சுதந்திரம் பெற்ற சமயத்தில் அமைதியான அபிவிருத் திப் போக்கில் முன்னேறுவதற்கான அனைத்து முன்தேவைகளும் இருந்தன. பொருளாதாரம் ஒப்பீட்டளவில் உறுதி மிக்கதாக இருந்தது. ஆட்சிமுறையும் பலம் மிக்கதாக இருந்தது. ஜனநாயகப் பன்மைத்துவ மரபுகளும் (Democratic Pluralism) பலமான அடித்தளத்தில் இருந்தன. இக்காரணங்களால் காலனித்துவத்தின் எதிர்மறை விளைவுகள் தான் இலங்கையைச் சீரழித்தன என்ற வாதத்தினை இலகுவில் நிராகரிக்கக் கூடிய சூழ்நிலை இருந்தது. இதற்குப் பதிலாக இலங்கையில் பின்பற்றப்பட்ட அபிவிருத்தி கொள்கைகளே பிரச்சினைக்கு காரணம் என்று கூற முடிந்தது. குறிப்பாக பின்வரும் வாதங்கள் முன்வைக்கப் பட்டன.

★ இலங்கை புரட்சியொன்றை நடத்தாமலே விடுதலையைப் பெற்றுக் கொண்டது. ஏனைய அபிவிருத்தி நாடுகளில் இல்லாதவாறு இலங்கைக்கும், முன்னாள் காலனிய ஆட்சி யாளர்களுக்கும் நல்லுறவு இருந்தது.

★ அரசியல் உறுதிநிலை என்பதோடு என்னென்ன இயல்புகளை இணைத்துப் பேசுகின்றோமோ அத்தனை இயல்புகளும் இலங்கையில் காணப்பட்டன. ஒப்பீட்டளவில் பலமுள்ள மத்தியவகுப்பு, கல்வி அறிவு விருத்தி, பல்வேறு வகைக் கருத்துக்களுக்கும் இடமளிக்கும் பத்திரிகைகள் இருந்தமையும், இவற்றைப் படிக்கும் படித்தோர் குழுமம் இருந்தமையும் முக்கியமான சிறப்பியல்புகள். இவற்றை விட நாட்டின் பொதுச் சுகாதார நிலை பலமாக இருந்தது. மக்களுக்குப் பல வசதிகளும், சமூகநலத் திட்டங்களின் வழியாக கிடைத்தன. வருமானத்தின் சமபங்கீடு திருப்தியான மட்டத்தில் இருந்தது.

★ இலங்கை சுதந்திரம் பெற்ற பொழுது அதன் இராணுவம் சிறியதாகவே இருந்தது. பொலிஸ்படையும் சிறியதே. பொலிஸ் படையினர் ஆயுதம் தரித்தவர்களாக திரிவதில்லை. ஏனைய பிரித்தானிய முன்னாள் காலனிகளிலும் ஆயுதம் தரிக்காத பொலிஸ்காரர்களே சேவையில் ஈடுபடுத்தப்படுவர். (இன்றும் கூட இலங்கையில் பொலிசாரில் ஒரு பகுதியினர் ஆயுதம் தாங்கியவர்களாக இருப்பதில்லை.) இலங்கையின் தேசிய வாழ்க்கையில் இராணுவம் முக்கியத்துவம் உடையதாக 1980 க்கள் வரை இருக்கவில்லை. தமிழ்ப் போராளிகளுடனான போர் தீவிரமடைந்த பின்னரே இராணுவம் முக்கியத்துவம் உடையதாக மாறியது.

★ இலங்கையில் திறமைமிக்க அரசியல் தலைவர்கள் இருந்தார்கள். அவர்களில் பலர் சட்டம், பொருளியல் போன்ற துறைகளில் பிரித்தானியப் பல்கலைக் கழகங்களில் பட்டம் பெற்ற அறிவாளிகளாக இருந்தனர்.

★ சுதந்திரத்தின் பின்னர் அரசியல் தலைவர்களாக விளங்கியோரில் பெரும்பான்மையினர் அரசியல் பன்மைத்துவத்தில் (Political Pluralism) நம்பிக்கையுடையவராய், அதற்காக அர்ப்பணிப்புடன் பொது வாழ்க்கையில் செயற்பட்டவர்கள். நாட்டில் பலம் வாய்ந்த பன்மைத்துவ மரபும் இருந்தது.

* இனக்குழுமங்களிடையில் விறைப்பு நிலையும், முறுகலும், இடைக்கிடையே வன்முறை மோதல்களும் இடம்பெற்ற பொழுதிலும் பன்மைத்துவ மரபு ஆதாரமாக இருந்தது. அந்த அடிப்படையில் இருந்து முன்னேற்றப் பாதையில் செல்லும் வாய்ப்பு இருந்தது.

* நாட்டில் பல கட்சி முறை இருந்தது. அவை போட்டி முறையில் செயற்பட்டன. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்குள் இது விதி விலக்கான ஒருநிலை. இவ்வாறு சில நாடுகளே இருந்தன. அவற்றுள் இலங்கையும் ஒன்று. இரண்டு பலம் வாய்ந்த கட்சிகள் அரசியல் அதிகாரத்திற்காக போட்டியிட்டன. அவ்விரு அரசியல் கட்சிகளும் ஜனநாயக மரபுடையன. 1930 க்களில் இருந்து அவற்றின் ஜனநாயக மரபுகளை இனம் காணலாம்.

* சுதந்திர இலங்கையில் அந்நியச் செலாவணி இருப்பு சாதக மானதாய் இருந்தது. செலாவணி இருப்பும் சென்மதிநிலுவை மிகையும் இலங்கைக்கு உறுதிநிலையை வழங்கின. பெருந் தோட்டத்துறை வருமானத்தில் இலங்கை தங்கியிருந்தது. பிற அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளை போன்று இவ்வாறான ஏற்றுமதித் தங்கியிருத்தல் இருந்தபோதும் இலங்கையின் பொருளாதாரம் அன்று உறுதியாக இருந்தது. பேரினப் பொருளியல் தரவுகளைத் தொகுத்தல் முறையிலும், பொருளாதார திட்டமிடுதலிலும் கூட இலங்கை பலமுடை யதாக முன்னேறி இருந்தது. அவ்வகையில் அபிவிருத்தி யடைந்து வரும் நாடுகளுக்குள் வித்தியாசமான நாடாக விளங்கியது.

* இலங்கையின் உயர்நிலைச் சிவில் சேவை உத்தியோகத்தர்கள் தொழிலர்களாக (professionals) சிறந்து விளங்கினர். அவர் களுக்கு நல்ல சம்பளம் கிடைத்தது. பொதுச் சேவையில் சேருவது விருப்புக்குரிய ஒன்றாக இருந்தது. மிகச் சிறந்த பட்டதாரி கள் பல்கலைக்கழகத்தில் இருந்து வெளியேறியதும் சிவில் சேவையை விரும்பித் தேர்ந்து கொண்டனர்.

★ இலங்கையில் சுதந்திரத்திற்குப் பிற்பட்ட கால அரசியல் தலைவர்கள் அக்கால அரசியல் சமூகப் பிரச்சினைகளைக் கையாள்வதிலும், அவற்றிற்கு முகம் கொடுப்பதிலும் திறமை யைக் காட்டினர். இவ்வாறான பிரச்சினைகள் பிற அபிவிருத் தியடைந்து வரும் நாடுகளில் அரசியல் உறுதியின்மைக்கும் சர்வாதிகார ஆட்சிகளுக்கும், ஒரு கட்சி ஆட்சிக்கும் காரண மாயின. இந்நாடுகளில் பல அபிவிருத்தித் திட்டங்கள் பரீட்சிக் கப்பட்டன. அவற்றின் நன்மை தீமைகள் பற்றி அபிவிருத்திச் செயற்பாட்டாளர்கள் பல விவாதங்களில் ஈடுபட்டனர். பல்வேறுவகைக் கொள்கைகளினையும் மதிப்பீடு செய்யவும் ஒப்பிட்டு ஆராயவும் எவ்வகைக் கொள்கைகள் மோதல்களை அதிகரிக்கச் செய்தன எனக் கண்டு கொள்ளவும் இது வாய்ப்பான களமாக உள்ளது. இதனைத் திட்ட வட்டமாக பின்வருமாறு வரையறுத்துக் கூறலாம்.

★ இலங்கை கலப்புப் பொருளாதாரத்தை கொண்ட நாடாக சுதந்திரத்தின் போது இருந்தது. இதன் பின்னர் இலங்கை அரசின் உயர் பீடங்களில் மார்க்சிஸ்டுகள் இருந்த காலம் ஒன்று தொடர்ந்தது. அதனால் இலங்கை அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்குள் மத்திய திட்டமிடல் முறையின் தீவிர எல்லைக்கு சென்ற நாடுகளுள் ஒன்றாகியது. இதனைத் தொடர்ந்து அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளிற்குள் அமைப்புச் சீராக்கம் (Structural Adjustment) என்னும் முறையை தழுவிக் கொண்ட முதல் நாடாக இலங்கை மாறியது. இலங் கையின் சுதந்திரச் சந்தை விரிவாக்கம் பெற்றது. முதலீட்டு ஊக்கம் கிடைத்தது. உலகப் பொருளாதாரத்துடன் இலங்கை இணைக்கப்பட்டது.

★ அபிவிருத்தி உதவியைப் பெற்றுக்கொள்ளும் நாடுகளில் முக்கியமான ஒன்றாக இலங்கை விளங்கியது. முதலில் மேற்கு நாடுகளிடமும், பல்புடை உதவி வழக்குநர்களிடமும் (Multilateral Donors) இலங்கை உதவிகளைப் பெற்றது. பின்னர் சோவியத் யூனியனிடமிருந்தும், சோஷலிச முகாம் நாடுகளில் இருந்தும் இலங்கை உதவிகளைப் பெறத் தொடங்கியது.

சீனாவிடமும் உதவி பெற்றது. மீண்டும் இலங்கை மேற்கு நாடுகளிடம் உதவியைக் கேட்டுப் பெறத் தொடங்கியது.

* 'மக்கள் வாதப் புரட்சி' (Populist Revolution) மூலம் சிங்களப் பெரும்பான்மை ஆட்சி நிறுவப்பட்டது. சிங்களம் அரசகரும மொழியாக்கப்பட்டது. உணர்ச்சி கொப்பளிக்கும் பேச்சுக்கள் நிகழ்த்தப்பட்டன வேனும் இது ஜனநாயக வழியில், சமாதான முறையில் நடந்தேறியது.

* இரு தடவைகள் சதிப்புரட்சி நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டது. இவை வெற்றியளிக்கவில்லை. 1971 இல் அரசாங்கம் தீவிரவாதக் கிளர்ச்சியை ஒரு வருட காலத்திற்குள் வெற்றி கரமாக அடக்கியது. ஆரம்பத்தில் அரசாங்கத்தின் இராணுவம் கடும் அடக்குமுறை நடவடிக்கைகளை மேற்கொண்டது. இருந்தபோதும் காலப்போக்கில் தீவிரவாதக் கிளர்ச்சியாளர் களுக்கு அரசாங்கம் மன்னிப்பு அளித்து, அவர்களை சமூகத் துடன் இணைப்பதற்கான செயல்திட்டங்களை நடைமுறைப் படுத்தியது.

* தீவிரவாத கிளர்ச்சி நாட்டை இராணுவ மயமாக்கும் நிலைக்குத் தள்ள வில்லை. (இருந்தபோதும் அரசாங்கம் ஒடுக்குமுறைத் தன்மை கொண்டதாக மாறியது.) இராணுவச் செலவீட்டுக் கான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு மெய்விலைகளின் படி குறைந்து சென்றது. உண்மையில் 1971 இன் கிளர்ச்சிக்கு முன்பிருந்த நிலைக்கு இது திரும்பியது.

* தீவிரவாதக் கிளர்ச்சி இலங்கையின் அரசியல் தலைவர்களுக்கு சீர்திருத்த நடவடிக்கைகளிற்கான தூண்டுதலைக் கொடுத்தது. இலங்கையின் உயர்வர்க்கங்களும் இதற்கு ஆதரவு கொடு த்தன. அபிவிருத்தியடைந்து வரும் நாடு ஒன்றில் சமாதான வழியில் காணிச் சீர்திருத்தம், சொத்துக்களையும், செல்வத் தையும் மறுபங்கீடு செய்தல் வெற்றிகரமாக நிறைவேற்றப் பட்டதற்கு இலங்கை ஒரு உதாரணமாக விளங்கியது.

பத்து வருட கால எல்லைக்குள் இலங்கையின் வறி யோருக்கும் செல்வந்தர்களுக்கும் இடையிலான வருமான

இடைவெளி குறிப்பிடத்தக்க அளவில் குறையத் தொடங்கியது.

★ சுதந்திரத்திற்கும் 1977 இன் பொதுத்தேர்தலுக்கும் இடைப்பட்ட காலத்தில் இலங்கையின் ஜனநாயக நிறுவனங்கள் மீட்டெழுச்சி பெறும் வலிமை உடையனவாய் இருந்தன. ஆட்சியில் இருந்த கட்சிகள் ஆறு தடவைகள் ஜனநாயகத் தேர்தல் மூலம் பதவியிழந்தன. நீதியானதும், சுதந்திரமானதுமான பல பொதுத் தேர்தல்களால் இது சாத்தியமாயிற்று. மார்க்சிஸ்ட் நோக்கிலான மத்திய திட்டமிடல் முறையில் இருந்து சுதந்திர சந்தை முறைப் பொருளாதாரக் கொள்கைக்கு இலங்கை மாறியது. தேர்தல் மூலமான ஆட்சி மாற்றத்தால் இது இலங்கையில் நிகழ்ந்தது. இவ்வாறு உலகின் சில நாடுகளில் தான் நிகழ்ந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

★ 1977 இல் தேர்தலில் வெற்றிபெற்ற கட்சி சுதந்திரமான சந்தையை நோக்கிய சீர்திருத்தங்களை அரசியல் யாப்புத் திருத்தத்தோடு சேர்த்து நடைமுறைக்குக் கொண்டுவந்தது. அத்தோடு 'ஆசியாவின் புலிகள்' மாதிரியை பின்பற்றும் அரசியல் உபாயத்தை நடைமுறைப் படுத்தியது. அக்கட்சி நடைமுறைப்படுத்திய அரசியல் யாப்புச் சீர்திருத்தம் பலம் வாய்ந்த நிர்வாகத்துறையை கொண்ட அரசியல் முறையை உடையதாய் இருந்தது. இதன் கீழ் மேலாதிக்கம் பெற்ற ஒரு கட்சி ஆட்சி நடைபெற்றது. எனினும் எதிர்க்கட்சி செயல்பட அனுமதிக்கப்பட்டது என்று சொல்லலாம்.

1983 முதலாக இலங்கையில் வன்முறை மோதல் ஆரம்பித்தது. இது அரசியல் பொருளாதார வாழ்க்கையின் யதார்த்தமான விடயமாக இன்று வரை - இப்புத்தகத்தை எழுதிக் கொண்டிருக்கும் வரை - நீடித்துள்ளது. கோட்பாட்டின் வழி இலங்கையில் இன்ன வகையான போக்குகளும் நிலைமைகளும் ஏற்படும் என்று ஊகித்தவை நடைபெறவில்லை. அரசியல் உறுதிநிலை ஏற்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் 1977 இல் இருந்த இந்த எதிர்பார்ப்பின் படி நிலைமைகள் அமையவில்லை.

★ தமிழர்கள் பெரும்பான்மையினராக வாழும் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் தீவிரவாத தமிழ் இளைஞர்கள் பலாத்கார, வன்முறை வழிகளில் அரசுடன் மோதும் அரசியல் வழியைத் தேர்ந்து கொண்டார்கள். மிதவாத அரசியல் தலைமையை அவர்கள் அப்புறப்படுத்தி அதன் இடத்தை பிடித்துக் கொண்டனர். இலங்கையின் பொலிஸ்படையும், இராணுவமும் தமிழ் இளைஞர்கள் மீது அடக்கு முறையைத் தீவிரப்படுத்தின. இளைஞர் இயக்கத்தை ஒழித்துக் கட்ட கடும் நடவடிக்கைகளை எடுத்தன. இதனால் மிதவாதத் தலைவர்களையும் கோபமடையச் செய்தன.

★ சிங்களவர்களின் வன்முறை கும்பல்களின் தமிழருக்கு எதிரான கலகம் (இது அரசாங்கத்தின் தலைவர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட கலகம் என்று பலர் நம்புகின்றனர்.) ஆயிரக் கணக்கான தமிழர்களை அகதிகளாக்கியது. முன்னர் மிதவாதிகளாக இருந்த தமிழர்கள் பலர் தீவிரவாத இயக்கங்களில் சேர்ந்தனர்.

★ இந்தியா, தென் ஆசியாவின் முக்கிய அரசியல் சக்தியாகும். அது ஆரம்பம் முதலாக இலங்கையின் நேசநாடாக இருந்தது. பின்னர் தமிழ் தீவிரவாத இயக்கங்களிற்கு நிதி உதவியையும் இராணுவப் பயிற்சியையும் இந்தியா அளித்ததுடன் தன் நாட்டிற்குள் புகலிடத்தையும் வழங்கியது. இறுதியில் இந்தியா இப்பிரச்சினையில் நேரடியாகத் தலையிட்டது. இந்திய அமைதிப்படை இலங்கையில் புகுந்தது. 50,000ற்கு மேற்பட்ட படைவீரர்களை அனுப்பி சமாதானத்தைக் கொண்டு வரும் திட்டத்தை இந்தியா இலங்கை மீது திணித்தது. இந்த அமைதிப்படை இலங்கையின் வடக்குக் கிழக்கில் சில ஆண்டுகள் உண்மையான அதிகாரத்தைச் செயற்படுத்தும் படையாக விளங்கியது.

★ 1987 இல் இரண்டாவது இளைஞர் கிளர்ச்சி தொடங்கியது. இலங்கையின் தென்பகுதியின் கிராமப்புறங்களிலும், பிரதான நகரங்களிலும், சிங்கள இளைஞர்களால் ஒழுங்கமைக்கப்

பட்ட இந்தக் கலகத்தை 'வர்க்க மோதல்' என்று அழைப்பதே பொருத்தமானது. இது 'இனக்குழும மோதல்' அன்று.

★ இக் கிளர்ச்சி தோல்வியடைந்தது. ஏறக்குறைய நான்கு வருடங்கள் நீடித்த கொடுமையான அடக்குமுறை மூலம் இக் கலகம் அடக்கப்பட்டது. இதுபோன்ற கொடுமையான அடக்குமுறையை இலங்கை முன்னர் ஒருபோதும் கண்டதில்லை. கலகத்தை ஒழுங்கு செய்து நடத்திய தீவிரவாதிகளின் கட்சி பின்னர் பொது அரசியல் நீரோட்டத்தில் கலப்பதற்கு இடமளிக்கப்பட்டது. இக்கட்சி பாராளுமன்ற ஆசனங்கள் பலவற்றைக் கைப்பற்றியது.

★ தமிழ் இளைஞர்களுடனான மோதல் ஒரு 'சிவில் யுத்தமாக' இருந்தது. இது வகைமாதிரியான உள்நாட்டுப் போர் என்பதன் இயல்பை ஒத்திருந்தது. இது அநாகரிகமானதாகவும், மக்களை பிளவுபடுத்துவதாகவும், பொருளாதாரச் சீரழிவைக் கொண்டு வருவதாகவும் இருந்தது. இடையறாத இந்தப் போர் தீர்க்க முடியாததாகவும் ஆகியது.

★ இரண்டாம் உலகயுத்தத்தின் பின்னரான காலப்பகுதியில் அபிவிருத்திச் செயற்பாட்டாளர்களும், அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் தலைவர்களும் தீர்ப்பதற்கு முயன்று போராடிய சிக்கலான பிரச்சினைகளை நுண்ணாய்வு செய்வதற்கு மிகப் பொருத்தமான களமாக இலங்கை விளங்குவதைக் காணலாம். இலங்கையில் இருந்து பல பாடங்களைக் கற்றுக் கொள்ளலாம். 'எமக்கு ஏன் இந்தநிலை வந்தது?' என்ற கேள்விக்கு பதிலளிப்பதே எனது நோக்கமாகும். அதன் மூலம் எதிர்கால அபிவிருத்திப் பாதை ஒன்றை நாம் செப்பனிட முடியும். அப்பாதையின் மூலம் மனிதாயத்தைப் பேண வேண்டும். சமாதானத்தைக் கட்டியெழுப்ப வேண்டும். பேண்தகு அபிவிருத்தியைக் கொண்டு வர வேண்டும். வன்முறை மோதல்கள் பெருந்துன்பத்தையும், பேரழிவையும், நம்பிக்கையற்ற எதிர்காலத்தையுமே விட்டுச் செல்கின்றன. இந்த உண்மையை இலங்கை, ரூவான்டா, பொஸ்னியா,

ஆப்கானிஸ்தான் முதலிய நாட்டவர்களும், ஏனையோரும் அனுபவத்தால் படித்து அறிந்துள்ளனர். இதனை எதிர்காலச் சந்ததியினரும் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். எதிர் காலத்தில் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளைச் சார்ந்த பிரஜைகள் எவரும் 'எமக்கு ஏன் இந்த நிலை வந்தது ?' என்ற கேள்வியை கேட்கும் பரிதாபநிலை இருக்கக்கூடாது. இதுவே இந்த நூலை நான் எழுதியபோது என் உள்ளத்தினை ஆட் கொண்ட இலட்சியம், தொலைநோக்கு என்பதைக் கூற விரும்புகிறேன்.


3

# 'ஆக்கமிகு அபிவிருத்தி' என்றால் என்ன? அது ஏன் முக்கியமானது?

*மனிதர்கள் வாழ்க்கையில் எதனைப் பெற வேண்டும் என்று விரும்புகிறார்களோ அது அவர்களுக்குப் பெரும்பாலும் கிடைப்பதில்லை. கடந்த 50 வருட கால அபிவிருத்தியால் பெரும்பாலான நாடுகளில் கிடைக்கப்பெற்ற நன்மைகளுக்கும், மக்களின் எதிர்பார்ப்புக்களிற்கும் இடையே பெரிய இடைவெளி இருந்துள்ளது. மோதல்களும், பயங்கரவாத நடவடிக்கைகளும் தோற்றம் பெறுவதற்கான மூலகாரணம் இந்த இடைவெளிதான். மோதல்களையும், பயங்கரவாதத்தையும் தடுப்பதற்கு முன்கூட்டியே அபாய அறிவிப்பைத் தெரிவிக்கும் சமிக்ஜை முறையை உருவாக்கிக் கொள்ள வேண்டும். இந்த முயற்சி 'ஆக்கமிகு அபிவிருத்தி என்றால் என்ன?' என்ற அடிப்படைக் கேள்வியின் மீள் பரிசீலனையுடன் ஆரம்பித்தல் வேண்டும்.*

---

மோதல், பயங்கரவாதம் என்பன குறித்து இதுவரை நாம் கூறிய விடயங்களை ஒரு வரைபடம் மூலமாக விளக்குதல் முடியும் (உரு.3.1)




**உரு. 3.1 அபிவிருத்தி - வன்முறை மோதல் நச்சு வட்டம்**

அபிவிருத்தியின் தோல்வியினால் சமூகநோய்கள் தோன்றுகின்றன. இவை வன்முறை மோதல்களைத் தூண்டுகின்றன. பயங்கர சிவில் யுத்தமாக அவை மாற்றம் பெறுகின்றன. யுத்தம் அபிவிருத்தியின் தோல்வியை நிச்சயமான தாக்குகிறது. அடிக்கடி நிகழும் மோதல்களும் பயங்கரவாதச் சம்பவங்களும் அபிவிருத்தியின் தோல்விக்கும் சமூகப் பிரச்சினைகள் - நோய்களின் - அதிகரிப்புக்கும் காரணமாகின்றன. ஒன்றை ஒன்று தூண்டி வளர்க்கின்றன. ‘நச்சுவட்டம்’ என்பதற்கு இது இன்னோர் உதாரணமாகும்.

‘அபிவிருத்தியின் தோல்விக்குப் பதிலாக ஆக்கமிகு அபி விருத்தியை’ உருவாக்க முடியுமானால் இந்த நச்சு வட்டத்தை உடைக்க முடியும். 50 வருடங்களுக்கு மேலாக நடைபெற்ற சர்வதேச அபிவிருத்தி முயற்சிகள் பற்றிய அனுபவமும், புலமையாளர்களின் பங்களிப்பும் ஆக்கமிகு அபிவிருத்தியை அடைவது எப்படி என் பதையோ, அல்லது அதன் பொருள் என்ன என்பது பற்றியோ ஒரு மித்த கருத்தை உருவாக்க உதவவில்லை. வறுமையைத் தணித்தல், பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்தல், இளையோர் வேலை யின்மையைக் குறைத்தல், ஜனநாயகத்தை வளர்ச்சியடையச் செய்தல் ஆகியவற்றை அரசியல் உறுதியை பேணுவதோடு எவ்விதம் மேற் கொள்ளலாம் என்பது பற்றி அரசியல் தலைவர்கள் பொருளாதார நிபுணர்களிடம் ஆலோசனை கேட்டுள்ளார்கள். இவர்களுக்குத் தகுந்த பதில் வழங்கப்படவில்லை என்றே கூறவேண்டும். நிபுணர் களின் ஆலோசனைகள் அவர்களுக்கு ஏமாற்றத்தை அளிப்பனவாகவே இருந்தன. இலங்கையின் அரசியல் தலைவர்கள் மார்க்சிய மாதிரியையும் பரிசோதித்துப் பார்த்தனர். ‘சுதந்திரச் சந்தை’ மாதிரி யையும் பரிசோதித்தனர். ‘அபிவிருத்தி உதவியை’ அவர்கள் பெற்றனர். நிபுணர்களின் ஆலோசனைகளைப் பெற்றனர். விரிவான திட்டங்களை வகுத்தனர்; தேசத்தில் முன்னேற்றம் பற்றிய மதிப்பீடுகளையும் செய்தனர். மேற்குறித்த இருவகை மாதிரிகள் பற்றிய இலங்கை அனுபவம் ஒரு காலத்தில் ‘வெற்றிக் கதைகள்’ எனக் கூறப்பட்டன. இது இலங்கை பயங்கர மோதல்களுக்கும், பயங்கரவாதத்திற்கும் உரிய சிறந்த எடுத்துக் காட்டு என்ற நிலை தோன்றுவதற்கு முன்பிருந்த நிலையே என்பதைக் குறிப்பிடவேண்டும். எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் அடையப்படாமை இன்றைய அவல நிலைக்குக்

காரணமாகும். ஆனால் இங்கே கவனிப்புக்கு உரிய இன்னோர் விடயம் உள்ளது. இலங்கையின் அபிவிருத்திக் கொள்கைகளும் திட்டங்களும் அடிப்படையிலேயே தவறானவை. அவை அதனால் தோல்வியுற்றன என்ற வாதத்தை முன்வைக்கலாம் அல்லவா?

**அபிவிருத்தி பெற்ற நாடு என்ற இலட்சிய நாடு எப்படி இருக்கும்?**

'அபிவிருத்தி பெற்ற நாடு' என்பது ஒரு இலட்சிய மாதிரி. அது நாம் முடிவில் அடையும் இலக்கு அல்லது முடிபொருள் (End Product). அந்த இலட்சிய நாடு எப்படி இருக்கும் என்ற கேள்வியுடனேயே நாம் 'ஆக்கமிகு அபிவிருத்தி' பற்றிய விசாரணையைத் தொடங்க வேண்டும். பல ஆண்டுகளாக நான் அமெரிக்க பல்கலைக் கழகத்தில் சர்வதேச அபிவிருத்தியில் முதுகலைமானி கல்வி நெறியில் விரிவுரை யாளராக கற்பித்து வருகிறேன். எனது மாணவர்களுக்கு இப்படியொரு மாதிரியை இலக்காகக் கொள்ளும்படி நான் தூண்டுவதும் சவால் விடுப்பதும் உண்டு.[1] அம்மாணவர்கள் எதிர்கால அபிவிருத்திச் செயற் பாட்டாளர்கள்; புலமையாளர்கள். எனது மாணவர்கள் இப்படி ஒரு இலட்சிய மாதிரியைக் கற்பனை செய்தல் கடினமான ஒரு விவகாரம் என்றே கூறுகிறார்கள். அபிவிருத்தி செயற்பாட்டாளர்களின் அனு பவமும் இதுதான். அபிவிருத்தி பெற்ற நாடு எப்படிப் பட்டதாக இருக்க வேண்டும்? நியுசிலாந்து, சிங்கப்பூர், மலாசியா இவற்றின் மாதிரியில் இருக்கலாமா? அல்லது ஐக்கிய அமெரிக்கா மாதிரி இருக்க வேண்டுமா? சுவீடன், இஸ்ரேல் போன்று இருந்தால் நல்லதா? அல்லது ஈரானின் இஸ்லாமியக் குடியரசு, யப்பான் மாதிரியில் இருக்கலாமா? ஒரு சிறிய கிராம சமுதாயம் பற்றிக் கற்பனை செய்து அந்த இலட்சிய மாதிரியை முழு நாட்டுக்கும் பொருத்துவதா? அல்லது சர்வதேச மட்டத்திற்கு எமது கற்பனையை விரிப்பதா? ஒரு நாட்டின் எல்லைக்குள் சிந்திப்பதா? இன்றுவரை உலகில் எங்கும் காணாத கற்பனை உலகம் - உட்டோப்பியா - பற்றி யோசிப்பதா?[2] பிளேட்டோவின் 'குடியரசு' அல்லது எட்வார்ட் பெலமி[3] என்பவர் எழுதிய 'பின்னோக்கிப் பார்த்தல்' (Looking Backward) என்ற நூலில் வரும் மார்க்சீய சுவர்க்கபூமி அல்லது இவை போன்ற கற்பனைகளை

முன்னு தாரணமாகக் கொண்டு கற்பனை செய்வதா? சுருங்கக் கூறின் 'இலட்சியமான அபிவிருத்தி நாடு' என்பது கற்பனை செய்வதற்கு மிகவும் கடினமான ஒரு விடயமாகும். இருப்பினும் எமது மாண வர்களை ஒவ்வொரு வருடமும் படிப்பின் தொடக்கத்தில் 'அபிவிருத்தி பெற்ற நாடு' ஒன்றிற்கான கற்பனைப் பயணத்திற்கு அழைத்துச் செல்வோம். அந்தப் பயணத்தை தொடங்கும் போது அவர்களிடம் நாம் கூறுவோம் 'உங்களுடைய எண்ணப்படி இலட்சிய அபிவிருத்தி நாடு எப்படி இருக்க வேண்டும்?' இந்தக் கேள்வியை மனதில் இருத்தி தமது எண்ணங்களை விரிக்கும் முறையில் அவர்கள் தம் பயணத்தை ஆரம்பிப்பர்.

மாணவர்களுக்கு கொடுக்கும் இந்தச் செய்முறையை 'நெறிப் படுத்திய அகக்காட்சிப் பயிற்சி' (Guided Visualisation Exercise) என்று கூறுவர். முகாமைத்துவக் கல்வியாளர் அகக் காட்சியின் சக்தி - அதாவது மனிதரின் சித்தத்தில் தோன்றும் காட்சியின் வலிமை - மாற்றத்திற்கான உந்துவிசையாக செயற்படும் என்று கூறுவர். 'மனிதரின் சிந்தனையில் தோன்றும் தொலைநோக்குடைய இலட்சிய எண்ணங்கள், புதிய தகவல்களை மட்டுமல்ல, புதிய நடத்தை முறை களையும், புதிய தொழில்நுட்பத்தையும், கொண்டு வருகின்றன. முடிவில் புதிய நிறுவனங்களும், புதிய கட்டமைப்புக்களும் உரு வாக்கப்படுகின்றன. மனிதர்களும் புதிய ஆற்றல்களைக் கொண்ட வர்களாய் உருவாக்கம் பெறுகின்றனர்' என்று அகக்காட்சியின் சக்தியினை இவர்கள் விளக்குவர்.

நாம் மாணவர்களுக்குக் கொடுக்கும் பயிற்சி மிகவும் எளிமை யானது. வகுப்பறையின் விளக்குகளை அணைத்து மங்கலான இருளை உண்டாக்குவோம். இரண்டு நிரைகளில் மாணவர்கள் அமர்ந்திருப்பர். நிரைகளுக்கு இடையே இடைவெளி - பாதை போன்று - இருக்கும். விமானம் ஒன்றில் உட்கார்ந்து 'அபிவிருத்தி பெற்ற' நாட்டிற்குப் பிரயாணம் செய்வதாகவும், கண்களை மூடியபடி நாம் சொல்வதைக் கேட்டுச் சிந்திக்கும்படியும் வேண்டுவோம். தனிநபர் வாழ்க்கை, சமுதாய வாழ்க்கை - இவற்றில் இலட்சிய நிலைகள் எவை? பௌதீக சூழல் எப்படி இருக்கவேண்டும்? அரசாங்கம், பொருளாதாரம் எப்படி இருக்க வேண்டும்? உங்கள் தெரிவுகள் என்ன? என்று கூறுவேன். பிரயாணிகளிடம் நீங்கள் என்ன தேவை என்று நினைக்கிறீர்களோ

அதை தேடிப் பாருங்கள். பதிலாக பிறர் சொன்னார் என்பதற்காக பிறர் சொன்னவற்றை உங்கள் விருப்பாக மாற்ற வேண்டாம் என்றும் கூறுவேன். இதெல்லாம் சாத்தியமா? என்று சாத்தியப்பாடு (Feasibility) பற்றி யோசிக்க வேண்டாம். உங்கள் கற்பனைக் குதிரையைத் தட்டி விடுங்கள். உங்கள் கனவுகள், இலட்சியங்கள், கற்பனைகள் பயனுடையவை என்றும் சொல்வேன்.

பிரயாணிகள் முதலில் அரசாங்கம் அமைந்து செயற்படும் இடங்களைப் பார்ப்பார்கள். பின்னர் ஒரு விவசாயப்பகுதிக்குச் செல்வர். அடுத்ததாக ஒரு கைத்தொழில் மயமான பகுதிக்குச் செல்வார்கள். பிறகு அவர்கள் குறிப்பாக விரும்பும் பகுதி ஒன்றைத் தேர்ந்து அங்கு போவார்கள்.

> நீங்கள் என்ன காண்கிறீர்கள்?
> உங்கள் காதில் விழுபவை எவை?
> உங்களைச் சூழ உள்ள மக்கள் என்ன
> செய்து கொண்டிருக்கிறார்கள்?
> அவர்கள் ஒருவரோடு ஒருவர் எப்படி
> நடந்து கொள்கிறார்கள்?
> உங்களோடு பேசும்போது எப்படி நடந்து
> கொள்கின்றனர்?

உங்கள் உணர்வுகள், அனுபவம் எப்படியானதாக இருக்கிறது?

வாஷிங்டன் டி.சியில் விமானம் தரையிறங்கும் போது மாணவர்களின் பிரயாணம் முடிவுக்கு வருகிறது. விமானம் வகுப்பறையில் தங்களை இறக்கிவிட்டதாக அவர்கள் கற்பனை செய்கிறார்கள். அடுத்த கட்ட வேலையாக மாணவர்கள் தாம் கண்டவற்றை - தமது அகக்காட்சியை - எழுத்திலும், படங்களிலும் வரையத் தொடங்குவர். பின்னர் முழு வகுப்பும் சிறுசிறு குழுக்களாகச் சேர்ந்து தாம் கண்டவை, கேட்டவை இடையே காணப்படும் பொதுமைகள் பற்றிக் கலந்துரையாடும். கண்டவை, கேட்டவை யாவும் ஆட்களின் பண்பாட்டுப் பின்னணியைப் பொறுத்து வேறுபடுவதைக் காணும் போது வியப்பு ஏற்படும். இந்தப் பயிற்சியும், இவை போன்ற பயிற்சிகளும் மாணவர்களின் உள்ளத்தை ஊடுருவி அவர்களின் ஆன்மாவையே உலுப்புபவை என்றால் மிகையன்று.

எனது புலமைத்துறை நண்பர்கள் மூவர் இதுபோன்ற பயிற்சிகளை - அகக்காட்சிப் பயிற்சிகளை - உலகின் பல பாகங்களில் நடத்தினர். அப்பயிற்சிகளின் முடிவுகளை ஒரு நூலில் தொகுத்துத் தந்திருக் கிறார்கள். Beyond the Limits : Confronting Global Collapse: Envisioning a sustainable future (எல்லைகளுக்கு அப்பால் உலகின் வீழ்ச்சியை எதிர்கொள்ளலும் நிலைபேறுடைய எதிர்காலம் ஒன்றை கற்பனை செய்தலும்.) என்பது நூலின் தலைப்பு. நிலைபேறுடைய அல்லது பேண்தகு உலகம் என இந்நூலாசிரியர்கள் விபரித்துள்ளவை, மாணவர்கள், வர்த்தகத்துறை நிர்வாகிகள், பொதுத்துறை அலுவலர்கள், விஞ்ஞானிகள் ஆகியோரும் பிறரும் தமது கற்பனையான பிரயாணத்தின் போது அபிவிருத்தி பெற்ற நாட்டில் கண்டவைகளை ஒத்தனவாக உள்ளன. இப்படியான ஒரு நாட்டில் தான் தாம் வாழ வேண்டும் என்பதும் இப் பிரயாணிகளின் விருப்பமுமாகும். மேற்குறித்த நூலில் தரப்பட்டுள்ள அட்டவணையில் இருந்து சில விடயங்களைக் கீழே தந்துள்ளேன்.

- ★ இங்கே போற்றப்படும் விழுமியங்களாவன: பேண்தகு தன்மை, செயல்திறமை, தேவைக்கேற்ற அளவில் கிடைப்பு, நீதி, சமத்துவம், சமுதாய உணர்வு
- ★ தலைவர்கள் நேர்மை உடையவர்கள். மதிப்புக்கு உரியவர்கள். தங்கள் பணியைச் செய்வதில் அக்கறை உடையவர்களே அன்றிப் பதவியில் ஒட்டிக் கொண்டிருக்க விரும்பாத வர்கள்.
- ★ எல்லாருக்கும் வேண்டியவை கிடைக்கின்றன. பாதுகாப்பும் உள்ளது; பயம் இல்லை. குறைந்த இறப்பு வீதமும் குறைந்த பிறப்பு வீதமும் உள்ளன. இதனால் சனத்தொகைச் சமநிலை உள்ளது. இது சுயமான தெரிவு ஆகும். மக்களின் வாழ்க்கை நியமங்கள் ஆகியவற்றின் வெளிப்பாடும் ஆகும்.
- ★ வேலை மனிதருக்கு மதிப்பைத் கொடுக்கிறது. மாறாக வேலை மனிதரை இழிவுபடுத்துவதில்லை. சமூகத்திற்கு தங்களால் முடிந்ததைச் செய்வதற்கான ஊக்குவிப்பாகவும் திறமையான உழைப்புக்கு வெகுமதியாகவும் மக்களிற்கு வருமானம்

கிட்டுகிறது. அத்தோடு யாவருக்கும் தேவையான அளவில் வருமானம் கிடைக்கிறது.

★ நாட்டின் பொருளாதாரம் சமூகத்திற்கும், சூழலுக்கும் சேவை புரிகிறது. அவற்றின் நலன்களைப் பேணிப் பாதுகாக்கிறது. சமூகம் பொருளாதாரத்திற்கு சேவகம் புரிய வேண்டும் என்றோ, சூழல் பொருதாரத்திற்கு பணியாள் என்ற நிலையோ இல்லை. பொருளாதாரம் ஒரு கருவி. அல்லது வழி. அது தான் முடிபொருள், அல்லது முடிவிடம் என்று கூற முடியாது.

★ குறுங்காலத் தேவைகளுக்கும் நீண்ட காலத் தேவைகளுக்கும் இடையே ஒரு சமநிலையை பேணக்கூடிய அரசியல்முறை நடை முறையில் உள்ளது. பேரப்பிள்ளைகளின் நன்மைகளை கருத்தில் கொண்டு அரசியல் அழுத்தங்களைக் கொடுத்தல் இயலும்.

★ சமாதான வழிகளில் பிணக்குகளைத் தீர்த்துக் கொள்ளும் திறமை பிரஜைகளிடம் உள்ளது. அரசாங்கமும் இந்தக் கலையில் தேர்ச்சி பெற்றதாய் உள்ளது.

★ பொருட்களையும், சொத்துக்களையும் குவிப்பதால் அல்லாது நன்முறையில் வாழலாம், நற்சிந்தனைகளை வளர்க்கலாம் என்ற நம்பிக்கை உள்ளது.

அகக்காட்சியாகக் கற்பனை செய்யப்பட்ட சமூக மாதிரிகள் யாவும் சமாதானம் நிலவும் தேசங்களாக இருப்பதைக் காணலாம். பொலிஸ் படையும், இராணுவமும் மிக அருமையாகவே கண்ணில் பட்டன. இதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவும் இல்லை. நீதியான சமத்துவமான சமூகத்தில், அரசியல் வாதிகள் நேர்மையுடையவர்களாயும், மக் களிற்கு சேவை செய்பவர்களாவும், சுயநலம் அற்றோராகவும் இருக்குமிடத்து பொலிசும், இராணுவமும் வெளிப்பட்டு தெரிய மாட்டா. மக்களுக்கு தொழில்கள் கிடைக்கின்றன. அவர்களின் தேவைகள் நிறைவு செய்யப்படுகின்றன ஒவ்வொரு தனிநபரும் பாதுகாப்பு பற்றிய அச்சம் இன்றி ஜீவிக்கிறார். வாழ்க்கையில் திருப்தி என்பது பொருண்மியம் சார் நன்மைகளை, பௌதீகச் சொத்துக்களை

திரட்டிக் கொள்வதனால் அன்று என்றநிலை உள்ளது. ஆகவே வன் முறை மோதல்கள் எழுவதற்குரிய சூழ்நிலை இல்லை. உலகின் சமய நெறிகள் யாவும் போதிக்கும் ‘அமைதி’ என்னும் உலகப் பொதுவான மனிதத் தேவை இங்கே பூர்த்தி செய்யப்படுகிறது.

நான் 30 வருடங்களுக்கு மேலாக சர்வதேச அபிவிருத்தி பற்றிப் படிப்பதிலும், படிப்பிப்பதிலும், எழுதுவதிலும் ஈடுபட்டு வந்துள்ளேன். அபிவிருத்தி பற்றிய மெய்யியல், அதன் தந்திரோபாயங்கள், திட்டங்கள் என்பன பற்றி ஆராய்ந்து வந்திருக்கிறேன். எனது மாணவர்களும், நண்பர்களும் மேற்குறித்த பயிற்சிகளின் போது என்னென்ன இலட்சியங்களை, கனவுகளை வெளிப்படுத்தினார்களோ அதே போன்று தான் மக்களும் சிந்திப்பதைக் கண்டேன். மக்கள் பேசும் முறை மாணவர்களின் இலட்சிய வேகம் மிகுந்த வார்த்தைகளில் இருந்து வேறு படலாம். ஆனால் அவர்களும் ஒரே விதமாகவே சிந்திக்கிறார்கள். கருத்துக்களில் முரண்பாடு இல்லை. வறுமை இல்லாத உலகு. இது தான் எம்கனவு (அழுத்தம் என்னால் கொடுக்கப்பட்டது.) என்று உலக வங்கியின் வலைத் தளம் கூறுகிறது. ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிறுவனத்தின் (UNDP) பணிக்கூற்று பின்வருமாறு கூறுகிறது. ‘வறுமை ஒழிப்பு, வேலை வாய்ப்புக் களை உருவாக்குதல், பேண்தகு வாழ் வாதாரங்களை வழங்கல், பெண்களிற்கு அதிகாரமளித்தல் (Empowerment) சூழலைப் பாதுகாத்தலும், மீள் அமைத்து வளர்த்தலும் ஆகியவிடயங்களில் நாடுகளுக்கு உதவி செய்து அவற்றை பேண்தகு அபிவிருத்திப் பாதையில் செல்ல உதவுதல். குறிப்பாக வறுமை ஒழிப்பை முதன்மைப் பணியாகக் கொண்டு செயற்படுதல்’. அத்தோடு UNDP யின் பணிக்கூற்று பின்வருமாறு கூறுகிறது.

‘கொள்கையளவில் அபிவிருத்தியை சமாதானத்திற்கான விழைவு, மனிதப் பாதுகாப்பு என்பனவற்றில் இருந்து பிரித்துப் பார்க்க முடியாது’. சீனாவின் ஒன்பதாவது ஐந்தாண்டுத்திட்டம் (1996 - 2000) தனது இலக்கைப் பின்வருமாறு வகுத்துள்ளது.

‘மக்களின் வாழ்க்கைத் தரத்தை வசதியான வாழ்க்கை என்ற நிலைக்கு உயர்த்துதல், வறுமையை ஒழித்தல்.’

அபிவிருத்தி பற்றிய இலக்குகள், இலட்சியங்கள் திட்டங்களாகச் செயற்படுத்தப்படும் போது இலக்குகள் அடையப்படுவதில்லை. மனிதாயம் மேலோங்கும் அமைதியான சமூகம் அங்கே பௌதீக

பொருண்மியத் தேவைகள் யாவும் கிடைக்கின்றன. தனிநபர் பாது காப்பும், உளவியல் தேவைகளும் பூர்த்தியாகின்றன என்ற இலட்சியம் நிறைவேறுவதில்லை.

மனிதர் சித்தத்தில் எழும் விருப்புக்கும் அபிவிருத்தியின் விளைவு களுக்கும் இடையில் பெரும் இடைவெளி உள்ளது. 50 வருட அனுபவம் இதுவே. வன்முறை மோதலுக்கான காரணம் இந்த இடை வெளியில் தான் உள்ளது. முன் கூட்டிய எச்சரிக்கை அறிவிப்பைத் தரத்தக்கதான உபாயத்தை நாம் வகுத்தல் வேண்டும். இவ்வாறு உபாயத்தை வகுத்தல் 'ஆக்கமிகு அபிவிருத்தி' என்றால் என்ன என்பது பற்றிய மீள்சிந்தனையுடன் தொடங்கப்படவேண்டும். தற் போதைய நடைமுறைகளில் உள்ள இலக்குகள் ஏன் யாவரும் விரும்பும் ஒரு இலட்சிய நாட்டை உருவாக்க உதவவில்லை என்பதைச் சிந்தித்தல் வேண்டும்.

## சிறந்த அபிவிருத்தி மாதிரி எது?

சர்வதேச அபிவிருத்தி செயல்முறை, இலட்சியங்களிற்கும் பெறுபேறு களுக்கும் இடையில் தொடர்பை உண்டாக்குவதே. இத்தொடர்பு கொள்கைகள், செயல்திட்டங்கள் என்பவற்றால் நிறைவேறுகிறது. ஐந்து வருடத்திட்டங்கள், அமைப்புச் சீராக்கச் சீர்திருத்தங்கள், நீர்ப் பாசனத் திட்டங்கள், நிலச் சீர்திருத்தச் சட்டங்கள், கல்வித் திட்டங்கள், நல்லாட்சிக்கான அமைப்புக்கள் என்பன போன்றன கொள்கை களிற்கும், செயல் திட்டங்களிற்கும் உதாரணங்களாகும். இவ்வாறான கொள்கைகள், செயல் திட்டங்கள் என்பனவற்றை ஒன்று சேர்த்து ஒரு கோட்பாட்டு அமைப்புக்குள்ளும், கருத்தியல் நோக்கினுள்ளும் கொண்டு வரும்போது அவற்றை அபிவிருத்தி மாதிரிகள் (Development models) என்று கூறுவர். வெவ்வேறு மாதிரிகள் வெவ்வேறு இலக்குகளையும், இலட்சியங்களையும் கொண்டனவாக இருக்கும். சில வேளைகளில் இவை வெளிப்படையாகக் கூறப்படாதவையாகவும் இருக்கும்.

அபிவிருத்தி பற்றிய நூல் ஒன்றில் மிகவும் பிரபல்யம் பெற்றனவாக ஐந்து மாதிரிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றுள் மூன்று மாதிரிகள் முதலாளித்துவ மாதிரிகளாகும். இவற்றை சந்தை மைய மாதிரிகள்

என்றும் கூறலாம். 1) தடையற்ற - திறந்த பொருளாதாரம் 2) இறக்கு மதிப் பதிலீட்டுக் கைத்தொழிலாக்கம் 3) சமத்துவத்துடன் கூடிய வளர்ச்சி என்ற மூன்று மாதிரிகளும் முதலாளித்துவ மாதிரிகளாகும். 4) சீன மாதிரி 5) சோவியத் யூனியன் மாதிரி என்ற இரண்டும் சோஷலிச மாதிரிகளாகும். இன்னொரு நூல் ஆறு மாதிரிகளை அடை யாளம் காண்கிறது. 1) நாணயக் கொள்கை (Monetarism) 2) திறந்த பொருளாதாரக் கொள்கை 3) கைத்தொழிலாக்கம் 4) பசுமைப்புரட்சி 5) மறுபங்கீடு 6) சோஷலிசம் என்பனவே அவை. இரண்டாம் உலக யுத்தத்திற்கு பிந்தியகால அனுபவங்களை எடுத்து நோக்குமிடத்து தேசிய மட்டத்தில் பல நாடுகளில் மேற்சொன்ன மாதிரிகள் நடை முறைப்படுத்தப்பட்டன. இவை பரீட்சிக்கப்பட்டன. இம்மாதிரிகள், அபிவிருத்திச் செயற்பாட்டாளர்களால் சில சந்தர்ப்பங்களில் விரும்பி ஏற்கப்படும் மாதிரிகளாக இருந்தன. பின்னர் அவற்றின் கவர்ச்சி குறைந்து கைவிடப்பட்டன. கெடுபிடியுத்தம் முடிவடைந்த பின்னர் உள்ள காலத்தில் முதலாளித்துவ மாதிரிகள் செல்வாக்குப் பெற்றுள்ளன. வளர்ச்சி நோக்கியனவாயும், திறந்த பொருளாதார, முதலாளித்துவ முறைகளாயும் இம் மாதிரிகள் உள்ளன. சில வருடங்கள் சென்ற பின்னர் இம்மாதிரிகளிற்கு மாற்றாக வேறு மாதிரிகள் முன் வைக்கப் படலாம். இவை நீடித்து நிலைக்கும் என்பதற்கு உத்தரவாதம் இல்லை. இருந்த போதும் 'சிறந்த மாதிரி எது?' என்ற கேள்வி அரசியல் வாதிகளுக்கும் அபிவிருத்திச் செயற்பாட்டாளர்களுக்கும் எப்போதும் முக்கிய கேள்வியாகவே இருக்கும். இந்தக் கேள்விக்குரிய பதில் யாது என்பது ஆக்கமிகு அபிவிருத்தியின் அடைவையும், பெறு பேறுகளையும் மதிப்பீடு செய்வதற்கான அளவு கோல்கள் எவை என்பதைப் பொறுத்ததாகும்.

### ஆக்கமிகு அபிவிருத்தியின் அடைவையும் பெறுபேறுகளையும் மதிப்பிடுவதற்கான சிறந்த அளவுகோல் எது?

மதிப்பீட்டு அளவு கோல்கள் மிகுந்த முக்கியமுடையன. ஏனெனில் மதிப்பிடுவதற்காக எந்த அளவுகோல் பயன்படுத்தப்படுகிறதோ அதைப் பொறுத்தே எந்த அபிவிருத்தி மாதிரியினைத் தெரிவு செய்வது அதனை வடிவமைப்பது, திருத்திச் செப்பம் செய்வது என்பனவும்

தீர்மானிக்கப்படுகின்றன. உதாரணமாக தனிநபருக்கான மொத்தத் தேசிய உற்பத்தியினை உச்சப்படுத்துவதை நோக்காகக் கொண்ட மாதிரி, வருமானத்தைச் சமமாகப் பங்கீடு செய்வதை அல்லது சிறார் இறப்பு வீதத்தைக் குறைப்பதை இலக்காகக் கொண்ட மாதிரியில் இருந்து வேறுபட்டதாகும். இது வெளிப்படையான உண்மை. முறைப்பகுப்பாய்வாளன் (Systems Analyst) ஒருவனுக்கு ஒரு முறைமையின் போக்கை அறிந்துகொள்வதற்குரிய கருவியாக அடைவு அளவுகோல்கள் (Performance Criteria) பயன்படுகின்றன. அடைவு அளவுகோல்களில் 'ஆக்கமிகு அபிவிருத்தி' பற்றிய வரைவிலக்கணங்களும், இலட்சியங்களும் மறைந்தும் உள்ளடங்கியும் உள்ளன. இவை அரசியல் வாதிகளினதும், அபிவிருத்திச் செயற்பாட்டாளர்களதும் இலட்சியங்களை தம்முள் கொண்டமைபவை என்பதும் கவனிக்கத் தக்கது. இவற்றை வெளிப்படையாகக் கூறி விவாதங்களை நடத்துவது மிக அருமையாகவே நடைபெறும்.

அடைவு அளவுகோல்கள் பற்றி விவாதங்கள் எதுவும் நடப்பதில்லை. ஆனால் சிறந்த அபிவிருத்தி மாதிரி எது என்பது பற்றிய விவாதம் தான் தொடர்சியாக நடைபெற்று வந்துள்ளது என்பது ஆச்சரியத்திற்குரிய தொரு விடயமே. உதாரணமாக ஆளொருவருக்கான மொத்த தேசிய உற்பத்தி என்னும் ஒரே ஒரு அளவுகோல் பல ஆண்டுகளாக எல்லாராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட அளவுகோலாக இருந்து வந்தது. 1970 க்களில் பௌதீக வாழ்க்கைத் தரச்சுட்டெண் (PQLI) என்னும் அளவு கோல் ஏற்புடமை பெற்றது. ஆனால் அதற்கு நிறுவன ஆதரவு கிடைக்கவில்லை. இதனால் அது பயன்படுத்தப்படாமல் கைவிடப்பட்டது. 1990 இல் மஹூப் உல்ஹக் என்னும் பொருளியலாளர் UNDP யினது மனித அபிவிருத்தி அறிக்கையில் மனித அபிவிருத்திச் சுட்டெண் (Human Development Index - HDI) என்பதை ஒரு அளவுகோலாக முன் வைத்தார்.[7] அதுவரை ஆளொருவருக்கான மொத்த தேசிய உற்பத்தி (GNP Per Capita) என்பதற்கு மாற்றீடான போட்டி அளவுகோல் அறிமுகமாகவில்லை. (இன்னும் கூட ஆளொருவருக்கான மொத்த தேசிய உற்பத்தி கைவிடப்படவில்லை. ஆனால் அது செல்வாக்கு குறைந்த ஒன்றாக ஆகி விட்டது.) எமது வாசகர்களில் சிலரே இந்த மூன்று அளவுகோல்கள் அல்லது சுட்டிகள் பற்றி

அறிந்திருக்கக்கூடும். ஆதலால் இவை மூன்றையும் பற்றிச் சுருக்கமாகக் கூறுதல் பொருத்த முடையது.

## ஆளொருவருக்கான மொத்தத் தேசிய உற்பத்தியும் பொருளாதார அபிவிருத்தியும்

ஆளொருவருக்கான தேசிய உற்பத்தி என்பது மொத்தத் தேசிய உற்பத்தியை சனத்தொகையால் வகுக்கும் போது கிடைக்கும் பெறுமதி ஆகும். இதனை தனிநபருக்கான மொத்ததேசிய உற்பத்தி என்றும் கூறலாம். இது ஆளொருவரின் வருமானத்தின் (Per capita Income) பதிலீடு ஆகவும் உள்ளது. *1940*க்களில் ஐக்கிய அமெரிக்காவிலும் ஐக்கிய இராச்சியத்திலும் தேசிய வருமானக் கணக்கீட்டு முறை அறிமுகம் செய்யப்பட்டபோது ஆளொருவருக்கான மொத்தத் தேசிய உற்பத்தி என்னும் கருத்தும் உபயோகத்திற்கு வந்தது.[8] தேசிய வருமானக் கணக்கீடு என்ற கருத்து கோட்பாட்டுத் தளம் ஒன்றை உடையது. மத்திய வங்கியாலும், அரசு திட்டமிடல் அதிகாரிகளாலும் பொருளாதார விருத்தியை ஏற்படுத்தவும், வர்த்தகச் சகடோட்டத்தின் ஏற்ற இறக்கம் காரணமாக ஏற்படும் பொருளியல் மந்தநிலையைத் தவிர்ப்பதற்கும் இதனை இது ஒரு கருவியாக உபயோகிக்கப்பட்டது. பெரும்பாலான நாடுகளில் இன்று தேசிய புள்ளிவிபரத் திணைக் களங்களும், அமைப்புக்களும் உள்ளன. அவை புள்ளி விபரங்களைத் திரட்டுதல், தொகுத்தல், தேசிய வருமானம் பற்றிய தகவல்கள் கொண்ட அறிகைகளைத் தயாரித்தல் போன்ற பணிகளில் ஈடுபடு கின்றன.

சைமன் குஸ்நெட்ஸ் (Simon kuznets) என்னும் பொருளியலாளர் எழுதிய சிந்தனையைத் தூண்டும் எழுத்துக்கள் அபிவிருத்தியின் அடைவை மதிப்பீடு செய்வதற்குப் பொருளாதார வளர்ச்சியை ஒரு அளவுகோலாக உபயோகித்தல் முறையைப் பிரபலமாக்கின. அத்தோடு அதனைச் செப்பம் செய்யவும் உதவின. இருந்த போதும் சைமன் குஸ்நெட்ஸ் இந்த அளவுகோலின் மட்டுப்பாடுகளையும் குறிப் பிட்டிருந்தார். வால்ட் விட்மன் றொஸ்ரோவ் (W.W. Rostow) எழுதிய பொருளாதார வளர்ச்சியின் படிநிலைகள் (The stages of economic growth) *(1960)* என்ற நூல் பரவலாக விரும்பி வாசிக்கப்பட்ட நூல்.

இந்த நூலின் மையமான கருத்தாக 'பொருளாதார வளர்ச்சி' அமைந்தது. இந்த நூலும் இதுபோன்ற பிறநூல்களும் நவீனமாதல் (Modernisation) என்பதை ஒரு இலக்காகக் குறிப்பிட்டன. உலக வங்கியும், சர்வதேச நாணய நிதியமும் மேற்கொண்ட மதிப்பீடுகளிலும் மொத்த தேசிய உற்பத்தி (GNP) சார்ந்த கருத்துக்கள் முதன்மை இடத்தைப் பெற்றன. அவற்றின் மிகச் செல்வாக்குப் பெற்ற அறிக்கை களும், முக்கியமான செயல் திட்டங்களும் இன்றுவரை மொத்த தேசிய உற்பத்தி என்னும் அளவு கோலை முதன்மைப்படுத்தி யுள்ளன.

மொத்த தேசிய உற்பத்தி என்னும் அளவுகோலில் உள்ளடங்கி யுள்ளதும், அழுத்தம் பெறுவதுமான உலகநோக்கு வெளிப்படையானது. ஆளொருவருக்கான சராசரி வருமானத்தை உயர்த்துதல் இந்த அளவு கோலில் உள்ளடங்கியிருக்கும் அபிவிருத்தி இலக்கு ஆகும். அவ்வித மான தனிநபர் சராசரி வருமானத்தை உயர்த்தக்கூடிய அடைவை எட்டிய நாடுகள் முன்னுதாரணமானவையாகக் கொள்ளப்படுகின்றன. ஐக்கிய அமெரிக்கா, சுவிற்சர்லாந்து, ஸ்காந்திநேவிய நாடுகள் என் பனவும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் சிங்கப்பூர், ஹொங்கொங் என்பனவும் சில மத்தியகிழக்கு நாடுகளும் இவ்வாறான முன் உதாரணங்களாகும். ஆளொருவருக்கான வருமானத்தை உயர்த் துவதை இலக்காகக் கொண்டு கொள்கைகளை வகுப்பதிலும் பல்வகைப் பொருளாதார மாதிரிகளை கட்டமைப்பதிலும் பொருளி யலாளர்களும் அபிவிருத்திதுறை அறிஞர்களும் ஈடுபட்டனர். 'எந்த மாதிரி சிறந்தது?' என்ற விவாதம் பொருளியலாளர்கள் கட்டமைக்கும் இந்த பொருளாதார மாதிரிகளில் சிறந்தது எது என்பது பற்றிய தாகும்.

### பௌதீக வாழ்க்கைத் தரச்சுட்டெண் (PQLI)

ஆளொருவருக்கான சராசரி வருமானம் என்னும் அளவுகோல் ஆரம்ப காலத்தில் இருந்து செல்வாக்கு பெற்ற ஒன்றாக இருந்து வந்தது. இருப்பினும் அக்கருத்தை முன்வைத்தோர் அதன் பலவீனங்களையும், 'அபிவிருத்தி' யையோ அல்லது சமூகநலனையோ மதிப்பீடு செய் வதற்கு அது திருப்தியான அளவுகோல் அன்று என்பதையும் அறிந்

திருந்தனர். உற்பத்தியின் உயர்வுக்குப் பங்களிப்பை வழங்கிய பல நடவடிக்கைகள் (உதாரணம் வீட்டில் பெண்கள் வழங்கும் உழைப்பு.) இதில் சேர்க்கப்பட வில்லை. உற்பத்தியில் சேர்க்கப்படாத பயனற்ற நடவடிக்கைகள் பல (உதாரணம் மாசடைதலால் ஏற்படும் அழுக்கை சுத்தப்படுத்தல்.) உற்பத்தியில் சேர்க்கப்பட்டன. மனிதரின் அக நிலைப்பட்ட விடயங்களான மகிழ்ச்சி, நீதி, ஓய்வு, சுதந்திரம், அழகு ஆகியவை பணவடிவில் அளவிடப்பட முடியாதவை. ஆகையால் ஆளொருவருக்கான சராசரி வருமானம் தொடர்பான பொருளாதார வளர்ச்சி பற்றிய அளவு கோல்கள் இவற்றைக் கவனத்தில் கொள்ள வில்லை. பௌதீக வாழ்க்கையின் தரத்தை எடுத்துக்காட்டும் சுட்டிகளான எழுத்தறிவு, நீடித்த ஆயுள், சுகாதாரம் என்பன கவனிப்பைப் பெறவில்லை. ஆளொருவருக்கான தனிநபர் வரு மானத்திற்கும் மனிதரின் வாழ்கை நலனுக்கும் இடையிலான தொடர்பு இறுக்கமானது அன்று. ஆளொருவருக்கான வருமானத்திற்கு அதி முக்கியத்துவம் கொடுத்தபோது நாட்டின் வருமானம் மக்களிடம் எப்படிப் பங்கிடப்பட்டது என்ற விடயம் கவனிப்பைப் பெறவில்லை. சராசரி வருமானம் வளர்ச்சி பெறலாம், உயரலாம். ஆனால் ஏழைகள் நிலை மோசமடையக்கூடும். நாட்டின் வருமானம் மக்களின் வாழ்கைத் தரத்தையும், நலனையும் உயர்த்தப் பயன்படாத விடயங்களான இராணுவச் செலவு, நாட்டின் தேசிய சின்னங்கள் மீதான மிகையான செலவு, அரசியல் பலம் மிக்கவர்கள் தமது செல்வத்தை வெளியே கொண்டு போய் அந்நிய வங்கிகளில் பணவைப்புக்களாக வைத்தல் போன்ற வழிகளில் விரயமாக்கப்படலாம். மேலும் ஆளொரு வருக்கான சராசரி வருமானம் உயராத போதிலும் கூட மக்களைக் குறிவைத்து நிறைவேற்றப்படும் திட்டங்கள் மூலம் வாழ்கைக் தரத்தை உயர்த்துதல் முடியும். இதனால் தான் தனிநபர் சராசரி வருமானம் உயர்வதற்கும் மனிதரின் வாழ்க்கை நலன் உயர்வுக்கும் உள்ள தொடர்பு இறுக்கமானதாக இல்லை எனப்படுகிறது.

சர்வதேச மட்டத்திலான ஒப்பீடுகளைச் செய்வதிலும் ஆளொரு வருக்கான சராசரி வருமானம் பிரச்சினைகளை உருவாக்கியது. ஒப்பீடுகளுக்கு மொத்த தேசிய உற்பத்திசார் அளவீடுகள் அர்த்த முடையனவாய் இருக்கவில்லை. நாணயப் பரிவர்த்தனை வீதங்கள் பொது நாணயம் ஒன்றுடன் சரிசெய்துகொள்ளும் உத்தி பின்

பற்றப்பட்டது. அடிப்படை ஆண்டு ஒன்றை வகுத்துக் கொண்டு நாணயங்களின் பணவீக்க அளவுக்கு ஏற்ப சரிசெய்தல் மேற் கொள்ளப்பட்டது. இருப்பினும் இந்தக் கணிப்பீடுகள் மிகுந்த சிக்கல் வாய்ந்தவை. உண்மை நிலை திரிபு படுத்தப்படும் வாய்ப்புக்கள் அதிகம். 'கொள்வனவுச் சக்தி சரிசமம்' (Purchasing Power Parity) கணிப்பீடு தொடர்பான சரிசெய்தல் சிக்கலானது. டோக்கியோவில் ஒரு டொலர் கொள்வனவு செய்யக்கூடியதை விடக்கூடியளவு அடிப்படைத் தேவைப் பொருட்களை டாக்காவில் கொள்வனவு செய்ய முடியும். இது 'கொள்வனவுச் சக்தி சரிசமம்' என்ற அளவு கொண்டு ஒப்பீடுகளைச் செய்வதில் உள்ள பிரச்சினைகளை எடுத்துக் காட்டுகிறது.

ஐக்கிய நாடுகள் தாபனத்தின் ஆதரவுடன் அமைக்கப்பட்ட குழுக் களும் அரசு சார்பற்ற நிறுவனங்களும் ஆளொருவருக்கான சராசரி மொத்த தேசிய உற்பத்தி என்ற அளவு கோலுக்கு மாற்றீடுகளை சிபார்சு செய்தன. பல அறிஞர்களும் மாற்றீடுகளைச் சிபார்சு செய்தனர். இருந்தபோதும் 1977 வரை இச் சிபார்சுகள் எவையும் கவனிப்பைப் பெறவில்லை. பொருளியல் வரலாற்றாய்வாளராகிய மொரிஸ் டபிள்யு. மொரிஸ் என்பவர் கடல் கடந்த தேசங்களின் அபிவிருத்திக் கவுன்சில் (ODC - ஒவர்சிஸ் டிவலப் மென்ட் கவுன்சில்.) அமைப்பிற்காக ஒரு ஆய்வை மேற்கொண்டு அபிவிருத்தியைக் கணிப்பிடும் சுட்டி ஒன்றை உருவாக்கினார். முந்திய சிபார்சுகளை விட மொறிஸ் டபிள்யு. மொறிஸ் சிபார்சு குறிப்பிடத் தகுந்த வேறுபாடுகளைக் கொண்ட சிறப்பான அளவு கோலாக இருந்தது. மொறிஸ் தயாரித்த சுட்டி பின்வரும் ஆறு விடயங்களைத் திருப்தி செய்வதாக இருந்தது:

1. அபிவிருத்தி தொடர்பாக ஒரே ஒரு பாங்கு (Pattern) மட்டும் இருப்பதாக அனுமானித்தல் ஆகாது.
2. குறிப்பிட்ட சமூகங்களின் விழுமியங்களை பிரதிபலிக்கும் தர நியமங்களைத் தவிர்த்தல் வேண்டும்.
3. சுட்டி, விளைவுகளை (Results) மதிப்பிட வேண்டுமேயன்றி உள்ளீடுகளை (Inputs)மதிப்பிடக் கூடாது.

4. அது சமூக விளைவுகளின் (Social Results) பகிர்வை வெளிப் படுத்த வேண்டும்.

5. அது வடிவமைப்பதற்கு இலகுவானதாயும் விளங்கிக் கொள்வதற்கு எளிமையானதாகவும் இருக்க வேண்டும்.

6. சர்வதேச ஒப்பீடுகளுக்கு ஏற்றதாக இருக்க வேண்டும்.

100 ற்கு மேற்பட்ட சுட்டிகள் அதுவரை அறிமுகப்படுத்தப்பட்டிருந்தன வென்றும் அவற்றுள் மூன்று சுட்டிகள் மட்டும் மேற்குறிப்பிட்ட அளவுகோல்களுக்கு பொருந்துகின்றன என்றும் மொறிஸ் டபிள்யு. மொறிஸ் குறிப்பிட்டார். அவர் தேர்ந்து கொண்ட மூன்று சுட்டிகளாவன சிசுமரணவீதம், ஆயுட்காலம், அடிப்படை எழுத்தறிவு என்பனவாகும். இந்த மூன்று சுட்டிகளையும் ஒன்று சேர்த்து அவர் ஒரு கூட்டுச் சுட்டியை உருவாக்கினார். 0 - 100 என்ற இரு அந்தங்களில் 100 என்ற மதிப்பை 'மிகச் சிறந்தது' பெறும், 0 மதிப்பை 'மிக மோசமானது' பெறும். சுட்டியின் இந்த இரு அந்தங்களிற்கிடையில் நாடுகள் அவற்றின் அடைவுக்கு ஏற்ப இடத்தைப் பிடித்துக் கொள்ளும். 'PQLI' என ஆங்கிலத்தில் சுருக்க எழுத்துக்களால் அழைக்கப்படும் 'பௌதீக வாழ்க்கைத் தரச் சுட்டி' என்னும் இந்தச் கூட்டி சிசுமரண வீதம், ஆயுட்காலம், எழுத்தறிவு என்ற மூன்று விடயங்களின் எண்கணித சராசரியாக (Arithmatic Mean) அமைந்தது. மூன்று விடயங்களுக்கும் சமமான எடை மதிப்பே வழங்கப்பட்டது. PQLI சுட்டியின் படி சுவீடன் நாடு 97 மதிப்பையும், கினியா - பிசோ (Guinea Bissau) 12 மதிப்பையும் பெற்றன. முதன்முதலாக இலகுவில் விளங்கிக் கொள்ளக் கூடியதொரு சுட்டியை மொறிஸ் அறிவித்தார்.

PQLI சுட்டியின் படி நாடுகளை நிரற்படுத்தும் (Ranking) முறை யானது ஆளொருவருக்கான மொத்தத் தேசிய வருமானத்தின் படியான நிரற்படுத்தலை விட வித்தியாசமானது. இது வேறுபட்ட ஒரு உலக நோக்கை (World View) வழங்கியது. இந்த வேறுபாட்டை மொரிஸ் இரு கூற்றுக்கள் மூலம் தெளிவுபடுத்தினார். அவையாவன:

1) பணம் தான் முக்கியமானதல்ல; யாவும் அதில் தங்கியிருப் பதில்லை.

2) குறைந்த GNP உடைய நாடுகள் குறைந்த PQLI உடையன வாயும் இருப்பதில்லை.

'பணம் தான் முக்கியமானதல்ல யாவும் அதில் தங்கியிருப்பதில்லை' என்ற கருத்தை மத்தியகிழக்கு நாடுகளான, சவுதி அரேபியா, ஐக்கிய அரபு எமிரேட்டுகள், லிபியா என்பனவும், பிறவும் விளக்கும் உதாரணங்களாக இருந்தன. இந்நாடுகளின் மொத்த தேசிய உற்பத்தி - அதாவது GNP உயர்வாக இருந்தது. ஆனால் PQLI மதிப் பீட்டில் இவை தாழ்நிலையில் இருந்தன. மாறாக இலங்கை, கியூபா, கிரெனடா, கொரியா, மக்கள் சீனக் குடியரசு ஆகிய நாடுகள் குறைந்த GNPயை உடையன வாயினும் PQLI சுட்டியின்படி உயர்நிலையில் இருந்தன. இந்நாடுகள் மக்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதிலும் வாழ்க்கையின் தரத்தை மேம்படுத்தியதிலும் உயர்ந்த அடைவைக் காட்டின.

PQLI என்னும் மதிப்பீட்டு அளவுகோலின் அறிமுகம் ஆக்கமிகு அபிவிருத்தி பற்றிய கொள்கையின் வடிவமைப்பில் குறிப்பிடக்கூடிய செல்வாக்கைச் செலுத்தியுள்ளது. மொறிஸ் GNP க்கும் மனித வாழ்க்கையின் நலன்களிற்கும் சிறிதளவு கூடத் தொடர்புகள் இல்லை என்று கூறினார். மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும் என்ற அர்ப்பணிப்பும் தீர்மானமும் மேற்கொண்ட பின்னர், PQLI ஐ உயர்வுக்குத் தேவையான நிறுவன உட்கட்டமைப்புக்களை ஏற்படுத்து வதற்கும், நிலைபேறுடைய வகையில் வாழ்க்கைத் தரத்தை உயர்த்து வதற்கும் நீண்ட காலம் தேவைப்படும் என்றும் மொறிஸ் கூறினார். வருமானத்தில் உயர்வை ஓரளவு எட்டினாலும் வறிய நாடுகளில் பௌதீக வாழ்க்கைத் தரத்தில் சிறியளவு உயர்ச்சியையே அடைய முடியு மென்பதை ஆய்வுகள் வெளிப்படுத்தின. அத்தோடு ஒரு நாடு PQLI கணிப்பீட்டில் உயர்நிலையை எய்தியதாயின் அதற்கும் அந்த நாட்டின் அரசியல் முறைக்கும் சம்பந்தம் இல்லை என்றும் கூறப் பட்டது. ஆகவே குறிப்பிட்டதொரு அரசியல் முறைதான் PQLI உயர்வுக்கு அவசியம் என்று கூறமுடியாது. பொருளாதாரம் அல்லாத பிறவகை வளர்ச்சிகள் மனித வாழ்க்கையின் மேம்பாட்டிற்கு உதவும் என்று கருதும் அரசியல் வாதிகளும், அபிவிருத்திச் செயற் பாட்டாளர்களும் ஆளொருவருக்கான GNP என்ற கருத்தை கைவிட்டு

PQLI என்ற கருத்துக்கு ஆதரவு அளிப்பார்கள் என்று பேராசிரியர் மொறிஸ் அவர்களும் யேம்ஸ் கிறான்ட் (James Grant) அவர்களும் எதிர்பார்த்தனர். 'Measuring the conditions of the world's poor' என்ற தலைப்பில் முக்கியமான நூலை மொறிஸ் எழுதினார். உலகின் வறியோர்களின் நிலையினை அளவீடு செய்தல் என்பது இந்நூல் தலைப்பின் பொருள்.

* 'அடைவை அளவிடும் அளவு கோல்'
* 'சர்வதேச மட்டத்தில் முடிவுகளை எடுப்பதற்கு உரை கல்லாக அமைவது'
* 'முன்னேற்றத்தை இலக்கு வைப்பதற்கும் அதன் அடைவை மதிப்பிடுவதற்குமான கருவி என்று PQLI யின் சிறப்புக்கள் பற்றி மொறிஸ் இந்நூலில் எடுத்துக் கூறினார். ODC எனப் படும் சர்வதேச அபிவிருத்திக் கான கவுன்சிலின் தலைவராக யேம்ஸ் கிரான்ட இருக்கும் வரை ODC இதனை ஒரு கருவியாக உபயோகித்தது. வருடாந்த அறிக்கைகளில் PQLI சுட்டி முதன்மை இடம் பெற்றது. அதன் உபயோகத்துக்கு யேம்ஸ் கிரான்ட முனைப்புடன் உழைத்தார்.

PQLI ஐ உபயோகித்தல், அதற்கு மெருகூட்டி திருத்தம் செய்தல் ஆகியனவற்றிற்கான ஆய்வுத் திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டன. 1980 இல் யேம்ஸ் கிரான்ட 'யூனிசெவ்' என்னும் ஐ.நா. சிறுவர் நிதியத்தின் செயலாளர் நாயகமாக பொறுப்பேற்றுச் சென்றார். இதனால் PQLI ஐ கவர்ச்சி மிக்க ஆதரவாளர் ஒருவரை இழந்தது. யேம்ஸ் கிரான்ட் PQLI ஐ ஒரு முக்கிய கருத்தாக்கமாக பிரபல்யம் பெற உதவினார். அவரின் பின்னர் அதன் செல்வாக்குக் குறைந்ததோடு படிப்படியாக மறக்கப்பட்ட விடயமாக அது மாறியது.

**மனித வள அபிவிருத்திச் சுட்டி (H. D. I)**

(HDI) ஐக்கிய நாடுகள் தாபனத்தின் சாசனம் உலகில் வாழும் எல்லா மக்களினதும் பொருளாதார சமூக முன்னேற்றம் பற்றிக் குறிப்பிடு கின்றது. பொருளாதாரம் என்ற விடயத்தோடு தொடர்புடையனவாக ஐ.நா. தாபனத்தின் துணை நிறுவனங்கள் மனிதவள அபிவிருத்திக்கு

சாதகமான போக்கைக் கடைப்பிடித்தன. இவ்வகையில் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்ற நிதிவழங்கும் தாபனங்களுடன் ஒப்பிடுகையில் ஐ.நா. துணை நிறுவனங்களின் போக்கு வித்தியாச மானது. PQLI அறிமுகப்படுத்துவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்னரே ஐ.நா துணை தாபனங்களின் மட்டத்தில் சுட்டியொன்றை வடி வமைக்கும் எண்ணம் தோன்றியது. GNP அளவீட்டுக்கு மாற்றீடாக மக்களை மையப்படுத்தும் அபிவிருத்தியை முதன்மைப்படுத்தி, அதனை அளவிடும் சுட்டி அல்லது அளவுகோலை கண்டு பிடிக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இந்த முயற்சி அவ்வளவு வெற்றியளிக் கவில்லை. இதற்கு இரு காரணங்கள் இருந்தன. முதலாவதாக பொருளாதார அறிஞர்களால் ஏற்றுக் கொள்ளக்கூடிய சிறந்த கருவியான ஒரு சுட்டியைக் கண்டு பிடிக்க வேண்டும். இரண்டாவதாக இந்தச் சுட்டி அல்லது அளவுகோல் மிக எளிமையானதாகவும் சிறந்த தொடர் பாடற் கருவியாகவும் (Communication device) இருக்க வேண்டும். மொறிஸ் வெளியிட்ட PQLI என்ற சுட்டி இரண்டிலும் (எளிமை, தொடர்பாடல்) விடயத்தில் சிறந்து விளங்கியது. ஆனால் மொறிஸ் பொருளாதார மாறிலிகளை PQLI கணிப்பில் உள்ளடக்கவில்லை. இதனால் பொருளாதார அறிஞர்கள் யாவரதும் ஏற்புடமையை இது பெறவில்லை.

இறுதியாக 'யு என் டி பி' (ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்டம்) என்னும் ஐ.நா துணை நிறுவனம், ஆளொருவருக்கான மொத்த தேசிய உற்பத்தி என்பதற்கு சிறந்த, நம்பத் தகுந்த பதிலீடாக H.D.I என்னும் சுட்டியை அறிவித்தது. 'மனிதவள அபிவிருத்திச்சுட்டி' (Human Development Index) என்பதன் சுருக்கப் பெயருடைய HDI என்னும் சுட்டிக்கு நிறுவன ரீதியான ஆதரவும் கிடைத்தது. அது நீண்டகாலம் நிலை பெறுதலும் சாத்தியமாயிற்கு. 1990 ஆம் ஆண்டில் யு.என்.டி.பி தனது முதலாவது மனிதவள அபிவிருத்தி அறிக்கையில் (Human Development Report) HDI சுட்டியை அறிமுகம் செய்து பிரபலப் படுத்தியது. இந்த அறிக்கையில் HDI தொடர்பாக பின்வரும் விடயங்கள் இடம் பெற்றன. 1. இந்த புதிய சுட்டி பற்றிய நுட்ப விபரங்கள் விளக்கப்பட்டுள்ளன. 2. 'மனிதவள அபிவிருத்தி' அடைவை (Performance) அடிப்படையாகக் கொண்டு 130 நாடுகள்

நிரற்படுத்தப்பட்டன. (நாடுகளின் நிலைப் (Rank) படி வரிசைப் படுத்தப்பட்டன). 3. மனிதவள அபிவிருத்தி தரவுகளைப் பகுப்பாய்வு செய்தும், ஏனைய அபிவிருத்தி அளவுகோல்கள் சுட்டிகளுடன் ஒப்பீடு செய்தும் கொள்கைச் சிபார்சுகள் வழங்கப்பட்டன.

PQLI யின் ஆதரவாளராக யேம்ஸ் கிரான்ட் இருந்தார் எனக் குறிப்பிட்டோம். அவரை ஒத்த இன்னொருவரான மஹ்பூப் உல் ஹக் HDI இன் ஆதரவாளராக இருந்தார் என்பது சுவாரசமானதோர் விடயம். மஹ்பூப் உல் ஹக் மிகச் சிறந்த பேச்சாளர். தம் வாதங்களை சிறப்பாக முன்வைப்பதிலும், புதிய மதிப்பீட்டு அளவுகோல் பற்றி பிரசாரம் செய்வதிலும் வல்லவராய் இருந்தார். அதனால் அது விரைவில் ஏற்புடமையைப் பெற்றது.

HDI என்னும் கருத்தாக்கம் அபிவிருத்தி என்பதை மையப் படுத்தியதால் பரவலான அங்கீகாரத்தைப் பெற்றது. குறுகிய எல்லைக் குள் அமைந்த மொத்தத் தேசிய வருமானம் (GNP) அடிப்படைத் தேவைகளை முதன்மைப்படுத்திய பௌதீக வாழ்க்கைத் தரச் சுட்டெண் (PQLI) என்பவற்றை விட HDI கவர்ச்சி மிகுந்தது. அபிவிருத்தியின் நோக்கம் மக்களின் வாய்ப்புக்களையும், தெரிவு களையும் அதிகரித்தல் என்று 1990 அறிக்கை கூறியது. மக்களின் தெரிவுகளில் வருமானத்தை பெறுதல் என்பது ஒன்றாகும். ஆனால் அதனை விட வேறு தெரிவுகளும் உள்ளன. நீண்ட ஆயுள், கல்வி, அறிவு, அரசியல் சுதந்திரம், தனிப்பட்ட பாதுகாப்பு, மனித உரிமைகள் பாதுகாக்கப்படுதல் என்பனவும் முக்கியமான தெரிவுகளாகும். தேசிய வருமானத்தையும் அதன் வளர்ச்சியையும் கணிப்பிடுவதற்கு புள்ளி விபரநுட்பங்கள் உபயோகிக்கப்படுகின்றன. சில வேளைகளில் இக்கணிப்பீடு மனிதவள அபிவிருத்தியின் பிரதான நோக்கம் என் பதையும், மக்களுக்கு நன்மைகள் சென்றடைதல் வேண்டும் என் பதையும் மறைத்து விடுகிறது.

மனிதவள அபிவிருத்தி என்ற கருத்தை விரிந்த பொருளில் உல் ஹக் வரையறை செய்தார். அவரும் அவரது உதவியாளர்களும், மூன்று விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவற்றின் சேர்க் கையான சுட்டி ஒன்றை வடிவமைத்தனர். 'நீண்ட ஆயுள்', 'கல்வி அறிவு' 'ஒருவரின் வருமானம்' என்ற மூன்றையும் இணைத்ததாக

மனிதவள அபிவிருத்திச் சுட்டி அமைந்தது. பிறந்ததில் இருந்து எவ்வளவு ஆண்டுகள் உயிர் வாழ்கிறார் என்பதை நீண்ட ஆயுள் என்ற சுட்டி குறிப்பிட்டது. கல்வி அறிவு என்பதில் வளர்ந்தோருக் கான கல்வியை உள்ளடக்கினர். தனிநபர் வருமானம் என்பதைச் சேர்த்ததன் மூலம் அடிப்படைத் தேவைகளைப் பெற்று, வாழ்க் கையை செவ்வையுடையதாய் நடத்தும் சக்தியை ஒருவர் பெற்றுக் கொள்ளுதல் கருத்தில் கொள்ளப்பட்டது. ஆளொருவருக்கான தனி நபர் வருமானம் சிக்கலான ஒரு முறைப்படி சரிசெய்யப்பட்டது. இந்த மூன்று குறிகாட்டிகளையும் ஏன் தெரிவு செய்தனர் என்பதற்கு சில காரணங்கள் உள்ளன. இவற்றின் புள்ளிவிபரத் தரவுகளை பெறக் கூடியதாய் இருந்தது. இவை பரந்த எல்லையைக் கொண்டவை. அத்தோடு இவை பாதிப்புற்ற நிலையில் உள்ளோரின் ஒறுப்பு நிலைக்கு பிரதான காரணங்களாய் அமைவன.

நீண்ட ஆயுள், கல்வியறிவு, வருமானம் என்ற மூன்றினதும் கணித மதிப்பீடுகளைக் கொண்டு ஒறுப்புநிலைச் சுட்டிகளை வகுப்பது இம் முறையின் சிறப்பு அம்சம். இவை மூன்றையும் பின்னர் ஒன்று சேர்த்து HDI சுட்டி வகுக்கப்படும். PQLI சுட்டியை வகுத்தல் தொடர்பாக பின்பற்றப்பட்ட நடைமுறையே ஏறக்குறைய HDI யிலும் பின் பற்றப்பட்டது. கோட்பாட்டுப்படி மிகமோசமான நிலை (Worst case), சிறந்த நிலை (Best case) என்ற இரு நிலைகள் உள்ளன. HDI மதிப்பு பூச்சியம் முதல் ஒன்று என்ற வரையாக இருக்கும். யப்பான் நாடு மிகச் சிறந்த அடைவான =.996 என்ற நிலையிலும் நைகர் =.116 என்ற தாழ்நிலையிலும் இருப்பதை மதிப்பீடுகள் காட்டின. HDI மதிப்புகளின் கணிப்பீடு சிக்கலானது. இதுபற்றிய விபரங்கள் பற்றி வெளியே பெரிதாக அறிவு இல்லை. ஒப்பீட்டு முறையில் நாடுகளின் நிலை (Rank) என்ன என்பது பற்றியும், கால ஓட்டத்தில் நாடுகளின் நிலைமாற்றம் என்ன என்பது பற்றியுமே பெரும்பாலான மக்கள் கவனம் செலுத்தலாயினர்.

HDI யின் உலக நோக்கும் PQLI இன் உலக நோக்கும் ஒன்றில் இருந்து ஒன்று வேறுபட்டதாக இருந்த போதும் நாடுகளை நிலையின் படி வரிசைப்படுத்தலில் ஒற்றுமை இருந்தது. 1990 ஆம் ஆண்டின் மதிப்பீட்டின் படி யப்பான், சுவீடன், சுவிற்சர்லாந்து, நெதர்லாந்து, கனடா ஆகிய செல்வந்த நாடுகள் HDI அடைவில் முன்னணியில்

நின்றன. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் சுதந்திரச் சந்தை அமைப்புடைய ஹொங்கொங் (#22) சிங்கப்பூர் (#34) சிலி (#23) என்ற நிலையில் இருந்தன. கம்யூனிச யேர்மன் ஜனநாயகக் குடியரசு (கிழக்கு யேர்மனி) (#25) என்ற நிலையில் இருந்தது. சந்தைச் சீர்த்திருத்தங்கள் மேற்கொண்டு 12 வருடங்கள் கழிந்த பின்னர் ஆறு வருட சிவில் யுத்தத்தின் பிடியில் இருந்த இலங்கை (#47) நிலையில், இந்தியாவை விட முன்னிலையில் இருந்தது.

தென் ஆசியாவில் இலங்கைக்கு அடுத்த இரண்டாவது நிலையில் இந்தியா (#96) இருந்தது. ஆளொருவருக்கான மொத்தத் தேசிய வருமானத்தில் உயர் நிலையில் விளங்கிய மத்திய கிழக்கு நாடுகளில் கல்வியறிவு குறைந்த மட்டத்தில் இருந்ததனால் அவை பின்னணியில் இருந்தன. உதாரணமாக லிபியா (#63), சவுதிஅரேபியா (#66) ஓமான் (#82) என்பவை என்ற நிலைகளில் இருந்தன. இலங்கை மனிதவள அபிவிருத்தியில் நடுத்தரம் என்ற வகைக்குள் அமைந்தது. ஆபிரிக்காவின் சகாரப் பாலைநிலத்தை அண்டிய சகாரப் பிராந்திய நாடுகளில் இரண்டைத்தவிர ஏனையவை யாவும் மனிதவள அபிவிருத்தியில் கீழ்ப்படியில் இருந்தன.

மொறிஸ் எழுதிய நூல் (Measuring the conditions of the world's poor) பற்றி மேலே குறிப்பிட்டோம். இந்நூலில் அவர் குறிப்பிட்ட கொள்கைப் படிப்பினைகள் சிபார்சுகளோடு ஒத்தனவாகவே மனித வள அபிவிருத்தி தொடர்பான முடிவுகளும் இருந்தன. ஓரளவான மத்திம வருமான மட்டத்துடனே, மனிதவள அபிவிருத்தியில் திருப்தியான மட்டத்தை அடைதல் முடியும்; பொருளாதார வளர்ச்சிக்கும் மனிதவள முன்னேற்றத்திற்கும் நேரடித் தொடர்பு கிடையாது ஆகிய கருத்துக்கள் வலியுறுத்தப்பட்டன. ஒரு நாட்டிற்கு உள்ளே சராசரிகள் பல வகையான சமத்துவமின்மைகளை மறைக்கலாம். கிராமங்களிற்கும், நகரங்களிற்கும் இடையிலான வேறுபாடு, ஆண் பெண் சமத்துவமின்மை, ஏழை பணக்காரன் இடைவெளி என்பன சராசரிகளால் மறைக்கப்படுகின்றன. சர்ச்சைக்குரிய சில பொருளாதார திட்டங்களிற்கு நிதிவழங்குவதற்கு ஆதரவு தரும் வகையில் HDI புள்ளி விபரங்கள் பயன்படுத்தப்பட்டன. சனத் தொகைப் பெருக்கத்தை கட்டுப்படுத்தல், சமூகநலத் திட்டங்களிற்கு கூடிய நிதி ஒதுக்கீடுகளை வழங்குதல், பேண்தகு அபிவிருத்திக்கான சூழலியல் பிரச்சனைகளை

தீர்வு செய்தல் ஆகியன HDI புள்ளி விபரங்கள் மூலம் நியாயப் படுத்தப்பட்டன. மரபுவழி சிந்தனையின் படி உலக வங்கி செயற் பட்டது. ஐநாவின் இன்னொரு முகவர் அமைப்பான யு.என்.டி.பி யின் கருத்துக்களுக்கு மாறுபட்ட வகையிலேயே உலக வங்கியின் குழுவினர் செயற்பட்டனர். அந்த அமைப்பின் உலக அபிவிருத்தி அறிக்கைகளும் (World Development Reports) யு.என்.டி.பி யின் கருத்துக் களுக்கு மாறுபட்டனவாகவே இருந்தன.

மனிதவள அபிவிருத்திச் சுட்டியில் குறை காண விரும்புவோர் அதன் நுட்பவிபரங்களைப் பற்றிப் பேசுவதுண்டு. ஆனால், யுன். என்.டி.பி மனிதவள அபிவிருத்தி அறிக்கைகள் என்னும் ஆண்டு அறிக்கைகளை வெளியிட்டு HDI யினை நிறுவனமயப்படுத்தியது முக்கியமானதொரு பங்களிப்பு என்பதை மறுக்க முடியாது. உலக வங்கியின் 'உலக அபிவிருத்தி அறிக்கைகள்' (World Development Reports) தொடர்ந்தும் பொருளாதார வளர்ச்சி என்ற விடயத்தையே அழுத்தம் கொடுத்த வண்ணம் இருக்கும் போது, யு.என்.டி.பி யின் மனிதவள அபிவிருத்தி அறிக்கைகள் இதனை மறுதலித்துக் கொண்டிருப்பது முக்கியமானது. மனிதவள அபிவிருத்திக்கும் பிற முக்கிய விடயங்களுக்கும் உள்ள தொடர்பு பற்றியும் யு.என்.டி.பி அறிக்கைகள் தெளிவுபடுத்தின. உலகமயமாதல் (1992,1999 அறிக்கை கள்) மக்கள் பங்கேற்பு (1993) மனிதப் பாதுகாப்பு (1994) பால்நிலை (1995) வறுமை (1997) மனித உரிமைகள் (2000) தொழில்நுட்பம் (2001) ஆகியன இவ்வறிக்கைகளில் விவாதிக்கப்பட்டுள்ளன.

ஆண்டுதோறும் யு.என்.டி.பி மனிதவள அபிவிருத்தி அறிக்கை களை வெளியிடத் தொடங்கியதும் சில நாடுகளில் தத்தம் நாடுகளின் மனிதவள அபிவிருத்தி நிலைபற்றிய அறிக்கைகளைத் தயாரிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அரசுகளும், அரசுமட்டத்தில் இத்தகைய முயற்சியில் ஈடுபட்டன. உலக வங்கி கூட தன் அறிக்கை களில் ஒரு மாற்றத்தை வெளிப்படுத்தியது. பொருளாதார வளர்ச்சிக்கு மட்டும் முதன்மையான பங்கை வற்புறுத்தும் போக்கை உலக வங்கி கைவிட்டது. இருந்த போதும் இன்றும் கூட உலக வங்கி ஆளொரு வருக்கான மொத்த தேசிய வருமானம் என்னும் அளவுகோலையே பொருளாதார அடைவு மதிப்பீட்டுக்கு பயன்படுத்துகிறது. 'தெரிவு செய்யப்பட்ட அபிவிருத்திக் குறிகாட்டிகள்' என்ற வகையில் கூட

HDI யினை அது தன் அறிக்கைகளில் இதுவரை சேர்த்துக் கொள்ளவில்லை. 1991 ஆம் ஆண்டுக்கு பின்னர் ஐந்து உலக வங்கி அறிக்கைகளில் சில அபிவிருத்தி பிரச்சனைகள் பற்றி விசேடமாக ஆராயப்பட்டன. சூழல்(1992), சுகாதாரம்(1993), தொழிலாளர்(1995), நல்லாட்சி(1997), கல்வி(1998/1999) என்பனவே இந்த விடயங்கள். உலக வங்கியின் உலக அபிவிருத்தி அறிக்கை 1999/2000, 50 வருட கால அபிவிருத்தி அனுபவம் தொடர்பான நான்கு முக்கிய படிப் பினைகள் பற்றிக் குறிப்பிடுகிறது. அவற்றுள் 1). வளர்ச்சி தன் போக்கில் கீழ் மட்டங்களிற்குச் சுவறுவதில்லை. 2). அபிவிருத்தி மனிதத் தேவைகளை நேரடியாகக் குறிவைப்பதாக இருக்க வேண்டும் என்ற இரு படிப்பினைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. 1977 ஆம் ஆண்டில் அபிவிருத்தி அடைவை மதிப்பிடுவதற்கும் அளவிடுவ தற்கும் மாற்று உபாயங்களைக் கூறி அவற்றை நிறுவன மயப்படுத்தும் நடவடிக்கை தொடக்கப்பட்டது. இதற்கு மொரிஸ் பிரதான பங்களிப்பை வழங்கினார். அவரது நடவடிக்கைகளின் தாக்கம் இப்போது ஓரளவுக்கு உணரப்படுகிறது.

## மொத்தத் தேசிய வருமானம் என்னும் அளவுகோல் இன்னும் செல்வாக்குடையதாக இருப்பது ஏன்?

மாற்று உபாயங்களையும் வழிமுறைகளையும் வலுப்படுத்தும் முயற்சி ஓரளவுக்குத்தான் முன்னேற்றம் பெற்றது என்று நான் கூறுவதன் காரணம் என்ன? அபிவிருத்திக் கொள்கைகளை வகுப்பதிலும், வடிவமைப்பதிலும் இன்னும் கூட பொருளாதார வளர்ச்சி என்னும் அளவுகோல் முதன்மை இடத்தைப் பெறுவதைக் காணலாம். இது பற்றிய சான்றுகளை பட்டியல்படுத்த வேண்டிய தேவை இல்லை. இது வெளிப்படையானது. நியோலிபரலிசம் (Neo-Liberalism) என்னும் சந்தைநோக்கிய பொருளாதாரக் கொள்கைகள் என்பனவற்றைச் சார்ந்து ஒரு தொகுதியாகப் பார்க்கக் கூடிய கொள்கைகள் உள்ளன. இவற்றை 'வாசிங்டன் சம்மதம்' (Washington Consensus) என்று அடையாளப்படுத்திக் கூறும் வழக்கம் உள்ளது. 1980க்களிலும், 1990க் களிலும் மிகவும் சக்திவாய்ந்த நிதிவழங்கும் நிறுவனங்கள் சில வற்றால் சிபாரிசு செய்யப்பட்ட (சில வேளைகளில் திணிக்கப்பட்ட)

கொள்கைளை 'வாசிங்டன் சம்மதம்' என்ற பெயரால் அழைப்பர். உலக வங்கியின் பிரதம பொருளியலாளரான யோசப் ஸ்டிக்லிற்ஸ் (Joseph Stiglitz). *1998* ஆம் ஆண்டில் ஒரு விரிவுரையில் தெளிவாகவும், ஒளிவுமறைவின்றியும் இது பற்றி பின்வருமாறு விளக்கிக் கூறினார்:

> வாசிங்டன் சம்மதம் என்ற அறிவுத்துறைக் கோட்பாட்டின் வெற்றி அதன் எளிமையில் தங்கியுள்ளது. இதன் கொள்கைச் சிபாரிசுகளை எளிமையான கணக்கியல் வரை சட்டங்களுக்கு அமைய பொருளிய லாளர்கள் இலகுவாக நடைமுறைப்படுத்தலாம். பணவீக்கம், பணநிரம்பல் வளர்ச்சி, வட்டிவீதம், வரவு செலவுத்திட்டக்குறைவு, வர்த்தகக்குறை ஆகிய சில குறிகாட்டிகள் இக்கொள்கைச் சிபாரிசு களுக்கு ஆதாரமாக அமையக் கூடியன. சில சந்தர்ப்பங்களில் பொருளியலாளர்கள் ஒரு குறிப்பிட்ட நாட்டிற்கு நேரடியாகவே விமானத்தில் போய் இறங்கி தாமே நேரடியாக இந்தத் தரவுகளைப் பரிசீலித்துப் பார்த்துச் சில மணித்தியால நேரத்திற்குள்ளாகவே பொருளியல் சீர்த்திருத்தங்கள் பற்றிய கொள்கைச் சிபாரிசுகளைத் தீர்மானித்து விடுதல் முடியும்.

'வாசிங்டனுக்குப் பிந்திய சம்மதம்' (Post Washington Consensus) ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது. இதனை வரைந்த பொருளியலாளர் குழுவில் ஸ்டிக்லிற்ஸ் மிகவும் செல்வாக்குள்ள உறுப்பினராக இருந்தார். பேரினப் பொருளியல் உறுதிப்பாடு என்பதற்கும் அப்பால் 'விலைகளை சரியாகத் தீர்மானித்தல்' என்னும் விடயத்தில் 'வாசிங்டனுக்கு பிந்திய சம்மதம்' கவனம் செலுத்துகிறது. அத்தோடு சிறந்த நிதிக்கட்டுப்பாடும், நிர்வாகமும், போட்டி, தொழில்நுட்பத்தை மாற்றுதல், வெளிப்படைத்தன்மை ஆகிய விடயங்களும் அழுத்தம் பெற்றுள்ளன. இருந்தபோதும் வாசிங்டன் சம்மதம் பற்றிய விமர்ச னத்தை முன்வைக்கும் பொருளியலாளர்கள் பொருளாதார வளர்ச்சியையே இலக்காக முதன்மைப்படுத்துகிறார்கள். மொத்தத் தேசிய உற்பத்தியை உயர்த்துதல் பொருளாதார வளர்ச்சி அடைவுக்கான அளவுகோலாகவும் அவர்களால் முதன்மைப்படுத்தப்படுகிறது.

HDI அபிவிருத்தி திட்டமிடலில் முதன்மையான இடத்தைப் பெறத் தவறியது ஏன்? மனிதவள அபிவிருத்தி, விருத்திக்கான குறியீடு என்ற அளவில் குறைந்தளவு முக்கியத்துவம் உடையதாக ஆகிய

தல்லவா? இது ஏன் நிகழ்ந்தது? இப்போது பரவலான ஏற்புடமை உள்ள குறிகாட்டிகள் எவை? அறிக்கைகளில் பொதுவாக எக் குறிகாட்டிகள் முக்கியம் பெறுகின்றன? இக்குறிகாட்டிகளின் பொது இயல்புகள் என்ன? என்ற கேள்விகளை நாம் கேட்க வேண்டும். இப்பொது இயல்புகளை நாம் அறிந்து கொண்டால் HDI யில் இப்பொது இயல்புகளில் எதுவும் இல்லை என்பது தெரியவரும். இன்று பரவலாக ஏற்புடமை பெற்றுள்ள குறிகாட்டிகளின் பொது இயல்புகள் சில வருமாறு:

1. வரைவிலக்கணம் தெளிவாக இருத்தல்,உபயோகத்திற்கும் செயற்பாட்டுக்கும் இலகுவானதாக இருத்தல், எளிதில் புரிந்து கொள்ளக் கூடியதாகஇருத்தல்.

2. முறைப்படுத்தப்பட்ட ஒரு கோட்பாட்டாக உருவாக்கப் பட்டிருத்தல்.

3. அக்கோட்பாடு எதிர்வு கூறக் கூடியதாக இருத்தல்.

4. குறிகாட்டிகளையும், அவற்றின் மதிப்பீட்டு முறைகளையும் விளக்குவதாயும் கொள்கை வகுப்பிற்கு உதவக் கூடிய கோட்பாடாகவும் இருத்தல்.

5. நிறுவனப்படுத்தப்பட்ட பல் துறைகளையும் சார்ந்த நிபுணர் களின் பங்களிப்பு இருத்தல். கோட்பாட்டை திருத்துதல், செப்பமிடல், மேம்படுத்தல் ஆகியனவற்றிற்கு உதவுபவர் களாகப் பல்துறை நிபுணர் ஆதரவு இருத்தல்.

6. நம்பத்தகுந்த, தொழில்சார் நிபுணத்துவம் மிகுந்த நிதிவளம் உடைய நிறுவனங்களின் ஆதரவு. இந்நிறுவனங்களிற்கு உத்தியோக ஆதரவு இருத்தல். இந்நிறுவனங்கள் தொடர் புடைய தரவுகளைத் திரட்டி கொள்கை வகுப்பாளர்களுக்கு வழங்கக் கூடியனவாய் இருத்தல்.

ஒரு குறிக்காட்டி ஏற்புடமையைப் பெறத் தொடங்கியதும் தானாகவே அது தனது அந்தஸ்தைத் தேடிக் கொள்ளும், மேற்குறித்த குண இயல்புகள் அதன் பாகமாக அமைந்து அதனை மேம்படுத்திச் செல்லும். குறித்த குறிகாட்டி ஒரு கோட்பாடு, எண்ணக்கரு, தொழில்

நுட்ப கருவி என்ற தகுதிகளை பெறும்வகையில் அதன் முன்னேற்றம் அமையுமிடத்து அதன் பொருத்தப்பாடு ஏற்கப்படும். கொள்கை வகுப்பில் அதன் தேவையும் பயன்பாடும் அதிகரிக்கும். தேசிய வருமானக் கணக்கீடும் அதனோடு இணைந்த மொத்த தேசிய வருமானம் என்ற குறிகாட்டியை பொருளாதார அடைவை மதிப் பிடும் கருவியாகக் கொண்டதும் இவற்றின் தகுதியை உயர்த்தின. இவை ஏன் முக்கியம் பெற்றன என்பதும் புரிந்துக் கொள்ளக் கூடியதாக உள்ளது. மக்களை மையப்படுத்தும் குறிகாட்டிகளுக்கு இது போன்ற ஆதரவும், நிதி ஏனைய வளங்களின் உதவியும், 1930 க்களிலேயே கிடைத்திருந்தால் மனிதவள அபிவிருத்திக் குறிகாட்டி அல்லது சுட்டி இன்று மிகுந்த செல்வாக்கு உடையதாக இருந்திருக்கும்.

இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பிற்பட்ட காலத்தில் கைத்தொழில் விருத்தியுறாத வறிய நாடுகள் எதிர்கொண்ட முக்கிய பிரச்சினைகள் பல இருந்தன. இந்த பிரச்சனைகளுக்கும் தேசிய வருமானக் கணக்கீடு என்ற முறை எடுத்துக் காட்டிய தேவைகள், பிரச்சனைகளுக்கும் தொடர்பு இருக்கவில்லை. இருந்த போதும் தேசிய வருமானக் கணக்கீட்டு முறையை இந்த வறிய நாடுகளின் பொருளாதாரம் பற்றிய மதிப்பீட்டில் உபயோகித்தார்கள். இதற்குக் காரணம் அது பெற்றிருந்த ஆதரவும், செல்வாக்கும் ஆகும். ‘மார்ஷல் திட்டம்’ குறைகள் எதுவும் இல்லாத வெற்றிக் கதையாக கூறப்பட்டது. ‘மார்ஷல் திட்டம்’ பற்றிய மதிப்பீட்டில் தேசிய வருமானக் கணக்கீட்டு கருவிகள் உபயோகிக் கப்பட்டதும் அதன் மதிப்பை உயர்த்தியது. மேற்கு ஐரோப்பா, யப்பான் ஆகிய நாடுகளின் இந்த ‘வெற்றிக் கதைகள்’ ஆசியா, ஆபிரிக்கா, லத்தின் அமெரிக்கா ஆகிய வறிய தேசங்களின் அபிவிருத்திக் கொள்கைகளை வகுப்பதில் பிரயோசனப்படா என்பதை அபிவிருத்தி செயற்பாட்டாளர்கள் அனுபவம் மூலம் கற்றுக் கொண்டார்கள். இந்த வறிய நாடுகள் மேற்கு ஐரோப்பாவையும், யப்பானையும் போன்று பொருளாதாரத்துறையில் மீட்சி பெறுவது இலகுவான காரியமல்ல என்பது அவர்களுக்குப் புலனாயிற்று. அதுமட்டுமல்ல வறிய நாடுகளின் பிரச்சனைகளை ‘மார்ஷல் திட்டம்’ போன்ற வகைத் திட்டங்கள் மோசமடையச் செய்யும் என்பதையும் உணர்ந்தனர். இருந்த போதும் மார்ஷல் திட்டம் வழங்கிய உலக நோக்கு, அது

முன்வைத்த மதிப்பீட்டு அளவை முறைகள், அதன் அபிவிருத்தி மாதிரிகள் இன்றும் மிகுந்த செல்வாக்கு உடையனவாக விளங்கு கின்றன.

மதிப்பீட்டு முறைகளில் சிறந்தது எது? என்ற கேள்விக்கான விடை இன்று வரை தெளிவாகப் பெறப்படவில்லை. இக்கேள்விக்கு பதிலாக, 'அபிவிருத்தியின் அடைவை மதிப்பிடுவதில் எந்த மதிப்பீட்டு முறைகள் தற்போது செல்வாக்குப் பெற்றுள்ளன' என்ற கேள்விக்கான பதிலையே நாம் பெற்றுள்ளோம். மொத்தத் தேசிய உற்பத்தி (GNP) என்னும் மதிப்பீட்டு முறைதான் செல்வாக்கு உடையதாக இருக்கிறது என்ற பதில் எமக்குக் கிடைக்கிறது. இந்த மதிப்பீட்டு முறை முன்வைக்கும் உலக நோக்கு சிறந்ததொன்றாக இருப்பதனால் தான் அது செல்வாக்கு உடையதாக இருக்கிறது என்று கூறலாமா? இல்லை. அதன் அறிவுத்துறை வரலாறு, அதற்குக் கிடைத்த நிறுவனமயப்பட்ட ஆதரவின் வரலாறு என்பன தான் அதன் செல்வாக்குக்குக் காரணம். அந்த உலக நோக்கு வறிய நாடுகளின் பிரஜைகளின் தேவைகள், அவர்கள் செல்லவேண்டிய பாதை என்பன பற்றிய பொருத்தமான கேள்விகளை விசாரணைக்காக முன்வைக்கிறதா என்று பார்த்தல் வேண்டும். இன்று நடைமுறைப்படுத்தப்படும் சுதந்திரச்சந்தை மாதிரிகளும் (Free Market Models) இன்று மதிப்பிழந்து போன அரசு மைய அபிவிருத்தி மாதிரிகளும் (State Centric Models) மக்களின் அபிப்பிராயங்கள் பற்றியோ அவர்களின் உணர்வுகளைப் பற்றியோ கவனத்தில் கொண்டவை அல்ல என்பது வெளிப்படை. மனிதவள அபிவிருத்திச் சுட்டியை எடுத்துக் கொண்டாலும் அது நிபுணர்களின் கருத்துக்களின்படி வடிவமைக்கப்பட்ட ஒன்று என்பது தெளிவு. மக்களின் அபிப்பிராயங்கள் என்பதே முக்கியம். மேலிருந்து திணிக்கப்படும் இந்த அபிவிருத்தி மாதிரிகள் தேசிய உற்பத்தியை (GNP) அதிகரிக்க வேண்டும் என்றோ அல்லது மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்த வேண்டும் என்றோ கூறும் போது மக்களிடம் இருந்து ஆதரவைப் பெற முடியாமல் போவதும், ஒரு வகை எதிர்ப்பு உணர்வினை மக்களிடம் தோற்றுவிப்பதும் ஆச்சரி யத்துக்குரிய விடயங்கள் அல்ல.

## 'வெற்றிகரமான அபிவிருத்தி' பற்றிய பரிசீலனை

மக்களின் சேமநலன் பற்றியும், அவர்களின் உணர்வுகள் பற்றியும் கவனத்தில் கொள்ளும் முறையில் 'வெற்றிகரமான அபிவிருத்தி' வழியினை வரையறை செய்து கொள்ளுதல் முடியுமா? இதன் மூலம் தற்போது நடைமுறையில் உள்ள மதிப்பீட்டு முறைகளின் குறைகளை நிவர்த்தி செய்ய முடியுமா? இது முக்கியமான ஒரு கேள்வி. நலமான வாழ்க்கை பற்றிய அகநிலைப்பட்ட நோக்கு (Subjective Well being) என்பதற்கு அழுத்தம் கொடுப்பதன் மூலம் 'வெற்றிகரமான அபிவிருத்தியை' வரையறை செய்தல் சிறந்தது, பயன்தருவது என்று நான் கருதுகிறேன். நலமான வாழ்க்கை என்பதனை பற்றி மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதனையே நலமான வாழ்க்கை பற்றிய அகநிலைப்பட்ட நோக்கு குறிப்பிடுகிறது. இதனைப் பின்வருமாறு வரையறை செய்து கொள்ளலாம்.

'ஒரு நாட்டின் மக்களால் நல்லது என்று பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்ட வாழ்க்கை நிலையே வெற்றிகரமான அபிவிருத்தி எனப்படும்.இது அவர்களின் தேவைகளுக்கும், அபிலாஷைகளுக்கும் வடிவம் கொடுக்கும் வாழ்க்கை நிலையாக இருக்கும். அவர்கள் இத்தகு வாழ்க்கை நிலை பற்றிக் கொள்ளும் திருப்தி உணர்வு, அவர்கள் வாழும் உண்மையான வாழ்க்கைச் சூழ்நிலை, அவர்களுக்கும் அவர்களது பிள்ளைகளுக்கும் எதிர்காலம் எத்தகைய வாய்ப்புக்களை வழங்கப் போகிறது என்பனவே இத்தகு வெற்றிகரமான அபிவிருத்தியை மதிப்பிடும் அளவுகோல்களாகும்.'

மேற்குறித்த வரைவிலக்கணம் தற்போது நாம் அபிவிருத்தி பற்றி உபயோகிக்கும் சொல்லாடல்களுடனும், அளவுகோல்களுடனும் தொடர்புடையதாக இருக்கிறதா என்று பார்த்தல் வேண்டும். ஒன்றோடு ஒன்று போட்டியிடும் வரைவிலக்கணங்களும், கோட்பாடுகளும் 'அபிவிருத்தி' 'வெற்றிகரமான அபிவிருத்தி' என்பனவற்றை வெவ்வேறு விதமாக வரையறை செய்கின்றன. இவை பற்றி ஏராளம் நூல்கள் உள்ளன. பெரும்பாலானோர் இந்த இரண்டு சொற்களையும் ஒரே கருத்தில் தான் உபயோகிக்கின்றனர். உதாரணமாக சர்வதேச அபிவிருத்திக்கான சங்கம் (SID) எனப்படும் அமைப்பின் முகவர் நிறுவனமான 'யுஎஸ்எயிட்' (USAID) இவ்விரண்டையும் ஒரே கருத்

திலேயே உபயோகிப்பதைக் காணலாம். 'யுஎஸ்எயிட்' முன்னணி வகிக்கும் அரச சார்பற்ற அமைப்பு. இங்கு பல அறிஞர்களும் அபி விருத்திச் செயற்பாட்டாளர்களும் பணிபுரிகிறார்கள். இந்நிறுவனம் இத்தொடர்களை ஒரே கருத்தில் உபயோகிப்பது குழப்பம் தருவதாக உள்ளது என்றே கூறவேண்டும். ஏனெனில் 'அபிவிருத்தி' 'வெற்றி கரமான அபிவிருத்தி' 'தோல்வியுற்ற அபிவிருத்தி' ஆகியவற்றை நாம் வேறுபடுத்தி வரையறை செய்தல் அவசியமானது.

அபிவிருத்தியை (அது வெற்றிகரமானதாகவோ, தோல்வியுற்ற தாகவோ இருக்கலாம்). ஒரு தொடர் நிகழ்வாக பார்க்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட தருணத்தில் கமராவினால் பிடிக்கப்படும் காட்சியாக அல்லாமல், கால ஓட்டத்தில் அபிவிருத்தியின் போக்கை ஒரு திரைப் படம் போன்று பார்க்க வேண்டும். ஆங்கிலத்தில் உபயோகிக்கப்படும் இரு தொடர்கள் இக்கருத்தை மிகச் சிறப்பாக வெளிப்படுத்துகின்றன. 'Development Trajectory' என்பது ஒரு சொற்தொடர். 'Development Scenario' என்பது இன்னொரு தொடர். ('Development Trajectory' என்பதை 'அபிவிருத்தித் திசைவழி' என்றும் 'Development Scenario' என்பதை 'அபிவிருத்தியின் விரிகாட்சி' என்றும் தமிழில் மொழி பெயர்த்துக் கொள்ளலாம்.)

அபிவிருத்தி திசைவழி அபிவிருத்தியின் பாதையையும், அதன் தடங்களையும் சுட்டிக் காட்டுவதாக இருக்கும். நாட்டின் அரசியல் பொருளாதாரம் செல்லும் பாதை, அரசியல் புவியியலின் பாதை, சமூக ஒழுங்கமைப்பின் பாதை என்பனவற்றை அபிவிருத்தித் திசை வழி எடுத்துக் காட்டும். அபிவிருத்தி திசைவழியின் எல்லா அம்சங் களையும் அளவீட்டு முறைகளால் அளவிடுதல் முடியாது. இருந் தாலும் அவற்றின் பல அம்சங்களை கணிதமுறைச் சுட்டிகளாலும் வரைபடங்களாலும் காட்டலாம். எமது மனத்திரையில் காட்சியாகக் கண்டுணரலாம். உதாரணமாக ஆளொருவருக்கான மொத்த தேசிய வருமானம், சிசுமரணவீதம், இயற்கைக் காடுகளின் அழிவு வீதம் என்பனவற்றினை வரைபடமாக வரைந்து காட்டலாம். இவை போன்ற கணித முறைக் கணக்கீடுகளும், சுட்டிகளும், வரைபடங்களும் சர்வ தேச அபிவிருத்திக் கொள்கை ஆய்வுக்கும் (Policy Analysis) முறைமை ஆய்வுக்கும் (Systems Analysis) மிகவும் அவசியமானவை. அபிவிருத்தியின் திசை வழியையும் அதன் பாதையின் தடங்களையும்

யார் பார்க்கிறார்கள், என்ன நோக்கத்தோடு பார்க்கிறார்கள் என்பது முக்கியம். குடும்பத்திட்டமிடல் என்ற விடயத்தை உதாரணத்திற்காக எடுத்துக் கொள்வோம். பிறப்பு வீதத்தின் போக்கு, குடும்ப உறுப்பினர்களின் சராசரி எண்ணிக்கை என்ற குறிகாட்டிகள் இவ்விடயத்தில் முக்கியமானவை. ரூமேனியாவில் Ceasescu ஆட்சியில் குடும்பத்திட்டமிடல் தடைசெய்யப்பட்டது. ஆனால், சீனாவில் ஒரு குடும்பத்திற்கு ஒரு பிள்ளை என்ற கட்டுப்பாட்டுக் கொள்கை நடைமுறையில் உள்ளது. ஆகவே, குடும்பத்திட்டமிடல் பற்றிய திசைவழியை இருநாடுகளின் அபிவிருத்திச் செயற்பாட்டாளர்களும் பார்க்கும் முறை வித்தியாசப்படும் என்பது தெளிவு. அபிவிருத்திக் கொள்கைகளின் திசைவழியைப் பற்றி என்ன கூறமுடியும்? அபிவிருத்தி கொள்கைகள் செயல்வடிவம் பெறும் முறைகள் சில உள்ளன. முடிவுகள் (Decisions), செயல்திட்டங்கள் (Programs) கருத்திட்டங்கள் (Plans) தந்திரோபாய நடவடிக்கைகள் (Strategies) என்பன இவற்றுள் சில. அபிவிருத்தியின் திசைவழி என்ற கருத்தை இவை தொடர்பாகப் பிரயோகிக்கும் போது எதனைக் கருதுகிறோம்? முடிவுகள், செயல் திட்டங்கள் போன்றன எதிர்பார்த்த திசைவழியில் செல்கின்றனவா? என்பதையே பார்க்கின்றோம். அமைப்பியல் சீராக்கம், குடும்பத் திட்டமிடல், ஜனநாயக மயமாக்கல், செயல்திட்டங்கள், போதைப் பொருள் தடுப்பு, போன்றவை கொள்கைத் திட்டங்களிற்குச் சில உதாரணங்களாகும். கொள்கைகள் எதிர்பார்த்த விளைவுகளைத் தருமாயின் அவை வெற்றிகரமான கொள்கை என்றும், எதிர்பார்த்த விளைவுகளைத் தராதவிடத்து, தோல்வியடைந்தவை என்றும் கூறுகிறோம். இருந்தபோதும் கொள்கைகளினால் பயன்பெறுவோர் எவரோ அவர்களிடை பரவலாக என்ன கருத்து உள்ளது என்பது பெரும்பாலும் கவனத்தில் கொள்ளப்படுவதில்லை.

ஒரு நாட்டின் அபிவிருத்தியின் விரிகாட்சி என்னும் விடயம் பற்றி அடுத்து நோக்குவோம். பல்வேறு அபிவிருத்தித் திசை வழிகளின் ஒட்டுமொத்தமான விளைவுகளின் (sum-total effects) தொகுப்புத் தான் அபிவிருத்தியின் விரிகாட்சி. சில அபிவிருத்தி திசைவழிகள் ஒன்றுக்கு ஒன்று மாறுபட்ட விளைவுகளைக் கொண்டிருக்கும்; ஒன்றின் விளைவை மற்றொன்று இல்லாததாக ஆக்கும். உதாரணமாக

நாட்டின் விவசாயத்துறை வெளிநாட்டு உதவியால் நேர்கணியமான பயன்களை பெறுகிறது எனக் கொள்வோம். அதேவேளை வரி விதிப்பும், அனுமதிப்பங்கு முறைக் கட்டுப்பாடுகளும் எதிர்க்கணிய மான பாதிப்புக்களை ஏற்படுத்தலாம். இதுபோன்ற இக்கட்டான நிலை ஆபிரிக்காவின் சகாரா பிராந்தியத்தின் கரும்புச் செய்கை யாளர்களான விவசாயிகளினால் எதிர்கொள்ளப்படுகின்றது. ஒட்டு மொத்த விளைவுகளை துல்லியமாகக் கணிப்பீடு செய்வது இலகு வான தொன்றல்ல. இருந்த போதும் மக்களின் ஒட்டுமொத்தமான புலக்காட்சியையும் (Per-ception) அவர்களின் அபிப்பிராயங்களையும் ஒட்டுமொத்த விளைவுகள்தான் உருவாக்குகின்றன. அபிவிருத்திக் கொள்கைகள் வெற்றிகரமான பாதையில் செல்கின்றனவா அல்லது தோல்வி அடைகின்றனவா என்பது மக்களின் சிந்தனையில் ஒட்டு மொத்த விளைவுகள் என்ன பதிவுகளை ஏற்படுத்துகின்றன என்பதைப் பொறுத்தே இருக்கும். ஆபிரிக்காவின் கரும்பு உற்பத்தியாளர்களின் நலமான வாழ்வு பற்றிய அகநிலைப்பட்ட உணர்வு எத்தகையது எனபதே முக்கியம். இதனை மதிப்பீடு செய்வதில் இதுவரை அக்கறை செலுத்தப்படவில்லை என்றே கூறவேண்டும்.

இப்பொழுது வெற்றிகரமான அபிவிருத்தியின் விரிகாட்சி பற்றிய எமது வரைவிலக்கணத்தை மீளவும் ஒருமுறை நோக்குவோம். 'ஒரு நாட்டின் மக்களால் நல்லது என்று பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்ட வாழ்க்கை நிலையே வெற்றிகரமான அபிவிருத்தி எனப்படும். இது அவர்களின் தேவைகளுக்கும், அபிலாஷைகளுக்கும் வடிவம் கொடுக்கும் வாழ்க்கை நிலையாக இருக்கும்' என்று எமது வரைவிலக்கணத்தில் கூறினோம். மக்கள் எவ்விதமாகப் பார்க்கிறார் கள், அவர்களின் பார்வையின் மனப் பதிவுகள் யாவை என்பதைப் பொறுத்தே அபிவிருத்தியின் விரிகாட்சி வெற்றிகரமானதாக அமைந்ததா அல்லது தோல்வியில் முடிந்ததா என்பது தீர்மானிக் கப்படுகிறது. ஒரு அபிவிருத்தி விரிகாட்சியின் உள்ளார்ந்த இயல்பு களாக வெற்றியோ அல்லது தோல்வியோ இருப்பதில்லை. இவை புறநிலை அம்சங்கள் அல்ல. ஆதலால் வெளியில் இருந்து பிறரால் வெற்றியையும், தோல்வியையும் புகுத்தவும் முடியாது.

எமது வரைவிலக்கணத்தின் மீதி அரைப்பகுதி இவ்வாறு உள்ளது. '........அவர்கள் இத்தகு வாழ்க்கை நிலை பற்றிக் கொள்ளும் திருப்தி உணர்வு, அவர்கள் வாழும் உண்மையான வாழ்க்கைச் சூழ்நிலை, அவர்களுக்கும் அவர்களது பிள்ளைகளுக்கும் எதிர்காலம் எத்தகைய வாய்ப்புக்களை வழங்கப் போகிறது என்பனவே இத்தகு வெற்றிகரமான அபிவிருத்தியை மதிப்பிடும் அளவு கோல்களாகும்.' இங்கே ஒரு கால எல்லை என்ற விடயம் அழுத்தம் பெறுவதைக் காண்கின்றோம். நிகழ்காலம் ஆகிய இன்று, எதிர்காலம் என்ற நாளை என்னும் கால எல்லை அபிவிருத்திச் செயற்பாட்டாளர்களுக்கு விடுக்கப்படும் ஒரு சவாலாகவே உள்ளது. அபிவிருத்தியின் விரிகாட்சியின் வெற்றி தோல்விகளை மதிப்பிடும் பொழுது ஒட்டுமொத்த விளைவுகளை கருத்தில் கொள்ள வேண்டும். கூட்டல் கழித்தல்களைச் செய்தல் வேண்டும். இன்று உள்ளதையும் நாளை பெறப்போவதையும் இழக்கப்போவதையும் மதிப்பிட வேண்டும். இன்றைய தலைமுறை பெறும் நன்மைகள், பயன்கள் எவை? இம்மக்களின் பேரப்பிள்ளை கள் அடுத்தடுத்த தலைமுறையில் என்ன நன்மைகளையும், பயன் களையும் பெறப் போகிறார்கள் என்பனவும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

அபிவிருத்தியை மதிப்பிடும் மேற்குறிப்பிட்ட முறை குறித்து மிக அண்மைக்காலம் வரை அறிஞர்கள் மத்தியில் விவாதிக்கப் படவில்லை. சிறப்புமிகு இந்த மதிப்பீட்டு முறை பிரயோகிக்கப் படுவதற்கான முயற்சியும் இடம் பெறவில்லை. இருந்த போதும் சில அறிஞர்கள் கடந்த பத்தாண்டு கால எல்லையுள் இவ்வகை மதிப்பீடு பற்றியும் இது சார்ந்த விடயங்கள் குறித்தும் தீவிர அக்கறையுடன் ஆராய்ந்திருக்கிறார்கள். றொபர்ட் சேம்பர்ஸ் (Robert Chambers)' அர்ட்டுரோ எஸ்கோபர் (Arturo Escobar) 'யோன் ப்பிரீட்மன் (John Friedman)' டேவிட் கொர்ட்டன் (David Korten) ஆகியோர் இவர்களுள் குறிப்பிட்டு சொல்லப்பட வேண்டியோர். இவர்கள் மேலிருந்து கீழ் நோக்கியதான அபிவிருத்தியின் (Top Down Development) குறைகளை எடுத்துக் காட்டியுள்ளனர். அரசியல்வாதிகளின் பணி இலக்கு மக்களே, அவர்கள் மானிடப் பண்புகள் உள்ள மனிதப்பிறவிகள், அவர்களின் உலகநோக்கு மிகவும் சிக்கலான

தன்மையுடையது. அவர்களின் வேறுபடும் உலக நோக்கை புரிந்து கொள்ளாமல் அரசியல்வாதிகள் செயற்படுவது பேராபத்தானது என்பதை இந்த அறிஞர்கள் எடுத்துக் கூறி எச்சரித்துள்ளார்கள். 'எமது தனிப்பட்ட ஆற்றலுக்கு ஏற்ற வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும் சுதந்திரம்' என்று நோபல்பரிசு பெற்ற அமார்த்திய சென் என்ற அறிஞர் கூறிய விடயம் அபிவிருத்தியின் முதன்மையான முடிபொருளாக-விளைவாக-இருக்கவேண்டும். அதுமட்டுமன்று, அபிவிருத்தியை அடைவதற்கான பிரதான கருவியாகவும், வழியாகவும் கூட இது இருத்தல் வேண்டும். பொருளாதார குறிகாட்டிகளிலும், மனிதவள அபிவிருத்திக் குறிகாட்டிகளிலும் காட்டப்படும். அக்கறையின் அளவுக்கு நலமான வாழ்க்கை பற்றிய அகநிலைப்பட்ட உணர்வு தொடர்பாக மதிப்பீடு செய்வதில் அக்கறை காட்டப்படுவதில்லை. இருந்த போதும், ஓரளவு முன்னேற்றம் இவ்விடயத்தில் அடையப் பெற்றுள்ளது என்று கூறலாம்.

இங்கே நாம் குறிப்பிடும் நலமான வாழ்க்கை குறித்த அகநிலை (Subjective well being) மிகவும் கவர்ச்சியானதொரு கருத்தாகவும் வெற்றிகரமான அபிவிருத்தியை மதிப்பிடுவதற்குக் கொள்கையள வில் ஏற்கக் கூடிய ஒரு கருத்தாகவும் உள்ளது. இருப்பினும் இது நடைமுறைச் சாத்தியமானதா? இதைப் பிரயோகித்தல் சாத்தியமா? என்ற கேள்வி எழுகிறது. தற்போது கடைப்பிடிக்கும் மதிப்பீட்டு முறைகளை இது மேம்படுத்துவதாய் இருக்குமா? இதற்கு எனது விடை 'ஆம்' என்பதாகும். ஏன் அவ்வாறு நான் விடையிறுக்கின்றேன் என்பதற்கான காரணங்களைப் பார்ப்போம்.

1. மக்களின் தேவைகள் அபிலாஷைகள் குறித்து அவர்கள் என்ன கருதுகிறார்களோ அதற்கு ஏற்ப அபிவிருத்தி நட வடிக்கைகள் அமைய வேண்டும் என்பது பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அத்தோடு இது ஜனநாயக கோட் பாட்டிற்கு ஏற்புடையதுமாகும். இதனை முதலாவது காரண மாகக் குறிப்பிட விரும்புகிறேன். கொள்கை வகுத்தலிலும் மதிப்பீடு செய்வதிலும் மக்களின் நலமான வாழ்க்கை பற்றிய அகநிலை இப்பொழுது கருத்தில் எடுக்கப்படுவதில்லை. ஜனநாயகத் தேர்தல்கள் தான் மக்களின் அகநிலை விருப்புக்கள்

பற்றிய மதிப்பீட்டுக்கான பிரதான வழிமுறையாக இன்று உள்ளன. ஆனால், தேர்தல்கள் முழுநிறைவான மதிப்பீட்டு முறையென்று கொள்ள முடியாதவை.

2. நலமான வாழ்க்கை பற்றிய மக்களின் அகநிலை என்பதற்கும் தீவிர வன்முறை மோதல்களுக்கும் தொடர்பு உள்ளது என்பது வெளிப்படை. தாம் வாழ்க்கையில் எவற்றை விரும்பு கிறார்களோ, தமக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டியன எவையோ அவைகள் கிடைக்கவில்லை என்பதை உணரும் போது இளைஞர்கள் வன்முறையை நாடுகிறார்கள். போராட் டத்திற்கு தயாரான வயதில் உள்ள இவ்விளைஞர்கள் தீவிர வாதக் குழுக்களின் குரல்களுக்கு செவி சாய்ப்பவர்களாகவும் வன்முறை வழியில் செல்வோராகவும் இருக்கின்றனர்.

3. மக்களின் அகநிலை உணர்வுகளில் ஏற்படும் மாறுதல்களை சிறப்பாக கணிப்பிடவும் பதிவு செய்யவும் முடியுமாயின் முன் எச்சரிக்கை சமிக்ஞை முறையினை அமைத்துக் கொள்ள முடியும். தீவிரவாதம் தோன்றப் போவது பற்றியும், வன்முறை மோதல்களின் வெடிப்புக்கான சாத்தியம் பற்றியும் முன் எச்சரிக்கைகளை பெற்றுக் கொள்ளும் வழிமுறைகளைத் தாபித்துக் கொள்ளலாம். நலமான வாழ்க்கை பற்றிய அக நிலையில் ஏற்படும் மாற்றங்களைத் தெரிந்து கொண்டால் தோல்வியுறும் கொள்கைத் திட்டங்களில் திருத்தங்களைச் செய்து கொள்ளுதலும் முடியும். அபிவிருத்திச் செயற்பாட் டாளர்கள் எந்தெந்த விடயங்களில் பாதுகாப்புத் துறையினரின் ஒத்துழைப்போடு செயற்படுதல் வேண்டும் என்பதையும் இதன் மூலம் கண்டு கொள்ளலாம்.

நலமான வாழ்க்கை பற்றிய அகநிலை அபிவிருத்தியின் இலக்காக ஏற்கப்படுதல் பற்றிய விபரிப்பு இந்த நூலின் நோக்கு எல்லைக்கு அப்பாற்பட்டது. அதனால் அதனை விபரிப்பதைத் தவிர்த்துள்ளேன். மக்களின் அகநிலை பற்றிய கவனம் செலுத்தப்படாத விடத்து அபிவிருத்தி எவ்வாறு எதிர்மறை விளைவுகளைத் தரும், சமூகம் கூடிய விலையைக் கொடுக்க வேண்டி ஏற்படும் என்பதற்கான சான்று

களையே இந்நூலில் தந்துள்ளேன். இச்சான்றுகள் உணர்த்தும் முக்கிய செய்தி வெற்றிகரமான அபிவிருத்தி பற்றி நாம் கவனம் செலுத்த வேண்டும் என்பதே. வெற்றிகரமான அபிவிருத்தி என்றால் என்ன? அதனை எப்படி மதிப்பிடலாம், அளவிடலாம் என்பது குறித்து மீளாய்வு செய்தல் இன்றைய முதன்மையானதும், அவசியமானதுமான தேவையாகும்.

# குறிப்புக்கள்

## அத்தியாயம் 1

1. 'கொடிய சிவில்யுத்தம்' என்பது ஒரு தொடர்ச்சியுடைய புவியியல் எல்லைக்குள் வாழும் மக்களுக்கு இடையிலானது; அவர்கள் ஒரே அரசியல் அலகுக்குள் யுத்தம் முடிந்த பின்பும் தொடர்ந்து ஒருவரோடு மற்றவர் உறவு கொண்டு வாழ வேண்டியவர்கள் (Licklider 1993:9).

   நான் சில இடங்களில் 'சிவில் யுத்தம்', 'வன்முறை மோதல்' என்ற இரு தொடர்களை ஒரே அர்த்தத்தில் உபயோகித்துள்ளேன். இலங்கையில் பிரபலமாய் இருக்கும் 'இனக்குழும மோதல்' என்ற தொடரை விட இவை பொருத்தமானவை என்று கருதுகிறேன். ஏனெனில் இலங்கையில் இரண்டு சிவில் யுத்தங்கள் இடம்பெற்றன. இவற்றுள் வெளியில் அதிகம் பிரசித்தம் பெறாத ஜே.வி.பி என்னும் ஜனதா விமுக்தி பெரமுனவின் (மக்கள் விடுதலை முன்னனி) கிளர்ச்சி ஒரே இனக்குழுமத்தின் மத்தியில், அதாவது பெரும் பான்மை இனத்தவரிடை ஏற்பட்ட யுத்தமாகும்.

2. இராணுவ விமானங்கள் பலவும் அழிக்கப்பட்டன.

3. Burcu Akan எனக்கு தனிப்பட்ட தொடர்பாடல் வழித்தெரிவித்த கருத்து இது. பாதுகாப்பு ஆய்வுக்கான நிறுவனம், ஐக்கிய அமெரிக்காவைச் சேர்ந்த சமாதானத்திற்கான நிறுவனம் என்பவை இணைந்து நடத்திய கருத்தரங்கில் கற்பனையான நாடு ஒன்றில் யுத்தத்தின் சீரழிவின் பின்னணியில் பொருளாதார மீள்கட்டமைப்பு பற்றிய கணனி உருப்போலி (Computer Simulation) வடிவமைக்கப்பட்டது.

4. பார்க்க: 'உலகின் வறியோர்களின் நிலையை அளவிடுதல்' என்னும் நூல் 1979 (Measuring the Conditions of the World's Poor (Morris 1979). இந்நூல் மொறிஸ் என்பவரால் எழுதப்பட்டது.

5. ஹொறோவிற்ஸ் எழுதிய Ethnic Groups in Conflict (1985), எனொல் எழுதிய Ethnic Conflict and Political Development (1986), ஆப்கானிஸ்தான், ஈரான், பாகிஸ்தான் ஆகிய நாடுகள் பற்றி Banuazizi மற்றும் Weiner எழுதிய The

State Religion and Ethnic Politics: Afghanistan, Iran and Pakistan (1990) ஆகியவற்றை பார்க்க.

6. 1987 ஆம் ஆண்டில் எனது கட்டுரை ஒன்றில் பின்வருமாறு குறிப்பிட்டேன். 'அபிவிருத்திக்கும் உள்நாட்டு பாதுகாப்புக்கும் இடையிலான தொடர்பு அரசியல் வாதிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதனால், இராணுவம், பொலிஸ், புலனாய்வு நிறுவனங்கள் என்பன இதனைத் தமதாக்கி பிடித்து வைத்திருக்கின்றன.' (றிச்சார்ட்சன் 19876.652)

7. கார்னே ஆணைக்குழுவின் Preventing Deadly Conflict (1997:11) என்ற பிரசுரத்தைப் பார்க்க.

8. இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னர் உள்நாட்டு சிவில் யுத்தங்கள் எங்கும் பரவியுள்ள ஒரு தோற்றப்பாடாக உள்ளது என்றும், நாடுகளிற்கு இடையிலான யுத்தங்களிற்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை இச்சிவில் யுத்தங்களிற்கு பெரும்பாலான அறிஞர்கள் கொடுப்பதில்லை என்றும் Roy Licklider (1993:5-6) தெரிவிக்கிறார். இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னர், 116 யுத்தங்கள் நிகழ்ந்தன. அவற்றுள் குவைத் மீதான ஈராக்கின் படையெடுப்பைத் தவிர மிகுதி அனைத்தும் சிவில் யுத்தங்களே. ஈராக்கின் படையெடுப்பைக் கூட சதாம் ஹுசைன் சிவில் யுத்தம் தான் என்று சொல்லக் கூடும் என்றும் ஜிம்மி கார்ட்டர் கூறியதை இவர் உதாரணமாக மேற்கோள் காட்டுகிறார்.

9. கார்னே ஆணைக்குழு அறிக்கையின் (1997) முதல் இரு அத்தியாயங்களைப் பார்க்க.

10. பார்க்க: அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் ஆணைக்குழு (1999).

11. Zartman (1993:20) பார்க்க. இவர் பேச்சுவார்த்தை நடைமுறையில் உலகின் முன்னணி நிபுணர்களில் ஒருவர். International Negotiation என்னும் பருவ இதழ் வெளியீட்டை இவர் ஆரம்பித்தார். Zartman ஆபிரிக்காவின் சிறந்த அறிஞர் என்று மதிப்பை பெற்றவர்.

12. மேலது: 21-24

13. 1971 ஆம் ஆண்டில் ஜே.வி.பி தீவிரவாதிகளின் கிளர்ச்சி நிகழ்ந்தது.

14. பார்க்க Zartman (1993:24)

15. இக்கருத்து ஸ்க்கோபொல் (Skocpol) எழுதிய புகழ்பெற்ற நூலான States and Social Revolutions (1979) இல் குறிப்பிடப்பட்டுள்ளது. பின்னர் ஸ்க்கோபொல் மற்றும் அவரது மாணவர்கள் இணைந்து எழுதிய கட்டுரைத் தொகுதியான Social Revolutions in the Modern World (1994) நூலிலும் இது பற்றிக் குறிப்புக்கள் உள்ளன.

16. கார்ணே ஆணைக்குழு அறிக்கையின் (1997) 4 ஆம் அத்தியாயம்.

17. மேலது 69

18. மேலது

19. பேண்தகு அபிவிருத்தி பேண்தகு சமூகத்தை உண்டாக்கும். நோர்வே நாட்டின் பிரதமர் கிறோஹார்லம் பிறண்ட்றலன்ட் (Groharlem Brundtland) தலைமை யில் 1987 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட ஆணைக்குழுவின் அறிக்கை பிறண்ட்றலன்ட் ஆணைக்குழு அறிக்கை எனப் பிரபலம் பெற்றது. இந்த ஆணைக்குழு பேண்தகு அபிவிருத்தி (Sustainable Development) என்ற கருத்தை பிரபல்யப்படுத்தியது. 'நிகழ்காலத்தின் தேவைகளை பூர்த்தி செய்வதும், நிகழ்காலத் தேவைகளுக்காக எதிர்காலச் சந்ததியினர் தம் தேவைகளை நிறைவு செய்யும் தகைமையை பலியிடாததுமான அபிவிருத் தியே பேண்தகு அபிவிருத்தி' என்று பிறண்ட்றலன்ட் ஆணைக்குழு வரைவிலக்கணம் செய்தது. பார்க்க Weaver உம் பிறரும் (1997-34) Donellameadows உம் பிறரும் எழுதிய நூலில் (1992:209) பேண்தகு சமூகம் என்பதை பின்வருமாறு வரையறை செய்துள்ளனர்.

'தலைமுறை தலைமுறையாக நிலைத்து நிற்கக் கூடியதும், தொலைநோக்கு உடையதும், நெகிழ்ச்சியும், ஞானமும் கொண்டதுமானதாக பேண்தகு சமூகம் விளங்கும். அது தனக்கு ஆதாரமாக விளங்கும் பௌதீக இயற்கையை அழித்து ஒழிக்கும் வகையில் செயற்படாத புத்தியுள்ள ஞானம் பெற்றதொரு சமூகம்.' 'பேண்தகு' என்ற சொல்லிற்கு பதிலாக 'ஆக்கமிகு' என்ற சொல் மேன்மிகையானதாயினும் நான் அதனை இங்கு உப யோகித்துள்ளேன். ('Successfull' என்பதை 'ஆக்கமிகு' வெற்றியளிக்கும் என்று தமிழில் உபயோகித்துள்ளோம்).

20. பார்க்க கார்ணே ஆணைக்குழு அறிக்கை (1997:69).

21. பார்க்க UNDP (2001:10 அட்டவணை 1.2). இந்நூலின் 3 ஆம் அத்தியாயத்தில் மனிதவள அபிவிருத்திச் சுட்டி பற்றி விளக்கப்பட்டுள்ளது.

22. Cornia (1999) UNDP அறிக்கை (2001:17) இல் மேற்கோள் காட்டப் பட்டுள்ளது.

23. பார்க்க UNDP 2001:17 பெட்டி 1.2 'சமத்துவமின்மை ஏன் முக்கியமானது' என்ற விடயம் விளக்கப்பட்டுள்ளது.

24. பார்க்க UNDP (2001:190 அட்டவணை 14). உதவி வழங்கும் DAC குழும நாடுகளின் உதவி பற்றிய விபரங்கள் தரப்பட்டுள்ளன.

25. பார்க்க கார்ணே ஆணைக்குழு அறிக்கை (1997:5)ப

26. மேலது:5

27. மேலது:9.

28. பார்க்க கார்ணே ஆணைக்குழு அறிக்கை (1997:43).

29. பார்க்க கார்ணே ஆணைக்குழு அறிக்கை (1997:44 பெட்டி 3.1).

30. Brinton நூல் (1965:16-17).

31. SLFP கட்சியுடன் இடதுசாரிகளும் டட்லிசேனநாயக்காவின் ஆட்சியில் 1965-70 UNP உடன் தமிழ்கட்சிகளும் கூட்டு அமைத்து ஆட்சி செய்தன. இக் கூட்டுக்களில் ஆதிக்கம் உடைய கட்சிகளாக முறையே SLFP, UNP விளங்கின.

32. எட்வார்ட் அசாரும் பிறரும் உபயோகித்த நிகழ்வுகளின் தரவு (Events Data) என்ற கருத்தும் இதற்கு ஒப்பானதே பார்க்க. The Management of Protracted Social Conflict: Theory and Cases (Azar 1990).

33. இதற்கான தரவுகள் 1988 இல் என்னால் தொகுக்கப்பட்டன.

34. சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர் ஆகிய எல்லா இனங்களில் இருந்தும் இக்குழுவில் உறுப்பினர் சேர்ந்தனர். அண்மையில் குடிபெயர்ந்த இந்தியர் ஒருவரும் உறுப்பினராக இருந்தார்.

35. பார்க்க Sorokin நூல் (1937:383 -408).

36. பார்க்க Singer (1989:3) ஆரம்பத்தில் தோட்டங்களின் உடைமை ஆங்கிலேயர்களிடமும், ஸ்கொட்டிஷ்காரர்களிடமும் இருந்தது. சில இலங்கையர் தோட்ட உடைமையாளர்களாய் இருந்தனர். 1970க்களில் பெரும்பாலான தோட்டங்கள் தேசிய மயமாக்கப்பட்டன. 1994 ஆம் ஆண்டில் இத் தோட்டங்களை தனியார் முகாமைத்துவத்தின் கீழ் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டது.

37. ஜிஜின்ஸ் எழுதிய Caste and Family in the Politics of the Sinhalese (1979) இந்த விடயம் குறித்த முறையான ஆய்வாக அடிக்கடி பலராலும் மேற்கோள் காட்டப்படும். இருப்பினும் இலங்கையர் சிலரும் இலங்கையின் மானிடவியல் குறித்து, ஆராயும் சிலரும் இந்நூலில் குறைகண்டு விமர்ச்சித்துள்ளனர்.

38. பார்க்க K.M.de Sliva (1986:19-22), Weeramunda மற்றும் J.G. Anderson (1985:75-76).

39. அமைச்சரவையில் சிறுபான்மைப் பிரதிநிதிகள் ஒருவர் அல்லது இருவர் இருத்தல் வழமை. பலம் வாய்ந்த சிங்கள சாதிகளின் பிரதிநிதித்துவம் அமைச்சரவையில் இருக்கும்.

40. பார்க்க Singer (1989:5) 1983 கலவரம் நிகழ்ந்த காலத்தில் கொழும்பில் ஏறக்குறைய 500,000 தமிழர்கள் வாழ்ந்தனர்.

41. தமிழரிடை சாதிபற்றிய சுருக்கமான குறிப்பை எழுதுவதற்கு நான் ஆதாரமாகக் கொண்டுள்ள நூல்கள்: Weeramunda and Anderson (1985:81-82) K.M.de. Silva (1986:22, 219-220). இதைவிட பலரோடு தனிப்பிட்ட முறையில் உரையாடல் மூலம் பெற்றவை.

42. இந்தியத் தமிழர் பற்றிய இச்சுருக்க விபரணையை நான் எழுதுவதற்கு பயன்பட்ட நூல்கள். K.M.de. Silva (1986:18-19), G.H.Peiris (1991), Moore (1985:30-49), Singer (1989:4).

43. மொழிக் கொள்கை தொடர்பாக 1956 இன் பின்னர் ஏற்பட்ட மாற்றங்களின் படி சிங்கள மாணவர்கள் சிங்களத்திலும், தமிழ் மாணவர்கள் தமிழிலும் படிக்க வேண்டும் என்று வழிமுறைகள் ஏற்படுத்தப்பட்டன.

44. யஸ்மின் குணரட்ன எழுதிய A Change of Skies (1991) என்ற நூல் அவுஸ்ரேலியாவிற்கு இடம்பெயரும் ஒரு குடும்பம் பற்றிய கதையைக் கூறுவது, இவர் Relative Merits: A Personal Memoir of the Bandaranaike Family of Sri Lanka (1986) என்ற நூலையும் எழுதினார். இது இலங்கையின் உயர்குழாம் வாழ்க்கை பற்றி சுவைபட விபரிக்கும் நினைவுக் குறிப்பாகும். இந்நூல் அரசியல் அதிகாரம் மிக்க ஒரு குடும்பம் என்ற கண்ணாடி ஊடாக இலங்கை உயர் குழாம் வாழ்க்கையை பார்க்கிறது. பேராசிரியை யஸ்மின் குணரட்ண முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டார நாயக்கவின் மருமகள். நீண்டகாலம் அவுஸ்ரேலியாவில் இவர் வதிகின்றார். எனினும், இலங்கையுடன் நெருங்கிய உறவுகளைப் பேணிவருகிறார்.

45. அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் ரெயில் சேவை இருக்கவில்லை. அப்பகுதி புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது. அப்போது யாழ்ப்பாண நகரத்தை புலிகள் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர்.

46. இந்திய இலங்கை உடன்படிக்கை கைச்சாத்து ஆவதற்குக் சில வாரங்களின் முன்னர் இலங்கை அரசின் ஆயுதப்படைகள் தமிழ் கிளர்ச்சியாளர்கள் மீது வடக்கில் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டன. தமிழ் குழுக்கள் சிலவற்றிற்கு நிதியும், பயிற்சியும் வழங்கிய இந்திய அரசாங்கம் வான்வழி மனிதாயத உதவிப் பொதிகளை போடுவதன் மூலம் கிளர்ச்சியாளர்களுக்கு உதவியது. இப்பொதிகளை சுமந்து வந்த விமானங்களுக்குப் போர் விமானங்கள் பாதுகாப்பை வழங்கின. இந்தச் சம்பவம், இந்தியாவுடன் ஏதாவது வகையில் இணங்கிப் போக வேண்டிய எண்ணத்தை ஜயவர்த்தனா விற்கு உண்டாக்கியது என்று நோக்கர்கள் கருதுகின்றனர்.

47. த லங்கா கார்டியன் என்னும் இடது சார்புப் பத்திரிகை மாதமிருமுறை பிரசுரமாகியது. இதன் ஆசிரியர் மெர்வின் டி சில்வா கொழும்பு பயத்தின்

பிடியில் ஆட்டம் கண்டதை Fear is the Key என்ற தலைப்பில் கட்டுரையாக வரைந்தார். The Lanka Guardian (நவம்பர் 15, 1988:1-6) இப்பத்திரிகை அக்காலத்தில் சுதந்திரமாக கருத்துக்களை வெளியிடும் ஊடகமாக இருந்தது. இதன் ஆசிரியர் 2000 ஆம் ஆண்டு காலமானார். அத்தோடு பத்திரிகையும் நின்று போயிற்று.

## அத்தியாயம் 2

1. இக்கருத்தை கே.எம்.டி.சில்வா (1986) தெரிவிக்கிறார். பல நூல்களில் இருந்து ஆதாரங்களைக் காட்டி வரலாற்று நோக்கில் நுணுக்கமாக அவர் விளக்கியதை ஆதாரமாகக் கொண்டு நான் இவ்விடயத்தைக் குறிப்பிட்டுள்ளேன்.

2. இளம் யுவதிகளினதும், இளைஞர்களதும் திருப்தி செய்யப்படாத அபிலாஷைகள் பற்றி இளையோர் பற்றிய ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை (இலங்கை அரசு 1990) பகிரங்கப்படுத்தியது. (சான்றாதார விபரங்களின் தொகுப்பையும் அளித்தது). கவலைக்குரிய, அக்கறைக்குரிய விடயங்களை வெளிப்படுத்தியது. ஆணைக்குழு வெளியிட்ட கவலைக்குரிய விடயங்கள், அதற்கான மூல காரணங்கள் பற்றி ஒரு குறிப்பிட்ட நிலைப்பாட்டை எடுக்காமல் பல திறப்பட்ட கருத்துக்களை கூறுவதாக இருந்தது.

3. இலங்கைப் பொருளாதாரத்தின் அமைப்பியல் பலவீனத்தை எடுத்துக்காட்டி அது சமூகநிலை உறுதிப்பாடு இன்மைக்கு வழிவகுக்கும் என்று முதலில் சுட்டிக் காட்டியவர் ஸ்நொட்கிறாஸ் (1966) ஆவர். லக்ஸ்மன் (1997) ஒரு தொகுப்பைப் பதிப்பித்து வெளியிட்டுள்ளார். இதில் பல நல்ல கட்டுரைகள் உள்ளன. அத்தோடு விரிவான நூற்பட்டியலும் தரப்பட்டுள்ளது. அபயரட்ண (1998) S.W.R.de A. சமரசிங்க மற்றும் கௌஹாலின் (1991) ஸ்கொட்(1989) என்பனவும் குறிப்பிட்டுக் சொல்லக் கூடிய பங்களிப்புக்கள்.

4. இவ்விடயம் பற்றிய மார்க்சிய, நவமார்க்சிய கருத்துக்களை அபயரட்ண (1998 அத்.3) சுருக்கமாகத் தருகிறார். விரிவான நூற்பட்டியலையும் தருகிறார்.

5. இந்த வாதத்தை நான் இன்னோர் ஆக்கத்தில் முன்வைத்துள்ளேன். நான் தலைமைத்துவத்திற்கு அழுத்தம் கொடுத்துள்ளேன். 1977 இன் பின்னரான பொருளாதாரக் கொள்கையின் சமூகத் தாக்கம் பற்றிய சிறந்த ஆய்வாக புலமையாளர்களால் மேற்கோள் காட்டப்படுவது குணசிங்க (1984) ஆகும்.

6. இலங்கையின் அனுபவத்தை 'ஆசியாவின் புலிகள்' என வருணிக்கப்படும் ஹொங்கொங், தைவான், தென்கொரியா, சிங்கப்பூர் ஆகிய பொருளாதாரத் துறையில் வெற்றிகரமாக முன்னேறும் நாடுகளுடன் ஒப்பிடுவோர் இக் கருத்தைக் கூறுவர். இந்நாடுகள் துரித பொருளாதார முன்னேற்றத்துடன்

அரசியல் ஸ்திரத் தன்மையையும் கொண்டிருந்தன. காரணம் இவை ஜனநாயகத் தன்மை ஒப்பீட்டளவில் குறைவாக உள்ள அரசுகள். இவற்றால் சுதந்திர சந்தைக் கொள்கைகளை நீண்டகாலம் பின்பற்றி பொருளாதார விருத்தியில் உயர்நிலையை அடைய முடிந்தது என்று கூறுவர். ஜே.ஆர்.ஜயவர்த்தனவின் ஆட்சிக்காலத்திச் சட்ட முறைப்படி நியாயப்படுத்த முடியாத கால நீடிப்பு முயற்சிக்கான வாதமாகவும் இக்கருத்து முன்வைக்கப்பட்டது. (அத்துலத் முதலி:1984). ஆசியாவின் புலிகள் நாடுகளில் மிகவும் வெற்றி பெற்றதான சிங்கப்பூரின் தலைவரான லீகுவான்யூவின் கருத்தை பிரதிபலிப்பதாகவும் அமைந்தது. (Josey 1980 குறிப்பாக அத் 10) லீகுவான்யுவின் கருத்துக்களால் பாதிப்புக்குள்ளானவர் ஜே.ஆர்.ஜயவர்த்தன என்றும் கூறலாம்.

7. Moore (1992) இக்கருத்தை பற்றி தெளிவான, மணிச்சுருக்கமான விளக்கத்தை தருகிறார். ஜனநாயக முறைகள் முடக்கம் பெறுதலும், அரசாங்கத்தின் தோல்வியும் பற்றி Manor (1984) கே.எம்.டி.சில்வா (1993 ) என்பன பல்வகை நோக்கு நிலைகளை விளக்குகின்றன. கூல் மற்றும் பிறர் (1992) இலங்கைத் தமிழர் நோக்கில் மிகவும் பலம் மிக்க வாதத்தை முன் வைத்துள்ளனர்.

8. பெரும்பாலானோர் ஜனநாயகத்தின் நலிவையும் தலைமைத்துவத்தின் தோல்வியையும் தொடர்புபடுத்தி காட்டுவர். மேலே 7வது குறிப்பில் சுட்டப் பட்ட ஆக்கங்களும் இவ்விடயம் தொடர்பில் பொருத்தமுடையன. திருமதி. பண்டாரநாயக்காவின் தலைமைத்துவத்தை கடுமையாக விமர்சிக்கும் கே.எம்.டி.சில்வா (1996 ) ஜே.ஆர்.ஜயவர்த்தனவை சாதகமான முறையில் விமர்ச்சிக்கிறார். (கே.எம்.டி.சில்வா மற்றும் றிஜின்ஸ் (Wriggins) 1998-1994).

9. The Hunger Project (1985) இந்த அணுகுமுறையை விளக்குகிறது.

10. இந்தநோக்கு முறையைப் பற்றிய முக்கிய நூல்கள்: Glazer and Moynihan (1975) de Vos And Romanucci - Ross (1995) Tambiah (1996) Samuel Huntington எழுதிய Clash of Civilisations (1996) (நாகரீகங்களின் மோதல்) பரவலாக மேற்கோள் காட்டப்படுவது; விமர்சனத்திற்கும் உள்ளானது. பொதுவாக மேற்படி நூல்கள் மக்களின் உணர்வுகளை விழிப்புறச் செய்துள்ளன.

11. Skocpol (1994) பிறருடனும், தம் மாணர்வகளுடனும் சேர்ந்து எழுதிய நூல்கள் அரசுக்கட்டமைப்புக்களுக்கும், சமூகப் புரட்சிகளுக்கும் இடையிலான உறவை மிக விரிவாக ஆராய்கின்றன.

12. நல்லாட்சிக்கும், அபிவிருத்திக்கும் இடையிலான விடை காணப்படாத கேள்விகள் குறித்து, இந்நூலின் அடுத்த அத்தியாயத்தில் நான் ஆராய்ந் துள்ளேன்.

13. ஒப்பீட்டு அரசியல் மற்றும் சமூகவிஞ்ஞான ஆய்வுக்குமான சபையின் குழு இவ்விடயத்தில் ஆய்வுக்குப் பெரும் தூண்டுதலாக இருந்ததோடு நிறைய

ஆய்வுகளை வெளியிட்டது. பலர் ஆய்வுகளை எழுதி உதவினர். Cabriel A.Almond இந்நடவடிக்கைகளில் பெரும்பங்கு ஆற்றியதோடு The Development of Political Development (1987) என்னும் நூலை எழுதினர். இது பயனுள்ள வரலாற்று ஆய்வு ஆகும்.

14. Democracy In Developing Nations என்ற நூல் சிறந்த முன்னுதாரணம். நாலு தொகுதிகள் கொண்ட இப்பாரிய ஆக்கம் Diamond முதலியோரால் பதிக்கப் பட்டது *(1998)*.

15. Thomas Carothers எழுதிய Aiding Democracy Abroad: The Learning Curve(1999) என்ற நூல் ஐக்கிய அமெரிக்காவின் நோக்கில் ஜனநாயக விருத்தி என்னும் விடயத்தை விரிவாகவும், நுணுக்கமாகவும் ஆராய்கிறது.

16. பார்க்க கார்ணே ஆணைக்குழு அறிக்கை *(1997:151)*.

17. மார்க்சியக் கோட்பாடு உலக வரலாற்றின் இயக்கம் பற்றிய தீர்மானவாத நோக்கை முன்வைக்கிறது. மாற்றுக் கருத்துடைய ஏனையோர் சமூகவிஞ்ஞானக் கோட்பாட்டின் மரபுவழிச் சிந்தனையை பிரதிநிதித்தவப்படுத்துவோராவர். இவர்கள் புறமெய்மைவாதம் (Positivism) நடத்தைவாதம் (Behaviorism) ஆகிய தத்துவப் போக்குகளை பின்பற்றுவோராவர். உளவியல், சமூகவியல், பொருளியல் ஆகிய பிற துறைகளின் தாக்கத்தை தமது எழுத்துக்களில் வெளிப்படுத்தினர்.

18. இலங்கையில் வன்முறை, மோதல்களுக்கான உடனடிக் காரணங்கள் இளையோர் குறித்த ஜனாதிபதி ஆணைக்குழு *(1990)* அறிக்கையில் குறிப் பிடப்பட்டுள்ளன.

19. இவ்விடயம் குறித்து Horowitz (1985) எழுதிய நூல் மிகத் தெளிவான விளக்கமாக உள்ளது.

20. மார்க்சீய கோட்பாட்டாளர்கள் உடனடிக்காரணங்கள் குறித்து வேறுபட்ட இயங்கியல் நோக்குமுறையை முன்வைக்கின்றனர். அதனால் அவர்களின் கருத்துக்களைக் குறிப்பிடுவதைத் தவிர்த்துள்ளேன்.

21. ஒப்பீடு செய்யும் போது சமூகவிஞ்ஞானிகள் இருவழிகளைக் கடைப் பிடிக்கின்றனர். எண்ணிக்கையில் குறைந்த அளவான உதாரணங்களை எடுத்து கோட்பாட்டு முறையில் சுவாரசியமான ஒப்புமைகளையும் வேற்றுமைகளையும் பரிசீலித்தல் முதலாவது வழி. இரண்டாவது வழி பெருந்தொகையான உதாரணங்களை எடுத்துக்கொண்டு ஆய்வு செய்து புள்ளியியல் அடிப்படையில் அர்த்தமுள்ள தொடர்புகளை இனம் காணுதல்.

## அத்தியாயம் 3

1. அமெரிக்கப் பல்கலைக்கழகத்தின் சர்வதேச சேவைப்பள்ளி 1982 ஆம் ஆண்டில் சர்வதேச அபிவிருத்தி என்னும் கற்கை நெறியில் முதுமாணி வகுப்பைத் தொடங்கியது. காலப்போக்கில் இக்கற்கை நெறியோடு அபிவிருத்தி முகாமைத்துவத்தில் முது விஞ்ஞானமாணி வகுப்பையும் சேர்த்துக் கொண்டது. ஒவ்வொரு வருடமும் 40 மாணவர் வரை இங்கு படிப்பை முடிந்து வெளிவருகின்றனர்.

2. 1968 இல் அரவிந்தர் ஆசிரமம் தென்னிந்தியாவின் கடற்கரை நகரான புதுச்சேரியில் 'அன்னை' எனப்படும். சீடரால் ஆரம்பிக்கப்பட்டது. அரவிந்தரின் போதனைகள் இத்தகைய இலட்சியக் கற்பனைக்கு உதாரணமாகும்.

3. Bellamy யின் நூல் பல பதிப்புக்கள் வெளிவந்தன. Looking Backward (2000) அண்மைய பதிப்பு.

4. பார்க்க < http:// www. world. org >, accessed December 1, 2001.

5. பார்க்க < http:// www. undp.org/ info/ discover / missior. himl>, accessed December 1, 2001.

6. பார்க்க < http: www. china . org.en/ e-china / development/ introduction. htm >, accessed December 1, 2001.

7. UNDP (1990) அறிக்கையை பார்க்க. மஹுப் உல் ஹக் சர்வதேச அபிவிருத்திப் புலமையாளர்; பாகிஸ்தானின் முன்னாள் அமைச்சர். UNDPயின் முதலாவது அறிக்கை ஒரு புதிய திருப்பம். இந்த அறிக்கையை எழுதுவிப்பதற்காக UNDPயின் அப்போதைய தலைவர் மஹுப் உல் ஹக் அவர்களை விசேட உதவியாளராக சேவையில் அமர்த்தினார். உல் ஹக் முன்னர் உலகவங்கியில் கொள்கைத் திட்டமிடல் பணிப்பாளராக கடமையாற்றினார் என்பது சுவாரசிய மான ஓர் தகவல்.

8. Sir Richard Stone தேசிய வருமானக் கணக்கீட்டு முறையின் பிதாமகர் எனக்கருதப்படுபவர். இவருக்கு 1984 இல் பொருளியலுக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது. பார்க்க Stone and Stone (1963).

[illegible]

1. [illegible]

2. [illegible]

3. [illegible]

4. [illegible] accessed December 1, 2001.


5. [illegible] accessed December 1, 2001.

6. [illegible] accessed December 1, 2001.

7. [illegible]

8. [illegible]

ஜோன் றிச்சார்ட்சன் ஆங்கிலத்தில் எழுதிய 'நஞ்சூட்டப்பட்ட சுவர்க்கம்' என்ற தலைப்புடைய நூலின் முதல் மூன்று அத்தியாயங் களின் மொழிபெயர்ப்பாக இந்நூல் அமைந்துள்ளது. கண்டியிலுள்ள இனத்துவக் கற்கைக்கான சர்வதேச நிறுவனம், 2005ம் ஆண்டில் ஆங்கில நூலைப் பிரசுரித்தது. (*Paradise Poisoned: Learning About Conflict, Terrorism and Development from Sri Lanka's Civil Wars*, International Centre for Ethnic Studies, Kandy, 2005.) ஆங்கில நூலை எட்டுப் பகுதி களாகப் பிரித்து தமிழிலும் சிங்களத்திலும் மொழிபெயர்க்கும் திட்டத்தின் கீழ் நூலின் கருத்துக்களைத் தொகுத்துக் கூறும் முறையில் அமைந்த இறுதி மூன்று அத்தியாயங்கள் 2008ம் ஆண்டு ஒரு நூலாகப் பிரசுரிக்கப்பட்டது. இப்பிரசுரம் இத்தொடரில் இரண்டா வதாகும்.



ஜோன் றிச்சார்ட்சன்: அமெரிக்க பல்கலைக் கழகங்களின் சர்வதேச சேவைகளுக்கான பள்ளி யில் சர்வதேச அபிவிருத்தி பேராசிரியராகவும், அதே பல்கலைக்கழகத்தின் கற்பித்தலுக்கான சிறப்பு மையத்தின் இயக்குநராகவும் பணியாற்று கின்றார். இதற்கு முன்னர், அரசறிவியல் துறை தொடர்பாய் கேஸ் வெஸ்ரேன் றிசேவ் பல்கலைக் கழகத்தில் பதவி வகித்திருந்ததோடு, இலங்கை யிலுள்ள கொழும்புப் பல்கலைக்கழகம் மற்றும் அமெரிக்காவிலுள்ள மசசூசட்ஸ் தொழில்நுட்பத்துக்கான நிறுவனம் (MIT) ஆகியவற்றில் வருகைதரு புலமையாளராகவும் இருந்துள்ளார். இவர் பின்வரும் நூல்களை தனித்தும் மற்றவர்களுடன் இணைந்தும் எழுதியுள்ளார்: *Partners in Development* (1969), *Groping in the Dark: The First Decade of Global Modeling* (1982), *Ending Hunger: An Idea Whose Time Has Come* (1985), *Democratisation in South Asia: The First Fifty Years* (1998).

SSA
சமூக விஞ்ஞானிகள் சங்கம்
12, சுலைமான் டெரஸ், கொழும்பு 5
www.ssalanka.org

ISBN 978-955-1772-83-3
9789551772833

Printed by Kumaran Press (Pvt) Ltd.